அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com

தாய் வீடு
THAIVEEDU ஒக்ரோபர் 2009 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன்
சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®



# மலேசியக் 'கறி' யிடம் மண்டியிட்ட மக்டொனால்ட்ஸ்

வாகனம்
ஓட்டும்போது
செல்லிடப்பேசி
பாவித்தால்

# ஐநூறு அபராதம்

படம்: டிஜி கருணா

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு
வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

MORTGAGE AND FINANCIAL SERVICE
Guaranteed Lowest rate
Considered as your mortgage is done
Please call @ 416-939-8789
Theven Kankesu
Mortgage intelligence

PMCI MORTGAGE CANADA
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of
Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடையங்களுக்குமான பத்திரிகை


For all your Real Estate needs...
First Prize
2009
Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**
• Buy • Sell • Lease
Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416.858.4828
SOLD
Justin William
Real Estate Broker
Direct: 416.803.7344
Let us help you to put the puzzle together !
$ 319,000
Dean Park/Sheppard
• Spacious Detached House
• 3+2 Bedrooms
• Finished Basement
• Minutes From Hwy 401,Schools
• Sits On A Quiet Single Loaded Street ...
$ 389,900
Brimley/Steeles
• Well Kept 4-Bdrm Home
• Great Location
• Hrdwd Flr On Main Flr, Stairs
• Walk To Ttc,School,Park,Shopping Mall
• Separate Entrace Finished Bsmt ...
$ 619,888
Brimley/Steeles
• Spotless 4+3 Bedroom House
• Super Location
• Double Door Entrance
• Short Walk To Ttc (Steeles)
• Fin Basement With 3 Bedrooms
$ 545,000
Markham/Bur Oak
• Absolutely Gorgeous House
• 6 Months New Fieldgate Built
• Over $25K Upgrades
• 2700Sf Great Floor Plan
• Steps To Schools,Shopping,Go-Station
$ 429,900
Meadowvale/Ellesmere
• Well-Maintained 4 Bedroom Home
• Original Owners
• Updated Kitchen With Walkout To Deck
• Stainless Steel Kitchen Appliances
• Walk To School, Park & Ttc.
$ 349,900
Victoria / Bayside
• Desirable Whitby Shores Area
• Only 6 Years Old
• 5 Pc Ensuite With Jacuzi
• Lakefront Trails
• Steps To Go
$ 389,900
Salem/ Tauton
• 4 Bedroom Detached House
• 1 Year New. Tribute Built
• Premium Lot
• 9Ft Ceilings On Main Floor
• Close To Parks, Shopping & Transit
$ 29,900
Middlefield/Finch
• Profitable Business For Sale
• Dryclean / Laundry
• Inside The GTA Square Mall
• Perfect For Family Business
• Don't Miss This Opportunity...
$ 127,000
Neilson/Mclevin
• One Bedroom Condominium
• Great View
• Freshly Painted
• 24 Hours Gate Security
• Steps To Ttc, School, Shopping
$ 197,900
Middlefield/Finch
• Excellent Opportunity To Own A Business
• Well Established Business
• One And Only Restaurant In This Mall
• Good Weekly Sale
• Inside The GTA Square Mall
$ 379,900
Williams Pk/Chinguacousy
• Gorgeous. Detached House
• Over 200 Sq Ft
• Loaded With Quality Features
• Basement With Separate Entrance.
• Don't Miss This..
$ 365,000
Westney/Taunton
• Only 3 Yrs Old
• Great Gulf Home 2280 Sq. Ft
• 4 Big Bdrms, 3 Baths
• Family Rm W Gas Fp
• Close To Schools, Park, 401 & 407.
$ 539,900
Markham/Steeles
• 4 Bedroom Detached House
• Less Than 5 years Old
• More than 3000 Sq. Ft
• Back Onto Ravine
• Walk-Out Basement...
$ 629,900
Riverwalk/9th Line
• Beautiful 4 Bdrm Family Home
• The High Demand Box/Grove Community
• Approx 3000 Sq Ft.
• Over 60K In Upgrades
• Close To Shopping Malls And Amenities.
$ 3,295,000
North Of Bloor
• Business With Property
• Gas Station W/Convenience Store, Plaza
• Excellent Opportunity For Entrepreneur W/Vision.
• Worry Free Income
$ 159,900
Dixie/Bloor
• 3 Bedroom Condominium
• Prime Location,
• One Bus To Subway,
• Bright And Spacious Unit,
• Walk To Public Transit, Schools And Shopping.
HomeLife
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On.
Office: 416.321.6969
This is not intend to solicit properties currently listed for sale
*Independently owned and operated
** conditions apply

## வதைபடும் மக்களுக்காக ஒன்றுபடுவோம்

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்கும் என்பது இலவு காத்த கிளியாகிவிட்டது.

தங்களது விருப்பத்திற்கு மாறாக, எந்தக் குற்றங்களும் செய்யாத அப்பாவி மக்கள் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலையே இன்று முதன்மையான பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

முகாம்களில் நடக்கின்ற மனித உரிமை மீறல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்க முடியாத வெறுப்படைந்து படையினருடன் மோதிய சம்பவமும் நடந்துள்ளது.

"வன்னி தடுப்பு முகாம்களுக்குள் மக்களுடன் மக்களாகப் புலிகளும் மறைந்து வாழ்வதால், அவர்களுக்கு முழுமையான நடமாட்ட சுதந்திரத்தை உடனடியாக வழங்க முடியாது" என சிறிலங்காவின் மனித உரிமைகள் மற்றும் பேரிடர் நிவாரண அமைச்சர் மகிந்த சமரசிங்க ஜெனீவாவில் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

"முகாம்களில் உள்ள தமிழ் மக்களை உடனடியாக விடுவித்துவிடுவது நாட்டில் உள்ள ஏனைய மக்களின் நடமாட்ட சுதந்திரத்தைப் பாதிக்கும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகமொத்தத்தில் 'இலங்கையில் உள்ள சகல மக்களையும் பாதுகாக்கின்றோம்' என்ற ஒரு பொய்யான பரப்புரையின் கீழ் மூன்று இலட்சம் தமிழர்கள் மிகக் கேவலமான ஒரு முறையில் கொல்லப்படுவதற்காக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களை மீட்டு எடுப்பதற்கான கடப்பாடு உலகம் எங்கும் வாழும் சகல மக்களுக்கும் உண்டு.

ஆனால் அதற்கும் மேலான கடப்பாடு எமக்கு உண்டு.

ஒரு காலத்தில் 'எல்லைக்காவலர்கள்' என்று நாம் மேடை மேடையாகப் பாராட்டிய அந்த வன்னியர்களை நாம் மறந்துதான் போனோமோ? என்று நினைக்கத் தோன்றுகின்றது.

முகாம்களில் வதைபடும் மக்களுக்காக, எங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளை, போட்டிகளை ஒரு புறம் எடுத்து வைத்துவிட்டு, கனடாவில் உள்ள அமைப்புகள், ஊர் சங்கங்கள், வணிகர் சங்கங்கள், பாடசாலை அமைப்புகள், தமிழ் கட்சிகள், ஒன்றியங்கள், ஊடகங்கள், எழுத்தாளர்கள், இன்னமும் இதற்கு அடங்காத ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று ஒன்று சேர அணிதிரண்டு எழுவோம். இதை நாம் செய்யாவிட்டால் வரலாற்றில் பெரும் தவறு இழைத்தவர்களாக காலம் காலமாக பேசப்படுவோம்.

இது எங்கள் கடமை.

உலகத்தில் உள்ள எல்லா சட்டங்களையும் மீறி அடைத்து வைக்கப்பட்டு, கொல்லப்படுவதற்காக தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்களை விடுவிப்பதற்காக ஒரு குரலில், ஒற்றுமையாக கிளர்ந்து நாம் எழுவோம்.

III

அட்டைப்படத்தில் (மாதிரிக்காக)
மோகனா காங்கேசு

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

ஓவியம் : K. கிருஸ்ணராஜா (இங்கிலாந்து), மு.கு.சிவகுமாரன் (ஜேர்மனி)

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

அலைபேசினால் ஐநூறு அபராதம்

# காதோடுதான் நான் பேசுவேன்

- கந்தசாமி கங்காதரன்



05

எதிர்வரும் 23ம் திகதி ஒன்ராரியோவில் அமலாகவிருக்கும் சட்டமொன்றின் மூலம் சாரதிகள் வாகனம் ஓட்டும்போது செல்லிடப்பேசியையோ அல்லது அதையொத்த திரையுள்ள இலத்திரனியல் உபகரணமொன்றையோ பாவித்தால் 500டொலர் வரை அபராதம் செலுத்தவேண்டி வரும்.



## அரைக்கீரை, சிறுகீரை, கரிசலாங்கண்ணிக்கீரை.

- உதயணன்

பல கீரை வகைகள் கிராமப் புறங்களில் இன்னமும் உணவாகவும், மருந்தாகவும் பயன்படுகின்றன. 36



## செழிப்பைக் காட்டும் கழித்த காகிதம்

- மாறன் செல்லையா


கனடிய காகித தொழிலில் ஈடுபட்டுள்ள அநேகமான நிறுவனங்கள் இக்கட்டில் இருக்கும்போது இந்த நிறுவனம் மட்டும் இலாபமீட்டியது. 54




## மலேசியக் 'கறி' யிடம் மண்டியிட்ட மக்டொனால்ட்ஸ்

- கந்தசாமி கங்காதரன்

மலேசிய 'மக்கறி' நிறுவனம்மீது 'மக்டொனால்ட்ஸ்' தொடர்ந்த வழக்கு தோல்வி.. 59



## கலாபன் கதை

- தேவகாந்தன்

கஸ்ரங்களின் ஒவ்வொரு முடுக்கிலும் அவள் புன்னகையுடன் நின்று அவனை பித்தேற்றிக் கொண்டிருந்தாள். 78

வரண்ட பிரதேசத்தில் தமிழருக்கு மீண்டும் ஒரு வாழ்க்கைப் போராட்டம். 04
அ. கணபதிப்பிள்ளை

குளியல் அறை மறுசீரமைப்பும் சமையல் அறை திட்டமிடலும் 07
மகேன் சிங்கராஜா

உள்ளுடல் பிதுங்குதல் (HERNIA) 09
கந்தையா செந்தில்நாதன்

உயிர் குடிக்கும் Meningococcal நோய் 10
சிவா சுப்ரா

சுவை 13
சிவாஜினி பாலராஜன்

ரோஜா சின்ன ரோசா 14
செல்லையா சந்திரசேகரி

மன்மத இரகசியங்களும் விளம்பரங்களும் 31
ராகுலன்

இருதய நோய் காரணிகளும் தடுப்பும் 35
றிச்சாட் ஜெயரஞ்சன்

சிறந்த வெப்பமூட்டியைத் தெரிவு செய்தல் 43
சிவவதனி பிரபாகரன்

ஒரு நாடுகடந்த நாட்டின் உதயம் 51
மாமூலன்

மகப்பேறும் மன உளைச்சல் எனும் இரட்டைப் பிரசவ வேதனை 55
பார்வதி கந்தசாமி

சந்தோஷத்தை எப்படி பெறுவது 68
ஜீவா திசைராஜா

நான் நேரில் காணாத ஏ.ஜே. கனகரட்ணா! 71
நடராஜா முரளிதரன்

படுவான்கரைப் பயணம்... 74
குமார் புனிதவேல்

வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு 76
K.S. பாலச்சந்திரன்

சூரன் போர் 84
அ.முத்துலிங்கம்

ஒருவரைப் 'பொறுப்பேற்றல்' என்றால் என்ன? 86
குரு அரவிந்தன்

கற்பு வாழ்க்கை 88
வி. கந்தவனம்

நாட்டுக்கூத்து கலாநிதி பூந்தான் யோசேப்பு 90
'சோக்கல்லோ' சண்முகநாதன்

தவில் மேதை அளவையூர் வி. தட்சணா மூர்த்தி 90
எஸ். கந்தசாமி

இன்னும்...
இருபதிற்கு மேற்பட்ட ஆக்கங்கள் உள்ளே...

# வரண்ட பிரதேசத்தில் தமிழருக்கு மீண்டும் ஒரு வாழ்க்கைப் போராட்டம்.

**- அ. கணபதிப்பிள்ளை -**

இலங்கையில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள், அவற்றை அருகாகக் கொண்ட சிங்களர் பெரும்பான்மையாக வாழும் மாகாணங்களைப் போன்று வரண்ட பிரதேசங்களாக வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. இப்பிரதேசங்கள் சராசரியாகவும், வருடாந்த மொத்த மழை வீழ்ச்சியின் அடிப்படையலும் குறைந்த அளவிலான மழை வீழ்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுவதே இந்த வரட்சிக்குக் காரணமாக இருக்கிறது. வாடைக்காற்றுக் காலங்களில் மாத்திரம் மொத்த மழை வீழ்ச்சியின் பெரும் பகுதி பெறப்படுதுடன் அடுத்த சோளகக் காற்றுப் பகுதியில் வேகமான காற்றும் ஈரப்பதனற்ற வரண்ட காற்றும் வரட்சிக்குக் காரணமாகிறது. வாடைக்கற்றின் ‘காற்றொதுக்குப் பகுதி’யாயிருக்கும் மன்னார் மாவட்டத்தைச் சுற்றிய பகுதிகளும் தீவுப்பகுதிகளும் மிகக்குறைந்த மழைபெறப்படுவதால் அதிக வரட்சிக்குட்பட்டிருந்தமையினால் அதிவரட்சிப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டன.

வரட்சிக் காலத்தில் ஏற்படும் தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சித்திரை வைகாசி மாத மேற்காவுகை மழையும், இயற்கை தேக்கி வைக்கும் நிலத்தடிநீரும், மாரிகாலங்களில் குளங்களில் தேக்கிவைக்கப்பட்ட நீரும், வருடம் முழுவதும் ஓடும் ஆறுகளிலிருந்து அணைகள் மூலம் நீர்ப்பாசனக் குளங்களுக்குத் திருப்பிவிடப்பட்ட நீரும் ஈடுசெய்வதே தமிழர்களின் வாழ்க்கையில் ஒரு நின்மதிப் பெருமூச்சுக்கு வழி செய்து கொடுத்திருந்தது.

தமிழர்களின் வாழ்க்கைப் பேராட்டம் தண்ணீருடன் இரண்டறக் கலந்துள்ளது. கிணற்தை வெட்டிப்பார், வீட்டைக் கட்டிப்பார், கலியாணத்தைச் செய்துபார் என்ற மூன்று விடயங்களும். தமிழர்களின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாததும், மிகவும் கடினமான பிரயத்தனத்தின் மூலமே செய்யப்படுவதாகவும் இருக்கின்றமை தான், இந்தப் பிரதேச வழக்குச் சொற்றொடருக்கு அடிப்படையாகிறது.

யாழ்ப்பாணக் குடாநாடு முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு மன்னார் புத்தளம் ஆகிய பகுதிகளில் கடற்கரையோரங்களில் வாழ்ந்த மக்கள் தொழில்நுட்பம் கொடுத்த ஊக்கத்தினாலும் ஒத்தாசையினாலும் அம்மாவட்டங்களின் எல்லைகளை நோக்கி நகரத்தொடங்கியமை தமிழர் வாழ்க்கைப்போராட்டத்தின் முதலாவது படியாக அமைந்திருந்தது.

பிரித்தானியராட்சியில் முன்வைக்கப்பட்ட வரண்ட பிரதேசக் கருத்தேற்றம் வரண்ட பிரதேசங்களில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களுக்கு நிர்ப்பாசன வசதிகளைச்செய்து கொடுப்பதன்மூலம் அவர்களது ஜீவனோபாயத்துக்கு வழிசெய்து கொடுக்கும் உபாயமாகவே இருந்தது. வரண்ட பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்கள் காலங்காலமாக சேனைப்பயிற்செய்கை முறையினைப் பின்பற்றியிருந்தமையினால் இருப்பான பயிற்செய்கையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுவதில் அதிக நாட்டம்காட்டவில்லை. கிழக்கு மாகாண முஸ்லிம்கள் அங்கு வாழும் தமிழர்களைப் போன்றே இருப்பான பயிற்செய்கையில் அதிக நாட்டங்காட்டியிருந்தனர். நிலத்தடி நீரைப் பயன்படுத்திய யாழ்ப்பாணக் குடா நாட்டு விவசாயிகளும் இருப்பான பயிற்செய்கையில் தமது கவனத்தைச் செலுத்தியிருந்தனர். புராதன வன்னிக்கலாசாரத்தில் இருப்பான பயிற் செய்கை நடைமுறையிலிருந்ததுடன் கிழக்கு மாகாணத்திலிருந்ததுபோன்று ஆங்காங்கே சேனைப்பயிற்செய்கையின் அம்சங்களும் காணப்பட்டன.

இதன்பின்னணியில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் தாங்களிருக்கும் பகுதிகளிலேயே இருந்து பயிர்செய்யவே விரும்பியிருந்தார்கள்.



பத்தொன்பதாம் நூற்றாண்டில் வடமத்திய மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட அரச உதவிக் குடியேற்றத்திட்டங்களில் குடியமர்த்தப்பட்ட தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கும் கிழக்கும் திரும்பிச்சென்றமை இத்தகைய மனோபாவத்தின் விளைவினாலாகும். இதனடிபடபடையிலேயே பின்னைய குடியேற்றங்களில் கூட்டமாகக் குடியேற்றும் உபாயம் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாண இருப்பான விவசாயிகளும் யாழ்ப்பாண முஸ்லிம்களும் கல்விக்கும் வியாபாரத்துக்கும் கொடுத்திருந்த முக்கியத்துவம் கொழும்பு யாழ்ப்பாணம் உட்பட்ட பெரிய சிறிய நகராக்கங்களுடன் அவர்களை இணைக்கச்செய்திருந்தது.

யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் அதிவரட்சிப் பகுதியில் வாழ்ந்த தமிழர்களும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், கிழக்கு மாகாணத்திலும் வாழ்ந்த வருமானம் குறைந்த குடும்பத்தினளவு, பெரிதாகவிருந்த குடியானவர் குடும்பங்களுமே இருபதாம் நூற்றாண்டின் உதயத்தை ஒட்டிய காலப்பகுதிகளில் ஜீவனோபாயத்துக்காக வன்னியின் வரண்ட பகுதிகளை நோக்கிகப் புலம்பெயரத் தயாராகவிருந்தனர். விருப்பத்தினடிப்படையில் மாத்திரமன்றி வாழ்க்கைப்போராட்டத்தின் கட்டாய தேவைக் காகவும் அவர்கள் இடம்பெயரவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டார்கள்

நிலச்சுவாந்தர்களதும் பணவசதி படைத்தவர்களதும் காணிப்பசிக்குத் தீர்வாக அமைந்திருந்த நீர்ப்பாசனக்குளங்களின் கீழிருந்த பாசன நிலங்கள் தனியுடைமைப் பொருளாதாரத்தின் பிரதிபலிப்பாக இருந்தனவேயன்றி வரண்ட பிரதேச அபிவிருத்திக்கும் குடியானவர் வாழ்வினை மேம்படுத்துவதற்கும் ஆதாரமாக அமையவில்லை.

பிரித்தானியர் தேயிலைத்தோட்டங்களுக்குத் தென்னிந்தியத் தமிழர்களைக் கூலித்தொழிலாழராகக் கூட்டி வந்ததைப் போன்று ஆரம்ப காலங்களில் யாழ்பாண, மட்டக்களப்புக் குடியானவர் குடும்பங்கள் கூலித் தொழிலாளர்களாகப் பெரிய கமங்களுக்குள் குடியமாத்தப்பட்டனர். சொந்தமாக வழங்கப்படாத காணிகளில் தற்காலிகமாக வாழும் தொழிலாளர்கள் நிரந்தரமாக வாழுவதற்கு அக்கறை காட்டவில்லை. தென்னிந்தியத் தமிழர் போலன்றி, மாறாக திரும்பவும் சொந்த இடங்களை நோக்கிக் செல்லவே விரும்பியிருந்தார்கள். அத்துடன் மலேரியா போன்ற நோய்களின் தாக்கம் நிரந்தரமான பண்ணைக்கூலித் தொழிலாளர் சமூகத்தின் வளர்ச்சியினைத் தடுத்து நிறுத்தியது.

அரச ஆதரவுடன் வழங்கப்பட்ட குடியானவர் குடியேற்றத் திட்டங்கள் வரண்டபிரதேச அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகித்ததுடன் வன்னியிலும் கிழக்கு மாகணத்திலும் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் இடப் பெயர்வுககும், பரந்து வாழும் மனப்பாங்குக்கும் ஊக்கமளித்தது. அரசு ஆதரவுக் குடியானவர் குடியேற்றத் திட்டங்களின் தோற்றம் 19ம் நூற்றாண்டின் கடைசியிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் இருபதாம் நூற்றாண்டு முழுவதிலும் இலங்கை அரசாங்கத்தின் அரச ஆதரவுக் குடியேற்றத் திட்டங்களில் பெரும்பகுதி பெரும்பான்மை மக்களைத் திருப்திப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தது.

முன்னரே ஆரம்பிக்கப்பட்ட அரச ஆதவுக் குடியேற்றத் திட்டங்களில் குடியேறிய குடியானவர்களின் இரண்டாம் மூன்றாம் தலைமுறைகளின் நிலத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக அமைந்த அபிவிருத்தித் திட்டங்களும், காணி உச்சவரம்புச்சட்டம், நெற்காணிச்சட்டம் போன்றனவெல்லாம் பணம் படைத்த நிலச்சுவாந்தர்களிடமிருந்து நிலம் பறிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டமைந்திருந்தன இதன் மூலம் வசதிபடைத்த விவசாய முதலாளிகளினதும் நிலச்சுவந்தர்களது நிலங்களும் இரண்டாம் மூன்றாம் தலைமுறைக் குடியானவரின் நில ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்டன. ஒன்றில் பலவந்தமாக அல்லது குறைந்தளவு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டதாக அமைந்திருந்தன. இவ்விதம் பரிமாற்றத்துக் குட்படுத்தப்படாத காணிகள் காலப்போக்கில் உரிமை கோருவோரில்லாததால் அரச உடைமைகளாக மாற்றம் பெற்றிருந்தமையினையும் அவதானிக்க முடிந்தது.

ஆரம்பத்தில் குடியானவர் குடியேற்றத் திட்டங்களில் பெரிய குடும்பங்களைக் கொண்ட குடியானவர் தெரிந்தெடுக்கப்பட்டதுடன் தொழிலாளர்களாக இருந்தவர்களும் அவ்விடங்களில் வசித்த புராதன குடியேற்ற வசிகளும் குறைந்த விகிதாசாரத்திலும் தேர்ந்தெடுக்கக்கப்பட்டனர். இந்த முறையில் வரண்ட பிரதேசக் குளங்களின் நீர்ப்பாசனத்துக்குட்பட்ட பெரிய கமக்காரரின் தொழிலாளர் தேவையினைப் பூர்த்திசெய்யக் கூடும் என்ற எண்ணம் ஒருபுறம் இருக்க இலங்கையின் உணவுத் தேவையினை பெரிய கமங்களின்

6ம் பக்கம் பார்க்க...

தமிழ் இலக்கியத்தோட்டத்தின் ஆதரவில்
எழுத்தாளர்
அ. முத்துலிங்கம்
அவர்களின்
“ஒலிப்புத்தகம்” வெளியீட்டு விழா
October 03, 2009 4:00 PM
Scarborough Civic Centre
McCowan & Ellesmare
150 Borough Drive
Toronto
905 201 9547

கலைஞர்
கே.எஸ். பாலச்சந்திரன்
அவர்கள் எழுதிய கடலோடிகளின் கதைசெல்லும் நாவல்
“கரையைத் தேடும் கட்டுமரங்கள்”
நூல் வெளியீட்டு விழா
October 03, 2009 மாலை 5.30
Agincourt Community Centre
Midland & Sheppard (On Sheppard)
31 Glen Watford Drive
Scarborough
647 829 7371

இனி...

# காதோடுதான் நான் பேசுவேன்



கந்தசாமி
கங்காதரன்

இந்த ஒக்டோபரிலிருந்து ஒன்ராறியோவில் கைத்தொலைபேசிகள் மற்றும் Black Berry's போன்ற இலத்திரனியல் கருவிகளை வாகனம் ஓட்டும்போது கையில் வைத்துக் கொண்டு பேசுவதோ அல்லது பயன்படுத்துவதோ சட்டத்திற்குப் புறம்பான செயலாக கருதப்படும்.

Cell phone head set மற்றும் Voice dialingஐ வாகனம் ஓட்டும் போது ஓட்டுனர்கள் பயன்படுத்தினால் அவர்களுக்கு 500 டொலர் வரை அபராதம் விதிக்கப்படும். ஆகையால் அவற்றை அவர்கள் தவிர்க்கவேண்டும். சில வாடகை வாகன நிறுவனங்கள் மற்றும் courier and trucking firms ஆகியன இந்த சட்டத்திலிருந்து தங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன. "அவர்களுக்கு அனுமதி கிடைப்பது அவ்வளவு சுலபமல்ல. சில கட்டாய காரணங்கள் இருந்தால் ஒழிய அரசு எந்த விதிவிலக்குகளையும், யாருக்கும் அளிக்கத் தயாராக இல்லை. பொது மக்களின் நலன் கருதி, பாதுகாப்பாக வாகனம் ஓட்டவேண்டும் என்பதே எல்லாவற்றையும் விட முக்கியமானது" என்கின்றார் ஒன்ராறியோ மாகாணப் போக்குவரத்து அமைச்சர் கௌரவ ஜிம் பிராட்லி அவர்கள்.

அமைச்சர் மேலும் கூறுகையில், "சாரதிகள் தங்கள் வாகனங்களைச் செலுத்தும் போது அலட்சிய மனப்பான்மையுடனும் மற்றும் பாதுகாப்பற்ற முறையிலும் இந்த தகவல் தொடர்புகளை மேற்கொள்வதை இந்த புதிய சட்டம் தடைசெய்யும். இந்த சட்டத்தை அவர்கள் மீறினால் 1000 டாலர் வரை கூடுதலான தண்டத்தொகை அவர்களுக்கு விதிக்கப்படும். மேலும் அவர்கள் 6 புள்ளிகள் குறைக்கப்படும் அல்லது பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் வாகனம் செலுத்தியமைக்காக 2000 டொலர் தண்டம் மற்றும் ஐந்தாண்டுகள் வரை சிறைத்தண்டனை ஆகியன விதிக்கப்படும். கையில் வைத்து பயன்படுத்த கூடிய பொழுதுபோக்கு உபகரணங்களையும் சாரதிகள் பயன்படுத்துவது சட்டத்திற்குப் புறம்பான செயல். ஆனால் வாகனத்தின் Sound Syste அத்துடன் ஒரு MP3 PlayerI இணைத்து இசைகேட்பதற்கு அனுமதி உண்டு. Dash boardன் மீது GPS கருவிகளை நிலையாக வைக்கவும் அனுமதி உண்டு.

வர்த்தக ரீதியிலான தகவல் தொடர்புகள் அனுப்பவோ அல்லது பெற்றுக்கொள்ளவோ செய்யும் வாகன ஓட்டுனர்களுக்கு விதிவிலக்குகள் அளிப்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. அவசரகால சேவைகளில் ஈடுபடும் வாகனங்களின் ஓட்டுனர்களும் கையடக்கமான உபகரணங்களை பயன்படுத்தி பேசுதல், விஷயங்களை பரிமாறி கொள்ளுதல், மற்றும் மின்னஞ்சல் அனுப்புதல் போன்றவைகளுக்கு உரிமை பெறலாம். அது போன்று, வாகன ஓட்டுனர்கள் 911 எண்ணுக்கு தேவையேற்படின் தொடர்பு கொள்ளலாம். "வாகன ஓட்டுனர்கள் தகவல்களை பரிமாறி கொள்ளக் கைகளில் வைத்துப்பயன்படுத்தும் இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்துவதை விடுத்து வேறு உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்" என்று Progressive Conservative கட்சியின் தலைமைக்குப் போட்டியிட்ட Chistine Elliott கூறுகின்றார். "நம் சாலைகளில் ஏற்படும் விபத்துகளை எந்த வழியிலாவது குறைத்தால் அது மிகவும் பாராட்டுதலுக்குரியது" என்றும் அவர் சொல்கின்றார்.

சட்டபிரிவு 118ன் கீழ் கையில் வைத்துப் பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் உபகரணங்கள் முற்றிலும் தடைசெய்யப்படும். அதே நேரம் சரதிகள் Blue tooth head setகள் மற்றும் Speaker phoneகள் போன்ற கைகளை பயன் படுத்தத் தேவையில்லாத உபகரணங்களைப் பயன்படுத்தலாம்.

ஒன்றாறியோவில் இந்த சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் மற்ற மாநிலங்களில் இந்த குற்றங்களுக்கு இதை விட கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. நியூபவுண்லாந்து வாகன ஓட்டுனர்களின் தகுதியிலிருந்து நான்கு நட்சத்திர புள்ளிகள் குறைக்கப்படும். பிரிட்டிஷ் கொலம்பியா அரசு இன்னமும் இந்த சட்டத்திருத்தத்தை கொண்டு வராமல் இருந்தாலும், புதிய சாரதிகள் கையடக்கமான அல்லது எந்த வகையான தொலைபேசிகளையும் பயன் படுத்துவதைத் தடைசெய்திருக்கிறது. கையடக்கமான அல்லது எந்த வகையான உபகரணங்களையோ சாரதிகள் பயன்படுத்துவது, மது அருந்தி கொண்டு வாகனத்தைச் செலுத்துவது போன்ற ஆபத்திற்கு ஒப்பானது என்று 2006ல் Utah பல்கலை கழகம் தன்னுடைய ஆய்வறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

> “ நாம் விடும் தவறு,
> எமக்குப் பண இழப்பையும்
> தேவையற்ற அலைச்சலையும் தருமென்பதால்,
> வாகனம் செலுத்தும்போது,
> முடிந்தவரையில் தொடர்பு சாதனங்களைத்
> தவிர்த்துக் கொள்வோம். ”

வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் சட்டமுன்மொழிவு இந்த இலையுதிர் காலத்தில் பிரின்ஸ் எட்வேட் ஐலண்ட் சட்டசபையில் கொண்டுவரப்படும். கிழக்குக் கனடவில் உள்ள நியூ பிறன்ஸ்விக்கில் மட்டுந்தான் இந்த மாதிரியான சட்டம் நடைமுறையில் இல்லை. நியூபவுண்லாந்து மற்றும் லப்ரடோர், கியூபெக், நோவா ஸ்கொஷியா ஆகிய மாகாணங்களில் ஏற்கனவே இந்தத் தடை நடைமுறையிலுள்ளது. இந்த இலையுதிர்காலத்தில் சஸ்கச்சுவான் மாகாணமும் இந்த சட்டத்தைக் கொண்டுவரவுள்ளது.

### ஒன்றறியோவில் சாரதியொருவர், இந்தச் சட்டத்தை மீறாமல் எப்படி ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தவோ பெறவோ முடியும்?

head setகள், blue tooth technology, போன்ற கைகளைப் பயன்படுத்தத் தேவையில்லாத உபகரணங்களைப் பயன்படுத்தச் சட்டம் அனுமதி அளிக்கிறது. நீங்கள் ஒரு வாகனத்தை செலுத்தும்போது சட்டத்தை மீறாமல் உங்கள் தகவல் தொடர்பு அல்லது பொழுது போக்கு சாதனத்தைப் பயன்படுத்த விரும்பினால், கீழ்வரும் நிபந்தனைகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும்.

- நீங்கள் செலுத்தும் வாகனம் சாலைக்கு வெளியேசெல்லவேண்டும் அல்லது சாலையில் சட்டப்பூர்வமான அனுமதி உள்ள இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- உங்கள் வாகனம் நகராது நிறுத்தப்பட வேண்டும். (Traffic signal or stop signal நின்று செல்வது போன்ற விஷயமல்ல இது).
- நீங்கள் செலுத்தும் வாகனத்தைச் சடுதியாக நிறுத்தி, போக்குவரத்து நெரிசலை உண்டாக்கக்கூடாது. அதாவது உங்களிடம் ஒரு head set, blue tooth தொழில் நுட்பம் அல்லது அது போன்ற கருவி இல்லாமல் இருந்தால். நீங்கள் உங்கள் cell phone or i phoneஐ, கையில் எடுத்து ஒரு தொலைபேசி அழைப்பை விடுக்கவோ அல்லது பெற்றுக்கொள்ள முனையக்கூடாது.

### அமெரிக்காவில் ஏதாவது மாநிலங்களில் இந்த தடைச் சட்டங்கள் உள்ளதா?

பல மாநிலங்களில் உள்ளது. சாரதிகள் Cell phoneகளை பயன்படுத்தகூடாது என்ற தடைஉத்தரவு கலிபோர்ணியா, Connecticut, நியூ ஜெர்சி, நியூ யோர்க் மாநிலங்களிலும் கொலம்பியா மாவட்டத்திலும் இவ்வாறான சட்டங்கள் நடைமுறையிலுள்ளன. மேலும் 17 அமெரிக்க மாநிலங்களில் சாரதிகள் அதிலும் குறிப்பாக பதின்ம வயதினர் மற்றும் பேருந்து சாரதிகள் வாகனம் செலுத்தும்போது கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்துவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. நியூ யோர்க்கில் 2009, மார்ச் 12ஆம் நாள் நடத்தப்பட்ட திடீர் சோதனையில், கைத்தொலைபேசி பயன்படுத்திய குற்றத்திற்காக 9,016 பேர் மீது சட்டம் தன் கடமையைச் செய்தது.

எனவே, நாம் விடும் தவறு, எமக்குப் பண இழப்பையும் தேவையற்ற அலைச்சலையும் தருமென்பதால், வாகனம் செலுத்தும்போது, முடிந்தவரையில் தொடர்பு சாதனங்களைத் தவிர்த்துக் கொள்வோம்.

தேவையைப் பொறுத்து வளர் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி, தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவோம். அல்லது பாதுகாப்பான வழிமுறைகளைக் கைக்கொள்வோம்.

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

தமிழர்கள் மத்தியில் கணினிப்பாவனையை ஊக்குவிக்கும் நோக்கிலும்
கணினியில் தமிழ் பாவனையை இலகுபடுத்தும் நோக்கிலும்

கருத்தரங்கும்
அறிமுக நிகழ்வும்

October 04, 2009 மாலை 4
கனடா கந்தசாமி கோவில் மண்டபம்
Birchmount & Eglinton
733 Birchmount Road.
Toronto, ON

இந்த நிகழ்வில்,
*தமிழ் விக்கிபீடியா *உத்தமம் - தமிழ் இணைய மாநாடு 2009
*வலைப்பூ Blogs *தமிழ் மென்பொருள்கள் போன்றவை தொடர்பான விளக்க நிகழ்வும், *'புத்தகம்' இணையத்தளம் *'கம்ப்யூட்டர் ருடே' - தமிழ் கணினிச் சஞ்சிகை *தமிழ் தட்டச்சு சேவை போன்றவற்றின் அறிமுக நிகழ்வும் இடம்பெறவுள்ளது.


647 427 6155



VEEDU
REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave., Unit #8
Toronto, ON, M1B 5K3
Tel: 416.759.6000
Fax: 416.759.6005

• Building permit
• Zoning info.
• Site plan approval
• Rezoning approval

Gop Kalaieswaraan
Master in Architecture
Sales Representative
(Residential, Commercial, Institutional)
Dir: 416.723.7467



# வரண்ட பிரதேச...

4ம் பக்கத் தொடர்ச்சி...

உதவியுடன் பரந்த அடிப்படையலான விவாசயத்தின் மூலம் தீர்த்துக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கைக்கும் உதவியளிப்பதாக குடியானவர் குடியேற்றங்கள் அமைந்திருந்தன.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசாங்கம் கடைப்பிடித்த குடியேற்றத்திட்டக் கொள்கை குடியானவர் சுயதேவை பூர்த்தி, வரண்டபிரதேச அபிவிருத்தி, இலங்கையின் உணவுத் தேவை பூர்த்தியாக்கப்படுதல், வளரும் மக்கள் அடர்த்தியனைக் குறைத்து பிரதேச ரீதியிலான பரம்பலுக்கும் சனத்தொகை அடர்த்திக்கும் வழியேற்படுத்துதல் ஆகியவற்றுக்கு முக்கியமளிக்கப்பட்டது போல் சிங்கள தமிழ் முஸ்லிம் இனங்களின் ஒன்றுபட்ட வாழ்வுக்கும் வழிசெய்யும் நோக்கம் கொண்டதாக அமைந்திருந்தது. உதாரணமாக தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்த வன்னிக் குடியேற்றத் திட்டங்களில் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களும் கலந்து குடியேற்றப்பட்ட பொழுது அரசாங்கங்களின் திட்டம் மிகத் தெளிவாக இருக்கவில்லை. சிங்கள முஸ்லிம் மக்கள் கட்டிடக் கூலிகளாக வந்த குடும்பங்களே குடியேறியிருந்தார்கள். தாய்மொழிக் கல்வி அறிமுகப்படுத்தப் படாததினால் உணவு மருத்துவம் என்பன அடிப்படையானதாகவும் கல்வி கலாச்சாரம் சமயம் என்பன முக்கியத்துவப்படுத்தப் படாததாகவும் இருந்தன.

உணவும் மருத்துவ வசதியும் இருக்குமிடத்து, அதில் திருப்திப்பட்டுக் கொள்ளக்கூடிய புதிய இனமாக குடியானவர் அமையவேண்டும் என்பதனையே அன்றைய குடியேற்றங்கள் வழிசெய்யும் நோக்கத்தைக் கொண்டிருந்தன.

பசித்திருக்கின்ற பொழுதில் கல்வி இனவாதம் சமயம் கலாச்சாரத்தனித்துவம் என்பன முக்கியமற்றிருந்த காலப்பகுதியில் கல்வி சமயம் கலாசாரம் ஆகியவற்றைப் பேணுகின்றவர்கள் உயர்குழாத்தினரும் படித்த அரசியல் வாதிகளும் என்ற நிலையிருந்தது.

வரண்ட பிரதேசத்தின் மக்களின் இடப்பெயர்வுகள் அன்று தூரநோக்குடன் செயற்ப்படுத்தப் படவில்லை. வன்னியில் குடியேறிய ஆரம்ப குடியேற்றவாசிகள் பசிக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கும் போக்கினைப் பின்பற்றி ஒன்றிணைந்து சமாதான வாழ்வுக்கு ஏற்ற குடியானவர் என்ற வர்க்கம் ஒன்று புதிதாக உருவாகுவதையும் அதனடிப்படையில் தொழிலாளர் சமூகம் முக்கியம் பெறுவதனையும் அதனூடாக பொதுவுடைமைச் சமூகம் ஒன்று உருவாகக்கூடும் என்பதையும் எதிர்பார்த்தனரேயன்றி உயர்குழாத்தினரும் அரசியல்வாதிகளும் சமய இன மொழி வாதக் குரோத விதைகளை விதைப்பார்கள் என்று பிரித்தானிய நிர்வாகிகளும் அவர்வழி வாரிசுகளும் அறிந்திருக்கவில்லை.

சிங்கள இனவாதம் சுயபாசைக் கல்வி, இலவசக் கல்வி, இலவச மருத்துவம் என்பன முன்வைக்கப்பட்டதும் இனங்களிடையிலான இடைவெளி அதிகரிக்கத் தொடங்கியது. சிங்களம் மட்டும்சட்டம் கொண்டுவரப்பட்டமையும் அதற்கு அரசியல் முலாம் பூசப்பட்ட பொழுதில் தமிழுக்கும் தமிழுக்கும் இருந்த பிரத்தியேக உரிமைகளும் படிப்படியாகப் பறிக்தெடுக்கப்பட்டன.

ஒன்றுபட்ட குடியானவர் சமுகங்களுக்குள்ளே இனக்கலவரங்கள் மொழி மதம் கலாசாரம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொழுது இனங்களுக்கிடையிலான வெறுப்புணர்வுகளும் குரோதங்களும் உருவாகி வளரத் தொடங்கின. தமிழ்ப் பகுதிகளை நோக்கி வந்த சிங்களக் குடியானவர்கள் இனக்கலவரங்களினால் வடக்குக் கிழக்கு மாகாண எல்லைகளை நோக்கித் திரும்பிச் சென்ற பொழுது அரசு பாதுகாப்புடன் புதிய சிங்களக் குடியானவர் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றன. காலப் போக்கில் எல்லைப்பிரதேசக் குடியேற்றங்களின் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் தமிழர் புராதன வாழ் நிலங்களுக்குள் சென்று வாழும் நிலைமைக்குள் தங்களை உட்படுத்திக் கொண்டனர். இதற்கு உதவியாகப் பெரும்பான்மை அரசாங்கத்தின் சட்டதிட்டங்களும் அரச உதவிக் குடியிருப்புக்களின் பாதுகாப்பு உதவிகளும் அமைந்திருந்தன. சிங்கள இராணுவ கேந்திரங்கள் உருவாக்கப்படுவதும் ஊர்காவற்படையினர் தோற்றுவிக்கப்படுவதும் தமிழர் வாழ் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு உதவி செய்திருந்தன.

தமிழப்பகுதியின் இளைஞர்களதும் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினரின் நிலத்தேவைகள், நிலம் துண்டாப்படுவதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டதேயன்றிப் புதிய குடியேற்றத் திட்டங்களை உருவாக்கவும் அவற்றைத் தனியாக வளத்கெடுக்கவும் அரசாங்கம் குறைந்த அக்கறை காட்டியது. தமிழர்களது எல்லைகள் நோக்கிய குடியேற்றத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

புதிய தலைமுறையினரின் கல்வி அரச உத்தியோகம் ஆகியவற்றுக்குப் புறம்பான காணித் தேவைக்கும் அது தொடர்பான உணவு உற்பத்திச் செயற்பாடுகளுக்கும் வரையறைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. தமிழர் தேவைகள் அரசாங்க உதவியுடன் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலைமைகள் தோற்றம் பெறுகின்ற பொழுதில்தான் வாழ்க்கைப் போராட்டத்தின் அடுத்தகட்டமாக கல்வி, அரசங்க உத்தியோகம், வெளிநாட்டுப் புலம் பெயர்வு என்பவைற்றுக்கு இளைஞர்கள் மிக்கியம் கொடுத்திருந்தனர். நிலத்தின் தேவை நன்குணப்பட்டதனால் அரசாங்கத்தின் திட்டமிட்ட இன அடிப்படைக் குடியேற்றத் திட்டங்களுக்கு எதிரான கண்டனங்களும் தமிழர் பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வும் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் இராணுவச் செயற்பாடுகள் விரைவாக வளர்ச்சி பெற்றிருந்த பொழுது அதற்கு ஈடுகொடுக்கக் கூடியதாக தமிழர்களிடையே பாராளுமன்ற அரசியல் விளிப்புணர்வு போதாததாக இருந்தது. பாராளுமன்ற ஜனாயக முறையில் அரசாங்கம். தமிழர்களை எதிர்க்கட்சியாக நோக்குவதற்குப் பதில் எதிரிகளாகவே நோக்கத் தொடங்கியது. தொடர்ந்து அரசியல் ஏமாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன பாராளுமன்ற ஆசனங்கள் அதிகரிக்கப்பட்ட பொழுதிலும்கூட தமிழர்களின் அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் கிடைக்கவில்லை.

பாராளுமன்றத்தில் தமிழரின் பெரும்பான்மை அணி புறக்கணிக்கப்டும் சந்தர்பங்களில் தமிழர்களின் வாழக்கைப் போராட்டம் இரு வழியில் திருப்பட்டிருந்தது. அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவது என்ற தீர்மானம் எடுப்பவர்கள் ஒருபுறமும், அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டிப்பதற்காக தனித்துப் போராடுவது என்ற நிலைப்பாட்டினைக் கொண்டவர்கள் மற்றொரு அணியாகவும் பிரியத் தொடங்கினார்கள். இந்தப் பிரிவின் தொடர்ச்சி இன்னமும் தமிழர்களிடையே தொடர்கிறது.

வன்னியை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாழ்க்கைப் போராட்டம் இன்று மூன்று இலட்சம் தமிழர்களின் அடைத்துவைக்கபட்ட வாழ்க்கைக்கும் அவர்கள் படும் அவலங்களுக்கும் வழி ஏற்படுத்தியருந்தது. வன்னிக் குடியேற்ற வாசிகளும் அவர்களது வாரிசுகளும் மீள்குடியேற்றத்தினை எதிர்பார்த்துக் காத்தக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை வடக்குக் கிழக்குத் தமிழ் பகுதிகளில் அரச உதவி குடியேற்றங்கள் அமைக்கப்படும் புதிய உத்தியில் தெரிந்தெடுக்கப்பட்ட குடியானவர் குடியேற்றத்துக்குப் பதில் இரணுவ உடை போட்ட குடியானவர் குடியேற்றவாசிகளாகக் குடியேற்றப்படுவார்கள் என்ற ஊகங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அகதிமுகாம்கள் அகற்றப்படாதவரையிலும் இந்த ஊகம் மீண்டுமொரு வாழ்க்கைப் போராட்டத்துக்கு வழியேற்படுத்திக் கொண்டேயிருக்கும். புதிய சிறிய சிறிய அகதிமுகாம்கள் திறக்கப்படுவதும் அதில் தமிழர்கள் குடியேற்றப்படவதும் குடியானவர் குடியேற்றத்துக்கு புதிய வரைவிலக்கணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■


# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | CALL |
| 5 Yrs Fixed | CALL |
| Variable Closed | CALL |
| Variable Open | CALL |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Main Office**
4544 Sheppard Ave E
Suite #208
Scarborough, ON
M1S 1V2

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC



**Ram Krish**
RBC Mortgage Specialist
Direct **416-526-4996**
Email: ram.krish@rbc.com

# குளியல் அறை மறுசீரமைப்பும் சமையல் அறை திட்டமிடலும்

குளியல் அறை, சமையல் அறை ஆகியன எவ்வாறு பராமரிக்கப்பட்டுள்ளன என்பது ஒரு வீட்டின் சந்தைப் பெறுமானத்தை நிர்ணயிக்கும் காரணியாக அமைகின்றது என்பது அடிப்படை உண்மையாகும். எனவே ஒரு வீட்டை சீரமைப்பு (renovation) செய்யும்போது இவ்விரு பகுதிகளையும் பற்றிக் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு குளியல் அறையை புனர்நிர்மானம் செய்வதற்கு மிகக் குறைந்தது 4,000 டொலர்கள் தேவை. மிகவும் ஆடம்பரமான மாளிகைகளில் இந்த அறையை மீளத் திருத்தி அமைப்பதற்கு ஒரு இலட்சம் டொலர்களுக்கு அதிகமாக செலவு ஏற்படுகின்றது. எந்த வகைக் குளியல் அறையும் அடிப்படையான சில அமைப்புக்களைக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். அதே வேளை சரியான திட்டமிடல், சிறந்த வடிவமைப்பு என்பன இந்த அறைக்கு மிக அழகான புறத்தோற்றத்தை ஏற்படுத்துவதாக அமையும்.

பொதுவாக குளியலறைத் தரை அல்லது சுவரில் அமைக்கப்பட்டுள்ள ஓடுகள் (Tiles), கழிவகற்றி, குளியல்த் தொட்டி (Bath Tub) நீர்சொரி கருவி (Shower) ஆகியன எவ்வாறு தோற்றம் அளிக்கின்றன என்பதன் அடிப்படையிலேயே இந்த அறை புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டுமா இல்லையா என்று ஓர் வீட்டு உரிமையாளர் முடிவு செய்வது வழக்கம். அதே சமயம் சுவர்களில் சிராய்வு, சாயம் மங்கிக் காணப்படுதல் என்பனவும் அவதானிக்கப்படல் அவசியம். எந்த ஒரு குளியல் அறையிலும் அதன் ஆதாரத் தொகுதி அந்த அறையின் Plumping அமைப்பு முறையாகும். அதில் எந்தவித கசிதல் அல்லது வேறு பாரிய குறைபாடும் இல்லை என்பதனை முதலில் உறுதி செய்த பின்னரே அந்த அறையின் புறத் தோற்றம் தொடர்பான திருத்த வேலைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

## குளியல் அறை திருத்த வேலை தொடர்பாக அவதானிக்கப்பட வேண்டிய பிரதான விடயங்கள்

### தரைப் பகுதி (Flooring)


உங்களது குளியலறையின் தரையில் கல், களிஓடு (ceramic tile), அல்லது மாபிள் (porcelain) ஆகிய எந்தவித ஓடுகளையும் பதிக்கலாம். தக்கை (cork) ஈரலிப்பு எதிர்ப்புத் தன்மை உடையது என்ற காரணத்தினால் சிலர் இவ்வகையான தரை அமைப்பை விரும்புகின்றனர். அதே சமயம் வழுவழுப்பான மேற்பரப்புக்கள் ஈரமாகும்போது வழுக்கும் தன்மை கொண்டவை என்பது கவனத்தில்க் கொள்ளப்பட வேண்டும்.

வழுக்கும் தன்மை குறைவுடையது என்ற காரணத்தில் Mosaic ஓடுகளைப் பதிக்கும் முறையும் தற்போது பிரபலமாகி வருகின்றது. அதே வேளை ஈரலிப்பான பகுதிகளுக்கு ஏற்றவை எனக் கருதப்படும் தேக்கு அல்லது மூங்கில் மரப்பலகைகளும் குளியலறைத் தரைக்கு பொருத்தமானவையாகும்.

### அசையாத சொத்துக்கள் (Fixture)

உங்கள் வீட்டை விற்பனைக்காக தயார்ப் படுத்தும்போது அல்லது உங்கள் வதிவிடத்தை அழகுபடுத்தும்போதே குளியல் அறையில் உள்ள கழிவகற்றி, குளியல்த் தொட்டி, முகம் கழுவும் தொட்டி (Sink) ஆகியவற்றை புதியனவாக மாற்றீடு செய்யும்போது அவை வெள்ளை நிறம் உடையதாக இருத்தல் சிறந்தது. நீர்ச் சழற்சி வகையான (whir pool type) குளியல் தொட்டி (Bath tub) யை அமைக்க விரும்பினால் வழமையான அமைப்புக் கொண்டதான அல்லது காற்று விசை (Air-Jet) அமைப்புடையதான ஏதாவது ஒரு வகையைத் தெரிவு செய்யலாம்.





### ஒளியமைப்பு (Lighting)

சமையல் அறைப்பகுதியைப் போன்று குளியல் அறையிலும் ஒளி அமைப்பு பொருத்தமானதாக அமைக்கப்பட வேண்டியது அவசியம். குறிப்பாக முகம் கழுவும் தொட்டிக்கு மேலே அமைந்துள்ள மின் குமிழ்கள், முகத்திற்கு மேலே அமைந்துள்ள மின் குமிழ்கள் முகத்திற்கு ஒளி படச்செய்வதற்கு ஏற்றதாக அமைக்கப்படவேண்டும்.

### நீர்க்குழாய் தொகுதி (Plumbing)

இந்த நாட்டில் பனிக்காலத்தின்போது frost ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, குளியல் அறையில் உள்ள குழாய்கள் வெப்பக் கசிவுத் தடுப்பு உடையனவா என்பதனை உறுதிப் படுத்துதல் அவசியம்.

### காற்றோட்டம் (Ventilation)

குளியல் அறையில் சிறந்த காற்றோட்டம் தேவைப்படுவதால் சில சமயங்களில் சுவரில் அல்லது Ceiling பகுதியில் மின் விசிறிகள் அமைக்கப்படுவது வழக்கம். ஆனால் சமீப காலங்களில் மின்விசிறி மின்குமிழ்கள் என்பன இணைந்த அமைப்புக்கள் பொருத்தப்படுதலை அவதானிக்க முடிகின்றது.

### மின் இணைப்பு

மின்சார அதிர்ச்சியில் இருந்து பாதுகாப்பதற்காக குளியலறைச் சுவர்களில GFCI எனப் படும் வெளியேறு துளைகள் அமைக்கப்படுகின்றன. தலைமயிரை உலர்த்தும் கருவி, முகச் சவரம் செய்யும் கருவி போன்றன மின் உபகரணங்களை அல்லது சிறிய மின்சாரக் கருவிகளை உபயோகிக்கும்போது அவை நீருடன் தொடுகை ஏற்படும் வாய்ப்பு உண்டு. அவ்வாறான வேளைகளில் மின்சார அதிர்ச்சி ஏற்படாமல் இருக்க GFCI வெளியேறு துளைகள் பாதுகாப்பு வழங்குகின்றன. எனவே இந்த வகையான மின் அமைப்புகள் பொருத்தப்படுவதை நீங்கள் நிச்சயம் கருத்திற் கொள்ள வேண்டும்.

### களஞ்சியப் படுத்தல் (Storage)

முகம் கழுவதற்கான தொட்டியின் கீழே உள்ள பகுதியை சிறந்த முறையில் பயன்படுத்தி அவசியமான பொருட்களை சேகரித்து வைக்கலாம் இந்தப் பகுதியில் துவாய்கள், சவர்க் காரம், சம்பூ என்பனவற்றை ஒழுங்கு படுத்தலாம். உங்களது குளியல் அறையில் Closet அமைக்கப்பட்டிருந்தால் மேற்குறிப்பிட்ட பொருட்களை அந்தப் பகுதியில் வெவ்வேறு தட்டுக்களில் மிக அழகாக அடுக்கி வைக்கலாம்.

### சமையலறை அமைப்பு திட்ட மிடுதல் (Kitchen Planning)


மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

சமையல் அறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு அடிப்படையான பருமன் அளவுகளும் பொது விதி முறைகளும் உள்ளன.

எந்த ஒரு சமையல் அறையிலும் அடுப்பு, குளிர்சாதனப் பெட்டி, கழுவும் தொட்டி ஆகிய மூன்றும் முக்கோண அடிப்படையில் அமைதல் வேண்டும் என்பதே மிகவும் முக்கியமான விதியாகும். சமையல் அறையில் பிரதானமானதான இந்த மூன்று உபகரணங்களும் அங்கு பணிபுரிவர் எவரும் வட்டமான சழற்சிப் பாதையில் இலகுவாக அசையக் கூடியதாக அமைக்கப்பட வேண்டும். அத்துடன் உபகரணங்களுக்கு இடையில் 30” இடைவெளி அவசியம். குறிப்பிட்ட ஓர் உபகரணத்தை சமையலறையில் ஒரு மூலையில் வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டால், அந்த மூலைக்கும் உபகரணத்திற்கும் இடையில் குறைந்தது 9” இடைவெளி தேவை.

எந்தவிதமான மீளத் திருத்தல் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் சரியான வகையில் திட்டமிடல் அவசியம். நவீன மாற்றங்களுக்கு ஏற்றதான புதிய எண்ணங்களை நன்கு பயன்படுத்தினால் நீங்கள் வாழும் இல்லத்தைப் புதுப்பொலிவுடையதாக மாற்ற முடியும். அத்துடன் உங்கள் இல்லத்தை விற்பதற்கு முடிவு செய்யும்போது நீங்கள் எடுத்த முயற்சிக்கு ஏற்ப உங்களது இருப்பிடத்தின் சந்தைப் பெறுமானமும் அதிகரிக்கும்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்





Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:
தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed


All your Real Estate needs
ஞானி நரசிங்கம்
Sales Representative
416-937-8090
ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
416-629-9797
"வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க"
Office: 416-321-6969
CHANCE TO WIN ..... Buy or Sell Through Us
BMW 3 SERIES
TRIP TO CUBA
PLASMA TV
Markham / Eglinton
$2.95 Million
Excellent High Traffic Main Corner Plaza
Fully Leased Long Standing Retail Tenants
High Density Residential Area
Financial and Documents Available
Approx 7% Cap Rate.
Markham / Eglinton
Banquet Hall
$99,000
Banquet Hall with 200 Seats
Ample parking and Convenient Location
One Yr old Established Business
Very well setup, Spent $$$$$
Totally Renovated Brand New Setup
Brand New A/C and Heating
Markham / Eglinton
Dine In Restaurant
$79,000
Dine in Restaurant with 40 Seats
Take out and Catering available
Excellent and Affordable family Business
Very well Kitchen setup with Chinese Wok
Large kitchen to Handle takeout and catering orders
Simcoe / Taunton
$499,000
Attention Investors and Developers
Detached Bungalow with two Bedroom
Located Across UOIT Durham College
It has Mixed Use Potential
Also Listed for LEASE
Finished Basement with Three rooms
PORT HOPE
$199,000
Detached bungalow on Huge Lot
3 bedrooms with 2 washrooms
Peter St and Rose Glen AVE
Leased for $1000 + Utilities
Opportunity for Investors and Devolopers
PORT HOPE
Motel
$1.1 Million
Motel with 48 Rooms on 3.8 Acres land
Banquet Hall, Bar and Restaurant Setup
Prime Location in PORT HOPE
Two Road Frontage and Lake View
Good Investment with lots of Usage
Simcoe / Conlins
$289,900
Brand New Detached brick 2 Storey
4 bedrooms/ 2 full washrooms
5 Mins walk to UOIT Durham College
Approx 2000 square feet
Close to all Amenities
Brimley / Steeles
$619,888
Absolutely Gorgeous Home
Detached brick 2 Storey
4 bedrooms with 3 full washrooms
Finished Bsmt Apt 3 Br Sep. Entrance
Very Deep Lot and Close to Steeles.
High Demand Area
Marmora
Gas Station
$648,000
Business Plus Building
Great Family Business with Property
Econo Gas Station with Convenient Store
2 Apartment and 2 Bay Garage
Extra income about $3000 Except Gas Bar
Markham / Steeles
Building "A"
$329,900
For sale or lease. Brand new
2 retail stores available
High traffic area, Many Usage
Facing Markham Road
Exterior and interior entrances
Downtown Toronto
$349,900
Luxury Condo in Scarborough DownTown
1+1 bedrooms/ 1 full washrooms
More facilities than any other Condo
Close to Town Center
Fast Moving Condo in Scarborough
Warden / Sheppard
$154,900
2 bedroom Condo Full & ½ washrooms
Location Location Location.......
Step toschool & shopping, Minute to 401
Carry Cheaper than Rent
First Time Buyer Opportunity
Kennedy / Ellesmere
$2.95 Million
Commercial Retail Plaza
10,800 Sqft/ over ½ acre land
Free standing Building
Fully leased property
Prime spot in Toronto
McCowan/Highglen
EXCLUSIVE
$499,900
Detached 2 Storey Brick Home
Well Maintained 4 Bedroom with
3 Full Washroom & ½ Washroom
Basement Apt with Sep. Entrance
Location.. Location... Location...
Any Location
Your Listing
Call Gnani & Judy
HomeLife
Toll Free: 1888-306-6669 Ext 5
HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3
This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# உள்ளுடல் பிதுங்குதல் (HERNIA)

எமது உடலின் வெளிப்பகுதி உறுப்புக்களை தலை, கழுத்து, கைகள், நெஞ்சறை, வயிறு, கால்கள் என்று பாகங்களாகப் பிரிக்கலாம். இதில் நெஞ்சறைப் பகுதியையும், வயிற்றுப் பகுதியையும் எடுத்துக் கொண்டால் அவ்விரு அறைகளினுள்ளும் பல உள்ளுறுப்புகள் இருப்பதைக் காணலாம். நெஞ்சறை மிகவும் வலுவான எலும்புக் கூட்டினால் அமைந்த அறையாகும். இதனுள் இருதயம், சுவாசப்பை போன்ற உறுப்புக்கள் பாதுகாப்பாக இருக்கின்றன. இவை தவிர சுவாசப்பை பெருவாதநாளி, களம், பெருநாடி என்பனவும் அங்கே காணப்படுகின்றன.

நெஞ்சறைப் பகுதியையும், வயிற்றுப் பகுதியையும் பிரிப்பது இரண்டிற்கும் நடுவேயுள்ள பிரிமென் தகடாகும். வயிற்றுப் பகுதியை எடுத்துக் கொண்டால் அதன் எல்லைகள் மேற்புறமாகப் பிரிமென்தகடும், முன்புறமாக வயிற்றுச் சுவரும், பின்புறமாக முள்ளந்தண்டும், தசைகளும், கீழ்ப்புறமாக இடுப்புப் பகுதியும் இருப்பதைக் காணலாம். வயிற்றினுள் கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், நேர்குடல், சிறுநீரகங்கள் என மேலும் பல உறுப்புக்கள் உண்டு. சுருக்கமாகக் கூறப்போனால், இங்கே உள்ளே காணப்படும் உறுப்புக்கள் அல்லது உள்ளுடல்கள் வயிற்றுப் பகுதியில் நலிவடைந்துள்ள சுவர்களுடே பிதுங்கி வெளித் தள்ளப்படுவதை HERNIA என அழைப்பார்கள். உள்ளுடல்கள் பிதுங்கும் இடத்தைப் பொறுத்து அதற்கு இடப்படும் பெயர்கள் வேறுபடும். இங்கே அநேகமாக சிறுகுடல், வயிற்றுப் பகுதியில் உள்ள கொழுப்புத்தசைகள் என்பன மெல்லிய வயிற்றுப் பகுதிகளுடே பிதுங்கி வருவதை அவதானிக்கலாம். இவை தவிர வேறு பகுதிகளும் பிதுங்கிப் புறந்தள்ளலாம். சில சமயங்களில் குணங்குறிகள் காணப்படமாட்டாது.

சிறுகுடல் மிகவும் நீளமானது. சிறுகுடல் சுருண்டு, சுருண்டு வடங்களாகக் காணப்படும் வயிற்றின் அடியில் தொடை ஆரம்பமாகும் இடம் "இறை" என்று கூறப்படும். இறையில் பலவீனமான தசைகள் இருப்பின் அவற்றின் ஊடே, சிறுகுடல் வடம் பிதுங்கிக் கொண்டு வரலாம். அப்பொழுது இறுக்கமான தசைகளுடே பிதுங்கிய சிறுகுடல் நசுக்கப்படுகிறது. அதில் உள்ள இரத்தக் குழாய்கள் நசுக்கப்பட குருதிஒட்டம் தடைபட்டு அப்பகுதிச் சிறுகுடல் இறக்க நேர்கிறது. இது ஒரு ஆபத்தான கட்டமாகும். உடனே சத்திர சிகிச்சை செய்து சீர் செய்யப்படுதல் வேண்டும்.

பெண்களிலும் பார்க்க ஆண்களுக்கே இத்தகைய உள்ளுடல் பிதுங்கல் ஏற்படுகிறது. ஏற்படும் பல்வேறுபட்ட உள்ளுடல் பிதுங்கல் நோய்களில் 70 சதவீகித மானவை இவையாகும் - இதற்கு இறை உள்ளுடல் பிதுங்கல் (Inguinal Hernia) நோய் என்று கூறலாம் இது இருவகைப்படும்.

- நேரற்ற உள்ளுடல் பிதுங்கல் (Indirect Inguinal Hernia)
- நேரான உள்ளுடல் பிதுங்கள் (Direct Inguinal Hernia)

## நேரற்ற உள்ளுடல் பிதுங்கல் (Indirect Inguinal Hernia)

ஆண் பிள்ளைகளின் விதைகள் வயிற்றுப் பகுதியில் உருவாகிப் பிள்ளை பிறப்பதற்கு

**இதயம் மலர்கிறது - 16**

முதல் இரண்டு விதைகளும் விதைப்பைகளினுள் இறங்கிவிடும். அதே சமயம் வயிற்றுப் பகுதியில் இருந்து விதை இறங்கிய பாதையும் மூடப்பட்டுவிடும். ஆனால் இப்பாதை எதிர் காலத்தில் வயிற்றுப் பகுதி உள்ளடக்கம் அதனூடை விதைப்பையினுள் சென்று வரக் கூடிய ஒரு வழியாக வரக்கூடிய சந்தர்ப்பத்தைத் தரலாம். எவ்வயதிலும் இது ஏற்படலாம்.

## நேரடியான உள்ளுடல் பிதுங்கல் அல்லது இறக்கம் (Direct Inguinal Hernia)

விதைகள் இறங்கிய பாதைக்கு உட்பக்கமாக இவ்இறக்கம் ஏற்படும் – வயிற்றுத் தசை அவ்விடத்தில் பலவீனமாக இருப்பதால் ஏற்படுகிறது.

## தொடையினுடே பிதுங்கல் (Femoral Hernia)

தொடை நாடி, நாளம், நரம்புகள் என்பன ஒரு கூட்டாக வயிற்றுப்பகுதியில் இருந்து இறுக்கமான இடைவெளியூடாக இரு மருங்குகளில் வலது, இடது தொடைகளைச் சென்றடைகின்றன. இறுக்கமான இந்த இடைவெளி பெரிதாக வயிற்றுச் சிறுகுடல் பகுதி இதனூடே தொடையினுள் இறங்கலாம். இறையின் நடுப் பகுதியில் புடைத்துக் காணப்படும். பெண்களில் கூடுதலாக ஏற்படும். சில சமயங்களில் பிதுங்கிய உள்ளுடல்களை மீண்டும் அதனூடே செலுத்தி விடமுடியாமல் வரலாம். அகப்பட்ட சிறுகுடல் பகுதி திருகப்பட்டு அதன் குருதிச் சுற்றோட்டம் தடைபட, ஆபத்தான நிலை ஏற்படும், வைத்திய ஆலோசனை உடனே இங்கு தேவைப்படும்.

## பிரிமென்தகட்டு பிதுங்கல் (Diaphramatic Hernia)

நெஞ்சறையையும், வயிற்றறையையும் பிரிக்கும் சுவராகப் பிரிமென்தகடு இருக்கின்றது. வீடுகளில் சுவர்களை இடையிடையே ஊடறுத்து, நீர்க்குழாய்கள், மின்சாரக்கம்பிகள், தொலைபேசிக்கம்பிகள் ஒரு அறையில் இருந்து இன்னுமொரு அறைக்கு சுவரில் ஏற்படுத்தப்படும் துவாரங்களுடாகச் செல்வது போல் இப்பிரிமென்தகட்டிலும் உணவுக்குழாய், இரத்தக்குழாய், நரம்புகள் போன்ற அமைப்புக்கள் செல்கின்றன. இத்துவாரங்களின் மோதிரம் போன்ற எல்லைபலமாக இருப்பதால் வயிற்றுப்பகுதி உள்ளுடல்கள் மேல் பக்கமாக நெஞ்சறையை நோக்கிப் பிதுங்கிச் செல்வது மிகவும் அரிது. எனினும் நாளடைவில் வெகுசிலரில் சில காரணங்களால் அப் பகுதி பலவீனமடைய இப்பிரி மென்தகட்டினூடே வயிற்றுப் பகுதி உள்ளுடல் மேலே செல்லும் பொழுது நெஞ்சறை, வயிற்றுப் பகுதியில் வேதனை ஏற்படுகின்றது. இவ்விடத்தில் ஏற்படும் வேதனைகளுக்குப் பல காரணங்கள் உண்டு. அதைப் படிப்படியாக உறுதி செய்து சரியான சிகிச்சை பெறப்படுதல் வேண்டும். குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி நோயைக் கண்டறிதல் பிரதானமானது.

## தொப்பூள் ஊடாக பிதுங்கல் (Umblical Hernia)

தாய் வயிற்றில் பிள்ளைக்குத் தேவையான சகல ஆகாரங்கள், பிராணவாயு என்பன தொப்பூள் கொடியூடாக எடுத்துச் செல்லப் படுவதுடன் மீண்டும் உடற்தொழிற்பாட்டின் பொழுது விடப்பட்ட கழிவுகள் எடுத்துவரப்படுகின்றன. பிள்ளைகள் பிறந்தபொழுது இப்பகுதி நன்றாக மூடப்பட்டு இருக்கும். எனினும் சராசரியாக 20 சதவீதமான பிள்ளைகளில் இத் தொப்பூள் பகுதி வலுவாக மூடப்படாது இருக்கும் வலுவற்ற இடைவெளி 1.2 ச.மீ அளவு சிறியதாயின் தொப்பூள் சற்று ஊதி வெளித்தள்ளும். ஆனால் நாளடைவில் அதாவது 2 அல்லது 3 வயதளவில் மூடப் பட்டுவிடும் சற்றுப் பெரிதாக இருந்தால் சில சமயம் 5 அல்லது 6 வயதளவில் மூடப்பட்டு விடும் ஏற்கனவே மூடப்பட்டு இருப்பவர்களுக்கும் கூட பின்பு வரலாம். பெண்களில் மகப்பேற்றுக் காலங்களிலோ அல்லது பின்போ ஏற்படலாம்.

## நடுவயிற்றுத்தசை ஓரங்களில் ஏற்படும் பிதுங்கல்

Rectus Abdominus என்ற நடுவயிற்றுத் தசையின் இரு மருங்குகளிலும் சிலருக்குத் தசைகள் பலவீன மடைந்து காணப்படலாம். வயிற்றின் நடுக்கோட்டிற்கு இரண்டு அங்குலங்கள் வரை இரண்டு பக்கமும் தள்ளியிருக்கும் நேர்கோடுகளில் உள்ள தசைகள் சிலருக்குப் பலவீனமாக இருப்பதால் இப்பகுதியூடாக உள்ளுடல் பிதுங்கி வர சந்தர்ப்பங்கள் உண்டு.

## சத்திர சிகிச்சையின் பின்பு ஏற்படும் பிதுங்கல் (Incisional Hernia)

சத்திர சிகிச்சையின் பின்பு போடப்பட்ட தையல் நெடுகேயுள்ள தசைகளில் சில இடங்களில் சிலருக்கு மெதுமையான தசை ஏற்படும். இதனூடே உள்ளுடல் பிதுங்க வாய்ப்பு உண்டு. அநேகமாக 2-8 சதவீதம் மனிதர்களுக்கு ஏற்படும் சாத்தியம் உண்டென கணிப்புகள் கூறுகின்றன.

## வயிற்று மேற்பகுதியில் பிதுங்கல் (Epigastric Hernia)

மார்பெலும்பு பட்டையின் கீழ்ப்பகுதிக்கும் தொப்பூழிற்கும் இடையில் உள்ள நடு வயிற்றுப் பகுதியில் ஏற்படும் பிதுங்கல் ஆகும். இதில் கொழுப்புத் தசைகள் தான் காணப் படும். குடற்பகுதி இதனூடேதள்ளப்படுவது மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. பலம் குறைந்த வயிற்றுத்தசைகளூடே கொழுப்புத் தசை தள்ளப்படுவது வயிற்றுள் ஒரு கட்டி இருப்பது போன்று தெரியும். வேதனை ஏற்படுவது இல்லை.

## இடுப்புக்குழியில் ஏற்படும் பிதுங்கல் (Obturator Hernia)

இது வெளியில் கட்டியாகத் தென்படமாட்டாது இடுப்புக்குழியில் இடுப்பெலும்பில் உள்ள துவாரத்தினூடாக பிதுங்கல் ஏற்படுகிறது. சில சமயங்களில் இப்பிதுங்கல் குடலில் தடையை ஏற்படுத்துகிறது. இதனால் குமட்டல், வாந்தி என்பன ஏற்படுகிறது. இதை கண்டு பிடிப்பது சற்று கடினம்.

### காரணங்கள்:

- பிறப்பில் ஏற்படலாம்



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

- பாரம் தூக்குதல்
- நாட்பட்ட தொடர்ச்சியான இருமல்
- உடற் பருமன்
- அடிக்கடி முக்குதல்
- மலம்கழியும் பொழுது
- சிறுநீர் விடும்பொழுது (ஆண்களில் மூத்திரக்கோளம் (Prostate) வீங்கி இருந்தால் சிறுநீர் விடுவது சிரமமாக இருக்கும். அப்போது அதிகமாக முக்குவார்கள்).
- நீண்ட நாள் சுவாசப்பை வியாதி
- வயிற்றுப் பகுதியில் நீர்தங்குதல் (சிறுநீரகத்தில், ஈரலில், இருதயத்தில் அல்லது வயிற்றுப் பகுதியில் ஏதாவது வியாதி இருப்பின் அதன் காரணமாக வயிற்றுப் பகுதியில் நீர்தங்கும்).

## குணங்குறிகள் - பிதுங்கல் ஏற்படும் இடங்ளைப் பொறுத்து வேறுபடும்.

- வெளியில் தெரியும் நோவற்ற கட்டி
- தொடும்பொழுது வேதனைதரும் கட்டி

கையால் அமத்தும் பொழுது இலகுவில் அக்கட்டியை மீண்டும் உள்ளே செலுத்திவிட முடியுமாயின் அதைக் "குறைக்கக் கூடிய பிதுங்கல் கட்டி" (Reducible Hernia) என்று உறுவர்கள்.

நிற்கும் போது கட்டி பெரிதாகும், ஆனால் படுத்திருக்கும் பொழுது கட்டி படிப்படியாகப் பருமனில் குறைந்து உள்ளே சென்றுவிடும்.

நிற்கும் பொழுது கட்டி இறங்க எத்தனிக்கையில் நோவு உண்டாகும். பெரிதாக இல்லாவிட்டால் கட்டியை உள்ளுக்குத் தள்ளுவது இலகுவாக இருக்கும்.

## குறைக்க முடியாத பிதுங்கல் கட்டி (Non-Reducible Hernia)

நோவுடன் கூடிய ஏற்கனவே குறைக்கூடியதாக இருந்த நாட்பட்ட பிதுங்கல் கட்டி, மேற் கொண்டு குறைக்கமுடியாத நிலைக்குத் தள்ளப் படலாம். சில நாட்பட்ட பிதுங்கல் கட்டிகள் அவ்விடம் மரத்து விடுவதனால் நோவின்றியும் இருக்கலாம். ஆனால் இத்தகையை குறைக்கமுடியாத பிதுங்கிய கட்டிகள் திருகல் நிலைக்கு உட்படும்பொழுது அக்கட்டிக்குரிய குருதிச் சுற்றோட்டம் தடைபடுவதால் அத்திசுப்பகுதி இறக்கநேரிடலாம். இது மிகவும் ஆபத்தான கட்டமாகும். குடலில் திருகல் நிலை ஏற்படும்பொழுது ஒங்காளம், வாந்தி என்பன ஏற்படும். இதை ஒரு எச்சரிக்கை சமிக்கையாகவும் கொள்ளலாம். சில சமயம் காய்ச்சல் உருவாகலாம்.

### சோதனை

- நோயாளியை இருமச் சொல்லி, அவர்

24ம் பக்கம் பார்க்க...

TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL

- Standard First Aid & CPR Level "C" - 2 Days Program
- Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program
- CPR Level "A" - 4 Hours Program (Adult)
- CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant)
- CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
Dr. Kandiah Senthilathan
Registered Medical Officer (SLMC), Acupunturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252, 416-502-9252

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# உயிர் குடிக்கும் Meningococcal நோய்

**- சிவா சுப்ரா -**

ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் ஏறத்தாள 2,500 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டு, 300 பேர் இறந்து போகின்றனர்.

வழமை போல எனது குடும்ப வைத்தியரிடம் சென்ற போது இம்முறை ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வழமைக்கு மாறாக இது நடந்தது. என்-



னைப்போல் காத்திருந்தவர்களுக்கெல்லாம் பொல்லாத எரிச்சல் ஏற்பட்டது. ஆனாலும் ஒரு நல்ல விசயமும் இதன் மூலம் நடந்தது.

பல சஞ்சிகைகள் இருந்தன. அவற்றை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு நிமிர்ந்தபோது ஒரு போஸ்டர் கண்களில பட்டது.

அது தான் இந்த Meningococcal.

ஒருவயது வயது குழந்தை, மற்றும் ஐந்து வயதுக்கு குறைந்தவர்கள், இதற்கும் மேலாக பதினைந்துக்கும், பத்தொன்பதுக்கும் உட்பட்-டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படும் சாத்தியம் உள்ளது என்று அந்த அறிக்கை கூறியது.

Meningococcal நோய் Meningococcus என்ற பக்ரீரியாவால் ஏற்படுத்தப்படுகின்றது. பலர் இந்த பக்ரீயாவை தமது தொண்டையிலும், மூக்கிலும் சுமந்து திரிகின்றனர். ஆனால் அவருக்கு இந்த நோய் ஏற்படுவதில்லை. ஆனால் சமயங்களில் உடலின் தடுப்பு சக்தி-யை மீறி இந்த பக்ரீயா உடலினுள் புகுந்து மூளை, முள்ளம் தண்டு, மற்றும் முக்கியமான உடல் உறுப்புகளில் பல நாச வேலைகளை செய்துவிடுகின்றது. (an inflammation of the tissue surrounding the brain and spinal cord, and meningococcemia a widespread infection of the blood and other organs).

கடுமையான காச்சல், தலையிடி, தொண்-டையை அசைக்க முடியாத நிலை (stiff neck), வாந்தி என்பன இந்த நோய்க்கான அறிகுறிகள் ஆகும். இவற்றைவிட மனநிலையில் குழப்பம், தோலில் மாற்றங்கள் (purplish skin rash) என்பனவும் இந்த நோய்கான அறிகுறிகளாகும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பத்து வீதமானவர்கள் இறந்து போகின்றனர். இன்-னொரு பத்து வீதமானவர்கள் மூளை பாதிக்-கப்பட்டும், நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்பட்டும் வாழ் நாள் முழவதும் துன்பப்பட்டு வாழ வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

ஆழமான முத்தம், ஒருவர் குடித்த தண்ணீ-ரை மற்றவர் குடிப்பது, ஒருவர் பாவித்த கரண்டி, மற்றும் உபகரணங்களை மற்றவர் பாவிப்பதின் மூலம் இந்த நோய் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பரவுகின்றது. (The bacteria spread from one person to another through close contact involving secretions from the nose or throat. Examples include kissing, and sharing eating utensils or water bottles).

> **“ ஆழமான முத்தம்,**
> **ஒருவர் குடித்த தண்ணீரை மற்றவர் குடிப்பது,**
> **ஒருவர் பாவித்த கரண்டி, மற்றும்**
> **உபகரணங்களை மற்றவர் பாவிப்பதின் மூலம்**
> **இந்த நோய் ஒருவரிடம் இருந்து**
> **இன்னொருவருக்கு பரவுகின்றது. ”**

மற்றவர் பாவித்த தண்ணீர் போத்தலை பாவிக்க வேண்டாம் என்றும், மற்றவர் பாவித்த கரண்டி மற்றும் உபகரணங்களை பாவிக்க வேண்டாம் என்றும் உங்கள் குழந்தைகளுக்கு எடுத்துரையுங்கள்.

இந்த நோயில் இருந்து உங்களை, உங்கள் குழந்தைகளை பாதுகாக்கவேண்டும் என்றால் உடனடியாக உங்கள் குடும் வைத்தியரிடம் தொடர்பு கொண்டு இந்த நோய்கு எதிரான தடுப்பு மருந்தை பெற்றுக் கொள்ளுங்கள். சமயத்தில் இதற்காக நீங்கள் சில டொலர்-களை நீங்கள் கொடுக்கவேண்டி இருக்கும். ஏன் என்றால் இது நமது Helth Canadaவின் கீழ் வரமுடியாத விடயமாக இருக்கும். அது தான் உண்மை.

siva.subra@thaiveedu.com

எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS
UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT

MAILVAGANAM (MIKE) AHILAN
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-220-1184

VINCE SINNADURAI
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
416-917-9462

416.438.1688
Fax: 416 438 1612

1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

RBC Financial Group

# "வீடு" வினாவும் விடையும்

இன்றைய வாசகர்களின் தேவைகருதி, அதற்கு அமைவாக செய்திகளையும் ஆக்கங்களையும் வழங்குவதில் தாய்வீடு சஞ்சிகையின் பங்கு சிறப்பானது. பத்திரிகை அமைப்பாகவிருந்து இன்று சஞ்சிகை வடிவில், வாசகர்களை சேமிக்கத் தூண்டும் தகவல்களை வழங்கும் தாய்வீட்டின் வளர்ச்சிக்கு கொழுகொம்பென திகழும் உங்களுக்கு வணக்கங்கள் பல. தொடர்ச்சியான கட்டுப்பாடுகளும் மனிதருக்குரிய சகல மரியாதைகளும் அதாவது மனிதத்தை மதிக்கும் மனிதாபிமானமுள்ள நாடுகளுள் கனடாவும் ஒன்று. அந்தவகையில் அண்மையில் அறிமுகமாகியுள்ள புதிய சட்டம், கைத்தொலைபேசி உபயோகிப்பு, நாகரீக வளர்ச்சியில் எத்தனையோ புதிய தொழில் நுட்பங்கள் பல கோணங்களிலும் மனித தேவைகளை நிறைவேற்றி வருகின்றது. இவ்வாறு பல நன்மைகளைப் பயக்கும் புதிய யுக்திகள் சமயத்தில் மனிதருக்கு எதிரியாகவும் ஆகிவிடுகின்றது. சரி, இதுவரை காலமும் வாகன சாரதிகள் கைத்தொலைபேசி உபயோகிப்பது சாதாரணமாக இருந்துவந்தது. தற்போது வாகனம் செலுத்துவதில் கவனம் சிதறுவதாக கணிப்பிட்டுள்ளபடி கைகளில் வைத்து கைத்தொலைபேசி உபயோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. விரைவில் வாகனம் ஓட்டும்போது புகைபிடிப்பது, தேனீர் அருந்துவது கூட தடைப்படுத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எது எப்படியோ, சட்டங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. மீறுவதால் ஏற்படும் தண்டனையும் தொகையும் அதிகம். இன்றிலிருந்து நாமும் மாறிக்கொள்வோம் புதுமைகளை ஏற்பதற்கு, என்று கூறிக்கொண்டு இந்த மாதத்தில் கேட்கப்பட்ட வினாக்களை ஆராய்வோம்.

### புதிதாக நிர்மானிக்கப்படும் வீடுகளை வாங்குவதற்கும், சந்தையில் மீள் விற்பனைக்காக காணப்படும் வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இடையில் உள்ள நன்மை தீமைகள் யாது?

கனேஷ்.ஆர் Scarborough

பொருத்தம் பார்த்து திருமணம் செய்துகொள்வதற்கும், பழகிப்பார்த்து திருமணம் புரிவதற்கும் உள்ள வேறுபாடு என்று கூட சொல்லலாம். ஆகவே உங்கள் கேள்வியிலுள்ள நன்மை தீமைகளை விடுத்து, இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை ஆராய்தலே தகும். சுருக்கமாக சொல்வதாயின் அவரவர் விருப்பத்தையும் தகமையையும் பொறுத்தது. புதிதாக நிர்மானிக்கப்படும் வீட்டினைப் பெற்றுக் கொள்வதற்குரிய நடைமுறைகளையும் மீள் விற்பனைக்குரிய வீடுகளை பெற்றுக்கொள்வதற்குரிய நடைமுறைகளையும் அவதானிப்போம்.

பொதுவாக புதிதான வீடுகள் ஓர் குறிப்பிட்ட இடத்திலேயே காணப்படும். அன்றாட தேவைகளான பாடசாலை, கடைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அரிதாக காணப்படும்.

கட்டி முடிக்கப்பட்ட உட்புற அமைப்புக்களை படத்தின் மூலமே கற்பனைக் கண்களால் பார்க்க முடியும். அது மாத்திரமன்றி முன்வைப்பு தொகையாக அண்ணளவாக சுமார் 30 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் வரை தேவைப்படலாம். வீடு கட்டி முடிக்கப்படுகின்ற கால வரம்புகள் எதிர்வுகூறல்களாகவே காணப்படும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினால் வீட்டு சந்தையில் விலை சரிவுகள் ஏற்படுமாயின், கடன் வழங்கும் நிறுவனங்கள், புதிய வீட்டின் தற்போதைய பெறுமதியினையே மதிப்பிடும். அதனால் பற்றாக்குறையாகிப் போன பணத்தினை நீங்கள் வேறு கடன் முறைகள் மூலம் சரிசெய்ய வேண்டி வரலாம். புதிய வீடுகளிற்கு இரண்டு வருடம் Warranty உண்டு. இது கட்டடத்திற்கு சுமார் ஏழு வருடங்கள் நீடிக்கும். Fine Prints என்று சொல்லக்கூடிய சிறிய எழுத்துக்களில் காணப்படும் நிபந்தனைகளை உரிய முறையில் படிக்காது இறுதியில் பலர் பல சிக்கல்களை அனுபவித்ததும் உண்டு. வீடுசார் அனுபவசாலிகளும், மேற்கூறிய முறைகளை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்கும் இது ஓர் சாதாரண கொள்வனவோ.

மீள் விற்பனை வீடுகளை பெற்றுக்கொள்பவர்கள், அனுபவசாலிகளான முகவர்களின் உதவியினையே அதிகம் நாடுகின்றனர். பல வீடுகளைப் பார்வையிட்டு அவற்றிலுள்ள நன்மை தீமைகளைப் புரிந்து கொண்டு, விரும்பிய பகுதியில் விரும்பிய விலையில் நடைமுறையிலுள்ள கடன் வட்டி ஒழுங்குகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதே மீள்விற்பனை வீடுகள். இவ்வகை வீடுகளை வாங்குபவர்கள் திருத்த வேலைகள் குறைந்த, குடியிருக்கக் கூடிய தகைமையான வீடுகளை தெரிந்து எடுப்பதால் திடீர் செலவீனங்களை தவிர்த்துக் கொள்ளலாம். அனேக வீடுகள் ஜன்னல் சீலைகள், Appliance போன்றவற்றுடனேயே காணப்படுவதால் அதற்கென விரயமாகும் பணம் மோட்கேஜ் உடன் சேர்த்துக்கொள்ளப் படும். ஆகவே வட்டி குறைந்த செலவாக கணிப்பிடப்படும்.

மேலே கூறியது போல் இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு, தொழில் சார் அனுபவசாலிகளின் உதவியுடன் உங்கள் தெரிவுகளை மேற்கொள்வது நாளைய ஏமாற்றங்களைத் தவிர்க்கும்.

### Tankless Water heater – Tank இல்லாத தண்ணீர் சூடேற்றிகள் மாற்றிக் கொள்வதனால் உள்ள நன்மைகள் யாது?

ஜுட் Richmond hill

பல காலங்களுக்கு முன்னரே ஐரோப்பிய நாடுகளில் அறிமுகமாகியுள்ள இவ்வகை தண்ணீர் சூடேற்றிகள், அண்மைக்காலமாக கனடாவிலும் பரபரப்பாக பரவிவருகின்றது. நடைமுறையில் உள்ள மின்சாரத்தினாலோ அல்லது இயற்கை வாயுவினாலோ இயங்கும் நீர் சூடேற்றிகள் சுமார் 60-70 கலன் கொள்ளளவு உள்ளது. இவ்வகை தொட்டிகள் எப்போதும் நீரினை வழங்குவதற்கு ஏதுவாக தயார் நிலையில் இருப்பதற்காக தண்ணீரினை சூடாக்கிய வண்ணம் காணப்படும். அந்நீரினை உபயோகிக்காத பட்சத்தில், சூடு குறையும் தருணங்களில் இவை மீண்டும் அதே நீரினை சூடாக்கிக் கொள்ளும் அது மாத்திரமன்றி பலர் ஒரே சமயத்தில் சுடுநீரினை உபயோகிக்கின்ற காலங்களில் சுடுநீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கு கூட சாத்தியமுண்டு. மாறாக 'Tank less' கருவிகள் 'Instant Water Heater' அதாவது தேவைக்கு ஏற்ப தண்ணீரினை சூடாக்கும் வல்லமை வாய்ந்தவையாக காணப் படுகின்றது. உருவத்தில் சிறிய அமைப்பினைக் கொண்ட இக்கருவிகளை, குளியலறைகளுக்கு



கருணா கோபாலபிள்ளை

- வீடு விற்பனை முகவர் -




New gas tankless water heater

தனித்தனியாகவோ அல்லது பொதுப்படவோ இணைத்துக்கொள்ளலாம். இவை வீணே தண்ணீரை சூடேற்றுவதில்லை. அதேவேளை எங்கள் பாவனைக்கு தேவையான அளவு பற்றாக்குறையின்றி நீரினை வழங்கும் வல்லமை வாய்ந்த எரிபொருள் சிக்கனம் மிக்கது. 'Energy Star' திறன் வாய்ந்த இவ்வகை கருவிகளை இணைத்துக்கொள்வதற்கு ஆதரவு தரும்முகமாக அரசாங்கம் பல சலுகைகளை வழங்குகின்றது. இவற்றுள் சில தண்ணீர் சிக்கனம் பொருந்திய நீர்க் குழாய்கள், மின் சிக்கனமுள்ள மின் குமிழ்கள், குளிர் புகாத ஜன்னல் கண்ணாடிகள் போன்றவையும் இன்னும் பலவும். மேலதிக விபரங்களுக்கு இணையத்தள உதவியினையோ அன்றி உபகரண வியாபாரிகளின் உதவியினையோ நாடுங்கள். கடந்த தாய்வீடு சஞ்சிகை இதழில் இத்தகவல்கள் வெளியாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### கோடைகால களியாட்டங்கள் முடித்து, குளிர்கால எதிர்பார்ப்பில் நாம் காலெடுத்து வைக்கின்ற காலம். வீடு சம்பந்தமாக நாம் மேற்கொள்ள வேண்டிய குளிர்கால முன்னெடுப்புக்கள் எவை?

விஸ்வனாதன்.வீ Scarborough

காலத்திற்கு ஏற்ற கேள்வி, இலையுதிர்காலம்,

42ம் பக்கம் பார்க்க...

வாழ்வில் எம்மை நேசித்தீர்... இறப்பிலும் எம்மமை மறவாதிரும்

www.MARANAM.com

நமது உறவுகளின் இழப்பின் துயரச்செய்திகளை பதிவுசெய்யவும், பகிர்ந்துகொள்ளவும், அறிந்துகொள்ளவும்

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker

**Direct: 416-262-4176**

HOMELIFE HIGHER STANDARDS




**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o




**Morningside / Staines**
3 Bedrooms 3 Washroom




**Hwy 10 & Steeles**
4+2 Bedrooms 4 Washroom



## HomeLife Today Realty Ltd., Brokerage*

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor



# Buying or Selling Homes
## Selling Commission , As Low As 1%

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife Landmark
Realty Inc. Brokerage

**Call Nada**
Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093

Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

Award Winner Since 1996
Over 14 Years of Experience




**Markham/Lawerence**
Detached Bungalow
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement




**Galloway/Kingston Rd.**
Detached Backsplit
4+4 Bedrooms - 5 Washrooms
Finished Basement Apt.




**Audley/Taunton**
2-Storey Detached
3 Bedrooms - 3 Washrooms
Approx. 1800 Sq. Ft




**Dixie/Finch**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Part. Finished Basement




**Keele/Grandravine**
Condo Townhouse
3+1 Bedrooms - 3 Washrooms
Finished Basement




**Victoria Park/Eglinton**
1 1/2 Storey Detached
4 Bedrooms - 3 Washrooms
Finished Basement




**Tapscott/Finch**
Multi-Level Industrial Unit
Well Maintained Complex
Approx. 1550 Sq. Ft




**McCowan/Denison**
2 Storey Linked
3+1 Bedrooms - 3 Washrooms
Finished Basement

# சுவை

சிவாஜினி
பாலராஜன்



சுவை பற்றிப் பல்வேறு மக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அடிக்கடி பேசிக் கொள்கின்றார்கள்.

''சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு''
(குறள் - 27)

என்பது வள்ளுவன் குறள். மிகவும் அருமையான ஒரு கட்டுரையினையோ கதையினையோ வாசித்த ஒருவர் நான் நன்றாக ரசித்துச் சுவைத்தேன் என்பார். இப்படிப் பல்வேறு இடங்களில் வரும் பலவித சுவைகளின் மத்தியில், எங்களுக்கு முக்கியமான நாவின் சுவை பற்றியும் பல்வேறு மக்களிடமும் பலவிதமான கருத்துக்கள் காணப்படுகின்றது. பொதுவாக தமிழர்களாகிய நாம் சுவை ஆறுவகை எனக் கொண்டு அறுசுவை உண்டி எனக் கூறுவதுண்டு. இவ்வாறான ஆறு சுவைகளும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு என எமக்கு சிறுவயதில் போதிக்கப்பட்டது. எமக்கு ஆறு சுகைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், மேலை நாட்டவர்கள் சுவைகள் நான்கு எனக்கொண்டு தான் நாக்கின் சுவை அரும்புகளை வகைப்படுத்தி இருக்கின்றனர். (இதிலும் புதிய கண்டுபிடிப்புகளால் ஒரு சிறு சந்தேகம்.) ஆனால் யப்பானியர்களோ யுமாமி என்றொரு சுவை இருப்பதாகக் கூறுகின்றனர். அது மாமிசம் சாப்பிடும் போது ஏற்படும் சுவை என விளக்கமளிக்கப்படுகின்றது. இதனால் சுவையின் வரிசையில் இவர்கள் சேவரி என்னும் ஒரு சுவையினைச் சேர்த்துக் கொண்டார்கள். இந்த சேவரி சுவைக்கு ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ இது வரை பெயர் வைக்கப்படவில்லை. சாதாரணமாக மாமிச சுவை எனக் கொள்ளப்படுகின்றது.

ஏன் ஒருவர் Blue cheese மிகவும் ருசியானது என ரசித்து உண்கிறார் மற்றவர் அது சரியில்லை என்கிறார். சிலருக்கு Brussels sprouts பிடிக்கின்றது வேறு சிலருக்கு peas பிடிக்கின்றது. இவற்றிற்கு அடிப்படைக் காரணங்கள் என்னவாக இருக்கலாம். சுவை, இவ் உணர்வு மிகவும் சிக்கலாக இருந்த போதிலும் வாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. "The sense of taste is a sensory system like the eye" என வாசிங்டன் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பேராசிரியரான Ilene Bernstein என்பவர் கூறியிருக்கின்றார்

சுவை மணம் இரண்டு உணர்வுகளது தாக்கமும் எங்களது வாழ்வில் மிகமுக்கியமானதாகும். இவ் இரண்டும் ஒன்றையொன்று மிகை நிரப்பி உணவினை உண்ணுவதற்கு எம்மைத் தூண்டி எங்கள் வாழ்வில் ஒரு ரசனையினை ஏற்படுத்துகின்றன. சுவையும் மணமும் சில சமயங்களில் எங்களை ஆபத்திலிருந்து கூடக் காக்கின்றன எனச் சொல்லலாம். நெருப்பு, நஞ்சு வாயு, பழுதடைந்த உணவு போன்ற வற்றை நாம் அணுகாதிருப்பதற்கும் இவை இரண்டுமே முக்கிய காரணியாக அமைகின்றன.

## சுவையும் மணமும் எவ்வாறு சேர்ந்து வேலைசெய்கின்றன?

சுவையானது ஒரு உணவு எவ்விதமான மணத்தினைத் தருகின்றது, பார்வைக்கு எவ்வாறு தோற்றமளிக்கின்றது, சாப்பிடும்போது எவ்வாறான ஒலியைத் தருகின்றது போன்ற அம்சங்களின் கூட்டமைப்பு எனச் சொல்லலாம். ஒரு கோப்பியினை நாம் அருந்தும் போது அதனிலிருந்து ஒருவிதமான நல்ல வாசனையினை நாம் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு நாம் எதிர்பார்க்கும் அவ் வாசனை இல்லை எனில் இந்தக் கோப்பியினைக் குடிப்பதால் சும்மா இருக்கும் வாயினை நாம் பழுதாக்கி விடுவோமோ என நினைத்து அக் கோப்பியினை அருந்துவதற்கு தயங்கி சில சமயம் அருந்தாமலேயே விட்டுவிடுகின்றோம்.

சுவை எத்தனை வகையாக இருப்பினும் எங்களுக்கு குளிர் சுரம் அல்லது தடிமன் இருக்கும் போது என்ன வகையான உணவினை உண்டாலும் அது சுவையாக இருப்பதில்லை. எழுபது தொடக்கம் எழுபத்தைந்து வீதம் சுவை என நாங்கள் கொள்வது முக்கியமாக மணத்தினால் தான் வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. "Taste is a product of our genes and our environment" என்று Philadelphia இல் உள்ள Monell Chemical Senses Center ஐச் சேர்ந்த Leslie J. Stein PhD என்பவர் கூறுகின்றார். மேலும் ஒவ்வொருவருடைய உணவுத் தெரிவு அவரவர்களது வயது, அனுபவம், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்களினால் தீர்மானிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

நாம் படிக்கும் காலங்களில் பள்ளிக்கூடப் புத்தகங்களில், நாக்கின் படம்போட்டு, அதில் பல பகுதிகளை கோடிட்டுக்காட்டி இந்த இடத்தில் இனிப்பு, இங்கே கசப்பு, இங்கே உவர்ப்பு என்று குறிப்பிட்டிருப்பார்கள். அப்படி நாக்கில் சுவைகளுக்கான வரைபடம் எதுவும் இல்லை என்று சார்லஸ் ஸுக்கர் (1996 Charles Zuker, Professor of Biology. University of California) என்பவர் கண்டுபிடித்தார். நாக்கில் எல்லா இடத்திலும் எல்லா சுவைகளையும் அறியமுடியும் இனிப்பு. புளிப்பு, கசப்புக்கு என்று தனித்தனி இடங்கள் ஏதும் ஒதுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்தார். அவ்வாறு நாக்கினை பாகமாக பிரித்து ஒவ்வொருபாகத்திற்கும் தனிப்பட்ட சுவையினை வரையறுப்பது ஒரு தப்பான கருத்து என்றும் எங்கள் நாக்கு கிட்டத்தட்ட 25 வகையான சுவைகளை உணரக் கூடியது எனவும் கூறப்படுகின்றது.


பொதுவாக நாக்கில் முளைபோல் இருப்பதனை நாம் சுவை அரும்புகள் என நினைத்துக் கொண்டிருக்கின்றோம். இவை சுவையரும்புகள் அல்ல papillae எனப்படும். இவை fungiform, filiform, foliate, vallate என நான்கு வகைப்படும். Fungiform, filiform என்பன நுனி நாக்கிலும் அதனை மருவி நாக்கின் நடுப்பகுதியிலும் இருப்பதாயும் foliate, vallate என்பவை நாக்கின் நடுப்பகுதியில் ஆரம்பித்து அடிவரை செல்வதாயும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எங்கள் நாக்கில் papillae எனப்படும் முளை போன்று காணப்படும் அமைப்புக்களில் பெரும்பான்மையானவை சுவையரும்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இச் சுவையரும்புகள் மிகவும் நுண்ணிய மயிர்போன்ற microvilli எனப்படும் உணர்திறன் கூடிய அமைப்புக்களைக் கொண்டுள்ளன. ஒரு சாதாரண மனிதனுக்கு கிட்டத்தட்ட 10,000 சுவை அரும்புகள் உண்டு. இவை இரண்டு கிழமைகளுக்கு ஒருதடவை புதுப்பிக்கப் படும். வயதாக ஆக சில சுவையரும்புகள் புதுப்பிக்கப் படுவதில்லை. வயதான ஒருவருக்கு 5,000 சுவையரும்புகள் மட்டில் தான் இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் புகைக்கும் பழக்கம் உள்ளோருக்கும் அவர்களது சுவையரும்புகள் எண்ணிக்கை குறைந்து விடும் என ஆய்வுகள் கூறுகின்றன. 30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடையில் தான் சரியான முறையில் ஒருவரால் சுவை அடையாளம் காணப்படும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சிலர் பிறக்கும்போதே மிகக் குறைந்த மண உணர்வு குறைந்தவர்களாக இருக்கிறார்களாம். வேறு சிலர் பல்வேறு நோய்காரணமாக இவ் வுணர்வுகளை இழக்க நேரிடுகிறது.

மணமும் சுவையும் chemical sensing system இனைச் சேர்ந்தவை. சாப்பாட்டின் சுவையினை எமக்கு எடுத்துத் தருவதற்கு முக்கிய இரண்டு காரணிகளுண்டு. இவை மூக்கினுள்ளே மேற்பாகத்தில் அமைந்திருக்கும் Olfactory என்றழைக்கப்படும் உணரிகளும் நாவிலுள்ள சுவையரும்புகளும் ஆகும். சாப்பிடும் பொருட்களிலுள்ள மூலக்கூறுகள் வெளிவிடும் மணமானது தொண்டை, மூக்கு, வாய் போன்ற இடங்களிலுள்ள பிரத்தியேக நரம்புகளைத் தூண்டி விடுகின்றன. இப் பிரத்தியேக நரம்புக் கலங்களானவை செய்தியினை மூளைக்கு அனுப்பி வைக்கும். மூக்கில் இருக்கும் சிறு உணரிகள் எங்கள் மூளையுடன் நேரடித் தொடர்புடையவை. Olfactory (smell nerve) கலங்கள் மணத்தினால் தூண்டப்பட்டு இவ் இரசாயனவியல் செய்தியானது மின்னியல் செய்தியாக மூளைக்கு அனுப்பப்படும்.

ஒவ்வொரு சுவை அரும்பிலும் நூற்றுக்கணக்கான கலங்கள் உள்ளன. அக்கலங்கள் மூலம் நாம் ஆறு அல்ல 25 வகை சுவைகளை அறிகிறோம். ஒவ்வொரு சுவைக்கும் தனியாகக் கலங்கள் உண்டு. அதாவது ஒரு கலம் ஒரு சுவையை மட்டும் அறியும். அதன் வேலை உணவில் உள்ள குறிப்பிட்ட சுவையை அறிந்து தகவலை மூளைக்கு அனுப்புவது. ஒரு அரும்பு ஒரு சுவைக்கு என்பதும். குறிப்பிட்ட நாக்குப்பகுதி ஒரு சுவையை மட்டும் அறியும் என்பதுதான் தவறான கருத்து. நாக்கில் எல்லா பகுதியிலும் உள்ள எல்லா அரும்புகளிலும் 25 வகை சுவைகளை அறிவதற்கான கலங்கள் உள்ளன.

இனிப்புச் சுவையானது மூளையும் உடலும் தொடர்ந்து செயற்படுவதற்கான சக்தியினை வழங்குகின்றது. உப்புச் சுவையானது "எலெக்ட்ரோலைட்" எனப்படும் உலோக அயனிகளை வழங்குகின்றது. இரத்தத்தில் உப்பின் அளவு குறைந்தாலோ அல்லது கூடி விட்டாலோ இரத்த அழுத்தத்தில் வித்தியாசம் ஏற்படுவது தெரிந்ததே. இந்த யுமாமி எனப்படும் சுவை உடலுக்கு முக்கியமான புரதத்தினை வழங்கும் பொருளுக்குச் சொந்தமானது எனக் கூறப்படுகின்றது




இவ்வாறாக எமக்கு இரசனையுடன் உணவினை உட்கொள்வதற்குப் பயன்படும் சுவையுடன் சம்பந்தப்பட்ட சில நோய்கள் கூட உண்டு. சிலர் எனக்கு தற்போதெல்லாம் எதைச் சாப்பிட்டாலும் சுவையில் வித்தியாசம் இல்லை என்பார்கள். ஆனால் வைத்தியரிடம் சென்று அதற்கு ஆலோசனை பெறுவதில்லை. சிலர் பிறக்கும் போதே இவ்வகையான குறைபாட்டுடன் பிறப்பதுண்டு. சிலருக்கு இடையில் வெவ்வேறு பல காரணங்களால் ஏற்படுவதுண்டு. இவ்வகையான குறைபாடு chemosensory disorders எனப்படும். மேலும் எங்கள் சுவாசத்தொகுதி, உமிழ்நீர்சுரப்பி மற்றும் தலையில் காயம்படுதல் போன்ற காரணங்களும் இவ்வகையான chemosensory disorders இற்குக் காரணமாகலாம்.

## எவ்வாறு இக் குறைபாடு கண்டு பிடிக்கப் படுகின்றது?

இந்த chemosensory disorders அல்லது சுவை இழப்பு வைத்தியரீதியில் பெரியதாக இரத்தப் பரிசோதனையோ அல்லது வேறு விதமான பரிசோதனைகளோ இல்லாத போதிலும் மிகவும் குறைந்த செறிவுடைய பொருட்களின் மணத்தினை உணரவைத்து ஒரு பரிசோதனை செய்யப்படும். அத்துடன் "sip, spit, and rinse" என்னும் பரிசோதனை. இப்பரிசோதனை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதனை அதன் பெயரே எமக்குச் சொல்லிவிடும். சில சமயம் நாக்கின் பல்வேறு பாகங்களிலும் வெவ்வேறு வகையான பதார்த்தங்களை இடுவதன் மூலம் சோதனை செய்யப்படும்.

## இவ்வாறான taste disorder இருப்பதனால் என்ன பிரச்சனை

என்னை இது பாதிக்கவில்லை என சிலர் நினைப்பார்கள். சுவை தெரிந்தால் பழுதாகி விட்ட உணவினை உண்பது தவிர்க்கப்படும். அத்துடன் ஒருவருடைய quality-of-life issues அதாவது வாழ்க்கைத் தராதரத்திலும் இவ் வியாதி குறைபாடுகளை உண்டாக்கும் எனச் சொல்லப்படுகின்றது. மேலும் இக்குறைபாடு மன அழுத்தத்தினைத் தூண்டும் ஒரு தூண்டுகோலாயும், ஒருவருடைய சாப்பிட வேண்டும் என்னும் விருப்பினை குறைத்து விடும் காரணியாயும் அமைந்து விடுகின்றது. மேலும் taste disorder என்பது Parkinson's disease, Alzheimer's disease, Korsakoff's psychosis போன்ற நோய்களுக்கு அறிகுறியாகக் கூட அமையும் சந்தர்ப்பங்கள் உண்டு. சிலருக்கு வாய் எந்த நேரமும் உலர்வதுண்டு. இவர்கள் சில சமயங்களில் taste disorder போன்ற நோய்களுக்கு ஆளாவதற்கு இது அறிகுறியாக கருதப்படலாம்.

சுவை இழப்பில் நாம் சில நோய்களின் அறிகுறிகளைக் கண்டுகொள்ளலாம் என்பதால் சுவை இழப்பது போல் தோன்றினால் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய
விமர்சனங்களை
எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர்
ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.


*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

# அழகிய பூஞ்செடிகள்

# ரோஜா சின்ன ரோசா

## வளர்க்கலாம் வாங்க


### வீட்டுத் தோட்டம் - 20



செல்லையா சந்திரசேகரி

**பராமரிப்பு:**
சென்றவாரத் தொடர்ச்சியாக, இன்றைய இதழில் ரோசாச் செடியின் பராமரிப்பு பற்றிக் கவனிப்போம்.

ரோசாச் செடிக்கு வெப்ப காலங்களில் போதிய நீர் அவசியம் என்று முன்னர் பார்த்தோம். மழை அடிக்கடி பெய்தாலும் செடியானது




கிழமைக்கு குறைந்தது 8 லிற்றர் நீரைப் பெறுகிறதா என்பதைக் கவனிக்கவேண்டும்.

அடுத்ததாக முழுமையாக வேர்த்தொகுதிக்கு அதாவது 18 அங். ஆழமாவது ஈரத்தன்மை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். சிலர் போட்டிகளுக்காக ரோசாச் செடிகளை வளர்க்கின்றார்கள். எனவே, அத்தகைய ஈடு பாடு உள்ளவர்கள் கட்டாயமாக செடிகள் நட்டு ஒரு கிழமைக்குப் பின்னர் 20-20-20 இலேசாகக் கரையக்கூடிய பசளையை ஒரு செடிக்கு 2 கலன் அளவு வீதம் உபயோகிக்க வேண்டும். மறுகிழமை அரைக்கிண்ணம் எப்சம் உப்பு செடியைச் சுற்றிப் போட்டு நன்றாக நீர் ஊற்றவேண்டும். மூன்றாவது கிழமை ஒரு செடிக்கு ஒரு மேசைக்கரண்டி மீன் கலவை 1 கலன் அளவு வீதம் சேர்க்க வேண்டும். நான்காவது கிழமை திரவக் கலவைப் பசளை 16-4-2 வீதமும், இதனைத் தொடர்ந்து திரும்பவும் அதே நடைமுறை-யைத் பின்பற்ற வேண்டும்.

### கத்தரித்தலின் இரகசியம்:

ஏன், எதனை, எப்படி எப்போ செடியைக் கத்தரிக்கவேண்டும் என்பதை அச்செடியே சரியான பதிலைச் சொல்லிவிடும். நல்ல வளர்ச்சிக்கும் கூடுதலான பூக்களைக் கொடுப்பதற்கும் கத்தரித்தல் மிகவும் அவசியம். தடித்த கையணிகள் போட்டு கூரிய வெட்டுக் கத்தியால் கத்தரிக்கவும். செடியின் அடியிலிருந்து கத்தரிக்கத் தொடங்குங்கள்.

வெட்டுக்கள் தெளிவாக இருக்க வேண்டும். அரும்பின் மேலே கால் அங். தூரத்தில் 45 பாகை வடிவில் கத்தரிக்க வேண்டும். கத்தரிப்பதால் செடிக்கு போதிய காற்றோட்டம் கிடைக்கின்றது. செடிகள் பார்ப்பதற்கு கட்டான அமைப்பாகவும் இருக்கின்றன.

காய்ந்த தண்டுகள், பழுத்த மடிந்த இலைகள், மெல்லீதான பலமற்ற தண்டுகள் நெருக்கமான கிளைகள் எல்லாம் வெட்டப்பட வேண்டும்.

### பூச்சிகளின் தாக்கமும் கட்டுப்பாடும்:

ரோஸ் செடியை நன்கு வளர்ப்பதற்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது நீங்கள் எவ்வளவு தூரம் செடியைத் தாக்கும் பூச்சிகள், நோய்களை அகற்றமுடியும் என்பதுதான். ஒன்றுமட்டும் கூறமுடியும். ஒரு சில பூச்சிகளின் தாக்கத்தினைப் பெரிதாகப் பொருட்படுத்த வேண்டாம். ஆனால், பூச்சிகள் உமது செடிகளை முழுமையாகத் தாக்க நேரிடும் போது பூரணமான கட்டுப்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

### தாக்கும் பூச்சி, புழுக்கள்

ரோஸ் செடியைத் தாக்கும் பூச்சி, புழுக்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**ஏப்பிட்ஸ் (Green fly):**
புதிய முளைகளிலும் மொட்டுக்களிலும் தாக்கும். வளருகின்ற நுனிகளை முழுமையாகப் பரவி விரைவில் மூடிவிடும். சத்தினை நன்கு உறுஞ்சிவிடும்.

**சிலந்திப் பேன்கள்(Spider mites):**
இலைகளின் கீழ்ப்புறமிருக்கும். இலைகள் வெண்மையாகக் காட்சியளிக்கும். இலைகளின் கரைகளைத் தாக்கும். முட்டைகள் கீளிலைகளில் காணப்படும்.

**திறிப்ஸ்:**
இளநிறப் பூக்களைத் தாக்கும்.

**ரோஸ் ஸ்கேல்:**
தண்டுகள், கிளைகள், பூக்கள் போன்றவற்றைத் தாக்கும்.

**மயிர்க்கொட்டிகள்:**
இலைகள், மொட்டுக்களை வழமையாகத் தாக்குவதைக் காணலாம்.

**நெமற்றோட் புழு:**
வேரைத் தாக்கும் நெமற்றோட் புழு வளர்ச்சியை மட்டப்படுத்திவிடும்.

**Diaxinum, Disyston, Malathion, Dicifol:**
தாக்கத்தைக் கட்டுப்படுத்துபவை.

நோய்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

### பங்கசு நோய்கள்:

**Black spots:**
இலைகளில் வட்டமான புள்ளிகள் ஏற்படுதல். இலைகள் விரைவில் மஞ்சள் நிறமாகமாறி உதிர்ந்து விழுதல்.

**Powdery mildew:**
இலைகள், மொட்டுகள், முட்கள் போன்றவற்றைத் தூளினால் மூடிவிடும்.

**Rose rust:**
இலைகளின் ஓரங்களில் மஞ்சள் நிறப் பொட்டுகள் தோன்றி ஈற்றில் இலைகளும் உதிர்ந்துவிடும்.

ஒவ்வொரு 10-15 நாள் இடைவேளையிலும் பங்கசுகொல்லி (Fungucide) உபயோகிக்க வேண்டும்.

### வைறஸ் நோய்கள்:

**Rose mosaic:**
இலைகளில் மஞ்சள் நிற வர்ணங்கள் ஏற்படுதல்.

**Rust wilt:**
வளர்ச்சி குன்றுதல், குருத்து இலைகளில் நெளிவு ஏற்படுதல்.

சூழல் காரணிகள்:
உறைபனி புதியவளர்ச்சியை மட்டுப்படுத்தும். தண்டுகள், இலைகள் வாடிய நிலையில் கறுப்பு நிறமாகி உதிர்கின்றன.

### ரோஸ் இனங்களைத் தெரிவு செய்வதில் உன்னதமான கணிப்புக்கள்:

கனடியன் ரோஸ் சங்கம் எப்பொழுதும் கணிக்கக்கூடிய 10 ரோஸ் செடிகளைத் தரப்படுத்தியுள்ளனர். நீங்கள் வாங்கும்போது இவற்றிலிருந்து தெரிவை மேற்கொள்ளவும்.

- Sexy Rexy
- Tropicana ( Super star )
- Chicago Peace
- Graham Thomas
- Bonica
- Peaudouce
- The Fairy
- Mister Lincoln
- Tiffany
- Folklore

உயரமாகப் படரும் ரோஸ் இனங்கள் பல உள்ளன: Alchymist - Yellow apricot, New Dawn – Creamy pink, Mrs John Mcnabb – White pink, at the centre. இவற்றின் கிளைகளை ஆதரவான அமைப்புகளோடு கட்டி விடவேண்டும். பூக்கள் படர்ந்து காணப்படும் காட்சி, எல்லோர் மனதையும் கவர்ந்து விடும்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■

**Family Myrtaceae: - Moraceae**


# ஈரப்பலா

**(Botanical name: Artocarpus altilis : Eng.Name: Bread fruit)**



ஈரப்பலா (Bread fruit) குடும்பம் மோரேசியே (Family Moraceae) குடும்பத்தைச் சேர்ந்தது. இது வெப்பவலயப் பகுதிகளிலும் வேறு பல இடங்களிலும் பரவலாக வளர்க்கப்படுகின்றன. நியூகினியா, இந்தோனேசியா நாடுகளின் பூர்வீக மரமானது, பின்னர் ஏனைய நாடுகளாகிய பிலிப்பைன்ஸ், கரைபியன், அமெரிக்கா, ஆசியா ஆபிரிக்கா இந்தியா, இலங்கை போன்றவற்றிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையில் எல்லோர் வீட்டுத் தோட்டங்களிலும் பிற்புறமாக இம்மரத்தினை வளர்ப்பார்கள். எப்பொழுதும் பச்சைநிறமாக இருக்கும் மரமாகும். இது நன்கு பிரயோசனமானது. இது 12-20 மீ உயரமாக வளரக் கூடியது. முழுமையான இலைகள் 1-6 சோடி சோணைகளைக் கொண்டுள்ளவை. காய்கள் வட்டமான, முட்டைவடிவான, நீளுருண்டை வடிவான தோற்றங்களில் காணப்படும். உட்புறமாக வெண்மை அல்லது இளம் மஞ்சள் நிறமான சதைப்பற்றுள்ள பாகமுள்ளது. முற்றிய காய்கள் மாச்சத்துக் கொண்டவை, சமைத்து உண்பதற்கு உருசியாக இருக்கும். வித்துக்கள் வறுத்தோ. அவித்தோ உணவாகப் பயன்படுத்தப்படும். பொற்றாசியம், கல்சியம், தயமின், இரும்பு, நார்வலை நிறைந்து மிகவும் சத்துள்ள உணவாகின்றது. வேர்த்தண்டுகள், வேர் வெட்டுகள் மூலம் மரத்தினை இனவிருத்தி செய்வார்கள். 3-5 வருடங்களில் மரமானது வளர்ந்து காய்கள் தருகின்றன.


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield
Radha


Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


I'm here to get your mortgage smarter and faster.
உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.
NO FEE FOR RESIDENTIAL MORTGAGES
• Rate discount up to 3%
• Give me a call for free consultation
• Mortgages without no down payment
நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்
Our interest rates starts from 0%
• First-time Buyers
• Renewal
• Refinancing
• Pre-Approval
• Self Employed
• Bankruptcies
• Poor Credit
• New Immigrants
• Debt. Consolidation
• Construction Loans
invis
• Residential
• Industrial
• Commercial
1st, 2nd, 3rd Mortgages
வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்
மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call ME befor making any Decision!!!
After Approval
Joy is yours
Pride is ours
அகிலா செந்தில்
Akila Senthil, AMP
Lic: M08002166
Senior Mortgage Consultant,
Team Leader, Platinum Award Winner
A Challenging Prosperity Long Term Experienced Team Leader
Cell: 416.895.4321
104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2


# BUY OR SELL PROPERTIES

**Professional Office for Lease (MLS)**
**Markham and Milner**



2 offices with board room facilities.
Rent: $700 each includes taxes

**Residential Condo for Lease**
**McCowan and Finch**



Luxury Monarch condo unit
with all facilities.
2 bedrooms, 2 full washrooms
available immediately.
Rent: $1,600

**Commercial/Retail/Office Space**
**for Lease (Exclusive)**
**Markham and 14th**



600 sq.ft for lease immediately.
All uses except Restaurant.
Rent: $1,800 includes taxes



COLDWELL BANKER
COLDWELL BANKER EXCEPTIONAL REAL ESTATE SERVICES Brokerage

Each office is independently owned and operated
3107 Sheppard Ave East Toronto. ON. M1T 3J7
Tel: 416.497.9794 Fax: 416.497.5949

Logan Velumailum, B.Sc.
Broker
Direct: 416.410.1620
vlogan599@yahoo.com

**Logan Velumailum - 416-410-1620**



# குறுந்திரைப்பட விழா 2009-(லண்டன்)

VIMBAM
TAMIL
SHORT FILM
FESTIVAL
விம்பம் - 2009

இப் போட்டியில் கலந்துகொள்ள
கட்டணம் எதுவும் செலுத்தவேண்டியதில்லை.

**31. 10. 2009** திகதிக்கு முன்பு
உங்கள் படைப்புகளை DVD யில் பதிவுசெய்து
கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

படைப்புகள் யாவும் 20 நிமிடங்களுக்குக்
குறைவாக இருத்தல் வரவேற்கத்தக்கது.

Trinity Centre
East Avenue
Eastham
London E12 6SG

VIMBAM

28
NOVEMBER
2009
சனி மாலை
6.00 மணி

தொடர்புகளுக்கு: VIMBAM, 4 Burges Road, London E6 2BH, UK
Tel: 07956 490 694, 07984 136 160, 020 8581 9328 E-mail: vimbam@aol.com


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....
$169,500
Hurontario / Dundas
1+2 Bedrooms 1 Washroom
$245,000
Morningside/Sheppard
3 Bedroom 2 Washroom
Hardwood Floor, Finished Basement
$237,500
Townline & Adelaide
3Bedrooms 3 Washroom
Part Finished Basement
$269,900
Morningside & Finch
3+2 Bedrooms 4 Washroom
country style
Oshawa
$349,888
$319,500
Hwy 10 / Dundas
3 Bedrooms 3 Washroom
Finished Basement
$334,900
Warden & St.Clair
2+1 Bedrooms 2 Washroom
$339,000
Morningside & Staines
3 Bedrooms 3 Washroom
$349,900
9 th Line & Hoover Park
3 Bedrooms 3 Washroom
$369,900
Mccowan / Steels Ave
3+2 Bedrooms 3 Washroom
$359,900
Hwy10 / Steeles
4+2 Bedrooms 4 Washroom
$1,150,000
Yonge/Sheppard
4 Bedrooms 4 Washroom
Finished Basement w/o
$479,900
14 th & McCowan
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement W / O
Looking for New & Experienced Sales Rep.
Please Contact Us...
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


இலகுவாக மோட்கேஜ்
கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்
Mortgages
• First Time Buyers
• Refinaning
• Renewal
• Self Employed
• Pre-Aproval
• Bankruptcies
• Bad Credit
• Debt Consultant
• Non-verifiable Income
• New immigrant
We Will
• Simplify the entire process of mortgage financing
• Save you money and time
• Get you the most competitive rates
• Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
• Counsel you on credit and mortgage qualifications
• Provide maximum flexibility in financing choices
• Assist you every step of the way
Best Rates
We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.
invis
Siva Ratnasingam
Lic: M08002133
Mortgage Consultant
2005,2006,2007,2008 Diamond Award Winner
416.430.0111 ext:1
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2

# Buy / Sell Properties

**Eglinton & Cofederation Pkwy**



3 Bedrooms, 3 Washroom
**$329,900**

**Eglinton & Central Pkwy**



3 Bedrooms, 2 Washroom
**$361,900**

**Markham & Brimorton**




3 Bedrooms, 2 Washroom
**$299,800**

**Markham & Lawrence**



3+2 Bedrooms, 2 Washroom
**$299,900**

**McCowan & Denison**



3+2 Bedrooms, 4 Washroom
**$388,888**

**Bur Oak & 9th Line**



3 Bedrooms, 4 Washroom
**$369,000**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
**Brokerage***
**Phone : 416-298-3200**
**Cell : 416-903-4663**
31 Progress Ave. Suite 210, Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR



**Kirew Kanagasabai**
Broker of Record
Kirewk@yahoo.com

# $100,000

## லைவ் இன்சூரன்ஸ்

புகை பிடிக்காத 50 வயது ஆணுக்கு

**Only $27.45 Monthly**

புகை பிடிக்காத 50 வயது பெண்ணுக்கு மாதம் **$20.70** மட்டுமே

**10 Year Term Life insurance** (Renewable and Convertible)



**So... Why wait?** Call me to get the rate for your age.

**KEN KIRUPA**
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON
*www.familyprotection.ca*

**CELL 416-294-9322**
**OFFICE 416-759-5453**

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Unity Life of Canada
Canada Protection Plan

E&OE

# வினைத்திறன் மிக்க மீற்றரும் நாமும்

## Smart Meter

கடந்த மாத இதழில் இத்தகைய மீற்றர் எவ்வாறு இயங்குகிறது என்பது பற்றியும் எவ்வாறு நாம் எங்களைத் தயார்படுத்தி அதன் ஊடாகக் கணிசமான அளவு சேமிப்பைச் செய்யலாம் என்பது பற்றியும் விளக்கியிருந்தோம். நாம் குறிப்பிட்டிருந்தபடி பலரும் குறிப்பிட்ட இணையத்தளத்தில் பதிவு செய்து, தமது வீட்டு மின்சார நுகர்வினை நேரில் மணிக்கு மணி அறிந்துகொண்டு வியந்த பலரது கதைகளைக் கேட்டு எம்மவரின் ஆர்வத்தை அறிந்து மகிழ்வதோடு மேலும் பல பயனுள்ள தகவல்களைத தர விழைகிறோம்.

உண்மையில் எமது மின்சாரப் பாவனையை முடிந்த அளவு மட்டமான காலத்திற்கு (Off peak) மாற்றப் பழகிக் கொண்டால் இத்தகைய விலைத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது மாதாந்தம் கணிசமான அளவு சேமிப்பை அடையலாம் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. இதுவரை காலமும் பிற முகவர்களுடன் மின்சாரத்தைப் பெறுவதற்கான ஒப்பந்தம் எதுவும் செய்யாதிருந்தால் இத்தகைய விலைத்திட்டம் நடைமுறைக்கு வரும்போது அதன்மூலம் பயனடைய எத்தகைய தடையும் இருக்காது.

### Direct Energy போன்ற முகவர்களுடன் ஒப்பந்தம் செய்திருப்பவர்களின் நிலையென்ன?

நேரடியாகக் கூறுவதாக இருந்தால் இத்தகைய ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுடைய விலை எப்போதும் நிலையானதாகவே இருக்கும். ஊதாரணமாக ஐந்து வருடங்களுக்கு சதம் 7.98/kw என்ற அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் செய்திருந்தால் அக்காலக் கெடு முடியும்வரை எந்தநேரம் எவ்வளவு மின்சாரத்தைப்பாவித்தாலும் விலை நிலையானதாகவே இருக்கும். TOU விலைத்திட்டத்தினால் எந்தவித மாற்றமும் இருக்காது. ஆனால்

### மாற்றுவழி உண்டு...

நாங்கள் Smart ஆக இருந்தால் TOU வினால் அடையும் இலாபத்தைவிட அதிக இலாபத்தை ஈட்டக்கூடிய வாய்ப்பும் இருக்கின்றது என்பதை எனது சொந்த அனுபவத்தை வைத்து நீருபித்துக்காட்டக்கூடியதாக உள்ளது. காலத்தின் தேவை காரணமாகவும் போட்டிகளின் நிர்ப்பந்தத்தினாலும் தனிப்பட்ட விநியோக முகவர்களும் புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு தனிப்பட்ட விநியோக முகவருடன் ஒப்பந்தம் செய்திருந்தால் அதனை இடையில் முறிவடையச்செய்வதற்கு அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். அதாவது $0-200 வரையான அபராதம் செலுத்த வேண்டிய நிலை இருக்கலாம். ஒவ்வொருவரும் தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீழ் பரிசீலணை செய்து அல்லது குறிப்பிட்ட ஸ்தாபனத்தை அழைத்து உண்மை நிலையை அறிந்து கொள்ள வெணடியதே முதல் வேலை.

இரண்டாவதாக அபராதம் செலுத்தி ஒப்பந்தத்தை இடையில் முறிவடையச்செய்வதால்


**வீடும் விடியலும் - 44**

இலாபம் அடைய வாய்ப்பு இருக்கின்றதா? என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இந்த வகையில் Toronto Hydro மிகத்துல்லியமானதும் இலகுவானதுமான செயல்முறைகளை இணையத்தளத்தின் ஊடாக அறிமுகம் செய்துள்ளது.

நீங்கள் www.torontohydro.com/tou என்ற இணையத்தளத்திற்குச் சென்று, உங்கள் விபரங்களைக் கொடுத்து (ID, password) உட்சென்ற பின்னர் மின்சாரப் பாவனை சம்பந்தமான உங்கள் தனிப்பட்ட விபரங்களை அறிய முடியும். அங்கு இடது புறத்தில் "Your electricity usage" என்ற தலைப்பின் கீழ்வரும் பின்வரும் தலைப்பை அழுத்தவும். "Billing period usage comparison'என்ற


> **"விளிப்புடன் செயற்படத்தவறினால் தனிப்பட்ட விநியோகஸ்தர்களின் பொறிகளில் அகப்பட்டு அல்லற்பட வேண்டி வரும் என்பது அப்பட்டமான உண்மை."**

இடத்திற்குச் சென்று கடந்த billing காலத்திற்குரிய பாவனையின் ஒப்பீட்டைப் படத்தில் காணமுடியும். படம் A எமது வீட்டு மின்சாரப் பாவனையின் உண்மையான நிலையை விளக்குகின்றது.



படத்தில் உள்ள முதற் கூறு தற்போதுள்ள விலைத் திட்டத்தின்படியாயின் எமது மின்சாரப் பாவனைக்கு நாம் $101.44 சதம் செலுத்த வேண்டியிருக்கும் என்பதைக் காட்டுகின்றது. அததுடன் எமது பாவனையை மட்டமான காலத்தை நோக்கி நகர்த்தினால்தான் இலாபம் அடையலாம், அல்லது தற்போதைய விலையைவிட அதிக விலை செலுத்தவேண்டியுள்ளது என்பது மற்றுமொரு விடயம். ஆனால் நாம் Direct energy உடன் 5 வருட ஒப்பந்தம் செய்திருக்கிறோம் என்பதால் வேறு ஒரு விலையின் அடிப்படையில்தான் எமது மாதாந்த செலவு கணிப்பிடப்படும் என்பது அடுத்த முக்கியமான விடயமாகும்.

அப்படியாயின் எமது நிலையென்ன? அதனையும் பின்வரும் படம் மிகத் தெளிவாக விளக்குகிறது. நீங்கள் உங்களது ஒப்பந்த விலையை contract price எனும் இடத்தில் இட்டு அழுத்தினால் நீங்கள் உண்மையாகச் செலுத்தும் விலையினை அறிந்துகொள்ளலாம்.




### Contract Price (¢):

அதாவது எங்களைப் பொறுத்தவரை நாம் சதம்7.98/kmக்கு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அதன் அடிப்படையில் நாம் இந்த billing காலப் பகுதிக்குச் செலுத்திய விலை $134.69 சதம் அதாவது 2 மாத காலத்திற்கு ஏறத்தாழ 34 டொலர்களை மேலதிகமாகச் செலுத்து கிறோம். மாதாந்தம் 17 டொலர் என்ற அடிப்படையில் (12x17) வருடாந்தம் 204 டொலர்களை மேலதிகமாகச் செலுத்துவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதே விலை இப்படியே இருக்குமானால் 5 வருடத்தில் சுமார் 1,000 டொலர்களை அனாவசியமாக இழக்கவேண்டிய நிலையில் இருந்தோம். இந்த நிலையில் 100 டொலர் அபராதம் செலுத்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டாலும் 900 டொலர்களைச் சேமிக்க முடியும் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால் ஒப்பந்தத்தை முறிப்பதற்காக Direct energyஐ அழைத்தபோது இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது காலத்தின் தேவை கருதி வட்டிவீதம் ஏறி இறங்குவதுபோல் உள்ள variable அமைப்பில் புதியதோர் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் இவர்கள். அதாவது "Open flex electricity plan" எனும் புதிய திட்டம் அமுலுக்குவந்துள்ளது. "Ontario IESO" (Independent Electricity System Operator) என்ற திணைக்களம் சந்தை நிலவரத்திற்கு ஏற்ப மாதாந்த சராசரி விலையை நிர்ணயிக்கும். அந்த விலை விபரம் இணையத்தளத்தின் ஊடாகவும் மாதா மாதம் வெளியிடப்படும். கடந்த மாத விலையை ஒட்டி இந்த மாதத்திற்குரிய விலை தனியார் முகவரினால் தீர்மானிக்கப்படும். Direct energy மாதாந்த Flex விலையுடன் 1.5 சதத்தைக் கூட்டி தனது விலையைத் தீர்மானிக்கின்றது. இதன் அடிப்படையில் எமது ஜுன் மாத விலை 4.414 சதமாகவும் July மாத விலை 3.989 சதமாகவும் ஆகவும் உள்ளது. உண்மையில் off peak இற்குரிய விலையை விட இந்த விலை இலாபகரமாக உள்ளது. நாம் சராசரி 5 சதம்/kw செலுத்துவதாகக் கருத்திற் கொண்டு கணிப்பிடப்பட்ட படம் கீழ் தரப் படுகிறது.

### Contract Price (¢):

இதில் எமது புதிய விலை ரூபா 84.39 ஆகக் குறைந்துள்ளதை அவதானிக்க முடியும். அதாவது இரண்டு மாத காலத்தில் சேமிக்கும் தொகை 50 டொலர்களாக உள்ளது. TOU விலைத்திட்டத்துடன் ஒப்பிடுகையில் இரண்டு மாதத்தில் சேமிக்கும் தொகை 17 டொலர்களாக இருக்கின்றது என்பதையும் அவதானிக்கவும். இங்கு நாம் புதிய Flex திட்டத்தில் சேர்ந்துகொண்டதால் Smart Meter ஊடாக அமுல்படுத்தப்படவிருக்கும் TOU விலையை



விட குறைந்த அளவைச் செலுத்தக்கூடியதாக உள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

எனவே, நாம் சற்று Smart ஆக இருந்தால் Smart Meterஆல் வரும் பலனைவிட அதிக பலன் பெறும் அரிய வாய்ப்பும் இருக்கின்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. விளிப்புடன் செயற்படத்தவறினால் தனிப்பட்ட விநியோகஸ்தர்களின் பொறிகளில் அகப்பட்டு அல்லற்பட வேண்டி வரும் என்பது அப்பட்டமான உண்மை. அத்துடன் காலத்திற்கு ஏற்ப தொழில்நுட்பங்கள் மாறும்போது, நாமும் அதற்கேற்றவாறு மாறாவிட்டால் அல்லது இவைபற்றி அறிய முற்படாது அலட்சியமாக இருந்து விட்டால் பல இழப்புக்களச் சந்திக்கவேண்டி வரும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



Current Open Flex Electricity rate


| Month | Weighted Average Monthly Hourly Ontario Energy Price + 1.5¢/kWh | Total Rate |
|---|---|---|
| Jun-2008 | 3.651¢/kWh + 1.5¢/kWh | 5.151¢/kWh |
| Jul-2008 | 6.229¢/kWh + 1.5¢/kWh | 7.729¢/kWh |
| Aug-2008 | 6.226¢/kWh + 1.5¢/kWh | 7.726¢/kWh |
| Sep-2008 | 5.001¢/kWh + 1.5¢/kWh | 6.501¢/kWh |
| Oct-2008 | 5.228¢/kWh + 1.5¢/kWh | 6.728¢/kWh |
| Nov-2008 | 4.707¢/kWh + 1.5¢/kWh | 6.207¢/kWh |
| Dec-2008 | 5.363¢/kWh + 1.5¢/kWh | 6.863¢/kWh |
| Jan-2009 | 4.834¢/kWh + 1.5¢/kWh | 6.334¢/kWh |
| Feb-2009 | 5.477¢/kWh + 1.5¢/kWh | 6.977¢/kWh |
| Mar-2009 | 4.860¢/kWh + 1.5¢/kWh | 6.360¢/kWh |
| Apr-2009 | 3.064¢/kWh + 1.5¢/kWh | 4.564¢/kWh |
| May-2009 | 1.963¢/kWh + 1.5¢/kWh | 3.463¢/kWh |
| Jun-2009 | 2.914¢/kWh + 1.5¢/kWh | 4.414¢/kWh |
| Jul-2009 | 2.483¢/kWh + 1.5¢/kWh | 3.983¢/kWh |
| Aug-2009 | 2.009¢/kWh + 1.5¢/kWh | 3.509¢/kWh |

24ம் பக்கம் பார்க்க...



# WHO DO YOU CALL? Town Of Markham

Customer Service Centre: (905) 477-5530




*Each office is independently owned and operated

Not intended to solicit properties currently listed for sale or those under agency contract.

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்




Over **50 Years** Combined Experience

Even if you are:
- unemployed
- cyclist
- passenger
- pedestrian
- traveling in public transit
- student
- housewife

## FIREMAN WOLFE LLP

PERSONAL INJURY LAWYERS

CERTIFIED AS A SPECIALIST IN CIVIL LITIGATION

SPECIALIZING IN SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

MOTOR VEHICLE ACCIDENT

FRACTURES • SPINAL CORD INJURY • BRAIN OR HEAD INJURY
SCARRING OR DISFIGUREMENT • INTERNAL INJURIES OR DEATH

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் வலி, வருத்தம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக பணமாக **$330,000.00** வரையும், சம்பள இழப்பீடுகள், அத்துடன் **$172,000.00** வரை இழப்பாகவும் மற்றும்பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

விபத்து உங்கள் தவறாகயிருப்பின் உங்களால் **$172,000.00** வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும், இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

**If the impairment catastrophic your claim can be:**
- Medical and Rehabilitation expenses up to **$1,000,000.00**
- Personal care expanses up to **$1,000,000.00**

## தீபன்

Thiparanjan Sivarajalingam
Accident Benefit Specialist
Licensed Paralegal
(Member of The Law Society of Upper Canada)


இலவச ஆலோசனைகளுக்கு: **(416) 505-9804**

24 Hours Direct Line **(416) 624-4751**

அனுபவம் இல்லாதவர்களின் ஆலோசனையின் கீழ் விழுந்திடாதீர்கள்

"One of the best personal injury law firm in Ontario"

TORONTO SCARBOROUGH MISSISSAUGA



**Jack J. Fireman Q.C. LLM.**

Jack J. Fireman Q.C. has been voted to the "Most Frequently Recommended Lawyer" catergory in L'Expert since 1997 as voted by the his peers from Ontario



**William C. Wolfe B.A. LLB**

Prior to 2000, Mr. Fireman and Mr. Wolfe defended insurance companies before changing their practices to representing injured people only.

IF YOU HAVE OPTIONAL INSURANCE, YOU CAN CLAIM UP TO **$1,000.00** IRB'S PER WEEK வரை இழப்பதற்கு அனுமதிக்காதீர்கள்

# ஒக்ரோபர் இரண்டு

உலகின் தலைசிறந்த அணுவியல் விஞ்ஞானியும், நோபல் பரிசு பெற்றவருமாகிய பேராசிரியர் அல்பட் அயன்ஸ்டைன் மகாத்மா காந்தியை பற்றி குறிப்பிடுகையில், "இன்னும் நூறு ஆண்டுகளுக்குப்பின் இப்படியான ஒரு மனிதர் இந்த பூமியில் வாழ்ந்தார் என்பதை நம்பமாட்டார்கள்." என்றார்.

மோகன்லால் கரம்சேன்ட் காந்தி 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாந்திகதி மும்பாய் நகருக்கு வடக்கே உள்ள கடற் கரைப்பட்டனமான போட்பந்தர் எனும் நகரில் பிறந்தார். வைசிய குலத்தை சேர்ந்த செல்வக்குடும்பத்தில் நான்காவது பிள்ளையாக பிறந்தார். இவர் தந்தை கரம்சேன்ட் காந்தி சம்ஸ்தான மன்னரின் பிரதம மந்திரியாக விளங்கினார். அக்கால வழக்கப்படி மந்திரி குமாரராகிய மோகன்லால் காந்தி தனது பெற்றோரால் தேர்ந்த பெண்ணை 13வது வயதில் திருமணம் செய்தார்.

தனது பத்தொன்பதாவது வயதில் இளம் மனைவியை பிரிந்து கல்வி கற்பதற்காக இங்கிலாந்து பயணமானார். அவர் 1891ம் ஆண்டு தனது இருபத்திரெண்டாவது வயதில் வழக்கறிஞராக சித்தியடைந்து தனது தாய் நாட்டிற்குத் திரும்பினார். அவர் ராஜகோட் எனும் நகரத்திலும் மும்பாய்ப் பட்டனத்திலும் வழக்கறிஞராக கடமையாற்றினாலும் அவர் தொழில் சிறப்பாக நடக்கவில்லை.

இந்நிலையில் 1893ம் ஆண்டு தென்னாபிரிக்கா நாட்டின் தலைநகரான பிரிடோரியாவில் ஒரு இஸ்லாமிய தாபனத்தின் வழக்கறிஞராக பொறுப்பெற்றார். இக்கால கட்டத்தில் ஒரு நாள் புகையிரதவண்டியில் முதலாம் வகுப்பில் பயணம்செய்த காந்தியை ஒரு வெள்ளையர் வெளியேற்ற நிற்பந்தித்த வேளையில் அதற்கு மறுத்ததுமல்லாமல் அக் கசப்பான அனுபவம் அவரை இனப்பாகுபாட்டிற்கு எதிராகப் போராடுவதற்கு உந்துகோலாகியது. இன் நிகழ்வுக்குப் பின் அவர் பகிரங்கக் கூட்டம் ஒன்றை தோற்றுவித்து இனஅடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

இக்காலத்தில் அவர் நோடால் என்னும் நகரத்தில் ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கி எழிய வழ்க்கை வாழத் தலைப்பட்டார்


மேலும் நான்கு பிள்ளைகளுக்கு தந்தையான காந்தி பிரம்மச்சாரியத்தை கடைப்பிடிக்கத் துவங்கினார்.

காந்தியிற்கு உண்மைதான் தெய்வமாகவிருந்தது. ஒருபோதும் அவர் உண்மையைக் கைவிடவில்லை. தனது சுயசரிதத்திற்கு 'The Story of My Experience with Truth' (சத்தியசோதனை) எனப்பெயரிட்டார். மகாத்மாவின் வாழ்க்கையில் முடிவிலும் பார்க்க செயற்பாடு தர்மமுடையதாக இருக்கவேண்டும் என்ற தத்துவத்தை கடைப்பிடித்தார். அவர் எப்போதும் சரியானதைச் செய்தால் நிச்சயம் முடிவு நல்லதாகவே நடக்கும் என நம்பினார்.

1907ம் ஆண்டு தென்னாபிரிக்காவில் வசித்த இந்தியர்களை விரல் அடையாளம் எடுத்து பதிவுசெய்வதை எதிர்த்து போராடத் தூண்டினார். அவர் நோபல் பரிசு பெற்ற ருஸ்ய எழுத்தாளரான லியோ டொல்ஸ்டாயுடன் கடிதம் மூலம் கருத்துகளை பரிமாறியதுடன் John Ruskinக்கு எழுதிய Unto the Lost என்ற கட்டுரையாலும் பெரிதும் சிந்தனையில் மாற்றம் செய்தார். இக்காலகட்டத்தில் அவருக்கு ஆன்மிக பலத்தின் சக்தி புரிய வைத்தது.

இறுதியில் 1915ம் ஆண்டு எல்லோராலும் மகாத்மாஜி என போற்றப்படும் பெருமகனாக திரும்பினார். காந்திஜிக்கு மக்கள் சக்தியில் நம்பிக்கையும் அவர்களைத் திரட்டும் வல்லமையும் நிறையவே இருந்தது. அவர் சுதந்திரமான நவ இந்தியாவில் ஒவ்வொரு இந்தியனும் சுதந்திரமாக வாழவேண்டும் என்று பிரசங்கங்கள் செய்தார். இந்தியாவை சிறைப் பிடித்திருக்கும் சங்கிலிகள் இந்தியர்களாலேயே செய்யப்பட்டது என்று சுட்டிக்காட்டினார். பிரித்தானியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட துணிகளைவிட்டு உள்நாட்டிலேயே செய்யப்பட்ட கதர்துணிகளை பாவிக்க ஊக்கப்படுத்தினார். கைத்தறிகள் மீண்டும் உயிர்பெற்றால் ஒவ்வொரு இந்தியனுக்கும் வருமானமும் சுய கௌரவமும் கிட்டும் என்றார். கைத்தொழிற் புரட்சியும் மக்களின் சுபீட்சமும் வளமும் தான் அவர் குறிக்கோளாய் இருந்தது.

1921ம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி பிரித்தானிய சாம்ராஜியத்திற்கு எதிராக சத்தியாகிரகப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்ததற்கு காரண கர்த்தா மகாத்மா காந்தியாவார். 1922ம்



இந்த துரித உணவு நிறுவனங்களின் கூடுதலான வாடிக்கையாளர்கள் குமரப் பருவ பையன் களும் வாலிப வயதினரும் ஆவர். முதிர்ச்சி யடைந்த குடும்பத்தினரும் மற்றையோரும் இங்கு செல்வதில்லை. ஆகவே இந்த நிறுவனங்கள் தமது வழமையான வாடிக்கையா ளர்கள் கவனத்தை எவ்வாறு கவர முடியும் என்பதை தெரிந்து வைத்துள்ளார்கள்.

இந்த விளம்பரங்களினால் கலாச்சாரம் பாழ் படுகிறது. இன்னும் ‘Bosom Burger’ என்று ஒன்று வராதது ஆச்சரியம். இந்தியாவில் என்றால் இதற்கும் ஒரு போராட்டம் வந்து விடும். இங்கு அதுவும் இல்லை.

காலம் காலமாக வர்த்தகர்கள் பாலுணர்ச்சி, விற்பனையை வளர்க்கும் என்று உணர்ந்து வைத்திருக்கிறார்கள்.

அண்மையில் Quiznos வெளியிட்ட விளம்பரத்தில், ஒரு ஆண் குரல் இன்னொரு ஆணுக்கு அழைப்பு விடுதல் ‘எனக்குள் வைத்துவிடு’, ‘கடந்த தடவை இருவருக்கும் சுகமே’ என கூறுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

Hardec என்ற நிறுவனத்தின் விளம்பரத்தில் புதிதாக வந்துள்ள Cookieஇன் துளைகளை அடையாளம் காண அபிப்பிராயம் கேட்பது போல இருக்கும். வழிப்போக்கர்கள் ‘சுகமான துளைகள்’, ‘சொர்க்கத்தின் பந்துகள்’ என கூறுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இப்படியாக பல நிறுவனங்கள் நாசூக்காக பாலியல் சம்பந்தமான கருத்தினை ஊட்டி வாடிக்கையாளர்களைக் கவருகின்றன. இதற்கு பொரளாதாரப் பின்னடைவும் ஒரு காரணமாகும். இந்த பொருள் $2 என்று எல்லோரும் விளம்பரம் செய்தால் வாடிக்கையாளர்ருக்கு வித்தியாசத்தை காட்ட முடியாது. வித்தியாசத்தைக் காட்டுவதானால் விளம்பரத்தில் ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும். இந்த வித்தியாசங்கள் சாதாரணமானவர்களுக்கு சுவையற்றதாக இருந்தாலும் ஒரு வித்தியாசத்தைக் காட்டும் என்பதை மறுக்க முடியாது.




இந்த நிறுவனங்கள் சந்தை பாகம் (Market Shares) குறைவடைந்து வரும்போது போட்டி காரணமாகவும் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற அழுத்தத்தில் இப்படிப்பட்ட விளம்பரங்களைத் தருகின்றார்கள். இந்த பொருளாதாரப் பின்னடைவை எல்லோரும் உணர்ந்துள்ளார்களோ இல்லையோ இந்த நிறுவனங்கள் உணர்ந்துள்ளன.

அண்மையில் Burger King ஒரு விளம்பரம் இணையத்தள வைரசாக மாறிவிட்டது. இந்த விளம்பரத்தில் ஒரு அங்குல நீளமான Sandwich உடன் வாயை திறந்த படி ஒரு இளம் பெண்ணின் படத்துடன் இது உங்கள் மனதை ஊதி விடும் என்ற வாக்கியத்துடன் வந்த விளம்பரம் பாலியல் எப்படி விற்பனை யாகும் என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

உண்மையில் மனித இயற்கையில் ஒருமுறை செய்ததை அடுத்த முறை கூடுதலாகச் செய்ய வேண்டும், செய்ய முடியும் என்ற அவா இருப்பது இந்த விடயத்தில் அவ்வளவு நல்லது அல்ல. முன்பு வந்ததை விட இந்த விளம்பரங்கள் விரசமாக உள்ளன. இனி வருபவை இன்னும் விரசமாக இருக்கும்.

அண்மையில் நடந்த ஒரு அபிப்பிராயக் கணக்கெடுப்பில் 7% கனடியர்கள் மட்டும் தாங்கள் பாலியல் விளம்பரங்களால் கவரப் பட்டு பொருட்களை வாங்குவதாகத் தெரிவித்துள்ளார்கள். ஆனால், சில நேரங்களில் பலரும் இந்த விடயத்தில் உண்மையை ஒத்துக்கொள்ளாவிடினும் இந்த மாதிரியான விளம்பரங்கள் கடந்த காலங்களில் வெற்றியை அளித்துள்ளன என்பதை கடந்தகால உதாரணங்கள் காட்டுகின்றன.

பாலியல் சம்பந்தமான விடயங்கள் நாங்கள் ஒத்துக்கொள்ள விரும்பாவிடினும் எங்களின் கவனத்தையும் ஈர்க்கின்றன. எங்களது உயிரியல் உணர்வின் அடிநாதமாக இது இருக்கிறது. ஒரு அழகிய சினிமா நடிகையின் படத்துடன் ஒரு விளம்பரம் வருவது இதனு டைய ஆரம்பமே. இந்த உணர்வுகளுக்கெல்லாம் வரைவிலக்கணம் வகுத்த கொக்கோகம் தந்த அதிவீரராம பாண்டியரும் காமசூத்திரம் சொன்ன வாத்சாயனரும் இங்கு மீண்டும் வந்தால் இதெல்லாம் நாங்கள் உங்களுக்கு முன்னுக்கே சொன்னது தான் எனச் சொல்லத் தவறமாட்டார்கள்.

ragulan@thaiveedu.com

■ ■ ■




Thinking of Buying or Selling Real Estate
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
21 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.........
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
Web: redcarpetcanada.com
Multi Award Winner
Karu Kandiah FRI, CRES,
Real Estate Broker / President
Bus: 416.284.5555 (24 Hrs.) or 416.284.5698
$345,000 For Sale
Bellamy/Lawrence
3+3 Bedrooms, 2 Washrooms Bright And Spacious!! Buyer Will Not Be Disappointed
$259,000 For Sale
Finch/Morningside
3+1 Bedrooms, 3 Washrooms Good Starter Home, Close To Ttc, Shopping And Highway 401.
$570,000 For Sale
Conlins/Ellesmere
4 Bedrooms, 3 Washrooms Beautiful 1 1/2 Yrs New Home Approx. 2500 Sq.Ft
$197,900 For Sale
Neilson / Ellesmere
4+2 Bedrooms, 4 Washrooms Bright Spacious 4 Br Home. Renovated Washrooms, Kitchen.
$399,900 For Sale
Mccowan/Denison
4 Bedrooms, 4 Washrooms Immaculate Condition,Oak Staircase, Strip Hardwood Floor
$449,900 For Sale
Morningside / Neilson
4+2 Bedrooms, 4 Washrooms Very Bright 4 Bed Room Mattamy Home The Trinity Fair-1913 Sq.Ft
$444,888 For Sale
Stouffville
4 Bedrooms, 3 Washrooms Popular Mattamy Built Home On Premium Lot
$314,000 For Sale
Dixie / Sandalwood
4 Bedrooms, 3 Washrooms Renovated Four Bedroom End Unit House
$349,900 For Sale
Morningside/Meadowvale
3 Bedrooms, 3 Washrooms Location!Location!End Unit Like A Semi-Detached Home
$299,900 For Sale
Ellesmere / Scarb. Golf
3+1 Bedrooms, 2 Washrooms Wow! Absolutely Stunning! 3Bdrm Home With Fireplace
$299,000 For Sale
Mccowan/Hwy 401
4 Bedrooms, 3 Washrooms Situated In Luxury Hillsborough Court Tower.
$424,900 For Sale
Brampton
4 Bedrooms, 3 Washrooms A Beautiful Home With Main Level Hardwood Floor
$119,900 For Sale
Kennedy/401
2 Bedrooms, 1 Washroom Well Maintained Unit. Newer Laminate Floor In Living/Dining
$334,900 For Sale
Islington / Queensway
2 Bedrooms, 2 Washrooms Beautiful & Luxurious 2-Storey End-Unit Town-Villa In Trendy
$237,000 For Sale
Warden/Finch
3+1 Bedrooms, 2 Washrooms End Unit Townhouse In Prestige Area. Spacious Living/Dining
$1,000 For Lease
Bayview & 16th Avenue
3 Bedrooms, 2 Washrooms Spotless And Bright Profesionally Finished Bsmt
$368,000 For Sale
Morningside/Kingston
3+2 Bedrooms, 2 Washrooms Lovely Detached Home With Detached Garage. No Sidewalk
$1,300 For Lease
Ellesmere/Orton Park
4 Bedrooms, 3 Washrooms Bright & Beautiful Detached 2 Storey Home.Close To Ttc
$1,600 For Lease
401/Mccowan
2 Bedrooms, 2 Washrooms Cozy Living***Very Clean And Bright Unit
$1,550 For Lease
Mccowan/Finch
2 Bedrooms, 2 Washrooms Cozy Living***Very Convenient Location. Ttc;
Looking for a New Real Estate Career
Join a winning team for your success
• Free Real Estate Classes
• Regular Sales Training from Experts
• Referral leads
• Help & guidance for newly licensed agents
Tel: 416-284-5555

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



**வீடு, காணி** (Residential Properties and Land)
**வர்த்தகவியல்** (Commercial, Corporate and Business)
**சகல வங்கிகளுடைய பலவிதமான ஈடு** (Mortgages) **மற்றும்**
**சமரசத் தீர்வுகள்** (Dispute Resolution)
**சம்பந்தப்பட்ட துல்லியமான சட்ட தேவைகளுக்கு**
**நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய சட்ட நிலையம்.**

# யசோ சின்னத்துரை

## கனடிய சட்டத்தரணி

**மூன்று சகாப்தத்திற்கு மேலான சட்ட அனுபவம்**
**கனடாவில் 16 வருடங்கள் ஆழ்ந்த அனுபவம் நிறைந்த சேவை**

The Law Offices of:

# Yaso Sinnadurai

Barrister and Solicitor, Notary Public

**Over 16 Years of Canadian Experience**
in the areas of Residential and Commercial Real Estate Law
and Business and Corporate Law.

- **Real Estate Law Residential and Commercial**
  - Purchase and Sale of Properties
  - Title Transfers
  - Mortgages, Refinancing and Mortgage Enforcements Issues
- **Business and Corporate Law**
  - Purchase, Sale, Transfer of Business Assets/Shares
  - Lease Review and Representation
  - Incorporation, Partnership and Shareholders Agreements
- **Alternative Dispute Resolution (ADR)**
  - Conflict resolution by ADR on all civil matters

Please call for appointments:
**416.265.3456**
2100 Ellesmere Road, Suite 202, Scarborough

**Positions available - Mississauga location:**
For Junior Secretary and Senior Legal Secretary and/or Law Clerk positions, experienced in Real Estate Law. Interested applicants are invited to mail or fax your resume with handwritten cover letter to 416.265.-2770. (We thank all applicants and shall contact only the short-listed.)


**OUR MISSISSAUGA CONSULTATION OFFICE WILL BE RELOCATED TO**
**3024 HURONTARIO ST., SUITE 216** (Dundas and Hwy 10)
(Building next to our earlier Mississauga location; telephone number 905-306-1100 shall remain the same)

எமது மிசிசாகா அலுவலகம் முன்பு இருந்த நிலையத்திற்கு
அருகாமையில் உள்ள கட்டிடத்திற்கு ஆவணி மாத பிற்பகுதியிலிருந்து
மாற்றப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

## நலமுடன் வாழ இருதயத்தைப் பேணுவோம்

# இருதய நோய் காரணிகளும் தடுப்பும்

Dr. றிச்சாட் ஜெயரஞ்சன்
- Specialist in Cardiovascular & internal Medicine -



**பகுதி 3**

### உங்களது நோய் ஆபத்தை நீங்களே குறைக்கலாம்

சற்று அதிகரித்த குருதி அழுத்தமுடையவர்கள், பொதுவாக உடற்பயிற்சி, உடல்நிறையைக் குறைத்தல், உணவில் உப்பின் அளவைக் குறைத்தல் ஆகியவற்றின் மூலம் பாதுகாப்பான குருதி அழுத்த நிலையை அடையலாம். எப்படியிருப்பினும், உங்களுக்கு மிக அதிகரித்த குருதி அழுத்தம் இருப்பின் மருந்து எடுக்க வேண்டிய தேவை ஏற்படலாம். நீங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்து வரும்போது, உங்களது தசைநார்கள் ஆரோக்கியம் அடைவதோடு, உங்களது உடல் நிறையும் குறைவடைகிறது. நாடிக்குருதிக் குழாயினூடாகக் குருதி ஓட்டம் இலகுவில் நடைபெறும்போது உங்களுடைய குருதி அழுத்தமும் குறைவடைகிறது. அத்துடன் உங்களது பெருநாடிக்குழாயினூடாக குருதி பாய்வதற்கு இருதயம் கடுமையாகச் செயற்பட வேண்டிய தேவையும் இல்லை. உப்பு உங்களது உடல் நீரைத் தாங்கி வைத்திருக்கச் செய்கின்றது. பெருநாடிக்குழாயினுள்ளே குருதியின் அளவை அதிகரிக்கின்றது. அத்துடன் குருதி அழுத்தத்தையும் உயர்த்துகின்றது. உப்பில் பதனிடப்பட்ட பன்றி இறைச்சி, மீன், கருவாடு, உருளைக்கிழங்குப் பொரியல் முதலான உப்புப் பாங்கான உணவு வகைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு மிகவும் அதிகரித்த குருதி அழுத்தம் இருக்குமாயின் உங்களது மருத்துவர் அதனைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய மருந்தைக் குறித்துத் தருவார். உட்கொள்ள வேண்டிய பல்வேறு மருந்து வகைகள் கிடைக்கின்றன. அவை பல்வேறு வழிகளில் தம் வேலையைச் செய்யும்.

### நோய் ஆபத்துக் காரணி: நீரிழிவு நோய்

'நான்கு பெரிய' நோய் ஆபத்துக் காரணிகளில் நீரிழிவு நோய் நான்காவது ஆகும். இந்நோய் மொத்தச் சனத்தொகையில் 5 வீதமானனோரைப் பாதிக்கின்றது. ஆனால், தமக்கு இந்நோய் இருக்கின்றது என்பதை அறியாமலே பலர் இருக்கிறார்கள். இரண்டு நீரிழிவு நோயாளரில் ஒருவர் தனக்கு நீரிழிவு நோய் இருப்பதை அறிந்துகொள்வதில்லை. இந்நோய் உங்களது உடல் சரியான முறையில் வெல்லம், காபோவைதரேற்றுப் பொருள்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியாதவாறு தடைசெய்கின்றது. நீரிழிவு நோயாளர்களின் முடியுருநாடிக் குருதிக் குழாய்கள் மிக எளிதில் சேதமடைந்து நாடிக்குழாய்களில் அடைப்பு நோய் ஏற்பட வழிவகுக்கிறது. எளிய முறையில் மேற்கொள்ளக்கூடிய பத்திய உணவுமாற்றம் நீரிழிவு நோயாளர் பலருக்கு இந்நோயைக் கட்டுப்படுத்திக்கொள்ள உதவியாக உள்ளது. அதிகரித்த குருதி அழுத்தம், கொழுப்பு முதலிய வேறு நோய் ஆபத்துக் காரணிகளுடன் நீரிழிவு நோயும் மிக நெருக்கமான முறையில் தொடர்புடையதாக இருக்கின்றது.

### உங்களது நோய் ஆபத்துக் காரணிகளை மதிப்பிடுதல்

மிக எளிதாகச் செய்யப்படும் குருதிப் பரிசோதனைகள் (குருதி வெல்லம்) நீரிழிவு நோயை அல்லது நீரிழிவு விருத்தியடையக் கூடிய போக்கினை அடையாளம் காட்டுகின்றன. மருத்துவ மதிப்பீடும் உங்களின் நீரிழிவு நோயைக் கண்டுபிடிக்க உதவுகின்றது. மேலதிக உடல் நிறை, தொடர்ச்சியான தண்ணீர்த் தாகம் அல்லது மிகவும் அடிக்கடி சிறுநீர் கழித்தல் ஆகிய தன்மைகள் உங்களிடம் காணப்படுகின்றனவா? நீரிழிவு நோயின் அறிகுறிகளில் இவை சில ஆகும்.

### உங்களது நோய் ஆபத்துக் காரணிகளை நீங்களே குறைக்கலாம்.

நீங்கள் நீரிவு நோயாளராக இருந்தால் அதனைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் அதனை மாற்றிவிட முடியாது. உங்களது குருதியில் வெல்ல உணவைச் சமநிலையாகப் பேணுவதன் மூலம் நாடிக்குழாய்களில் அடைப்பு நோயைக் கட்டுப்படுத்தலாம். இதற்குப் பத்திய உணவுமுறை மட்டும் தனியாக உதவமாட்டாது. இதற்கு நீங்கள் எடுக்க வேண்டிய மருந்தை உங்கள் வைத்தியர் குறித்துத் தருவார். அல்லது உங்கள் குருதியில் வெல்லத்தின் சமநிலையை மட்டுப்படுத்த இன்சுலின் தருவார்.

### சிறு ஆபத்துக்காரணிகள்

உங்களது முடியுருநாடிக் குருதிக்குழாய் நோய்க்கான ஆபத்தை, மேலும் சில ஆபத்துக் காரணிகளும் சேர்ந்து அதிகரிக்கச் செய்கின்றன. அவற்றுள் மிகக் கொழுப்பாக உள்ளவர்களும், சுறுசுறுப்பற்றவர்களும் இதைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அதே வேளையில், உங்களது வயது, குடும்பவரலாறு, பால்வேறுபாடு என்ற ஆபத்துக் காரணிகள் கட்டுப்படுத்த முடியாதவை. இத்தகைய கட்டுப்படுத்தக்கூடிய நோய் ஆபத்துக் காரணிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், கூட்டு மொத்தமாக உங்களிடம் காணப்படும் நோய் ஆபத்துக்களைக் குறைத்து உதவலாம்.

> "மிகக் குறைந்த வயதில் மாரடைப்பினால் இறந்த ஒருவர் உங்களுக்கு உறவினராகவும், நீங்கள் ஆணாகவும் இருப்பின் இத்தகைய ஆபத்து உங்களுக்கு மிகவும் பெரிதாகும். ஆண்களில் 55 வயதிற்கும், பெண்களில் 65 வயதிற்கு முன்பும் உங்கள் உறவினர் ஒருவருக்கு மாரடைப்பு வந்திருந்தால், அது உங்களுக்கு வரக்கூடிய மாரடைப்பு ஆபத்தைக் கூட்டும்."

### உடற்பயிற்சிக் குறைபாடு

கொலஸ்ரோல் அதிகரித்த குருதி அழுத்தம் முதலான நோய் ஆபத்துக்காரணிகளை உடற்பயிற்சி மூலம் குறைத்துக் கொள்ளலாம். உடற்பயிற்சி நன்மையான கொலஸ்ரோலை அதிகரிக்கச் செய்வதோடு, உடல் நிறையைக் குறைக்க உதவுகிறது. சுறுசுறுப்பு அற்றவர்களிலும் பார்க்க, சுறுசுறுப்பானவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுதல் மிகக் குறைவாகும். மிகக் குறைந்த அளவிலான உடற்பயிற்சியும் மற்றுமொரு திருத்தப்பட வேண்டிய நோய் ஆபத்துக் காரணியாக இருப்பது இன்னுமொரு லாபகரமான விடயமாகும். ஒரு வாரத்திற்கு குறைந்தது மூன்று முறை 20-30 நிமிடங்கள் வரை துரிதமாக நடத்தல் போன்ற மிக எளிமையான உடற்பயிற்சி செய்தல் கூட நோய் ஆபத்தினைக் குறைக்கின்றது. கோடை காலத்தில் வெளிப்புறங்களில் நடக்கலாம். குளிர் காலத்தில் கூடங்களுக்குள் நடக்கலாம். நீங்கள் 40 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் உடற்பயிற்சி செய்யத் தொடங்க முன்பு வைத்தியரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

### மன அழுத்தம்

மன அழுத்தம், குண இயல்பு என்பனவும் நோய் ஆபத்துக் காரணிகள் ஆகும். உங்கள் வாழ்க்கையிலிருந்து மன அழுத்தத்தை முற்றாக நீக்கிவிட முடியாது. அத்துடன் ஒருவரது குணவியல்பினையும் மாற்ற முடியாது. எனினும், தேவையற்ற மன அழுத்தங்களை நீக்கிக் கொள்வதன் மூலம் உங்களுக்கு ஏற்படக்கூடிய பெருநாடிக்குருதிக்குழாய் நோய் ஆபத்தைக் குறைத்துக் கொள்ளலாம். வாழ்க்கைத் தொல்லைகளிலிருந்து எழும் மன அழுத்தங்களுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது, மன அழுத்தங்களைச் சமாளிக்க உதவுகின்றன.

### உடல் பருத்தல்

உங்களது உடல் நிறை, அளவான உடல் நிறையைவிட 20 வீதம் கூடுதலாக இருப்பின் சாதாரண நிலையிலும் பார்க்க இருதய நோய் வரக்கூடிய ஆபத்து அதிகமாகும். உடல் நிறையைக் குறைத்தல் இந்நோய் ஆபத்தைக் குறைக்க உதவுகின்றது. உடற்பயிற்சி செய்வதன் மூலமும், கொழுப்பு, கொலஸ்ரோல் ஆகியன அதிகமாக உள்ள உணவுகளைக் குறைத்துச் சாப்பிடுவதன் மூலமும் உடல் நிறையைக் குறைத்துக் கொள்ளலாம்.

### வயது

வேறு நோய் ஆபத்துக் காரணிகள் இல்லாவிட்டாலும், காலப்போக்கில் உங்களது உடலில் நாடிக்குழாய்களுள் அடைப்பு நோய் வளர்ச்சி பெறுகிறது. நீங்கள் முதுமை அடைந்த போதிலும் உங்களால் கட்டுப்படுத்தக்கூடிய ஆபத்துக் காரணிகளை அகற்றிக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

### குடும்ப வரலாறு


உங்களது குடும்ப உறுப்பினர்களுக்கு முடியுருநாடிக் குருதிக்குழாயில் மிகவும் பாரிய நோய் இருந்தால் அல்லது அவர்களுக்கு ஏனைய நோய் ஆபத்துக்கள் இருந்திருப்பின் உங்களுக்கு நோய் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகமாகும். மிகக் குறைந்த வயதில் மாரடைப்பினால் இறந்த ஒருவர் உங்களுக்கு உறவினராகவும், நீங்கள் ஆணாகவும் இருப்பின் இத்தகைய ஆபத்து உங்களுக்கு மிகவும் பெரிதாகும். ஆண்களில் 55 வயதிற்கு முன்பும், பெண்களில் 65 வயதிற்கு முன்பும் உங்கள் உறவினர் ஒருவருக்கு மாரடைப்பு வந்திருந்தால், அது உங்களுக்கு வரக்கூடிய மாரடைப்பு ஆபத்தைக் கூட்டும்.

### பால்

50 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கு அதே வயதுடைய பெண்களைவிட இரண்டிலிருந்து மூன்று மடங்கு அதிகமான அளவு மாரடைப்பு ஏற்படுவதற்கான நோய் ஆபத்து உண்டு. அந்த வயதிற்கு மேல் ஆண் பெண் இருபாலாருக்கும் சமமான அளவு ஆபத்து நிலையே உருவாகின்றது. 50ஆவது வயதளவில் பெண்களுக்கு மாதவிடாய் வருவது நின்றுவிடுவதனால், பெண்களின் ஓமோன்களிலிருந்து (Female Hormones) பெறப்படும் பாதுகாப்பினை அவர்கள் இழந்துவிடுவதே இதற்குக் காரணமாகும்.

jeyaranjan.richard@thaiveedu.com

■ ■ ■




தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

## கீரை உணவு வகைகள்

# அரைக்கீரை, கரிசலாங்கண்ணிக்கீரை, சிறுகீரை

**கீரை உணவு - 11**



**உதயணன்**

நாங்கள் அடிக்கடி உணவுகளில் சேர்த்து வருவனவும், கடைகளில் பெரும்பாலும் வாங்கக் கூடியனவுமான பத்துக் கீரை வகைகளைக் கடந்த பத்துக் கட்டுரைகளில் பார்த்தோம். இவை தவிர இன்னும் ஏராளமான கீரை வகைகள் தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் பயன்பாட்டில் இருக்கின்றன. ஆனால், இன்றைய நாகரிகச் சூழலில், கிராமப் புறங்களில் வாழும் மக்களால்தான், அதிலும் முதியவர்களால்தான் சில கீரை வகைகளை இனம் காணக்கூடியதாக இருக்கின்றது. வன்னியில் வாழ்ந்த ஒரு குடும்பத்தினர், பஞ்சத்தின் காரணமாக, ஏதோ ஒரு கீரைவகைதான் என்று நினைத்து அடம்பன் கொடியிலையைச் சமைத்துச் சாப்பிட்டதால் குடும்பத்தில் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் ஒரு செய்தி வந்திருந்தது. நகரப் பகுதிகளில் வாழும் மக்கள் அறியாத பல கீரை வகைகள் கிராமப் புறங்களில் இன்னமும் உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகின்றன. இவற்றை மறந்துபோன வெளிநாடுகளில் வாழும் பழைய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்காகவும் இவைபற்றி எதுவுமே அறியாத புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்காகவும் மேலும் சில கீரை வகைகள் பற்றிய சிறு குறிப்புகளை இனிப் பார்க்கலாம்.

### அரைக் கீரை

கிணற்று நீரை இறைத்துப் பயிர் செய்யும் நிலத்தைத் தோட்டக்கால் என்று தமிழ்நாட்டில் சொல்வார்கள். இந்தத் தோட்டக்காலில் பயிர் செய்யப்படும் ஒருவகைக் கீரை அரைக்கீரை என்பதாகும். சில கிராமங்களில் இதனை ஆலக்கீரை என்றும் சொல்வார்கள். இந்த அரைக்கீரையை வேரோடு பிடுங்கி எடுப்பதில்லை; அறுத்து எடுப்பார்கள். அதனால் இதனை அறுகீரை என்றும் அழைப்பார்கள். ஆனால் அரைக் கீரை வேறு, அறுகீரை வேறு என்று கருதுவாரும் உளர். நாட்டுக்கு நாடு, கிரமத்துக்குக் கிராமம், இடத்துக்கு இடம் வழக்கில் உள்ள இத்தகைய கருத்து வேறுபாடுகளும் பெயர் வேறுபாடுகளும் இயல்பானவை. இவை பற்றிய சரியான தெளிவைப் பெறுவதற்கான சிறந்த அகராதிகள் அறிவும் அனுபவமும்தாம். அரைக் கீரையின் மேல் பாகம் பச்சை நிறமாகவும் அடிப்பாகம் சிவப்பு நிறமாகவும் இருக்கும். இதன் தண்டு பெரிதாக நீண்டும், இலைகள் சிறிதாகவும் இருக்கும். எளிதில் ஜீரணமாகக் கூடிய கீரை இது. இந்தக் கீரை மிகச் சிறந்த மூலிகை என்றும் சஞ்சீவி என்றும் பெயர் பெற்றது.

அரைக்கீரையில் இரும்புச் சத்தும் வைட்டமின் ஏ, சீ இரண்டும் அதிக அளவில் இருக்கின்றன. அத்துடன் புரதம், தாது உப்பு, சுண்ணாம்பு ஆகிய சத்துக்களும் நிறைய உண்டு. அதனால் அரைக் கீரை பத்தியத்துக்கு மிகவும் சிறந்தது என்று நம்பப் படுகின்றது. இக்கீரை மலச்சிக்கலை நீக்கி, உடலுக்கு இரும்புச் சத்தை ஏற்றி உடலைப் பலப்படுத்தும். மேலும், நரம்புத் தளர்ச்சியைக் குணமாக்கும். நரம்பு சம்பந்தமான எல்லா நோய்களுக்கும் உகந்தது. மற்றும் காய்ச்சல், சன்னி, கபம் ஆகியவற்றையும் தீர்க்கும். அரைக் கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் சம்பந்தமான எல்லா நோய்களும் நீங்கும். நாக்கில் ருசி உணர்வு இல்லாதவர்களுக்கு ருசி உணர்வை ஏற்படுத்தும். உடலில் எந்தப் பகுதியில் வாய்வுத் தொல்லை இருந்தாலும் அது மாறும். ஞாபக சக்தி அதிகரிக்கும். இதயத்துக்கு வலிமை தரும். உடல் சூட்டைச் சமன்படுத்தும். அரைக் கீரை நிரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும். பசியை உண்டாக்குவதும், நுரையீரல் வியாதியை குணமாக்குவதும், வாதம், பித்தம், வாய்வு போன்றவற்றை தடுப்பதும் இந்த கீரையின் இயல்பாகும். அரைக்கீரை உடலுக்கு அழகையும், முகத்துக்குப் பொலிவையும் தருகிறது. ஆறாத ரணங்களைத் தீர்க்கிறது. கல்லீரல் நோய்களைத் தடுக்கிறது. ரத்த சோகையையும் நீக்க வல்லது. அரைக்கீரையை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உடலின் எல்லாப் பாகங்களும் சீரான வளர்ச்சியைப் பெறும். உடல் பலமாகும். காம உணர்வு அதிகரிக்கும். மணமானவர்களுக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் தரும்.



கரிசலாங்கண்ணிக் கீரை



அரைக் கீரை

அரைக்கீரையை வெங்காயம், இஞ்சி, பூண்டு, மிளகு, பெருங்காயம் ஆகியவற்றுடன் அளவான உப்பும் சேர்த்துக் கடைந்து, நெய்விட்ட சோற்றுடன் குழந்தைகளுக்குக் கொடுத்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

குழந்தைப் பேறு காலத்தில் தாய்மாருக்கு மிகவும் உதவக்கூடிய கீரை இது. பிரசவத்தின் போது ஏற்படும் கடுமையான உடல் வலியைத் தீர்க்கும். கருப்பையின் புண்ணை ஆற்றும். பிரசவத்தின் பின் தாய்ப்பால் சுரப்பது குறைவாக இருந்தால் அரைக்கீரை அதிக அளவில் தாய்ப் பாலைச் சுரக்கச் செய்யும்.

நீலி என்றொரு செடி உண்டு. அவுரி என்றும் அழைக்கப்படும் இந்தச் செடி விஷத்தை முறிக்கும் ஆற்றலில் முதலாவது இடத்தில் இருக்கின்றது. இதற்கு அடுத்து, விஷத்தை முறிப்பதில் அரைக் கீரை இரண்டாம் இடத்தைப் பெறுகின்றது. அரைக் கீரை ஆங்கில மருந்துகளின் வேகத்தையும் பக்க விளைவுகளையும் முறியடிக்கும். தேமல், சொறி, சிரங்கு உள்ளவர்கள் அரைக் கீரையை நாளாந்தம் உணவில் சேர்த்துக் கொண்டால் குணமாகிவிடும்.

### கரிசலாங்கண்ணிக் கீரை

ஒரு மிகச் சிறந்த மருத்துவ மூலிகையான கரிசலாங்கண்ணி இந்தியா, தமிழீழம் முழுவதிலும் காணப்படும் ஓர் ஒராண்டுத் தாவரமாகும். செடி முழுவதும் மருத்துவப் பயன் உள்ளது. இதனைச் சிலர் கரிசாலை என்றும் அழைப்பர். இதன் வேறு பெயர்கள் கரிசனாங்கண்ணி, கரிப்பான், மஞ்சள்பாவை, பொற்கொடி, கையாந்தகரை, கரிகா, கையான், கைவீசி, கைகேசி, கரியசாலை, கரிக்கண்டு இன்னும் பலவாம். கரிசலாங்கண்ணியில் நான்கு வகையான செடிகள் இருக்கின்றன. அவையாவன வெள்ளை, மஞ்சள், நீலம், சிவப்பு நிறப் பூக்களைப் பூக்கும் நான்கு இனங்களாகும். அவற்றுள் வெள்ளை நிறப் பூக்களைப் பூக்கும் செடிகளைச் சாதாரணமாக எங்கும் காணலாம். இதுவே பொதுவாகப் பயன்பாட்டில் இருக்கின்றது. மஞ்சள் நிறப் பூக்கள் உள்ள செடியை மஞ்சள் கரிசலாங் கண்ணி என்று அழைப்பர். இது கிடைப்பது அரிது. நீலம், சிவப்பு நிறப் பூக்களைப் பூக்கும் கரிசலாங்கண்ணிச் செடிகள் கிடைப்பது அரிதிலும் அரிது. கரிசலாங்கண்ணிச் செடிகள் வயல்கள், வாய்க்கால், வரப்புகள், ஏரிக்கரைகள், ஆற்றோரங்கள் ஆகிய ஈரப்பிடிப்புள்ள இடங்களில் அதிகமாகக் காணப்படும். இது ஒரு மிகச் சிறிய செடி. தரையோடு படர்ந்தும் நேராகவும் வளரக்கூடியதுமான ஒரு செடியினமாகும். அதிக சிறிய கிளைகள் இருக்கும். தரையில் படரும் செடிகளின் கணுக்களிலிருந்து வேர்கள் அறுகம் புல்லைப் போன்று நிலத்தில் இறங்கும். நான்கு இனங்களிலும் மிகச் சிறந்ததாக மஞ்சள் கருசலாங்கண்ணி கருதப்படும். இந்தக் கொடி மெல்லிய சிவப்பு நிறமுடையது. பூவின் மத்தியில் மகரந்தம் குவிந்திருக்கும். பூவின் நிறம் சுத்தமான தங்க நிறம்போல இருக்கும். அதனால்தானோ என்னவோ, இந்தச் செடியைப் 'பொற்கொடி' என்றும் அழைப்பார்கள். இதிலேயே அதிகமான மருத்துவப் பயன்கள் இருகின்றன.

44ம் பக்கம் பார்க்க...

**Driving School**

ஒட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.


**நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி**

General Driving School
Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்

416-731-2829

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க


$499,900

9th Line / 14th Ave
4 Bedrooms 3 Washroom

$335,000


BRIMORTON/ SCARBOROGOLFCLUB
3 Bedrooms 4 Washroom
All Wood Floor Fin. Basmt

$369.000

Rutherford / Hwy 400
3 Bedrooms 4 Washroom
Finished Basement


$599.000


Rutherford / Western Rd
4 Bedrooms, 4 Washroom
Finished Basement


$424.000


Gore & Cottrelle
4 Bedrooms,3 Washroom


**In Cambridge**
GAS STATION WITH CONV.
+ LOTTO 649
+ WAREHOUSE
+GARAGE
$845.000

**In orelia**



$1,499.900

**In Niagara**


$1,400.000

**In Burlington**


$159.000

**In Fort Erie**


$2,299.900

brightsun print - 416-845-6565

மேலும் பல GAS STATION களும் விற்பனை
நிலையங்களும் விற்பனைக்குண்டு
நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்

*Some conditions may apply



## சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)

# 416-816-1500

Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900
Century 21

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...

$118,000

Kennedy/Ellesmere
Bedrooms:2
Washrooms:1

$147,800

Neilson/Mclevin
Bedrooms:2+1
Washrooms:1

$165,000


Lawrence/Morningside
Bedrooms: 3
Washrooms: 1
Basement: Finished W/O

$219,900

Kennedy/401
Bedrooms: 3+1
Washrooms: 4
Basement: Finished

$199,000


Markham/Sheppard
Bedrooms: 3
Washrooms: 2
Basement: Finished

$279,000

Neilson/Sheppard
Bedrooms: 3+2
Washrooms: 2
Basement: Fin Sep Ent

$289,500

Mccowan/Finch
Bedrooms: 3
Washrooms: 2
Basement: Finished

$354,900

Morningside/Hwy 401
Bedrooms:3+3
Washrooms:4
Basement: Fin Sep Ent

$399,900

Lawrence/Manse
Bedrooms: 4
Washrooms: 3
Basement: Finished

$449,000

9th Line/ 14th Ave
Bedrooms: 3
Washrooms: 3
Basement: Finished

**ATTENTION FIRST TIME BUYER**
- What steps to be taken before to buy the property?
- Government grants for you?
- How to invest your RRSP into the Real Estate?
- The land transfer tax rebates?
- List of Bank Sales?

$219,900
Bedrooms: 2+1 Washrooms: 2

Middlefield/Finch
Open house: Sat & Sun 2Pm to 4Pm



If you want to see more houses visit at www.krishome.ca

முழுநேர வீடு விற்பனை முகவர்

**KRISH SIVAPATHAM**
Sales Representative
Direct: 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage*
7 - 204 Eastvale Drive, Markham, ON, L3S 4N7
BUS: 905-201-9977 FAX: 905-201-9229
www.krishome.ca
*Independently Owned and Operated, REALTOR
HOMELIFE HIGHER STANDARDS
This is not intended to solicit properties Currently under contract / some conditions may apply

**CENTUM**
Gold Mortgages
Looking out for your best interest

இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உங்கள்
நிதிப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு...

- 1st, 2nd, 3rd MORTGAGES *
- COMMERCIAL MORTGAGE *
- LINE OF CREDIT *
- POWER OF SALE *
- SELF - EMPLOYED *
- BRIDGE FINANCING *
- SWITCHING *
- REFINANCING *
- BAD CREDIT *

All Mortgages Needs
☎: 416- 844-8692
supen71@hotmail.com



**Supen Subramaniam**
Mortgage Consultant (MO8006045)
*Some Condition Apply



# Shan Thayaparan
Sales Representative



**Thinking of .....**
Selling
Buying or
Renting....
**For all your Real Estate needs**
**Please Call me First.**

***Dir: 416-567-7675***

***Web:shan123.com, Email: shan123@rogers.com***

***Bus: 416-321-2228***

Flexible Commission
Reliable Service & Full Time Agent
Free Market Evaluation

RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc. 2210 Markham Road. TorontoM1B 5V6

My Team will help you to find Lawyers, Home Inspectors, Mortgages
Also We do Refinances and find Tenants for your Rental properties

*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# காப்புறுதி கம்பனிகளும் கனடிய அரசின் கண்காணிப்பும்



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

### கனடாவில் இயங்கும் காப்புறுதி கம்பனிளில் கனடிய அரசின் கண்காணிப்பு என்பது எப்படி இருக்கும்?

கனடாவில் காப்புறுதி கம்பனிகளின் செயல் பாட்டுக்கான லைசென்சினை மத்திய, மாகாண அரசுகள் வழங்குவதால் மத்திய அரசின் அனுமதி (லைசென்ஸ்) பெற்ற காப்புறுதி கம்பனி, மாகாண அரசின் அனுமதி பெற்ற காப்புறுதி கம்பனி என இவ் அனுமதி வழங் கலில் இரு வகைகள் அடங்குகின்றன.

அனேகமான கம்பனிகள் மத்திய அரசின் அனுமதி பெற்ற கம்பனிகள் ஆகும். மத்திய அரசின் அனுமதி பெற்ற கம்பனிகள் ஒவ் வொன்றும் கனடாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் செயல்படுவதற்கும் அந்த மாகாண அரசின் சட்ட பூர்வமான லைசென்சினை அந்த மாகாண அரசின் காப்புறுதி சட்ட விதிகளுக்கு அமைய பெற்று இருக்க வேண்டியது என்பது முக்கியமானதாகும். இங்கு கியூபெக் மாகாண அரசின் காப்புறுதி சட்ட விதிகள் என்பது ஏனைய மாகாண அரசுகளின் காப்புறுதி சட்ட விதிகளுடன் அனுசரித்துப் போனாலும் பல இடங்களில் சற்று வேறுபடு கின்றது.

கனடாவின் மத்திய அரசு, மாகாண அரசின் காப்புறுதி சட்ட விதிகளுக்கு அமைய இக் கம்பனிகள் பூரணமாக இயங்கி கொண்டுள்ளதா? என்பதனை ஒவ்வொரு மாகாணத்திலும் நிதி அமைச்சின் கீழ் இயங்கும் 'Superintendent of Insurance' என ஆங்கிலத்தில் குறிப்பிடப் படும் பிரிவினர் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள்.

இப் பிரிவினர் ஒவ்வொரு காப்புறுதி கம்பனிகளினாலும் சந்தைப்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்களின் தன்மைகள், விலை விபரங்கள் யாவற்றினையும் பரிசீலனை செய்து அவற்றினை சந்தைப்படுத்துவதற்கு உரிய அங்கீகாரத்தினை வழங்குவதுடன், வருடம் தோறும் காப்புறுதி கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்ட அறிக்கைகள், லாப நட்ட கணக்குகள், கம்பனியின் சொத்துக்கள், பொறுப்புகள் என்பவற்றினை பரிசீலனை செய்து, ஒவ்வொரு கம்பனியின் வலிமையினையும் கண்காணித்துக் கொண்டேயிருப்பார்கள்.

1992ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மத்திய அரசின் காப்புறுதி சட்ட திருத்தத்தின்படி ஒரு காப்புறுதி கம்பனி வங்குரோத்து நிலைமைக்கு சென்று, அதில் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்கப்படுபவராக இருந்தால் அதற்கு அரசு பொறுப்பு என சட்டம் உருவாக்கப்பட்டதுடன், அதே சட்டமூலத்தினை பின்னர் மாகாண அரசுகளும் உருவாக்கி நிரந்தர சட்டமூலம் ஆக மாற்றியுள்ளது. இவ்வாறு எத்தகைய வழியிலும் கம்பனியின் வங்குரோத்து இயலாமையினால் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக் கப்படாது பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே 'Canadian Life & Health Insurance Compensation Corporation" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் கூட்டுத்தாபனம் ஆகும்.

> "மத்திய அரசின் காப்புறுதி சட்ட திருத்தத்தின்படி ஒரு காப்புறுதி கம்பனி வங்குரோத்து நிலைமைக்கு சென்று, அதனால் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்கப்படுபவராக இருந்தால் அதற்கு அரசு பொறுப்பு எடுக்கும் சட்டம் நடைமுறையிலுள்ளது."

இந் நிறுவனம் ஆயுள் காப்புறுதியில் கம்பனியின் வங்குரோத்து நிலைமையினால் பாதிக் கப்படும் வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் $200,000 லட்சம் என்ற உத்தரவாதம் வழங்குவதுடன், உடல் இயலாமை காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருப்போர் ஒவ்வொருவருக்கும், (Disability Insurance) வழங்கும் மாத நட்ட ஈடு நிவாரணத்திற்கு மாதம் $2,000 வரை உத்தரவாதம் வழங்கு கிறது.

இதே போல் காப்புறுதி கம்பனகளில் வைத் திருக்கும் பதிவு செய்யப்பட்ட, செய்யப்படாத ஓய்வூதிய திட்டங்களுக்கும், சேமிப்பு திட்டங் களுக்கும் $60,000 வரை உத்தரவாதம் வழங்குகின்றது.

உடல் நோய், மருத்துவ காப்புறுதிகளுக்கும் (Critical Illness Insurance) $60,000 வரை இந் நிறுவனத்தின் உத்தரவாதம் உண்டு. இதே போல் வாகன காப்புறுதிகள், வீடுகள், சொத்துகள், வர்த்தக நிலையங்களுக்கு காப்புறுதிகள் செய்து வைத்திருப்பவர்கள் கம்பனியின் வங்குரோத்து நிலைமையில் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்டதே "Property & Casualty Insurance Compensation Corporation" (PACICC) என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் ஒவ்வொரு நட்ட இழப்பீட்டு ஒப்பந்தத்திற்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கு $2,50,000 வரை உத்தரவாதம் வழங்குவதுடன், மாதா மாதம் செலுத்துவதற்கு பதிலாக முற்பணமாக வருடம் தோறும் செலுத்தியவர்களின் பணத்திற்கும் அதில் 70% வரை ஆக கூடுதலாக $700 வரை பணத்தினை திருப்பி பெறும் உத்தரவாதம் வழங்குகின்றது. அதாவது காப்புறுதி ஒப்பந்தத்திற்கு செலுத்த வேண்டிய மாத கட்டுப் பணத்திற்கு பதிலாக வருடம் வருடம் செலுத்தியவர்களின் முற்பணத்தினை திருப்பி கொடுக்கும் உத்தரவாதத்தினையும் இக் கூட்டுத்தாபனம் வழங் குகின்றது.

மேற்குறிப்பிட்ட இரு நிறுவனங்களிலும் சகல காப்புறுதி கம்பனிகள் அங்கம் வகிப்பதுடன், கம்பனியினால் வாடிக்கையாளரை நோக்கி ஆபத்துக்கள் எந்நேரமும் ஏற்படலாம் என எதிர்பார்த்து ஒரு குறிப்பிட்ட பணத்தினை ஒதுக்கி வைத்து விடுவது வழக்கம்.

ஒரு காப்புறுதி கம்பனியின் இயங்கு சக்தியினை பூரணமாக கண்காணிக்கும் மத்திய, மாகாண அரசுகள் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்ட கம்பனியின் ஒப்பந்தங்களை வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்காத நிலைமையில் இன்னொரு கம்பனிக்கு மாற்றியமைக்கும் சம்பவங்களும் நடைபெறுவது வழமையாகும். அதாவது ஆயுள் காப்புறுதி என்பது ஒரு நீண்டகால ஒப்பந்தம் ஆகையால் அது பெற்றுக் கொண்டது ஒரு கம்பனியாகவும் தற்போது இன்னொரு கம்பனிக்கு மாற்றப் பட்டு இருப்பதுடன் (இம் மாற்றம் தொடர்பாக நிச்சயம் கம்பனி வாடிக்கையாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்கள்). சில நேரங்களில் உயிர் இழப்பு ஏற்பட்டு நட்டஈடு கோரும்போது நட்டஈடு வழங்குவது இன்னொரு கம்பனியாகவும் இருக்கும்.

இதே போல் வாகன காப்புறுதியில் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கும் போதும் ஒப்பந்தம் இன்னொரு கம்பனிக்கு மாற்றியமைக்கப்படும். இவையெல்லாம் மத்திய, மாகாண அரசு களின் கண்காணிப்பில் நடத்தப்படுவதால் வாடிக்கையாளர் ஒருவருக்கு பூரண பாதுகாப்பு இருப்பதுடன், காப்புறுதி கம்பனி பற்றி அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

### காப்புறுதி கம்பனிகளுக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே செயல்படும் முகவர்களின் செயல்பாட்டில் அரசின் கண்காணிப்பு எப்படி இருக்கும்?

இங்கு காப்புறுதி கம்பனிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையே செயல்படும் முகவர்களை அவர்கள் கனடாவின் எந்த மாகாணத்தில் இருந்து செயல்படுகின்றார்களோ அந்த மாகாண அரசு அவர்களுக்குரிய லைசென்சினை வழங்கி அவர்களின் செயல் பாட்டினையும் கண்காணித்துக் கொண்டேயிருக்கும்.

இக் காப்புறுதி முகவர்களின் பணிபுரியும் துறையினையும், படித்து சித்தியடைந்த துறைகளையும் வைத்து மாகாண அரசினால் முகவர் களுக்கு வழங்கப்படும் லைசென்சினை இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

ஆயுள், மருத்துவ காப்புறுதி முகவர் (Life and Health Insurance Agent)இம், முகவருக்கு உரிய லைசென்சினை உதாரணமாக ஒன்ராறியோ மாகாணத்தின் மாகாண நிதி அமைச்சின் ஒரு பிரிவான Financial 'Services Commission Of Ontario' எனும் நிறுவனம் வழங்கி முகவரின் செயல்பாட்டினையும் கண்காணித்து வருகின்றது.

இம்முகவர்களுக்குரிய கற்கை நெறிகள், பரீட்சைகள், பயிற்சி நெறிகளை "Canadian Life and Health Insurance Association" என்னும் நிறுவனம் நடாத்துகின்றது.


பொருட்கள், சொத்துகள், வர்த்தக நிறுவனங்கள், வாகனங்களின் காப்புறுதி (Property and Casualty Insurance Agent or General Insurance Agent) இம் முகவர்களுக்குரிய லைசென்சினை "Registered Insurance Brokers Organization" என்னும் மாகாண அரசின் நிறுவனம் வழங்குகின்றது.


இம் முகவர்களுக்குரிய கற்கை நெறிகள், பரீட்சைகள், பயிற்சி நெறிகளை "Insurance Council of Canada" என்னும் நிறுவனம் நடாத்துகின்றது.

இவ் இரு துறைகளில் உள்ள முகவர்களும், தமது தொழில் செய்து வரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் கனடாவில் மாறிவரும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் காப்பு றுதிகள் தொடர்பான கற்கை நெறிகளுக்கு குறிப்பிட்ட மணித்தியாலங்கள் சென்று பயிற்சி பெற வேண்டும் என்பதும் ஒவ்வொரு வருடமும் தங்கள் லைசென்சினை புதுப்பிக்கும் போது அரசு கவனித்துக் கொள்ளும் ஒரு அம்சமாகும். இது தவிர ஒரு முகவரின் தவறினால் வாடிக்கையாளரை பாதிக்கும் நிலை ஒன்று உருவானால், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கண் டிப்பாக ஒரு தொழில் பொறுப்பு காப்புறுதி (Professional Liability Insurance) என்பதும் முகவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருக்க வேண்டியது முக்கியமானது ஆகும். வாடிக்கையாளர்கள் நலன் கருதி பல வழிகளிலும் மாகாண அரசு, முகவர்கள் ஒவ்வொருவரை யும் கண்காணித்து வருகின்றது.

sivapanchalingam@thaiveedu.com

■ ■ ■

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)

Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

▸▸ வீடுகள்
▸▸ தொடர்மாடி வீடுகள்
▸▸ தொழிற்சாலைகள்
▸▸ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416 • 291 • 3997

# வீடு வாங்கலாமா?

சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



‘எலிவளையானாலும் தனி வளை நன்று’ என்பது உண்மை தான். உங்களுக்கென்றோர் இல்லம். அதுவே உங்கள் இல்லமென வாங்கிட நினைப்பது சரியான முடிவுதான். எனினும் எம்மவர்களில் சிலர் ‘அடுத்தவர்கள்




வீடு வாங்கி விட்டனர் என்பதற்காக தமது பொருளாதாரத் தகைமையையும் மீறி வீடு வாங்க தம்மைக் கட்டாயப்படுத்தி நிர்ப்பந்திப்பது சில சமயங்களில் அவர்களை அவர்களே படுகுழியில் தள்ளுவதற்குச் சமமாகின்றது.

வீடு வாங்க நினைப்பவர்கள் முதலில் ‘வீடு வாங்க தாங்கள் தயாரா?’ என்ற கேள்வியை தங்களுக்குள் கேட்டுப்பார்க்க வேண்டும்.

முதலீடுகளில் அதிசிறந்ததும், கட்டாயமானதும், முதன்மையானதுமான முதலீடு எதுவென்றால் அது நிச்சயமாக நீங்கள் வாழும் வீட்டிற்கான முதலீடாகவே அமையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் எனக்கு இல்லை. எனினும் சுண்டெலியின் முதுகில் பெரிய மலையைப் பெயர்த்து வைக்கலாமா? முதலில் வீட்டு உரிமையாளராக நீங்கள் ஏற்கவுள்ள புதிய பொறுப்புக்களுக்கு நீங்கள் பொருளாதார ரீதியாக பொறுப்பேற்க தயாரா என உங்களை நீங்களே கேட்டுப்பார்த்து ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

## எப்படி இவற்றை அறிவது?

எதிர்பாராத கவலைதரும் விளைவுகளை நீங்கள் வாங்கப்போகும் வீடு உங்களுக்கு தராதிருக்க வேண்டுமானால் இக்கட்டுரையில் கூறப்படும் சில தகவல்களை அறிந்திருப்பது நன்று.

இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உங்கள் மாதாந்த செலவுகளை கணக்கிட்டுப் பார்த்து எவ்வளவு பெறுமதியான வீட்டை வாங்குவது உங்களுக்கு கட்டுப்படியானது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

முதலாவதாக உங்களிடம் உள்ள சொத்துக்களின் உண்மையான நிலவரத்தைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். இதனை ஆங்கிலத்தில் Net worth என்பர். உங்கள் Net wroth எனப்படுவது உங்கள் total assets எனப்படும் மொத்த சொத்துக்களின் மொத்தப் பெறுமதியிலிருந்து total liabilities எனப்படும் மொத்தக் கடனைக் கழிக்கப் பெறப்படும். அதாவது சேமிப்புக்கள், முதலீடுகள், சொத்துக்கள், வாகனங்கள், நகைகள், காசு என்பனவற்றின் மொத்தப் பெறுமதியிலிருந்து (Mortgage) ஈட்டுக்கடன்கள், வாகனக் கடன், தனிப்பட்ட கடன் (Personal Loans, Students Loans) கடனட்டை கடன்கள் மற்றும் இதர கொடுக்க வேண்டிய கடன் தொகைகள் போன்றவற்றைக் கழித்துப் பெறப்படும். இவ்வாறு கணிக்கப்படும் Net worthஇன் பெறுமதியானது உங்கள் பொருளாதார நிலையை பெருமளவில் படம் பிடித்துக் காட்டுவதனால் உங்களுக்கு நீங்கள் வாங்கப்போகும் புதிய வீட்டிற்கு எவ்வளவு முதலிட முடியும் என்று கணித்திட உதவியாக இருக்கும்.

அடுத்ததாக உங்கள் மாதாந்தச் செலவுகளை கூட்டிக் கணக்கிட்டு எத்தகைய Mortgage Payment உங்களுக்கு சிரமமில்லாமல் உங்களது budgetஇற்கு ஏற்றாற்போல் கட்டக்கூடியதாக இருக்கும் என்பதனை அறிய வேண்டும். உங்கள் மாதாந்தச் செலவுகள் என்னும் பொழுது வீடு சார்ந்த செலவுகள் மற்றும் வீடு சாராச் செலவுகளான தொலைக்காட்சி, கணினி வலை, கடன் கட்டுத் தொகைகள், காப்புறுதி, வாகனச் செலவுகள், உடை, உணவு, களியாட்டச் செலவுகள், மலிகைச் சாமான் செலவுகள், மருத்துவச் செலவுகள் குழந்தைகளின் செலவுகள் என்பன போன்ற அனைத்து மாதாந்தச் செலவுகளும் அடங்கும்.

இங்ஙனம் கணித்த உங்கள் பொருளாதார நிலைமையிலிருந்து உங்களுக்கு உங்கள் புதிய வீட்டிற்கு வரவுள்ள செலவுகள் சாத்தியப்படுமா இல்லையா என்பதும் சாத்தியப் படுமாயின் எவ்வளவு மாதாந்தத் தொகையானது கட்டுப்படியானது என்பதும் தெரியவரும். அதாவது உங்கள் Housing cost எனப்படும் வீட்டின் Mortgage Principal and Interest, Property Taxes, Utilities என்பவற்றிற்கான கட்டணத் தொகையானது உங்கள் வீட்டின் மொத்த வருமானத்தின் 32% விழுக்காட்டை விட அதிகரிக்காமல் இருக்கிறதா? என ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இதனோடு இதர கடன் தொகைகளுடன் சேர்த்து (Housing cost and other total loan payments – should be less than 40% of your total house hold income) 40% விழுக்காட்டை விட அதிகரிக்காமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

இங்ஙனம் கணக்கிட்டுப் பார்த்த பின் வீடு வாங்குவது சாத்தியம் என்ற மனத்தைரியம் உங்களுக்கு உறுதியாக உருவாகுமானால் முதல் வேலையாக கடன் தரும் நிறுவன மொன்றை தெரிவு செய்து உங்களிற்குத் தேவையான அளவு Mortgageக்கு pre approval எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறு pre approve செய்வதனால் எந்த விலையில் உள்ள வீடுகளை வாங்க உங்களுக்கு முடியும் என்பதை வீடு பார்க்க முதலே உங்களுக்கு தெரியவரும். இதனால் வீட்டைப் பார்த்த பின் வரும் Mortgage பிரச்சினைகளால் வரும் ஏமாற்றங்களையும் தவிர்த்துக்கொள்ளலாம். எந்தவிலை பெறுமதியான வீடுகளை நீங்கள் வாங்க தகுதியுள்ளவர் என அறிந்தபின் அந்த தொகைக்குள் வீடுகளைப் பார்க்க இலகுவாக இருக்கும். விரலுக்கு மிஞ்சி அசைப்பட்டு வீணாக மனக் கோட்டை கட்டி பின் Mortgage பிரச்சினையால் வீடு வாங்க முடியாதுபோய் அதன்பின் அவர்கள் தகைமைக்குட்பட்ட வீடுகளைக் கூட வாங்காமல் மனம் சோர்ந்து போகும் பலரைக் கண்டுள்ளேன். உங்கள் தகைமைக்கேற்ப வீட்டில் முதலில் முதலிட்டு பின் படிப் படியாக வாழ்வில் முன்னேறிய பின் உங்கள் கனவு வீடுகளான பெரிய மாளிகைகளை வாங்கமுனைய முடியும். அவ்வாறான படிப் படியான வளர்ச்சியே ஆரோக்கியமான பொருளாதார வளர்ச்சியுமாகும். அதற்காக உங்களுக்கு இன்றே விலை சாத்தியமான வீடுகளை வாங்கும் தகைமை இருக்குமாயின் வாங்கக்கூடாது என நான் சொல்லவில்லை. Pre approval செய்து கொள்ளாது வீடு பார்க்கத் தொடங்குகின்றவர்கள் உங்கள் வீடு விற்பனை முகவரிடம் உங்கள் உண்மையான பொருளாதார நிலையை விளக்கிக் கூறி ஆலோசனை பெற முடியும். வீடு விற்பனை முகவர்களும் ஈட்டுகடன் பற்றிய அறிவைப் பெற்றவர்களாகவே இருப்பர் ஆதலால் அவர்களின் ஆலோசனைகளிலிருந்து எத்தகைய வீட்டை வாங்குவது உங்களுக்கு அனுகூலம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

பலருக்கு வீடு வாங்குவதிலுள்ள கடினமான சவால் யாதெனில் வீடு வாங்கத்தேவையான முதலீட்டுத் தொகையை தயார்படுத்துவதேயாகும். சொத்துக்கள் இருந்தாலும் கையிலுள்ள பணத்தைச் சேமிப்பது சவாலானதுவேயாகும். குறிப்பாக முதன் முதலில் வாங்கும் வீடாக இருக்கும் பட்சத்தில் பெருந்தொகையை சேமிப்பது கடினமானதாகவே இருக்கும். CMHCஇன் கடன் காப்புறுதியோடு நீங்கள் அதி குறைந்த தொகையாக வீடு வாங்குவதற்கு வீட்டின் கொள் விலையின் 5% விழுக்காட்டுத் தொகையை மட்டும் முதலீடாகக் கொண்டு வீட்டை வாங்கமுடியும்.

CMHCயின் சலுகைகள் காலத்திற்குக் காலம் சிறுசிறு மாற்றங்களைக் கொண்டிருக்கும். நீங்கள் வீடு வாங்குமுன் CMHCயோடு தொடர்புகொண்டு செயற்படுவது உங்களுக்கு மேலும் உதவியாகவிருக்கும். www.cmhc.ca என்ற இணையதளத்திற்கு சென்று பார்வையிடுவதனூடாக இது குறித்த மேலதிக விபரங்களைப் பெற முடியும்.

வீடு என்பது ஒருவருக்குள் இலட்சியக் கனவாக மட்டும் இருந்தால் போதாது. அடிப்படைத் தேவைகளில் அதுவும் ஒன்று என்பதையும், வீட்டில் முதலிட்ட பணம் எக்காலத்திலும் வீண்போகாது என்பதையும் நாம் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டும். எங்கே வீடு வாங்க நீங்கள் தயாரா? வாங்கித்தரவும் இது குறித்த விளக்கங்கள் தரவும் பல முகவர்கள் தயார்.

வீடு குறித்த உங்கள் வினாக்களுக்கு விடைகள் தேவைப்படின் pirabaharan@thaiveedu.com என்ற மின்னஞ்சலூடாகவோ 416-849-0594 என்ற தொலைநகலூடாகவோ தொடர்பு கொண்டால் எம்மால் முடிந்த தகவல்களை தரமுடியும்.

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■



# NEED MORE HOUSES FOR SALE

Century 21
Affiliate Realty Inc. Brokerage*
416.290-1200
PUNCH SOCKALINGAM
Broker
416.786.2463


Shiamala Ratnasabapathi
Sales Rep.

Neilson & Morning



Nightstar & Finch



Steeles & Passmore



Steeles & Passmore



Morning & Finch



Weston & 401



Neilson & Morning



Pharmacy & Finch



Morning & Lawrence



Markham & Bur Oak



## PUNCH SOCKALINGAM - 416-786-2463

# TAMILS' FOCUS

Tamils' Business Cards Directory

## இதுக்கு மேலேயும் இன்னுமொண்டா?

*கொஞ்சம் பொறுங்கோ*

**இது......**

- தன்னறிமுக அட்டையின் கோர்வை
- சுயகுறிப்பேடு
- கையில் எடுத்துச் செல்லக்கூடியது
- குறித்த நேரத்தில் உங்களை வந்தடைந்து விடும்
- தரமானதும் பாவனைக்குரியதும்
- மற்றவையுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டது



**Tel : 416.548.7235**

Email : tamilsfocus@gmail.com




# “வீடு” வினாவும்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

பழுத்த மரங்களெல்லாம் ஆங்காங்கே சிதறி கிடக்கின்றது. இலைகள் கூரைகளிலும் தண்ணீர் பீலிகளிலும் காணப்படுகின்றது. அவைகளை ஒதுக்கி சுத்தம் செய்து தண்ணீர் இலகுவாக வெளியேற்றுவதற்கு வழி வழங்குதல் அவசியமானது. குளிர்கால முன்னெச்சரிக்கை எனும்போது, தோட்டப்பராமரிப்பு, வீடு வெளிப்புறம் பராமரிப்பு, வீடு உட்புறப் பராமரிப்பு மற்றும் Snow துப்பரவு செய்வது முதல் அடங்குகின்றன.

தோட்டப் பராமரிப்புபற்றி பார்ப்போமேயானால், பூந்தோட்டங்கள் மற்றும் மரக்கறி தோட்டப் பயிர்களை (இறந்தவற்றை) வேருடன் பிடுங்கி விடுவது மட்டுமன்றி சந்தர்ப்பம் கிடைப்பின் இயற்கையுரம் கருதி நிலத்தில் புதைத்தும் விடலாம். Rose போன்ற பூஞ்செடிகளை அளவாக கத்தரித்து, அவைகளுக்கென பிரத்தியேகமாக கிடைக்கும் உறைகளைப் பாவித்து பாதுகாக்கலாம். குளிர்காலங்களில் வளரக் கூடிய Tulip மற்றும் மண்ணுக்குள் பாதுகாக்கப்பட்டு வளரும் கிழங்குகள் போன்ற பூச் செடிகளை பயிரிடலாம். தோட்டங்களில் உள்ள பயிர்செய்கையும் குளிர்கால ஆரம்பத்திற்கு உகந்தது. புற்தரைகளை நிலமட்டத்துடன் வெட்டுவது நல்லதல்ல சற்று வளர்ந்தபின் வெட்டிவிடுவது வேரினை பாதிக்காது.

கார் தரிப்பிடங்களை சுத்தம் செய்வதுடன், Propane வாயு சிலின்டர்களை நிரப்பி வைத்தலும் நன்று.

வீடு உட்புறப் பராமரிப்பினை பொறுத்தவரை, Furnace Filter மாற்றுவது மற்றும் Fuenace Tune up செய்து கொள்வதும் அவசியமானது. யன்னல் ஓரங்கள் மற்றும் கதவு இடுக்குகளினால் வாயுக்கசிவுகள் காணப்படின் ‘Cholking’ முறை மூலம் அவைகளை சீர் செய்யலாம்.

Snow காலங்களில் தூவும் உப்பு மற்றும் Snow துப்பரவு செய்யும் உபகரணங்களையும் சீர்படுத்துதல் வேண்டும். A/C குளிரூட்டிகளை பாவனைப்படுத்தியவர்கள் அவற்றின் மின்வழங்களை துண்டித்து விடுவதன் மூலம் தற்செயலாக A/Cஇனை குளிர்காலத்தில் இயக்குவது தடைப்படும்.

குழந்தைகளுடன் இருப்பவர்கள் உலர் உணவு களை சேமித்து வைப்பதும் நன்று.

மேற்கூறிய தகவல்கள் ஓர் பொதுப்படையானதே. ஒவ்வொருவரின் தேவைகள் மற்றும் அமைவிடம் பொறுத்து இவை வேறுபடலாம்.

**எனது வீட்டினை விற்பதற்கு முன்னர் அதனை அழகுபடுத்துவதற்காக சமையலறை மற்றும் குளியலறை மாற்றுதல், மற்றும் வர்ணங்களை மாற்றுவது போன்றவற்றை குறித்து ஆலோசித்து வருகின்றேன். இவைகளுக்காக செலவிடும் தொகை மீளப்பெறப்படுமா?**

ரமேஸ்.ப Brampton

உங்கள் வீடு எவ்வாறு உள்ளது என்பதனை பார்வையிடாமல் பதில் கூறுவது கடினம். அளவுக்கு அதிகமாக செலவிடப்படும் தொகையினை மீளப்பெறுதல் என்பது சற்று கடினம் மாத்திரமன்றி நீங்கள் தெரிந்தெடுக்கின்ற பணியாளர்களைப் பொறுத்தும் இத்தொகை மாறுபடும். ஒரு வீட்டினை விற்பதற்குமுன்னர் நீங்கள் மாற்றுகின்ற அல்லது புனரமைப்பு செய்கின்ற பகுதிகள் புதிதாக நிர்மாணிக்கப் படுபவையாக இருப்பின் அதற்குரிய செலவினை எதிர்பார்க்கலாம். மாறாக, மாற்றியமைக்கின்ற பகுதிகள் சீர்செய்யப்படக்கூடியவையாக இருப்பின் அவ்வாறு செய்தல் நன்று. வர்ணங்கள் பூசுவதைப் பொறுத்தவரை, அலங்காரம் என்பது எப்போதுமே கொள்வனவாளர்களை தூண்டும் செயல். உரியதை உரியமுறையில் திறம்பட வெளிக்காட்டுவதன் மூலம் நுகர்வோரின் ஈர்ப்பினை கவரலாம். இதன்மூலம் கேள்வி அதிகரிக்கும் கேள்வி கூடின் விலையும் அதிகரிக்கலாம்.

சரிநேயர்களே நாம் ஆரம்பத்தில் பார்த்தது போல் கைத்தொலைபேசிகளின் கட்டுப்பாடு இன்று நிறையவே காணப்படுகின்றது. இதற்காக இன்றுபல நிறுவனங்கள் தமது தயாரிப்புக்களை முண்டியடித்துக்கொண்டு சந்தைப் படுத்துகின்றது. உதாரணமாக 100 டொலர் களுக்கு குறைந்ததாக விற்பனையிடப்படும். ‘Bluetooth with fm transmitter’இனை கூறலாம். தொலைபேசி அழைப்புக்களினை வாகனத்திலுள்ள வானொலிப்பெட்டியினூடாக பரிமாறிக்கொள்வதற்கு இவை பெரிதும் உதவுகின்றது. இதுபோன்று பலவிதமான எங்கள் தேவைகளுக்கும் விலைகளுக்கும் அமைவாக இன்றும் பலவிதமான தயாரிப்புக்களை இணையத்தளத்தினூடாக அறிந்து பெற்றுக்கொள்ளலாம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

**Tutoring**

**Grade 1-7: English, Math, Science & Social science**

**Grade 8- 11: English & Math**

**அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா**

**B.A (Hons), M.Sc, Ph.D**

**(Kennedy & Ellesmere அருகாமையில்)**

**(647) 291 1357**

கடந்தவாரம் குளிர் அதிகமாகிக் கொண்டிருந்த ஒரு பின்னிரவில் 'உன்னைப்போல் ஒருவன்' திரைப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். வேலை நாள் ஒன்றின் பின்னிரவுக்காட்சி என்ற போதும் ஓரளவு ரசிகர்கள் அரங்கிலிருந்தனர். அதிக தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய, தொந்தரவு அதிகமற்ற 'கொலிசியம்' அரங்கில் இடைவேளையில்லாத காட்சி. அருகிலிருந்த நண்பனுடன் உரையாடச் சந்தர்ப்பம் தராது திரைப்படம் விறு விறுப்பைத் தந்துகொண்டிருந்தது.

தமிழ் வணிக சினிமாக்கள் இப்போதெல்லம் எனக்கு அதிக ஆர்வத்தைத் தருவதில்லை. அவை பெரும்பாலும் சில வாய்ப்பாடுகளுக்குள் அடங்கிவிடுகின்றன. அதைத்தாண்டிய ஒருசில முயற்சிகள்கூட இந்தக் கட்டுகளிலிருந்து முழுமையாக விடுபடமுடியாது முடங்கிப்போய்விடுகின்றன. தொட்டுக்க ஊறுகாய் வகையறாக் கதாநாயகிகள் (ஏன் கதையும் கூட), கடவுளுக்கு இணையான கதாநாயகன், சுவிட்சர்லாந்திலும், நியூசிலாந்திலும் (அல்லது வேறேதாவதொரு 'லாந்தில்') நான்கு பாடல் காட்சிகள், நான்கு சண்டை, பின்னர் தனியான 'டிவிடி'யாகப் பார்த்து மகிழ வசதியாக கதைக்குத் தொடர்பின்றி வந்துபோகும் வடிவேலு... என அமைந்துவிடுகின்றன.

இந்த அபிப்பிராயத்துடனிருந்த எனக்கு வலைப் பூக்களில் உலாவிய என்னைப்போல் ஒருவன் விமர்சனங்கள் ஆச்சரியமூட்டின. வெனிஸ்டே என்ற இந்திப்படத்தின் மீள் உருவாக்கமே 'உன்னைப்போல் ஒருவன்' என்ற போதிலும், தமிழில் பெரும்பாலான மீள்உருவாக்கங்கள் சிதைக்கப்பட்ட வரலாறே இருந்தது. மலையாளத்திலிருந்து தமிழில் மீள் உருவாக்கம் செய்யப்பட்ட பல படங்கள் தமிழுக்கு வரும் போது தம் உன்னதங்களை இழந்துவிட்டிருந்தன. ஆனால் இங்குமட்டும் அவ்வாறு நிகழவில்லை.

காவல்துறை மேலதிகாரிக்கு நகரின் பல பகுதிகளில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக வரும் ஒரு அனாமதேயத் தொலைபேசி மிரட்டலுடன் படம் ஆரம்பமாகிறது. அதை உறுதி செய்ய இன்னொரு காவல் நிலையத்திலே குண்டு வைக்கப்பட்டிருப்பதை அனாமதேயன் உறுதி செய்கிறான். குண்டுவெடிப்பில் பலரைக் கொன்ற தீவிரவாதிகளை விடுதலை செய்யச்சொல்கிறான். அவர்கள் விடுதலை செய்யப்படும்போது குண்டு வெடித்து தீவிரவாதிகளே பலியாகிறார்கள். இவ்வாறாகப் போகிறது கதை. இதில் சாதாரண குடிமகனாக, அனாமதேயனாக கமலும், காவல்துறை மேலதிகாரியாக மோகன்லாலும் நடிக்கிறார்கள். இருக்கையின் நுனியில் உங்களை இருத்தியபடி படம் பயணிக்கிறது.




தமிழில் சூப்பர்ஸ்டார் ரஜினியாகவே இருந்தாலும் அவருக்கு ஐஸ்வர்யாராய் ரேஞ்சுக்கு கதாநாயகி தேவைப்படுகிறார். ஏ.ஆர். ரகுமான் இசையமைப்பாளர், ஷங்கர் இயக்குனர், பிரபு தேவா நடனம், ஏவிஎம் தயாரிப்பு என்ற வகையில் இருந்தாலே படம் ஓடும் என்றிருக்கிறது. இந்தப்படத்தில் இந்தவகை எண்ணங்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன.

கமலுக்கு ஜோடி யாரென்று தெரியவில்லை. அவர் திரையில் வரவுமில்லை. தொலைபேசியில் மாத்திரம் அவர் குரல் வந்துபோகிறது. மோகன்லாலுக்கு இணை கிடையாது. ஒரேயொரு பாடல் மாத்திரம்; அதுவும் பின்னணியிலேயே ஒலிக்கிறது. படத்தில் முக்கிய பெண்பாத்திரத்தில் வருபவர் லஷ்மி. அவர் கமலைப் படத்தில் சந்திக்கவோ பேசவோ இல்லை. படத்தில் மொத்தமே மூன்று பெண்கள்தான் வந்து போகிறார்கள். மோகன்லாலும் கமலும் ஒரேயொரு காட்சியில் மாத்திரமே சந்திக்கிறார்கள். அதுவும் இறுதியில்.

ஒரு நாளில் கதை நடந்து முடிந்து விடுவதால், படத்தில் தோன்றும் பெரும்பாலானோர் ஆடை மாற்றவேண்டிய தேவையே வரவில்லை. யாரும் யாரையும் காதலிக்கவில்லை. ஆதலால் ஏதாவதொரு 'லாந்தில்' கொட்டும் பனியில் உள்ளாடைகளுடன் ஆடிப்பாடவில்லை. "நான் ஒரு தடவ சொன்னா..."

## - கருணா -

வகை பஞ்ச் டயாலாக்குகள் இல்லை. சென்டிமென்ட் பேத்தல்கள் இல்லை. இத்தனை வன்முறையான கதையில் ஜீப் வெடிப்பதைத் தவிர பெரிய குண்டு வெடிப்புகளோ, வன்முறைக்காட்சிகளோ இல்லை. எனக்கு ஆங்கிலத் திரைப்படம் ஒன்றை தமிழில் பார்ப்பதான எண்ணமே அடிக்கடி வந்தது.

நல்லதொரு வணிகத் திரைப்படம் என்றவுடன் 'காஞ்சிவரம்' போன்ற திரைப்படங்களை வணிக ரீதியில் எடுத்து வெற்றிபெற முடியாதென்றே தமிழின் பெரிய இயக்குனர்கள் சப்பைக்கட்டு கட்டுகிறார்கள். உண்மை என்ன வெனில் 'காஞ்சிவரம்' போன்ற திரைப்படங்களை வணிகப்படங்களாக யாரும் பார்க்க வில்லை. வணிகப்படங்களை அவற்றின் விறு விறுப்புக் குறையாமல் தர தமிழில் இயக்குனர்களுக்கு பஞ்சம் நிலவுகிறதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

விஜய், அஜித் போன்றவர்கள் தமது ரசிகர் மன்ற பலத்தைக் காட்டி இயக்குனர்களையும், தயாரிப்பாளர்களையும் வழமையான பார்முலாக் கதைகளை எடுக்கவைக்கிறார்கள். இவை வணிக ரீதியில் வெற்றிபெறுவதுமில்லை. நல்ல படங்களாக அங்கீகரிக்கப்படுவதுமில்லை. அபிராமி ராமநாதன்களின் அறிவிப்புகளுடன் இவற்றின் வெற்றி முடிந்து போய் விடுகின்றது.

'உன்னைப்போல் ஒருவன்' ஒரு மகோன்னதமான படமோ, காவியமோ கிடையாது. ஆனால் ஒரு ஆரோக்கியமான ஆரம்பத்தின் முக்கிய புள்ளி எனக் கருதலாம். இனி இந்த வகைப் படங்களையே அதிகம் எடுக்கலாமா என கமல் சிந்திப்பதாக ஒரு இணையம் செய்தி வெளியிட்டிருந்தது. அது ஒரு ஆரோக்கியமான அறிகுறியாகவே படுகிறது. இவ்வாறன படங்கள் தமிழ் வணிக சினிமாவை நேர்த்தியான பாதையில் இட்டுச்செல்வதுடன் தயாரிப்பாளர்களுக்கும், ரசிகர்களுக்கும் நிறைவையும், திருப்தியையும் தரும் என நம்பு வோம்.

karuna@thaiveedu.com

■ ■ ■


# Law Office
## T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

**தி. ஜெகதீசன்**
(Barrister, Solicitor and Notary Public (on)

Off: **416 • 266 • 6154**
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677

2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3



**COMPUTERIZED ACCOUNTING**



EARN YOUR DIPLOMA IN 6 MONTHS
AND START A NEW CAREER
PROGRAM START DATE : SEPT.28,2009

SUBJECTS:
MS OFFICE
ACCOUNTING PRINCIPLES
FINANCIAL ACCOUNTING
QUICK BOOKS
SIMPLY ACCOUNTING
ACCPAC

100% INSTRUCTOR LED
HANDS ON TRAINING
HIGH EMPLOYMENT RATE

EI Recipients Welcome
ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
416-291-5155
TORONTO BUSINESS COLLEGE
4465 SHEPPARD AVE EAST #208
( SHEPPARD & BRIMLEY )
SCARBOROUGH
E-Mail t.businesscollege@gmail.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# அரைக்கீரை, கரிச...

36ம் பக்கத் தொடர்ச்சி...

கரிசலாங்கண்ணியை ஒரு கற்பக மூலிகை என்றும் தெய்வீக மூலிகை என்றும் வசிய மூலிகை என்றும் மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இருமல், நீரிழிவு நோய், ஆறாத புண், இடுப்பு வலி ஆகிய நோய்களை கரிசலாங்கண்ணி மாற்றும். ஊழைச் சதையைக் கரைத்து உடலை இறுக்கிப் பலம் பெறச் செய்யும். காமாலை நோய், கபம், பல்வலி, வாய்வு, வயிற்று உப்பிசம், மலச்சிக்கல், செமியாமை, துர்நாற்றம் ஆகியவற்றிற்குக் கரிசலாங்கண்ணி நல்ல மருந்தாகும். குடல் புண்ணை ஆற்றும். நல்ல பசியை ஏற்படுத்தும். தோல் நோய்கள், மஞ்சள் காமாலை, கல்லீரல் தொடர்பான நோய்களையும் குணமாக்கும்.

கரிசலாங்கண்ணியில் தங்கச் சத்து, இரும்புச் சத்து மற்றும் வைட்டமின் ''ஏ'' அதிகமாக இருக்கிறது. கரிசலாங்கண்ணிக் கீரையை மருத்துவச் செடி என்றோ மூலிகைச் செடி என்றோ தூர விலகிப் போகாமல் நாளாந்தம் இந்தக் கீரையை எளிய முறையில் பயன்படுத்தி வந்தால் பல நன்மைகளைப் பெறலாம். வாரத்துக்கு இரண்டு நாட்கள் இந்தக் கீரையைச் சமைத்துச் சாப்பிட்டாலும் அல்லது நூறு மில்லியளவு இந்தக் கீரையின் சாற்றை அருந்தி வந்தாலும் உடலுக்கு எந்தவிதமான நோயும் வராதபடிக்கு நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாகும். கரிசலாங்கண்ணிக் கீரையில் பொரியல், கூட்டு, கடைதல், சட்னி என்று எந்த விதத்திலும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இந்தக் கீரையை மிளகு, சீரகம், துவரம் பருப்பு, நெய் ஆகியவற்றைச் சேர்த்துச் சமைத்தும் சாப்பிடலாம்.

கரிசல் என்றால் தங்கம் என்றும் ஒரு பொருள் உண்டாம். கரிசலாங்கண்ணி உடலுக்குப் பொன் நிறத்தையும் வலிமையையும் தர வல்லது. இலைகளை அரைத்து அந்த விழுதை உடலில் தேய்த்துக் குளிக்க நாளடைவில் தோல் பொன்னிறமாக மாறும் என்று மருத்துவம் கூறுகின்றது. கரிசலாங்கண்ணிச் சாற்றுடன் சம அளவு நல்லெண்ணெய் அல்லது சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சி, நீர்த் தன்மை அற்றதும் இறக்கி வைத்து நாளாந்தம் தலைக்குத் பூசிவரத் தலைமுடி நீண்டு செழித்து வளரும். நரை நீங்கித் தலைமுடி கருமை அடையும். நரை மட்டுமல்ல, திரையும் மாறும். நீண்ட ஆயுள் கிடைக்கும். பொதுவாக, நரை, திரை, மூப்புக்குக் கரிசலாங்கண்ணிக் கீரை காலன் என்று நாட்டு வைத்தியர்கள் கூறுகின்றனர்.

வெள்ளை மற்றும் மஞ்சள் கரிசலாங்கண்ணிக் கீரை சமையலுக்குப் பயன்படுகின்றது. இதன் இலைகளையும் கொழுந்தையும் பருப்பு, நெய் சேர்த்துப் பொரியல், குழம்பு, கடையல் போன்ற உணவு வகைகள் செய்வது வழக்கம். இந்தக் கீரை உடலுக்கு வலிமையைத் தரும். மண்ணீரல் வீக்கம் போன்ற நோய்களுக்கு மிகவும் சிறந்த மருந்தாகும். தோல் வியாதிகளைக் குணமாக்கும். உடலில் ஏற்படும் வீக்கங்களுக்கு ஒத்தடம் கொடுத்தால் சுகம் வரும். இதன் தண்டினால் பல் துலக்கினால் பல்லில்ஏற்படும் ஈறு வீக்கம், பல்வலி, எனாமல் தேய்தல் ஆகிய குறைகள் நீங்கும். இந்தக் கீரையைத் உடலிலும் தலையிலும் தேய்த்துக் குளித்தால் உடல் பொன்னிறமாகும். தலைமுடி நன்றாகக் கறுத்து நீண்டு வளரும். உடலில் சப்த தாதுக்களை பலப்படுத்தி, உயிர் அணுக்களைப் பெருக்கித் தங்க நிறம் போன்ற சருமத்தை உண்டாக்கும் சக்தி வாய்ந்தது. இதன் இலைச் சாறு ஆஸ்மாவுக்கும் வாதத்துக்கும் நல்ல மருந்து. கரிசலாங்கண்ணித் தைலம் தலை முடியைக் கருமையாக்குவதோடு கண்களுக்குக் குளிர்ச்சியையும் தரும். கரிசலாங்கண்ணிக்கீரை உடலின் கெட்ட நீரை வெளியேற்றும். மலச்சிக்கல் நீங்கும். உடல் வளம் பெற்று நலம் பெறும். இந்தக் கீரையை இரண்டு முதல் நான்கு வாரம்வரை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தொந்தி கரையும். உடலின் கனமும் பருமனும் குறையும்.

கரிசலாங்கண்ணியில் இருக்கும் இரசாயனப் பொருட்கள் என்றும் அழியாத ஒரு வகையான மையைத் தருகின்றது. இது கருஞ்சாயம் செய்வதற்குப் பயன்படுகின்றது. இந்தக் கீரையின் சாற்றைப் பயன்படுத்தி உடலின் தோல் மீது பச்சை குத்துவதால், அந்தக் கருமை கலந்த பச்சை நிறம் என்றும் அழியாமல் இருக்கின்றது. இந்தக் கீரைச் சாற்றினால் செய்யப்படும் கண் மை மிகவும் சிறந்த கண் மையாகும். இந்தக் கண் மையை கண் இமைகளுக்குத் தீட்டி வந்தால் கண்கள் ஒளிபெற்று கவர்ச்சியுடையனவாக ஒளிரும்.

மஞ்சள் நிறப் பூக்களைப் பூக்கும் மஞ்சள் கரிசலாங்கண்ணியை கறியாகச் சமைத்துச் சாப்பிட்டு வந்தால் நற்சிந்தனைகள் ஏற்படும். அறிவு தெளிவு பெறும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். மஞ்சள் கரிசலாங்கண்ணியில் உடல் வளத்தைப் பெருக்கி, பொன்னிறத்தை உடலுக்குக் கொடுத்துப் பொலிவாக்கி, மன்மதனாக்க வல்ல மகோன்னதச் சக்தி அடங்கியிருக்கின்றது. இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் ஆற்றலுள்ள இந்தச் செடி மொத்தத்தில் ஒரு காயகல்பம். அதனால்தான் வடலூரார் இந்தச் செடியைக் 'காயசித்தி' என்று போற்றினார்.

## சிறு கீரை

சிறுகீரை என்பது முளைக்கீரை, தண்டுக்கீரை ஆகிய கீரைகளின் இனத்தைச் சேர்ந்தது. கிட்டத்தட்ட இருபது செ.மீ. உயரத்துக்குச் அதிக கிளைகளுடன் செங்குத்தாக வளரும் ஒரு சிறிய செடி. சிறுகீரை மிகவும் சுவையானது. சத்துக்கள் மிகுந்தது. மருத்துவப் பயன் நிறைந்தது. இதில் சுண்ணாம்புச் சத்தும் இரும்புச் சத்தும் உள்ளது. தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் தோட்டங்கள், வீட்டுத் தோட்டங்கள், காட்டுத் தோட்டங்கள் ஆகிய இடங்களில் வளரும். மலைப் பாங்கான இடங்களில் அதிகம் காணப்படும்.

இந்தச் செடி முழுதாக வளர்ந்து முற்றுவதற்கு முன்னர், பாதி வளர்ச்சியிலேயே பறித்து, முளைக்கீரையைப் போலவே இலைகளையும் தண்டையும் சமைத்து உணவுடன் சேர்த்துச் சாப்பிடலாம். சிறுகீரையுடன் சீரகம், கடுகு, வேர்க்கொம்பு, வெங்காயம், இஞ்சி, தக்காளி, உப்பு ஆகியவற்றைச் சேர்த்துச் சூப் வைத்துச் சாப்பிடலாம். மது, போதை மருந்துகள் அருந்தும் பழக்கம் உள்ளவர்கள் இந்தச் சூப்பைத் தொடர்ந்து 90 நாட்களுக்கு அருந்தி வர நல்ல பலன் கிடைக்கும். சிறுகீரையைக் கடைந்து சோற்றுடனும் சாப்பிடலாம். சிறு கீரையுடன் துவரம் பருப்பும் வெங்காயமும் சேர்த்துக் கடைந்து 48 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் உறுதியாகிப் பலம் பெறும்.

சிறுகீரையில் 90 விழுக்காடு நீர்ச்சத்தும், புரதம், தாது உப்பு, மாச்சத்து ஆகியனவும் இருக்கின்றன. சுண்ணாம்புச் சத்தும் இரும்புச் சத்தும் அதிக அளவில் உள்ளன. அத்துடன் வைட்டமின் ''ஏ'', வைட்டமின் ''பீ'' மற்றும் வைட்டமின் ''சீ'' சம அளவில் இருக்கின்றன.

காச நோய், கண் நோய்கள், நீர்க்கடுப்பு, வீக்கம், பித்த நோய்கள், உடலில் சேரும் நச்சுத் தன்மை, வாத நோய்கள் மற்றும் மலச்சிக்கல் சிறுகீரையால் தீரும். மூளை, இருதயம், குடல் ஆகியவற்றிற்கு வலிமையையும் தரும். சிறுகீரை கல்லீரலைப் பாதுகாக்கும். சிறுநீரகம் சம்பந்தமான குறைபாடுகளை நீக்கும். இந்தக் கீரையை நாளாந்தம் சாப்பிட்டு வந்தால் புது இரத்தமும் இரும்புச் சத்தும் உடலில் சேர்ந்து பரவி உடலைப் பலப்படுத்தும். அத்துடன் உடலைப் பளபளப்பாக்கி உடலுக்கு வலுவையும் வனப்பையும் முகத்துக்குப் பொலிவையும் தரும் ஆற்றலுள்ளது சிறுகீரை. பொதுவாக இந்தக் கீரை வாத நோய் மற்றும் பித்த நோய்களைக் கட்டுப்படுத்தும் சக்தியுடையது.

ஒரு முக்கிய குறிப்பு: வேறு ஏதாவது நோய்களுக்கு ஆயுள்வேதம் போன்ற மருந்துகளை உண்பவர்கள் சிறுகீரையைக் கண்டிப்பாகச் சாப்பிடக் கூடாது என்றும் சொல்லப்படுகின்றது.

தொடரும் ...!

uthayanan@thaiveedu.com

■ ■ ■





# சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

''சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி''

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 144 துரித காப்புறுதி இழப்பீடுகள். 20 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors).
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

## - சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912

Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**

வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!


TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Warden & St Clair
$399,100
3+1 Bedrooms,3 Washroom
Keele & Major Mac
$384,900
3 Bedrooms, 3 Washroom
McCowan & Finch
$429,900
3+1 Bedrooms, 2 Washroom
Morningside & Sheppard
SOLD
WITH IN ONE DAY
$436,900
4 Bedrooms, 4 Washroom
Kennedy & Ellesmere
SOLD
$254,900
3 Bedrooms, 2 Washroom
Kennedy & 401
$219,900
3+1 Bedrooms, 2 Washroom
Mccowan / Finch (Sandhurst Circ)
SOLD
$289,000
3 Bedrooms, 2 Washroom
Neilson & Finch
$459,900
4+1 Bedrooms, 6 Washroom
Markham & Sheppard
$199,000
3 Bedrooms, 2 Washroom
9th & 14th
$519,900
4 Bedrooms, 3 Washroom
9th & 14th
$449,000
3 Bedrooms, 3 Washroom
Cenntanial & Lawrence
$403,200
4+2 Bedrooms, 4 Washroom
Ellesmere/Old Kingst
Great Opportunity
For Builders Or Investors
$290,000
Markham & Bur Oak
$564,000
5 Bedrooms, 4 Washroom
Morningside & 401
$354,900
3+3 Bedrooms, 4 Washroom
Davensport & St. Clair
$387,000
3+1 Bedrooms, 2 Washroom
Markham & Denison
SOLD
WITH IN ONE DAY
$279,900
2+1 Bedrooms, 2 Washroom
Sandalwood & Edenbrook
$325,000
3 Bedrooms, 3 Washroom
Markham & 16th
$449,000
4 Bedrooms, 3 Washroom
Morningside & Lawrence
$399,900
4 Bedrooms, 3 Washrooms
Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract
முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள்,
வீடு வாங்க விற்க அழையுங்கள்
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8
Bus.: 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated, REALTOR
தமிழ் சுப்பிரமணியம் (செல்வன்)
முகுந்தன் நடராஜா
Thamil Suberamaniam (Selvan)
Sales Representative
Direct : 416.358.6200
Email : thamilrealtor@gmail.com
Mugunthan Nadarajah
Sales Representative
Direct : 416.276.8025
Email : homelifemugunthan@gmail.com

# கனடாவில் தனிநபரின் வங்குரோத்து நிலை

## (Personal Bankruptcy in Canada)

**வங்குரோத்து நிலை, நுகர்வோர் முன்வைக்கும் ஆலோசனைகள் என்பவை தொடர்பான கேள்வி - பதில்.**

**தொடர் 2**



சங்கர்.T

> **இரண்டு வருடங்களின் முன்பு ஐந்து சதவீத முற்பணம் *(Five Percent Down Payment)* செலுத்தி ஓர் வீட்டை வாங்கியுள்ளேன். எனது வீடு பறிபோகாமல் எனக்குரிய கடனைத் தீர்ப்பதற்கு வழி ஏதாவது உண்டா?**

**நான் வங்கிகளில் இருந்து பெற்ற கடன்களை மீளச் செலுத்தமுடியாத நிலையில் இருக்கிறேன். உங்களை சந்தித்து ஆலோசனை பெறுவதன் மூலம் நான் என்ன நன்மையை அடைய முடியும்?**

நாங்கள் உங்களுக்காக மட்டும் வேலை செய்பவர்கள் என்பதைக் குறிப்பிட விரும்பு-கிறோம். உங்களது தற்போதைய நிதி நிலை, நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றை கவனமாக ஆராய்ந்து கனேடிய சட்ட விதிகளுக்கு உட்பட்டதாக ஒரு சரியான தீர்வை ஏற்படுத்துகிறோம். அவ்வாறான ஒரு தீர்வை, உங்களுக்கு கடன் கொடுத்தவர்களுக்கு Trustee யினூடாக எடுத்து சென்று உங்களுக்கு சரியான முடிவுகளை ஏற்படுத்தி உங்களது கடன் பிரச்சினைகளில் இருந்து முற்றாக வெளியேறுவதற்கு நாம் உதவுகிறோம்.

**நான் எனது பெற்றோர்களை, பொறுப்பேற்று (Sponsor) விண்ணப்பித்து, தற்போது அவர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர். அவர்கள் இங்கு வருவதற்கு முன்பு எனது கடன் சுமை அதிகரித்ததன் காரணமாக நுகர்வோர் முன்வைக்கும் ஆலோசனைகள் (Consumer Proposal) என்ற திட்டத்தின் மூலம் மாதா மாதம் குறிப்பிட்ட ஒரு தொகையை செலுத்தி வந்தேன்.**

**ஆனால், தற்போது எனது குடும்பத்தில் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள காரணத்தினால் நான் ஏற்கனவே ஒத்துக் கொண்ட Consumer Proposal தொகையை கட்ட முடியாத நிலையில் உள்ளேன். இவ்வாறான சூழ்நிலையில் நான் என்ன செய்யலாம் என்று விளக்க முடியுமா?**

உங்களது பெற்றோர்கள் இங்கு வந்து விட்டதன் காரணமாக உங்களது பிரச்சினை மேலும் அதிகரித்துள்ளதாயின், வங்குரோத்து நிலைக்கு (Bankruptcy) விண்ணப்பிப்பதன் மூலம் உங்களது கடன் பிரச்சினைகளில் இருந்து நீங்கள் முற்றாக நீக்கி விடலாம். உங்கள் பெற்றோர் இங்கு வந்து விட்டதன் காரணமாகவே நான் இவ்வாறான ஆலோசனையை வழங்குகிறேன். (அவர்கள் இதுவரை இங்கு வந்திருக்காவிடில் நீங்கள் Bankruptcyக்கு விண்ணப்பிதால் அது உங்களது Sponsor விண்ணப்பத்திற்கு பிரச்சினையாக அமைந்து விடும்)

**நான் பத்து வருடங்களுக்கு முன்பு கனடாவில் உள்ள சில வங்கிகளில் கடன் பெற்று பின்பு அவற்றை மீளச் செலுத்தவில்லை. ஏழு வருடங்களின் பின்பு Credit Bureauவில் இருந்து இது தொடர்பான தகவல்கள் யாவும் வெளியேறி விட்டன.**

**இப்போ நான் ஓர் வீட்டை வாங்கி நல்ல நிலையில் உள்ளேன். ஆனால், தற்போது எனது பழைய கடன்களை வட்டியுடனும், வழக்கறிஞருக்கான கட்டணச் செலவுடனும் சேர்த்து மீளச் செலுத்தும்படி என்னைக் கேட்டுள்ளார்கள் அவர்கள் இவ்வாறு செய்ய முடியுமா?**

Equifax என்ற Credit Bureau நிறுவனம், உங்களது கடன் பெறும் அறிக்கையை (Credit Report) எடுத்துக் காட்டுகிறது. அனைத்து வங்கிகளும், ஏனைய நிதி நிறுவனங்களும் இதில் அங்கத்தவர்களாக உள்ளனர். எனவே இந்த நிறுவனம் குறிப்பிட்ட ஒரு வாடிக்கையாளர் தனது கடனை மீளச் செலுத்தும் விபரம், அவர் தொழில் புரியும் இடம், அவர்களது குறிப்பிட்ட சில உடமைகள் (உதாரணம்: வாகனம்) ஆகிய விபரங்களை எடுத்துக் காட்டும் நிறுவனமாக செயற்படுகிறது.

நீங்கள் ஒரு வங்கியிடம் பணம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது, அவர்கள் முதலில் உங்களது Credit Reportஐ பெற்று, உங்களது கடன் பெறக்கூடிய தகமையைப் பற்றி அறிந்து கொள்ளுகின்றனர். நீங்கள் ஒரு நிதி நிறுவனத்தில் கடன் பெற்று அதை மீளச் செலுத்தாவிடில் உங்களது கடன்பெறும் அறிக்கை Equifax நிறுவனத்தில் 7 வருடங்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். இந்த காலப் பகுதியின் முடிவில் உங்களைப் பற்றிய பதிவுகள் (Entries) யாவும் தன்னிச்சையாக வெளியேறி விடுகின்றன.

எனினும் எத்தனை வருடங்கள் சென்றாலும் நீங்கள் பெற்ற கடனை நீங்களே திரும்ப செலுத்த வேண்டும். உங்களுக்கு கடன் கொடுத்தவர்கள் உங்களிடமிருந்து கடனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லையோ அல்லது நிர்ப்பந்தமோ இல்லை. எனவே உங்களுக்கு கடன் வழங்கியவர்கள், நீங்கள் அவர்களுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை பற்றிய விபரத்தை மீளப் பதிய முடியும். நீங்கள் வாங்கிய கடனில் இருந்து முற்றாக விடுபடுவதற்கு Bankruptcy அல்லது Consumer Proposal அல்லது Settlement Offer செய்வதன் மூலம் இந்த பிரச்சினையில் இருந்து நீங்கள் முற்றாக நீங்கி விடலாம்.

**நான் Bankruptcy செய்து ஒரு வருடம் முடிந்து எனக்கு Discharge Certificateம் கிடைத்து விட்டது. மேற்கொண்டு எனது Credit தகமையை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு நான் என்ன செய்யலாம்?**

இதற்காக இரு செயற்பாடுகள் உள்ளன.

- உங்களது Discharge Certificateன் பிரதியை Equifaxக்கும் Trans Unionக்கும் அனுப்பிவையுங்கள்.
- நீங்கள் இரண்டு உத்தரவாதமுடைய கடன் அட்டையை (Secured Credit Card) பெற்று அதனை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் உங்களது Creditஐ மீண்டும் பழைய நிலைக்கு கட்டி எழுப்பலாம்.

**நான் Consumer Proposal செய்து ஏழு மாதங்களாகி விட்டது. தற்போது நிதி நிலவரங்கள் சாதகமாக உள்ளன. ஏற்கனவே நான் ஒத்துக் கொண்ட தொகையை விரைவாக செலுத்துவதனால் ஏதாவது நன்மை உண்டா?**

கண்டிப்பாக நன்மை உண்டு. நீங்கள் ஒத்துக் கொண்ட தொகையை உடனடியாக முழுமையாக செலுத்துவதன் மூலம் நீங்கள் அந்த தொகையை செலுத்திய நாளில் இருந்து அண்ணளவாக மூன்று வருடத்தினுள் உங்களது Credit Bureauவில் இருந்து உங்களைப் பற்றிய அனைத்து தகவல் பதிவுகளும் வெளியேறிவிடும்.

அதேவேளை நீங்கள் உடனடியாக இரண்டு Secured Credit Cards களைப் பெற்று அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்துவதன் மூலம் உங்களது Credit Ratingஐ சீர்படுத்த முடியும்.

**நான் பல்வேறு வங்கிகளில் இருந்து பல வருடங்களின் முன்பு கடன் பெற்று அவற்றை சரியான முறையில் செலுத்தி வருகிறேன். ஆனால் தற்போது தொடர்ந்து கடன் தொகையை ஒழுங்காக செலுத்த முடியாமல் உள்ளேன்.**

**இதே சமயம் இரண்டு வருடங்களின் முன்பு நான் ஐந்து சதவீத முற்பணம் (Five Percent Down Payment) செலுத்தி ஓர் வீட்டை வாங்கியுள்ளேன். எனது வீடு பறிபோகாமல் எனக்குரிய கடனைத் தீர்ப்பதற்கு ஏதாவது வழி உண்டா?**

நீங்கள் இரண்டு வருடங்களுக்கு 5 சதவீத முற்பணம் செலுத்தி வீடு வாங்கியிருந்தால், உங்கள் வீட்டில் Equity இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே உங்களுடைய ஏனைய காரணிகளைக் கருத்தில் கொண்டு Bankruptcy அல்லது Consumer Proposal செய்யக்கூடியதாக இருக்கும். எனவே உங்களது வீடு பறிபோவதற்கு வாய்ப்பு இல்லை.

**நான் மாணவர்களுக்கான கடன் (Student Loan) பெற்று கல்வி கற்று வந்தேன். எனது கல்வி முடிவடைந்து ஆறு வருடங்களாகி விட்டன. தற்போது குடும்பத்தின் நிதி நிலமை நன்றாக இல்லை. எனவே கல்விக்கான எனது கடனை ஒழுங்காக கட்டுவது கஷ்டமாக உள்ளது. எனக்குரிய இந்த கடன் பொறுப்பை முற்றாக நீக்குவதற்கு ஏதாவது வழி உண்டா?**

கனடிய அரசின் புதிய சட்ட விதிகளின்படி கல்விக்கடன் பெற்ற ஒருவர் தனது கல்வி முடிவுற்ற இறுதி நாளில் இருந்து ஏழு வருடங்களின் பின்பு Bankruptcy விண்ணப்பம் செய்வதன் மூலம் இக்கடனில் இருந்து முழுமையாக விடுபட முடியும்.

உங்களுக்கு ஏற்கனவே 6 வருடங்கள் முடிந்து விட்டன. 7வது வருடம் முடிவுற்றதும் உங்களது நிதி நிலமை மாற்றம் அடையாமல் இருந்தால் Bankruptcy அல்லது Consumer Proposal செய்வதன் மூலம் உங்களது கடன் பொறுப்பில் இருந்து விடுபடலாம்.

**எனக்கு 100,000 டாலர்கள் கடன் உள்ளது. அதில் 20,000 டாலர்கள் எனது வீட்டை பொறுப்பாக வைத்து (Secured line of Credit Against my home) பெறப்பட்டது. மொத்தக் கடன் தொகையில் இருந்து நான் விடுபடுவதற்கு என்ன செய்யலாம்?**

இதற்கு இரு தெரிவுகள் (Options) உள்ளன.

- **Option A:** நீங்கள் உங்களது வீட்டையும் வைத்துக் கொண்டு இந்தக் கடனில் இருந்து விடுபட விரும்பினால் 80,000 டாலர்களுக்கு Consumer Proposal அல்லது Bankruptcy செய்யலாம்.
- **Option B:** உங்களது வீட்டையும் உள்ளடக்கி Bankruptcy செய்வதாயின் உங்களது கடன் முழுவதிலும் இருந்து விடுபட முடியும்.

(தொடரும்)

shankar@thaiveedu.com

■ ■ ■

**ABC Private Tutoring & Homework Help**

**French**
For grade 4 to grade 10
By a native French speaking teacher from France

**Math**
For grade 5 to grade 12
In English or French medium

Intersection
**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**
**Tel: 647 262 9430**


CR Canada
உங்கள்
கடன்
பிரச்சினைகளைக்
கண்டு
ஓடி ஒழிய
நேர்ந்ததா?
கவலையை விடுங்கள்!
உங்கள் வீடு, நிலம், வாகனம், வியாபாரம், எல்லாவற்றிற்கும் பிரச்சனைகளின்றித் தீர்வைப் பெற்றுத்தருவோம்.
உங்கள் கடன் தொகையிலிருந்து 15-20% மட்டும் தவணை முறையில் கட்டி முடிக்கலாம்.
அழையுங்கள்
CR Canada
சங்கர் அல்லது கிறிஸ்
Having difficulty repaying your student load?
New rule changes can help
CR Canada
Credit Reform Canada
Judgement in your favour!
416 264 1010
885 Progress Ave, Unit - 202, Scarborough.


ஒரு கூரையின் கீழ் அனைத்துவகை வணிக நிறுவனங்களும், அலுவலகங்களும்
நவீனம் | மலிவு | பல் தெரிவு | தாயக வாசனை | வட அமெரிக்காவின் முதல் தென்னாசிய வணிக மையம்
அள்ளலாம் வாங்க
தீபாவளியை முன்னிட்டு சிறப்பு மலிவு விற்பனைகள்
digi media
Jewellery Shops
Textiles & Fashion Clothing
Tailoring Shops
Dollar Shop
Grocery & Convenience Store
Book Store
Video Store
Gift Store
Computer Stores
Internet Service
Cellphone Centre
Lotto Centre
Online Store
Radio TV repair Shop
Kitchen Ware
Ink & Toner Store
Electronic Shop
Satellite Shop
Printing & Design
Café
Cake House
Beauty Parlor/Skin Care
Hair Salon
Party Supplies
Money Transfer
Charted Bus Services
Dry Cleaning
Airconditioning & Heating
Medical Office
Pharmacy
Physiotherapy
Law Offices
Real Estate Office
Mortgage Office
Accountant Office
Insurance Office
Newspaper Office
Astrology
Open 7 days
Mon - Sat : 9am - 9pm
Sundays & Holidays : 10am - 8pm
More than 50 Stores and Offices
GTA Square
INDOOR MALL
5215 Finch Ave. East, Scarborough, ON
(Middlefield & Finch)

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



**ஐம்பது வீதத்துக்கும் அதிகமான பணத்தை மீளப்பெற ஒரு வாய்ப்பு**

உங்கள் Furnace, Air Conditionerஐ Energy efficient systemதிற்கு மாற்றினாலும், தண்ணீர் சூடேற்றியை Tankless Systemமாக மாற்றினாலும் Rebates & Grantsஆக பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதை விட **15%** அரசாங்க grant பெறலாம். நீங்கள் செலவளிப்பதில் இருந்து ஐம்பது வீதத்திற்கும் அதிகமான பணத்தை பெற்றுக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு.

Furnaceக்கு **$1845**

Air Conditionerக்கு **$750 - $900**

Tankless Systemக்கு **$950 - $1050**

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

## பாதுகாப்பு

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard Heating & Air Conditioning
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

**Raman Appliances**

# Raman Chelliah



3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com



Buy & Sell Residential and Commercial Properties
Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
argaccountax@rogers.com
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963
*Independently own and operated
$214,900
Midland & Danforth
2+1 br Condo. Close to TTC, shopping, Go, school. Gym, pool, tennis, squash, billiards, sauna and other facilities in building.
$284,900
Markham & Sheppard
3 br townhouse. Corner unit. Close to TTC, school, library & shopping. Upgraded kitchen, hardwood flooring, wood staircase, large underground parking spaces.
$339,000
Bellamy & Lawrence
3+2 br Detached Bungalow. Close to TTC. Hardwood floors, pot lights, separate entrance to finished basement, glass covered sunroom. 4 car parking on driveway.
$399,900
Markham & 14th Ave
3+2 br Link. 2 br basement Apartment w/ seperate enterance. Gorgeous property w/ Upgrades. Hi efficiency furnace, hardwood and ceramic floors.
$519,900
16th & 9th Line
4 br Detached. Finished basement apartment. Very clean home in desirable makrham location. Hardwood floors, no sidewalk.
$549,900
9th Line & 14th Ave
4 br Detached. Close to school and shopping. Lots of upgrades! Hardwood flooring, 9 ft ceiling.
Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation
(416) 726-8055




S.P. IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR
416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P. IMPORTERS
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)

# ஒரு நாடுகடந்த நாட்டின் உதயம்



மாமூலன்

நாடுகடந்த அரசு பற்றிய கண்ணோட்டத்தில் இது நிறைவுப் பகுதி. முதலாவது கட்டுரையில் அது என்ன வகையான எண்ணக்கரு என்று பாரத்தோம். இரண்டாவது கட்டுரையில் ஓர் அரசு போன்ற அமைப்பு உருவானால் என்ன கூறுகளை அது உள்வாங்கி இருக்க வேண்டும் என்று பார்த்தோம். மூன்றாவது பகுதியாக நாடுகடந்த அரசு பற்றிய உருத்திர குமாரன் போன்றோரைக் கொண்ட நிறை வேற்றுக் குழு வெளியிட்ட வினாவிடையின் சுருக்கத்தைப் பார்த்தோம். உண்மையில் அதுவே முதன்முறையாக, தெளிவாக, நாடு கடந்த அரசுத் தரப்பினரால் வெளியிடப்பட்ட ஆவணம்.

ஆக அதன்படி, அதை முன்வைத்து நாடு கடந்த அரசு என்பதன் 'நல்லது கெட்டதுகளை' இந்தக் கட்டுரையில் பார்த்து இந்தத் தொடரை நிறைவு செய்யலாம்.

சுருக்கமாகச் சொன்னால் ஓர் அறியப்பட்ட ஊர்ச்சங்கத்தைப்போல இது ஓர் நாட்டுச் சங்கம். அவ்வளவுதான்.

ஓர் குறிப்பிட்ட ஊரின் சங்கம் இன்று கனடாவிலும் பிரித்தானியாவிலும் அய்ரோப்பாவெங்கிலும் நியூசிலாந்திலும் அவுஸ்திரேலியாவிலும் என உலகமுழுதும் பரந்து இருக்கிறதைப் பார்க்கமுடியும். அதன் கிளைகளிடம் உலகளாவிய அளவில் இணக்கமும் தொடர்பும் இருக்கும். அவர்கள் தங்கள் ஊரில் பள்ளிக்கூடம் கட்டவும் கோயில் கட்டவும் அன்னதானம் கொடுக்கவும் வேலை செய்வார்கள்.

அதைப்போலவே நாடுகடந்த அரசு என்பதன் பெயரால் இலங்கையைச் சேர்ந்த தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த இடங்களில், தங்கள் தங்கள் நாடுகளில் ஓர் பொதுச் சங்கத்தை வைக்க இருக்கிறார்கள். இலங்கைத் தமிழ் மக்கள் அல்லது உலகளாவிய தமிழ் மக்கள் ஈழத்தின் பெயரால் வைக்க இருக்கும் ஊர்ச் சங்கம் தான் நாடு கடந்த அரசு.

இப்படித்தான் சுருக்கமாகச் சொல்லமுடியும். இதற்கு உறுப்பினர்கள் ஆங்காங்கே தமிழர் வாழும் நாடுகளில் இருந்து தமிழ் மக்கள் பொது வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்களைக் கொண்டு இந்தச் சங்கம் அமைய இருக்கிறது.

இதற்கு பின்னர் உலகளாவிய தலைவர் அல்லது ஒருங்கிணைப்பாளர் இருக்கலாம். அவர்கள் சுழற்சி முறையில் வரலாம்.

இந்தச் சங்கம் ஊரில் கோயில் கட்டுவது பாடசாலைக்கு உதவுவது போன்ற வேலைகளை விட்டுவிட்டு ஈழத்தில் தமிழ் மக்களின் சிக்கலுக்கு அரசியல் வழியில் தீர்வைத் தேடி அல்லது தீர்வை நோக்கி நகர்வார்கள்.

அதற்காக அவர்கள் உலக நாடுகளிடம் ஊடாட்டம் செய்வார்கள். உலகநாடுகளின் தலைவர்கள், அரசுகள், ஊடகங்கள், அமைப்புக்களிடம் தமிழர் சிக்கலைப் பலவாறும் எடுத்துச் செல்வார்கள்.

அதன்வழியாகவே நாடு கடந்த அரசு தனது செயற்பாடுகளை அதிகம் முன்னெடுக்கும்.

தற்போதைய நாடு கடந்த அரசு என்ற அவர்களின் அறிக்கை மூலம் கிடைக்கும் தெளிபும் சுருக்கமும் இதுதான்.

நாடு கடந்த அரசு என்பது ஓர் புதிய எண்ணக்கரு என்று சொல்லப்படுகிறது. அது ஒன்றும் புதிய எண்ணக்கருவாகத் தெரியவில்லை. பல நாடுகளில் வாழும் மக்கள் தங்களுக்கான ஓர் பொது அமைப்பை தேர்தல் வழியில் ரேந்தெடுப்பது ஒன்றும் புதிய எண்ணக்கரு அல்ல. ஆனால் 'நாடு கடந்த அரசு" என்ற கருத்தாக்கத்தை முன்னைய கட்டுரைகளில் வேறு வகையில் நாம் போராசியர் வில்லியம்சின் பார்வையூடு சொல்லியிருக்கிறோம்.

## பகுதி - 3

உண்மையில் அந்த 'நாடு கடந்த அரசும்' எமது தமிழர்கள் சொல்லும் 'நாடுகடந்த' அரசு என்பதும் சொல்லளவில்தான் ஒன்றாக இருக்கின்றனவே தவிர வேறொன்றும் இல்லை என்ற நிலையே தற்போது தென்படுகின்றது.

நாடுகடந்த அரசு என்ற சொல்லையொட்டி இருந்து வந்த மயக்கநிலையை இவ்வாறு தான் தற்போதைக்கு தள்ளிப்போடமுடியும். அதன் முழுமையாக என்ன சொல்லப்படுகிறது என்பது நடைமுறைக்கு வரும்போது தான் மேலும் தெளிவாகும்.

இந்நிலையில்...

இந்த செயல்முறைக்கு முன்னெடுக்கப்படும் தேர்தல் முறையும் அது தொடர்பான செயற்பாடுகளும் தற்போதே களை கட்டத்தொடங்கி விட்டன. பல நாடுகளிலும் தமிழர் அமைப்புக்கள் இந்த நாடு கடந்த தமிழீழ அரசில் பங்கெடுப்பதற்கும் தேர்தலில் பங்கெடுப்பதற்கும் வெற்றி பெறுவதற்கும் முனைப்புக் காட்டத் தொடங்கிவிட்டன.

கனடா போன்ற நாடுகளில் இந்தத் தேர்தலில் போட்டியிடுவது பங்கெடுப்பது தொடர்பாகப் பெரிய போட்டியே நிலவுவதைக் காண்கிறோம்.

அதையொட்டி நாம் சில முன்வைப்புக்களைச் சொல்லலாம். ஏனெனில் தேர்தல் முறையில் பிரதிநிதிகள் வரவேண்டுமானால் அந்த தேர்தல் ஓரளவுக்காவது முறையாக அமைய வேண்டும். அதற்கு பல படி நிலைகள் செற்படுத்தப்படவும் வேண்டும்.

- தேர்தலில் போட்டியிடுபவர்கள் முடிந்தால் ஓர் வெள்ளை அறிக்கை சமர்ப்பித்தல் நல்லதே.
- வேட்பாளர்களின் தேர்தலுக்கான செலவினங்கள் தெளிவாக்கப்படவேண்டும். தேர்தலில் போட்டியிடுபவர் அவர்கள் வாழும் பகுதியில் நிலவியல் பரப்பிற்கு ஏற்பவும் மக்கள் தொகைக்கு ஏற்பவும் விகிதாச்சார அல்லது விழுக்காட்டு அடிப்படையில் குறிப்பிட்ட அளவுக்குதான் தேர்தல் செலவுகளைச் செய்யலாம் என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

ஏதாவது அமைப்பின் சார்பில் ஒருவர் முன் நிறுத்தப்படுகையில் அவருக்கு ஆதரவாக பல பின்புலங்கள் வேலை செய்யக்கூடும். அவை கண்காணிக்கப்படவேண்டும்.

> கடந்தகாலப் படிப்பினைகளூடாக
> இனிவரும் நாட்களில்
> தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க
> மனத்தூய்மையுடன்
> முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டாக கனடாவில் பல ஊடகங்கள் இருக்கின்றன. தமிழர்களின் சொத்தாக அல்லது கூட்டு உழைப்பாக அவற்றில் பல உருவானவை. அவற்றில் ஒரு குறிப்பிட்டவருக்கு மட்டும் மக்களை அணுக வாய்ப்பும் மற்றைய வேட்பாளருக்கு வாய்ப்பின்மையும் இருந்தால் அது பாரபட்சமானதே. அதைப் போன்ற சூழ்நிலை தவிர்க்கப்பட தமிழ் ஊடகங்களிடம் ஒருமித்த கருத்து மற்றும் மக்கள் நன்மை கருதி பொறுப்பும் வேண்டும். அனைத்து வேட்பாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

விளம்பரங்கள் தவிர்த்து பிறவற்றில் இந்த முறையைக் கடைப்பிடிக்கலாம்.

- சில நாடுகளில் மிகவும் அதிகம் தமிழர் செறிந்து புலம்பெயர்ந்திருக்கின்றனர். எனவே மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் வழங்கப்படும் நிலை உருவாகியுள்ளது. அது தேவையானதே.

ஆனால் அப்படி அதிகம் மக்கள் வாழும் நாடுகளில் அதிகம் உறுப்பினர்கள் உருவாகையில் "நாடு கடந்த நாட்டின்" பொதுவான தலைமை மற்றும் கட்டமைப்புக்களை தீர்மானிக்கும் போது அதிக உறுப்பினரி கொண்ட நாடுகள் ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்படும். அது தவிர்க்கப்படவேண்டும்.

- முன்னர் ஓர் கட்டுரையில் கூறியது போல் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கபட்டபின் முறைகேடாகவும் தமிழர் நலனுக்கு எதிராகவும் நடப்பார்களானால் அவர்களை திருப்பியழைக்கும் வழிமுறை உருவாக்கப்படவேண்டும்.
- அடிப்படை மனித உரிமை மீறல் செய்த செய்யும் ஒருவர் தேர்நதெடுக்கப்பட்ட பிரதிநிதியாக அவை உறுப்பினராக இருக்க முடியாது என்ற அறிவிக்கவேண்டும்.

இன்றுள்ள வளர்ந்த சமூகத்தில் சாதி, மத வேறுபாடு, கிழக்கு, வடக்கு, வன்னி தென்மராட்சி, வடமாராட்சி, தீவு, படுவான் கரை, எழுவான்கரை போன்று வேறுபாடுகள் காட்டுபவர் அல்லது பேதம் காட்டி செயற்படுவர் உறுப்பினராகச் செயற்பட முடியாது என்று அறிவிக்கவேண்டும்.

இப்படி அது வேண்டும் இது வேண்டும் என்ற கோரிக்கையை வைப்பது கட்டுரையாளர் நன்மை கருதியல்ல என்பது தெளிவு. எமது தமிழ் மக்கள் நலன் கருதி உருவாக நினைக்கும் ஓர் அமைப்பு தவறான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அதனால் மக்களுக்கு மேலும் தலையிடியைக் கொடுக்கக்கூடாது என்ற அளவில் இது மீண்டும் மீண்டும் இடித்துரைக் கப்படுகின்றது. இவற்றை விடப் பல நுணுகிய சிக்கல்கள் இக்கின்றன என்பதும் தெளிபு.

சிறு எடுத்துக்காட்டினைச் சொல்லி நிறைவு படுத்தலாம்.

எனக்கு நன்கு தெரிந்த இரு ஊர்ச்சங்கங்கள்.

ஒன்றில் உறுப்பினர்கள் குறைவு சிறிய ஊர். பல நாடுகளிலிருப்பவர்களும் பணம் சேர்த்து நாட்டில் இருக்கும் வீடில்லாத மக்களுக்கு சிறிய காணிகள் கொடுப்பது என்று தீர்மானித்தார்கள். பணம் சேர்த்தார்கள். காணி வாங்கினார்கள். அனால் கடந்த 3 ஆண்டுகளாக காணி பங்கிட்டுக் கொடுக்கப்படவே இல்லை! என்னுடைய ஆளுக்கு கொடு, உன்னுடைய ஆளுக்கு கொடு என்பதில் இழுபறி.

காணி பங்கிட்டுக் கொடுப்பது பற்றி பின்னர் கொன்பரன்ஸ் முறையில் தொலைபேசியில் பல நாடுகளிலுமிருந்து பலதடவை கதைத்துக் கொண்டார்கள். அதற்குள் தற்போதையை நெருக்கடி வந்து குடியிருக்கவேண்டிய மக்களே காணாமல் போனார்கள்.

அடுத்த ஊர். பெரிய ஊர். சங்கம் தொடங்கியது. சங்கத்துக்கு சிறிய சிறிய வேலைகள் செய்த நிலையில் ஓர் இணையம் தொடங்கியது. இணையம் வைத்திருப்பவர்- நடத்துபவர் ஊரின் பொதுக் கருத்துக்கு முரண்பட்ட வகையில் அரசியல் நடவடிக்கை தொடங்கினார்.

அதனால் ஊருக்கு இரண்டு இணையம் தோன்றியது. இருதரப்பும் சிறிய சிறிய நன்மைகள் ஊருக்குத் தொடர்ந்து செய்கின்றனவாயினும் தனிப்பட்ட ஒருவரின் கையில் திட்டமிடாமல் கொடுக்கபட்ட இணையத்தினால் ஊர் ரெண்டானது.

ஒன்று அதிகம் திட்டமிட்டதால் வேலை நடக்கவில்லை.

இரண்டாமாவது சரியான திட்டமிடாமல் பிரிவு வந்தது.

இரண்டு இடத்திலும் நோக்கம் ஒன்றுதான் தொடக்கத்தில் ஊருக்கு உதவி செய்வதுதான் நோக்கமாகவிருந்தது. பிறகு மனித குணம் மேலெழுந்து அனைத்தையும் மாற்றிவிட்டது.

இவையனைத்திற்கும் அப்பால் தமிழ் மக்களுக்கு இன்று ஓர் ஒருங்கிணைப்பு தேவை.

அதற்காக சொல்லப்பட்ட மொழிபுதான் நாடு கடந்த அரசு என்பது.

கடாரம் வென்றோம், இமயம் கண்டோம் என்பதெல்லாம் இன்று போலிவிளையாட்டு. கடந்தகாலப் படிப்பினைகளூடாக இனிவரும் நாட்களில் தமிழ் மக்களுக்கு நல்லது நடக்க மனத்தூய்மையுடன் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் நன்மை – தூய்மை, இவை நடக்க வெளிப்படையான தன்மைவேண்டும்.

தமிழ்மக்களுக்கு நன்மை நடக்க வெளிப்படையாகத்திட்டமிட்டு செயற்பட்டால் தூய்மையாக நடைமுறை இருக்கும்.

அங்கே வெற்றியும் அமைதியும் கிட்டும்.

mamoolan@thaiveedu.com

■ ■ ■

# விஷேட தேவையுள்ளவர்களும் நமது சேவையும்

- நளாயினி ரவீந்திரநாத் -

### உடல் வலுக்குன்றிய மக்கள் யார்?

பலவிதமான உடல் வலுக்குன்றல்கள் உள்ளன. ஒருவருக்கு இருக்கும் உடல் வலுக்குறைவு வெளித்தெரியலாம் அல்லது வெளித்தெரியாமல் இருக்கலாம், நிரந்தரமாக இருக்கலாம் அல்லது ஓர் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் ஏற்படுவதாக இருக்கலாம். ஒருவருக்கு உடல் வலுக்குறைவு இருப்பதை நீங்கள் எப்போதும் கூற முடியாது.

பின்வருவனவற்றில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மக்கள் கொண்டிருக்கலாம்:

- உடல் வலுக்குன்றல்.
- பார்வை இழப்பு.
- காதுகேளாமை அல்லது கேட்பதில் கடினம்.
- புத்தியில் அல்லது வளர்ச்சியில் வலுக் குன்றல்.
- கற்றலில் வலுக்குன்றல்.
- மன நல வலுக்குன்றல்.
- ஏனைய வலுக்குன்றல்கள்.

### உடல் வலுக்குன்றலைப்பற்றி பேசவும் - பொருத்தமான சொற்பிரயோகத்தை தெரிவு செய்யவும்

வலுக்குன்றியவர்கள் எப்படி நோக்கப்படுகின்றார்கள் என்பதில் வார்த்தைப்பிரயோகம் மேலாண்மை செலுத்துகின்றது.

பின்வருவன சில பொதுவான உதவிக்குறிப்புகள் இவை சகலவித வலுக்குன்றிய மக்களுடன் அல்லது அவர்கள் பற்றிய வெற்றிகரமாக தொடர்பாடலிற்கும், பழகுவதற்கும் உங்களிற்கு உதவியாக இருக்கும்.

- மக்களிற்கு முதன்மை அளிப்பதை நினைவில் கொள்க. வலுக்குன்றிய ஒருவரெனில் அவரின் வலுக்குன்றலில் கவனத்தை செலுத்துவதற்குப்பதிலாக அவரில் கவனத்தைச்செலுத்தவும்.
- ஊனமுற்ற அல்லது ஊனமுற்றவர் என் பதற்குப்பதிலாக வலுக்குன்றிய அல்லது வலுக்குன்றியவர் என்ற சொற்பதத்தைப் பாவிக்கவும்.
- வலுக்குன்றலைப்பற்றி உங்களிற்குத் தெரியாவிடின், ஊகங்கள் மேற்கொள்வதற்குப்பதிலாக, அவர்கள் நிலைமையை உங்களிற்கு விபரிக்கும் வரை காத்திருப்பது நல்லது. பல்வேறுபட்ட வலுக்குறைபாட்டிற்கு ஒரேவிதமான குண இயல்புகள் இருக்கும் அத்துடன் உங்கள் ஊகங்கள் தவறாகக்கூட இருக்கலாம்.

### ஆலோசனை

- மக்களிற்கு முன்னுரிமை அளிப்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- ஒருவரது வலுக்குறைவை வைத்து அவனை அல்லது அவளை பாகுபடுத்தாதீர்கள்.

### சேவைகளைப்பெறுதற்கு அவர்கள் எதிர்நோக்கும் தடைகள்

வலுக்குன்றிய மக்கள் சமுதாயத்தில் சகல நிகழ்வுகளிலும் முற்றாக பங்களிப்பதிலிருந்து தடைசெய்யும் காரணிகளே தடைகள் ஆகும்.

- சில தடைகள் வெளித்தெரியக்கூடியன:- படிகள் உள்ள கட்டிடங்கள் ஆனால் சரிவான பாதை அற்றவை.
- ஏனையவை கண்ணுக்கு புலப்படாதவை:- அதாவது பேச முடியாத ஒருவர் உங்களை புரிந்து கொள்ளவில்லை என நினைத்தல்.

### பல விதமான தடைகள்

**கட்டிடங்களின் அல்லது வெளிகளின் கட்டமைப்பும் பௌதீக அமைப்பும் வலுக்குன்றிய மக்களிற்கு பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.**

**உதாரணம்:** மண்டப பாதை(hallway) அல்லது கதவுவழி, நடைத்துணை(walker) பாவிக்கும் ஒருவருக்கு ஒடுக்கமாக இருக்கலாம் அல்லது கதவுக்குமிழி திருப்புவதற்கு கடினமாக இருக்கலாம்.

> **“ வலுக்குன்றியவர்களுக்கு எவ்வாறு சேவை வழங்குவது என்பதை கற்பதன் மூலம் வியாபாரநிறுவனங்கள் அதிக வாடிக்கையாளரை கவர்ந்திழுக்கலாம். அதிகமான எம்மவரது வியாபார நிறுவனங்கள் உடல்வலுக்குன்றியவர்களுக்கு *(Disable)* சேவை வழங்கக் கூடிய வகையில் தங்களை இன்னும் தயார் செய்யவில்லை. ”**

**தகவல் அல்லது தொடர்புத்தடைகள், மக்கள் இலகுவாக தகவல்களை விளங்கிக்கொள்வதை தடை செய்யும்.**

**உதாரணம்:** தெளிவற்ற அல்லது மிகச்சிறிய குறியீடுகள்/ அறிவிப்புபலகைகள்.



**மனப்பான்மை சம்பந்தப்பட்ட தடைகள்**

மனப்பான்மை சம்பந்தப்பட்ட தடைகள், வலுக்குன்றிய மக்களிற்கு எதிராக பாராபட்சத்தை ஏற்படுத்தும். இன/குழு மீதான எண்ணக் கருத்துகள் (stereotype) அல்லது ஊகங்கள் மனப்பான்மை சம்பந்தப்பட்ட தடைகளாகும்.
**உதாரணம்:-** வலுக்குன்றியவர்கள் தரக்குறைவானவர்கள் என நினைத்தல்.

**தொழில்நுட்ப தடைகள்**

தொழில்நுட்ப தடைகள், பல்வேறுபட்ட துணைக்கருவிகளுடன் ஓர் தொழில்நுட்பம் ஒத்துழைக்காத போது ஏற்படும்.
**உதாரணம்:-** திரையை வாசிக்கும் மென்பொருளுடன் ஒத்துழைக்காத ஓர் இணையத் தளம்.

**பாரபட்சப்படுத்தும் பரவலான தடைகள்**

வலுக்குன்றிய மக்களை பாரபட்சப்படுத்தும் பரவலான தடைகளாவன கொள்கைகள், செயல்முறைகள் அல்லது நடைமுறைகளாகும்.
**உதாரணம்:-** வலுக்குன்றிய மக்களிற்கு இடமளிக்காத, ஓர் வேலைக்கு ஆட்சேர்ப்பு நடைமுறை.

### ஒன்ராறியோவில் வசிக்கும் வலுக்குறைந்தவர்களுக்கான சேவைபெறுந்திறன் பற்றிய சட்டவிதி - 2005

ஒன்ராறியோவில் வசிக்கும் வலுக்குன்றியவர்களுக்கான சேவைபெறுந்திறன் பற்றிய சட்டமுன்வரைவு 2005இல் சட்டமாக்கப்பட்டது. இது நாளாந்த வாழ்க்கையின் முக்கிய பிரிவுகளுக்கான, விரிவான சேவையைப்பெறும் நியமங்களை உருவாக்கிய முதல் கனடாவின் பிரதேசமாக ஒன்ராறியோவை ஆக்குகின்றது.

இச்சட்டத்தின் கீழ், 2025ம் ஆண்டளவில் ஒன்ராறியோவை இலகுவில் சேவையை பெறுந்தன்மையுள்ளதாகச் செய்வதற்காக, வலுக்குன்றிய மக்கள் எதிர்நோக்கும் தடைகள் இல்லாதொழிக்கப்படுகின்றது.

ஒன்ராறியோவின் அபிவிருத்தி, அமுலாக்க, நடைமுறைப்படுத்துகின்ற சேவை பெறுந் திறனிக்கான நியமங்களாவன:

- வாடிக்கையாளர் சேவை
- போக்குவரத்து
- தகவலும் தொடர்பாடலும்
- சூழலை கட்டியெழுப்பல் (இது கட்டடங்கள், தரிப்பிடங்கள் நுழைவாயில்களை உள்ளடங்கலாக)
- தொழில்

இந்த சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான நியமங்கள் ஒன்ராறியோவிலுள்ள வியாபாரங்கள் அல்லது நிறுவனங்கள் தடைகளை தடுக்கவும், தகர்க்கவும் என்ன செய்யவேண்டும் என்பதை தீர்மானிக்கும்.

இந்நியமங்கள் உடல், பார்வை, கேள்வி, உணர்வு, மனநலம், அபிவிருத்தி, கல்வி உள்ளடங்கலாக சகல வலுக்குன்றிய மக்களை பாதிக்கும் தடைகளையும் வெளிப்படுத்தும்.

### வாடிக்கையாளர் சேவைகளைப் பெற்றுக்கொள்வது பற்றிய நியமங்கள்

வாடிக்கையாளர் சேவையைப் பெறுதற்கான நியமங்கள் ஒன்ராறியோவில் தற்போது சட்டமாக்கப்பட்டுள்ளன. ஒன்ராறியோவிலுள்ள வியாபாரங்கள், நிறுவனங்கள் வலுக்குன்றியவர்களுக்கு அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வாடிக்கையாளர் சேவை வழங்கவேண்டுமென கோரப்பட்டுள்ளது.

### வாடிக்கையாளர் சேவை நியமங்களுடன் உடன்படவேண்டியவர்கள்

வாடிக்கையாளர் சேவை நியமங்களுடன் உடன்படவேண்டியவர்கள் இந்த நியமங்களை செயற்படுத்தும் வியாபார, சேவை நிறுவனங்கள் ஆகும்.

- பொதுசனத்திற்கு நேரடியாகவோ அல்லது பிறிதொருவருக்கோ (உதாரணமாக வேறு வியாபாரங்களிற்கோ) பொருட்களை அல்லது சேவைகளை வழங்குபவை.
- ஒன்ராறியோவில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வேலையாட்களை வைத்திருப்பவை.

### இந்த நியமத்தின் கீழ் பெயரிடப்பட்ட அல்லது விபரிக்கப்பட்ட பொதுசன துறை நிறுவனங்களாவன:

- மாகாண அமைச்சுகள்
- நியமிக்கப்பட்ட மாகாணசபைகள், ஆணையங்கள், நிறுவனங்கள்
- சட்டப்பேரவையும், பேரவையின் விலாசத்தில் நியமனம் செய்யப்பட்ட அலுவலகங்களும்
- மாநகரசபைகள்
- சர்வகலாசாலைகள்
- தொழில்நுட்பக்கல்லூரிகள்
- பொதுசன வைத்தியசாலைகள்
- பாடசாலைச்சபைகள்
- பொதுப்போக்குவரத்து நிறுவனங்கள்

54ம் பக்கம் பார்க்க...



## வங்கிக் கடன் தொல்லையா?

# புதியதோர் ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம்

- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் வாகனம், வீடு, முதலீடுகள் என்பவற்றை தொடர்ந்து வைத்திருக்கலாம்
  **Keep your car, home, RRSP and RESP**
- மாதாந்த ரீதியில் எல்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one simple monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

**இலவச**
**ஆலோசனைகளுக்கு அழையுங்கள்**

digi Media

**Suren Sornalingam**
Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**
Fax: 416.332.0914
web: www.creditrecoverycanada.com



**CREDIT RECOVERY CANADA**
**Working with Trustee in Bankruptcy**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

"Eliminate Your Debt Stress"

# செழிப்பைக் காட்டும் கழித்த காகிதம்


மாறன் செல்லையா

- நிதி திட்டமிடல் ஆலோசகர் -





பல்வேறுபட்ட காகிதங்களையும் தயாரிகும் காஸ்கேட் - Cascade cas-Toronto அண்மையில் இரண்டாவது காலாண்டில் $30 million அல்லது 30 c/share லாபத்தை அறிவித்தது. கனடிய காகித தொழிலில் ஈடுபட்டுள்ள அநேகமான நிறுவனங்கள் இக்கட்டில் இருக்கும் போது இந்த நிறுவனம் லாபமீட்டியதை பல முதலீட்டாளர்கள் பாராட்டி உள்ளனர்.

2008இல் $25million அல்லது 0.254 c/share இழப்பை சந்தித்த இந்த நிறுவனம் 2009ல் லாபத்தைக் காட்ட முடிந்துள்ளது. சில தவிர்ப்புகளுடன் operating profit 66 million ஆக உயர்ந்துள்ளது. 2008இல் இது 10 million ஆகும்.

Pire Lacroix என்ற Desjardins securities சேர்ந்த ஆய்வாளர் இந்த நிறுவனத்துடன் இந்த லாபமீட்டல் மிகச் சிறந்த ஒரு அறிகுறி என்று பாராட்டியுள்ளார். அவர் மேலும் கூறு கையில் "இது மிகவும் ஆரோக்கியமான எண்களாகும். 0.154 c/share எதிர் பார்க்கப்பட்டபோது இந்த நிறுவனம் 0.284 c/share காட்டியது. நிறுவனத்தின் ஆரோக்கியம் காட்டுகின்றது. இன்னும் வரும் காலாண்டுகளில் இன்னும் பல சிறப்பான எண்களை இந்த நிறுவனம் காட்டும் என்கிறார் அவர்.

Quebecஐ தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் மீளப்பாவிக்கும் காகிதத்தை அடிப்படைப் பொருளாக வைத்து பல பொருட்களை தயாரிக்கின்றது. ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் 13,000 வேலையாட்கள் இந்நிறுவன வேலையில் ஈடுபடுகின்றனர்.




கடந்த சில மாதங்களாக பொருளாதார பின்னடைவில் இருந்து வடமெரிக்கா பொருளாதாரத்திலும் மீண்டு வந்து கொண்டிருக்கும்போது இந்த நிறுவனத்தின் உற்பத்திகளுக்காக நல்லகேள்வி ஏற்பட்டுள்ளது. ஆனால் பெறுமதி அதிகரித்து வரும் கனடிய நாணயம் கருத்தில்கொள்ள வேண்டியதொன்றாகும். ஏனெனில் இந்த நிறுவனத்தில் பெரும்பாலான வர்த்தகள் அமெரிக்காவிலாகும்.

அதிகமாக கனடாவின் எந்தக் கதையும் வெளிக் காரணிகளால் பாதிக்கப்படும்போது எதிர்வு கூறுவது கடினம். விற்பனை குறைந்த போதிலும் லாபம்கூடியுள்ளது என்றார் திரு. Lacroix. "எவ்வளவு விற்றார்கள் என்பதை விட என்ன விலைக்கு விற்றார்கள் என்பது முக்கியம்" என்றார் அவர்.

ஒரு தொழிற்சாலையில் நெருப்பு விபத்தினால் ஏற்பட்ட $3 million இழப்பையும் அதனால் ஏற்பட்ட மீள்கட்டமைப்பு செலவான 4 millionஐ அன்றைய நிதிமுறிகள் மூலம் ஈட்டி $13 milion ஈடு செய்கிறது. அத்துடன் FX Loss 3 million ஆகும்.

கடந்த ஆண்டில் எரிபொருள் விலையாலும் சீன வாடிக்கையாளர்கள் வாங்குவதைத் குறைத்தாலும் பாதிப்படைந்த இந்த நிறுவனம் 2009இல் அவற்றில் இருந்து ஓரளவு மீண்டுள்ளது. மற்றைய நிறுவனங்கள் காடுகளை வெட்டிக் காகிதத்தைச் செய்கின்றன. ஆனால் Cascade செய்யப்பட்ட காகிதத்தை மீளவும் பாவிக்கிறது. அத்துடன் இந்த நிறுவனம் Torontoவில் இருக்கும் Atlantics நிறுவனத்தை 60 million செலவில் வாங்குவதாகவும் அறிவித்துள்ளது.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■

# விஷேட தேவையு...

52ம் பக்கத் தொடர்ச்சி...

## இந்த நியமத்துடன் ஒத்துழைக்க வேண்டிய தனியார் பிரிவு நிறுவனங்களாவன:

- கடைகள், பண்டகசாலைகள்
- உணவு நிறுவனங்கள், விடுதிகள், மது பானக்கடைகள்
- படமாளிகைகள், விளையாட்டரங்கங்கள், மாநாட்டு மண்டபங்கள்
- அறநிலையங்கள், இலாபநோக்கற்ற நிறுவனங்கள்
- வணக்கத்திற்குரிய இடங்கள் அதாவது தேவாலயங்கள், கோவில்கள், மசூதிகள்.

## வியாபாரங்களும் நிறுவனங்களும் ஒத்துழைப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

இந்த நியமத்தின் கீழ் பல எண்ணிக்கையான சட்ட தேவைகள் உள்ளன.

ஒத்துழைப்பதற்கு வியாபாரங்களும், நிறுவனங்களும் ('வழங்குபவர்கள்') கட்டாயமாக:

- வலுக்குன்றியவர்களுக்கு, பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கலிற்கான கொள்கைகள், செயல்முறைகள், நடைமுறைகளை ஒழுங்கமைக்க வேண்டும்.
- வலுக்குன்றிய மக்களால் பாவிக்கப்படும் துணைக்கருவிகளின் பாவனை பற்றிய ஓர் கொள்கையை வகுத்திருக்க வேண்டும்.
- வலுக்குன்றிய ஒருவருடன் அவரது வலுக்குறைவை கருத்திற்கொண்டு அதற்கேற்ப தொடர்பு கொள்ள வேண்டும்.
- வலுக்குன்றியவர்கள் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்ளவரும் போது, சட்டப்படி மிருகங்கள் தவிர்க்கப்பட வேண்டிய இடங்கள் தவிர, பொதுசனத்திற்கோ அல்லது ஏனையவருக்கோ அனுமதிக்கப்பட்ட இடங்களிற்கு அவர்களது சேவை மிருகங்களை கொண்டு வர அனுமதிக்க வேண்டும்.
- பொதுசனத்திற்கோ அல்லது மூன்றாமவருக்கோ அனுமதிக்கப்பட்ட இடங்களின் பகுதிகளுக்கு, வலுக் குன்றியவர்கள்



பொருட்கள் அல்லது சேவைகளை பெற வரும்போது அவர்களிற்குத் துணைபுரிபவர்களையும் அழைத்து வர அனுமதிக்க வேண்டும்.

- ஓர் நிறுவனம் அனுமதிக்கட்டணம் அறவிடுகின்றதாயின், உதவியாளருக்கு என்ன அனுமதிக்கட்டணம் அறவிடுவார்கள் என்பதை மக்களிற்கு முற்கூட்டியே அறியத்தரவும்.
- வலுக்குன்றிய மக்கள் பொருட்கள், சேவைகளைப் பெறுவதற்கு வழமையாக பாவிக்கும் வசதிகள் அல்லது சேவைகள் தற்காலிகமாக கிடைக்காதெனின் பொதுசனத்திற்கு அறியத்தரவும்.
- பொதுசனத்துடன் பழகும் மக்கள் அல்லது வழங்குபவரின் சார்பிலான ஏனைய மூன்றாமவர்கள், மற்றும் வாடிக்கையாளர் சேவை கொள்கைகள், வழக்கங்கள், செயல்முறைகளை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் அடங்கலாக, யாவரும் வலுக்குன்றிய மக்களிற்கு எப்படி சேவை வழங்கவேண்டும் என்ற பயிற்சி பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

மீள ஊட்டத்தைப் (feedback) பெறவும், அவற்றிற்கு பதிலளிக்கவும், எந்த முறைப்பாட்டிற்கு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பவற்றை உள்ளடக்கிய ஓர் செயல் முறையை ஏற்படுத்தவும். இந்த மீள ஊட்ட செயல்முறை பற்றிய தகவல் பொதுசனத்திற்கு கைவசம் கிடைக்கத்தக்கதாகச் செய்யவேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட பொதுசன நிறுவனங்களிற்கும், 20 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களை கொண்ட வியாபாரங்களிற்கும், நிறுவனங்களிற்கும் சில மேலதிக தேவைகள் உள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பொதுசன நிறுவனங்கள், 20 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களை கொண்ட வியாபாரங்கள் அல்லது நிறுவனங்கள் கட்டாயமாக:

- வலுக்குன்றிய மக்களிற்கு, அவர்கள் வழங்கும் கிடைக்கத்தக்கதான வாடிக்கையாளர் சேவையின் கொள்கைகள், செயல் முறைகள், நடைமுறைகள் பற்றிய யாவற்றையும் எழுத்துமூலம் ஆவணப்படுத்த வேண்டும். இந்த ஆவணங்கள் அவர்கள் வேண்டுகோளிற்கிணங்க பெற்றுக்கொள்ள முடியும் என்பதை வாடிக்கையாளரிற்குத் தெரியப்படுத்தவும்.
- வலுக்குன்றிய ஒருவருக்கு, அவர் வலுக் குறைவை கருத்திற்கொண்டு அவருக்கு ஏற்ற வடிவத்தில் இத்தகவல்களை வழங்க வேண்டும்.

இதை வழங்குபவர்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கிய பத்திரத்தையோ அல்லது பத்திரங்களையோ வைத்திருக்க வேண்டும்.

- வலுக்குன்றியவர்களுக்கான பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கல் பற்றிய பொதுவான கொள்கைகள், செயல்முறைகள், நடைமுறைகள்.
- சேவையிலுள்ள மிருகங்கள், துணைபுரிபவர்கள் பற்றிய கொள்கைகள், செயல் முறைகள், நடைமுறைகள்.

சேவைகளில் அல்லது வசதிவாய்ப்புகளில் ஓர் தற்காலிக தடங்கல் ஏற்படும் பொழுது எடுக்கவேண்டிய படிமுறைகள்.

- பயிற்சிக் கொள்கைகள்.
- மீள ஊட்ட நடைமுறையின் விபரம்.

## வாடிக்கையாளர் சேவை நியமத்துடன் ஒத்துழைப்பதற்கும் அறிவிப்பிற்குமான காலஎல்லைகள் எவை?

இந்த நியமத்தில் பெயரிடப்பட்ட அல்லது விபரிக்கப்பட்ட பொதுசன நிறுவனங்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கவேண்டியவை:

- தை 1, 2010 ஆரம்பத்திலிருந்து இந்த நியமத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.
- 2010இல் ஆரம்பித்து சேவைபெறுந்திறன் பற்றிய அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

தனியார் துறை, இலாபநோக்கற்ற பெயரிடப்படாத பொதுசன பிரிவு, வியாபாரங்கள், நிறுவனங்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டியவை:

- தை 1, 2012 ஆரம்பத்திலிருந்து இந்த நியமத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.
- 20 அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைக்கொண்டவையும் 2012 ஆரம்பத்திலிருந்து சேவைபெறுந்திறன் பற்றிய அறிக்கைகள் தாக்கல் செய்ய வேண்டும்.

## மேலும் தெரிந்துகொள்வதற்கு

வாடிக்கையாளர் சேவை நியமத்துடன் உங்கள் வியாபாரம் அல்லது நிறுவனம் ஒத்துழைப்பதற்கு உதவியாக சாதனங்களையும், வளங்களையும் கண்டறிய; மற்றும் மேலதிகமாக அறிந்து கொள்வதற்கு 905-940-7864 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது www.accesson.ca/compliance அல்லது www.socialservicesnetwork.org அல்லது www.mcss.gov.on.ca/mcss/english/pillars/accessibilityontario என்ற இணையத்தளங்களுக்குச் சென்று பார்க்கவும்:

nalayini.ravindranath@thaiveedu.com

■ ■ ■

# மகப்பேறும் மன உளைச்சல் எனும்
# இரட்டைப் பிரசவ வேதனை



பார்வதி
கந்தசாமி

மன உளைச்சல் ஐந்து பேரில் இருவருக்கு ஏற்படுவதாக வட அமெரிக்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மன உளைச்சல் புதிய குடிவரவாளரில் பலருக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. வேலை இல்லாத பிரச்சனை, புதிய நாட்டில் முகங்கொடுக்கும் இசைவாக்கப் பிரச்சனைகளில் இனத்துவேசக் கொடுமையும், குடும்ப வன்முறை, குடும்பங்களில் ஆதரவு கொடுப்பதற்கு யாரும் இல்லாத நிலை, யுத்த, சுனாமி இழப்புக்களின்பின் ஏற்படும் கொடுந்துயரச் சுமை போன்றனவும் காரணங்களாகின்றன.

மன உளைச்சல் பணக்காரர் ஏழை என்ற வேறுபாடின்றிக் குடிகொள்ளும். “மனத்தை விட்டிட்டார்” என்று கூறும்போது ஆழ்ந்த மன உளைச்சலை மக்கள் அநுமானிக்கின்றனர் எனலாம். பென்சில் களவெடுத்தது என பிடிபட்ட இளம் தமிழ் மகன்கூட மன உளைச்சலுக்கு இலக்காகித் தற்கொலை செய்து கொண்டமை பல வருடங்களிற்கு முன்னர் ரொறன்ரோவில் நடைபெற்றது. பாயும் புகையிரதத்திலும், வானளாவிய மாடங்களிலிருந்தும் விழுந்தும், கழுத்தில் சுருக்கிட்டும் தம்மை வில்லங்கமாக அழித்துக் கொண்ட தமிழ் மக்கள் வரலாறு கனடிய வரலாற்றில் இரத்தக் கறைகளாகப் பதிக்கப்பட்டு வருகின்றது.

வழக்கமாக, காதலில் தோல்வியுற்றவர்கள், விவாகமாகாது சிசுவைச் சுமந்த விளைந்த வெட்கத்தால் பிரச்சனைகளுக்கு உள்ளாகியோர் போன்ற சிலர் தற்கொலை செய்வது தான் சமூகங்களில் நடைபெறும் தற்கொலைகளாக நாம் அறிந்து வந்தவை. மன உளைச்சல் ஏற்பட்டுத் தாமாகவே தம்மை அழித்துக் கொண்டவர்கள் தற்கொலை செய்து கொள்ள முன்னர், அவர்களிடம் சோகநிலை காணப்படும். சிலரிடம் மனம் தளர்ந்து போதல் தற்காலிக நிகழ்ச்சியாக இருக்கும். சிலருக்கு மனம் மிகத் தளரும் நிலை அவருடைய பரம்பரையிலிருந்து கூட கடத்தப்பட்டதாக இருக்கலாம். மனத் தளர்ச்சி சிறுகச் சிறுக ஆரம்பித்துச் சிலரை மிகவேகமாக அமுக்கி, எதுவும் செய்ய முடியாதவர்களாக ஆக்கிவிடும் நிலைக்குக் கொண்டு செல்லும்போது அவர்களது மூளையில் உள்ள இராசயனக் கலவையில் மாற்றங்கள் ஏற்படலாம். தற்காலிக மனத் தளர்ச்சி, வாழ்க்கையின் தோல்வி அநுபவங்களால் ஏற்படலாம். தன்னையே “தூற்றும்” மனநிலை ஏற்பட துக்கம், ஏமாற்றம், வெறுமை உணர்வுகளைச் சுமக்க நேரிடலாம். இது சிறிது காலத்தில் போய் விடும்.

> “பைத்தியங்கள் தான்
> மனநோய் வைத்தியரை நாடுவர்”
> என்ற தப்பெண்ணத்தைக் களைந்து எறிவோம்.
> குடும்ப வைத்தியர் போல்
> மனநோய் வைத்தியரை அணுகுவோம்.
> நல்லதொரு வளமான, நலமான சமூகத்தைக்
> கட்டி எழுப்ப உதவுவோம்.

### மகப்பேற்றின் பின் மன உளைச்சல் அறிகுறிகள்

மனஉளைச்சல் என்பது மேலே கூறிய மன நிலை மிகத் தீவிரமாக நீடிக்கும் நிலையாகும். வேலையைக் கூட இழக்க வைத்து விடும். இந்நிலையில் இந்த மன உளைச்சல் ஒரு நோயாக ஆகிவிடுகிறது. அறிகுறிகளை அவதானிக்கும் போது ஒருவரின் மனப்போக்கு, நடத்தைகள், அவரின் உடல் இயங்கும் தன்மை ஆகியவற்றை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

### மனஉளைச்சல் தீவிரமாக உள்ளவர்களின் அறிகுறிகள் சில.

- வழமைக்கு மாறாக உணவை மிகக் குறைவாகவோ கூடுதலாகவோ உண்ணல்
- நித்திரை இல்லாமல் அவதிப்படல்
- எந்த நேரமும் படுத்திருத்தல்
- சிந்தனை இல்லாமை
- தீர்மானம் எடுக்கச் சிரமம்படல்
- தாழ்வு மனம் கொள்ளல்
- வழமையாக செய்த எந்த செயலிலும் அக்கறையின்மை
- அளவுக்கு மிஞ்சிய சோகம்/கவலை
- தனிமைப்படுத்தல், அறையில் பூட்டியிருத்தல்
- பாலியலில் விருப்பமின்மை
- அளவுக்கு மீறிய குற்ற உணர்வு
- சக்தியற்றவர்களாக உணர்தல்

56ம் பக்கம் பார்க்க...

வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்
Mortgage Life Insurance

வங்கிக் கடன் காப்புறுதி
01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

லண்டன் லைஃப் காப்புறுதி
01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மீண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial
A division of London Life Insurance Company



பாலா பாலசுந்தரம் B. Eng
சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்
Office: 416-291-0451 Ext.227
Cell: 416-518-9489
300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3
E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.

# மகப்பேறும் மன...

24ம் பக்கத் தொடர்ச்சி...

- களைப்புறுதல்
- இறப்பு பற்றி சிந்தனை/தற்கொலை எண்ணம்

இவை மன உளைச்சல் கொண்டோரின் பொதுவான அறிகுறிகள். மகப்பேற்றின் பின்னர் பெண்களில் பத்தில் ஒருவருக்கு மேலே கூறிய மன உளைச்சல் வருவது இயல்பு. இதனை மகப்பேற்றின் பின்னர் வரும் மன உளைச்சல் (post – partum Depression)என அழைப்பார்கள். இந்நோய் வருவதற்கு சரியாக இதுதான் காரணம் என்று கூறமுடியாது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

குடும்பப் பிரச்சனைகள், புதிய மாற்றங்கள், பொருளாதார சுமைகள், தாயின் பரிவான பிள்ளைப்பேறு "பார்த்தல்" கிடைக்காத ஏக்கம், குழந்தையை ஒரு சுமையாக வயிற்றில் சிசு வளரும் போதில் இருந்தே எண்ணி வந்தமை, விரும்பாமலே குழந்தையை சுமக்க வேண்டிய நிர்ப்பந்தம், அடிக்கடி குழந்தையை பெறுவதால் அவர்களை பார்த்து எடுக்க முடியாத நிலை, அநாதரவான நிலை போன்றனவும், இழப்புக்களும் பிள்ளைப் பேறின் பின்னர் பெண்களுக்கு மன உளைச்சலைப் ஏற்படுத்தும்.

இது ஏறத்தாழ ஒரு வருடங்கள் தீவிரமாக இருக்கும். சிலருக்கு இரண்டு வருடங்கள் நீடிக்கலாம். இவர்களுக்கு குழந்தைக்குப் பால்கொடுப்பதே ஒரு சிரமமான தொழிலாக இருக்கும். (இங்கிலாந்தில் பிள்ளைக்கு பால் கொடுக்காது பயப்பிராந்தியாலும் மன உளைச்சலாலும் அலுமாரியில் ஒழித்திருந்த பெண்ணை கணவர் அடித்ததாக கூறினார்).

மகப்பேற்றின் பின்னர் ஏற்படும் மன உளைச்சல் குடும்ப வன்முறை, யுத்த வன்முறைக்கு உள்ளாகியோருக்கு வருவதற்கு சாத்தியம் உண்டு. பரம்பரையிலோ, தனக்கோ மகப்பேற்றின் பின்னான மன உளைச்சல் அல்லது மனநோய் வந்திருப்பினும் நோய் வர வாய்ப்பு உண்டு. குழந்தை கிடைக்காமல் இருக்கும் உடல் நிலை நீண்டகாலம் இருந்திருப்பினும், குழந்தை வயிற்றில் வளரும் போது கடுமையாக பாதிப்புக்களை தாய் அடைய நேரிடின், மகப்பேறு கடினமாயின் குழந்தைக்கு அதிக அளவு கவனம் கொடுக்க வேண்டும் எனின், அண்மைய இழப்புக்கள், குறைமாத கருக் கலைவுகள், கோமோன்கள் உணர்ச்சி வசமானவையாயின், தீட்டுப் பிரச்சனையிருப்பின் மகப் பேற்றின் பின்வரும் மனஉளைச்சல் வரச்சாத்தியம் அதிகம்.

மகப்பேற்றின் பின்வரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியோரின் நோய் பலவிதமான அறிகுறிகள் கொண்டது. சிலர் அழுவார்கள், கண்ணீரும் கம்பலையுமாக இருப்பார்கள், சிலர் துக்கமாக இருப்பார்கள், கோபமும் எரிச்சலும் கொண்டவர்களாக இருப்பார்கள், களைப்பு மிகுதியுடனும் நித்திரையின்றியும் இருப்பார்கள், பசியில் மாற்றம் ஏற்படும், வழமைக்கு மாறாக ஆர்வம் அற்றிருப்பர், பாலியலில் விருப்பின்றி இருப்பர், பதட்டத்துடன் உணர்ச்சிகளால் பாதிக்கப்பட்டவராக இருப்பர், குழந்தை பராமரிப்பு பற்றி ஐயங்கள் எழுபவராயிருப்பர், தாழ்வு மனப்பான்மை, குற்றவுணர்வு, வெட்கம் கொண்டவர்களாக இருப்பர், எல்லாமே பெரும் சுமை என்ற எண்ணம் கொண்டிருப்பர்.

## மகப்பேற்றின் பின் பதட்ட நிலைக் கோளாறு

மகப்பேற்றின் பின்னர்தான் கூடுதலாக அறிகுறிகள் தோன்றும். சிலருக்குத் தீவிரமாக ஒரு வருடமும் எடுக்கலாம். ஒரு வருடமாக தாய் சமாளித்துக் கொண்டிருக்கவும் கூடும். சிலருக்கு மகப்பேற்றின் பின் பதட்ட நிலை தோன்றும். இத்தகையோர் மிகுந்த பதட்டத்திற்கு உட்பட்டிருப்பர். செயலற்றவராக இருப்பர். இவர்களது பயமும், பயப் பிராந்தியும் மிக வேகமாக இயங்கும். உறங்கும் தேவை குறையும். எண்ண ஓட்டம் வேகமாக நடைபெறுவதால் நித்திரை கொள்ள முடியாமல் இருக்கும். தொண்டையுள் ஒரு கட்டி இருப்பதாக உணர்வர். சாப்பாடு உட்செல்லாது விக்கல் வருவதாக இருக்கும். விசராகப் போய் விடுமோ என்ற பயம் ஏற்படும். குழந்தையுடன் தனியாக இருப்பதில் பயம் ஏற்படும். இதன் ஆரம்பம் பிள்ளை பெற்றதும் ஏற்படலாம் - கர்ப்ப காலத்திலும் ஏற்படலாம். இவ்வறிகுறிகள் மிகவேகமாக மோசமான நிலைக்கு சென்று பின்னடைவுகளை விளைவிக்கலாம்.

## மகப்பேற்றின் பின் தோன்றும் உணர்ச்சி மிகைக் கோளாறு (Nkdpah Mania)

சிலர் தாம் சொர்க்க உலகில் இருப்பது போலவும் கனவுலகில் சஞ்சரிப்பது போலவும் உணர்வார்கள். மகப்பேறு உலகில் உள்ள விடயங்களில் சுகமானது எனவும் உடனேயே இன்னொரு குழந்தை பெறலாம் எனவும் கூறுவர். அளவுக்கு மீறிய சக்தி உடையவர்களாக இருப்பர். பேசிக் கொண்டே இருப்பர். நித்திரையே கொள்ள தேவையில்லாத உணர்வுடன் இருப்பர். இவர்களுக்குத் தம்மை "பைத்தியங்களாக" மற்றவர் எண்ணுவர் என்ற பயத்தினால் இதைப் பிறருக்குக் கூறமாட்டார்கள். தங்கள் பிள்ளைகளை குழந்தைக் காப்பு நிறுவனம் எடுத்து விடுவர் என எண்ணுவர். இது ஹோமோன்களின் வடிகால் ஆக்கம். அவர்கள் தங்கள் நிலைபற்றி நல்ல அறிவு இருக்கும்போது பயப்பட வேண்டியதில்லை. வைத்திய உதவியால் ஹோமோன்கள் சமப்படுத்தப்படும் என உதவி பெற வைத்தல் வேண்டும்.

## மகப்பேற்றுக்குப் பின்னான "விடாப்பிடி" எண்ணக் கோளாறு: (Obsessive compulsive Disorder)

இது மிகவும் கடினமான நோய். மீண்டும் மீண்டும் மனதில் விடாப்பிடியான எண்ணம் உதித்த வண்ணம் இருக்கும். விடாப்பிடி எண்ணம் அவர்கள் வாழ்வில் ஊடுருவலைச் செய்யும். ஆச்சரியத்தைத் தரும் எண்ணங்களாக இருக்கும். நம்ப முடியாதவையாக இருக்கும். குழந்தை நீரில் மூழ்குவதையும், குழந்தை மீது கத்தி இருப்பதையும், படிகளால் விழுந்து குழந்தை தலை சிதறுவதையும், பிள்ளை திக்குமுக்காடுவதையும் நேரடியாக, உண்மையாகத் தாம் பார்ப்பதாகக் கூறுவர். இது அவர்கள் எண்ணத்தில் ஏற்படுவதாகும். தவிர்த்துக் கொள்ளும் போக்கு இவர்களிடம் காணப்படும்.

- பிள்ளையை பிரதான வதிவிட அறையில் வைத்திருப்பர்.
- சமயலறைக்குள் வைத்திருப் பதைத் தவிர்ப்பர்.
- மிகையாகக் கையைக் கழுவுவார்கள், சுத்தம் செய்வார்கள்.

இவர்களுக்கும் குழந்தை பிறப்பின் பின் உடனடியாகவே தொடங்கும். வைத்திய சாலையில் அவதானிப்பது இலகு. எனினும் சில தாதிமார்கள் இதனை அனுமானிக்கத் தவறி விடுகின்றனர். இத்தாய்மார் சமாளிக்கின்றனர் எனநினைத்து விடுகின்றனர். இவர்களுக்கு உடனடி வைத்தியம் செய்யாவிடின் பாரிய மன உளைச்சலுக்கு உள்ளாகுவர்.

இவர்களது ஹோமோன் மாற்றத்தினால் இவ்வாறு நடைபெறுகிறது என்பதை அவர்களிடம் உறுதி செய்து அவர்கள் "பைத்தியங்கள்" அல்ல எனக் கூறவேண்டும்.

## மகப்பேற்றுப பின் பித்தலாட்டம் (Post Partum psychosis)

இந்நோய் மிகவும் பாரதூரமானது. மார்கம் நகரில் இரு குழந்தைகளைக் கொன்று தன்னையும் கொல்ல முயன்று தோல்வி கண்ட பெண்ணும் இந்நோயினால் பீடித்திருக்க வேண்டும். இளங்கோ அன்டிரியாயேற் என்ற பெண் 5 குழந்தைகளையும் நீரில் அமுக்கிக் கொன்றது நல்லதங்காள் கதையைப் போன்றது. இன்னுமோர் தமிழ்ப் பெண்ணுடன் ஜெயிலில் சென்று உறவாடிய போது அவர் மன உளைச்சலால் தான் அவ்வாறு செய்தார் என தெரிய வந்தது. அவரது கணவரின் இழப்பு அவரை வெகுவாகப் பாதித்திருந்தது. அவ்வாறு இருந்த வேளையில் உரிய சேவைகளையும் நாடவோ யாராவது அவரை நாடவைக்கவோ முடியவில்லை. இந்திய ஆமியைக் கொன்ற தாகத் தன் குழந்தையைக் கொன்ற கனடாத் தமிழ்ப் பெண்ணுக்கும் இந்நோய் காணப்பட்டிருந்தது. ரொறன்ரோவில் சூசன் என்ற மனநோய் வைத்தியரே தன் குழந்தையுடன் ஓடும் புகைவண்டியில் பாய்ந்து மாய்த்த செயலைப் பலரும் அறிவர். இது மகப்பேற்றுப் பின்னான மனஉளைச்சலின் கோரத்தைக் காட்ட உரிய உதாரணமாகும்.

இந்தப் பாரிய பித்தலாட்ட நோய் ஆயிரத்தில் ஒருவருக்கு அல்லது இருவருக்கு மகப்பேற்றின் பின்னர் வருவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இது 3-6 நாட்கள் அல்லது 3-6 கிழமைகளில் நடைபெறுவது வழக்கம். இந்தப் பித்தலாட்ட மன உளைச்சல் உள்ளவர் காணும் பொருட்கள், ஆட்கள், தொலைக் காட்சியில் காண்பவை வேறு உருவங்களாக அவர்களுக்குத் தோன்றும். எதையோ செய்யும்படி கூறுபவையாக, தீய விடயங்களுக்கு இட்டுச் செல்பவையாக காட்சிகள் இருக்கும். இவர்களுடன் யாரோ சில கட்டளைகளை இடுவதாகவும் அவர்களது கேட்புப் புலனில் தொனிக்கும். அது இவர்களுக்கு உண்மையாகத்தான் இருக்கும். குழப்பம் மிகுந்தவர்களாகவும், விடாப்பிடியாகச் சில எண்ணங்களில் பற்றுக்கோடாக இருப்பவர்களாகவும் இருப்பார்கள். எப்பொழுதும் நெருப்பில் மிதித்தவர் போல கடுமையாக இருப்பர். நித்திரை இல்லாமல் இருப்பர், இது பிள்ளை கருப்பத்தில் இருக்கும்போதுகூட நிகழலாம். இவர்களை உடனடியாக வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்க வேண்டும்.

ரொறன்ரோவில் மகப்பேற்றுப் பின்னரான மன உளைச்சலைக் கண்காணிக்க ரொறன்ரோ ஈஸ்ற் ஜெனரல், சென்ஜோசெப் வைத்தியசாலை என்ற இரு வைத்திய சாலைகளில் வசதிகள் செய்யப்பட்டுள்ள. துரதிஸ்டவசமாக இவை ஸ்காபரோவில் புதிய குடிவரவாளர் அதிகமாக வாழும் இடங்களில் இல்லை. எங்களிடம் பல தமிழ் மனநோய் வைத்திய நிபுணர்கள், ஆலோசகர்கள் உளர். மக்கள் உளநலம் பேண உதவிகளை நாட வேண்டும். "பைத்தியங்கள் தான் மனநோய் வைத்தியரை நாடுவர்" என்ற தப்பெண்ணத்தைக் களைந்து எறிந்து நல்லதொரு வளமான, நலமான சமூகத்தைக் கட்டி எழுப்ப உதவுவோம். வந்ததன் பின் ஆலோசனை பெற்றுப் பயன் பெறுவதைவிட வெள்ளம் வருமுன்னர் அணைகட்ட வேண்டும். "மன உளைச்சல்" என்ற படம் ஒன்றை பல வருடங்களுக்கு முன் செய்திருந்தேன். அதனைப் பார்த்துத் தற்கொலை குறைப்பு நடைபெற்றது என்பது வரலாற்று உண்மை. இன்று மகப்பேற்றுப் பின் மன உளைச்சல் பற்றிய கல்வியூட்டலின் அவசியம் கனடியக் காற்றில் பரவலாக ஒலிக்கின்றது. இதனை நிறுவனங்கள் முன்வந்து நடவடிக்கை எடுத்துச் சமூக ஒளியூட்டல் செய்ய வேண்டும். நல்லதொரு உளவளம் மிக்க சமூகத்தைக் கட்டி எழுப்ப ஆவன செய்வோம்.

parpathi.kandasamy@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?

RUBAN PEST CONTROL



- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- தொழிற்சாலைகள்
- வியாபார நிலையங்கள்

ஆகிய அனைத்து இடங்களிலும் எலி, பூச்சித் தொல்லைகளை அறவே நீக்க அழையுங்கள்!

KANTHAN
416 • 291 • 3997

GP TELECOM
இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்படாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344




Mortgage Mortgage Mortgage
5 வருட
ஈட்டுக்கடனுக்கான
வட்டி விகிதம்
3.69%
வருடத்தைக் கொஞ்சம்
கூட்டி மோட்கேஜ்
கட்டுக்காசைக்
குறைக்க வேணும்.
பெனால்டி கூட வருமோ
என்று பயமாக இருக்கு!!
வீட்டை மாற்றி எழுதவேணும்.
ஒருவருடைய பெயரை எடுத்து
விட்டு, மற்றைய நபரின்
பெயரைச் சேர்க்கவேண்டும்.
அதற்கு நல்ல
அட்வைஸ் தேவை!!
CONSOLIDATE ALL YOUR CREDIT CARDS
& OTHER HIGH INTEREST DEBTS!
LOWER YOUR MORTGAGE PAYMENTS!
CALL NOW:
(416) 716-8707
தயா PK கந்தையா BAS, ABR®
Principal Mortgage Broker
FSCO LIC# M08001083
CENTUM™ Rapid Mortgages Inc.
FSCO LIC #10158
- WWW.CENTUMRAPID.COM -
Scotiabank
CIBC
TD Canada Trust
FirstLine MORTGAGES
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
HOME TRUST
STREET CAPITAL
211-80 NASHDENE RD • TORONTO, ON • M1V 5E4 • BUS: 416-644-3555 • FAX: 866-696-3893
Interest rates are subject to change without notice. Rates based on individual credit worthiness and income. Some other conditions may apply, call for details

இசை, நடனம் பயில விரும்புபவர்களுக்கு அரிய வாய்ப்பு!!!

# VARNAM ACADEMY OF FINE ARTS & TECHNOLOGY

## வர்ணம் நுண்கலைப் பயிலகத்தின் புதிய இசை, நடன வகுப்புகள்

தமிழர் பாரம்பரிய முறைகளிலும், மேற்க்கத்தேய இசை முறைகளிலும், பல்கலைவித்தகர், இசைக்கலைமணி **வர்ண-ராமேஸ்வரன்** அவர்களுடன் இணைந்து, பல முன்னணி ஆசிரியர்கள் இசை, மற்றும் வாத்திய கருவிகளையும் கற்றுத் தருகிறார்கள்.




*** Vocal Carnatic**
*** Pann isai**
*** Violin**
*** Veena**
*** Mirudhangam**
*** Tabla**
*** Piano**
*** Keyboad**
*** Guitar**
*** Drums**
*** Music Theory**
*** Dance**







**28-09-2009** திங்கள் கிழமை விஜயதசமி தினத்தில் புதிய மாணவர்களுக்கான இசை, நடன, வாத்திய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன




காலம் -: **28-09-2009** திங்கட் கிழமை

நேரம் -: **4.00 pm – 8.30 pm** வரை

இடம் -: **1199** Kennedy road (Kennedy & Lawarence), Everest Banquet Hall

பின்வரும் இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன

* Midland & Ellesmere
* McCowan & Denison
* Nellson & Finch
* Dundas & Hwy 10
* Dixie & Meyer side
* Dixe & Bovaird Drive

(Contact -: VarnaRameswaran) 647-893-4010 / 416-265-8884

**www.varnam.ca / www.varnamonline.com**

மேலுள்ள எமது இணையத்தளத்தில் மேலதிக விபரங்களை பார்வையிடலாம்

# மலேசியக் ‘கறி’ யிடம் மண்டியிட்ட மக்டொனால்ட்ஸ்

- கந்தசாமி கங்காதரன் -

பரிசுத்த வேதாகமத்தில் சாமுவேல் எழுதிய முதலாவது நற்செய்தியில், மிக இளவயதுடைய தாவீது (David) வயதில் மூத்த, இராட்சதத் தோற்றத்தைக்கொண்ட கோலியாத்தைத் துணிவுடன் எதிர்கொண்டு வெற்றி பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சிறு வயதில் பாடப்புத்தகத்திலும் படித்திருக்கின்றோம்.

தனியாள் ஒருவர் அல்லது மிகச் சிறிய நிறுவனமொன்று சமூகத்தில் வலுவான செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கும் ஒருவரையோ மிகப்பிரமாண்டமாக வியாபித்திருக்கும் நிறுவனமொன்றையோ எதிர்த்து வெற்றி பெறும்போது கோலியாத்தைத் தாவீது வெற்றி கொண்டமையோடு ஒப்பிடுவது காலகாலமாக இருந்துவரும் மரபு.

அண்மையில் செய்திகளில் பரபரப்பாக அடிபட்ட தாவீது - கோலியாத் மோதலில் ஒரு மலேசியத் தமிழர் குடும்பம் தொடர்புபட்டிருக்கின்றது. கோலாலம்பூரில் திரு.பி.சுப்பையா என்ற மலேசியத் தமிழர் 1999இல் McCurry என்ற துரித உணவகம் ஒன்றை ஆரம்பித்தார். இந்தப் பெயரிலுள்ள Mc என்ற முன்னிணைப்பு உலகம் முழுவதும் 3,1000க்கும் மேலான கிளைகளைக் கொண்டியங்கும் பல்தேசிய நிறுவனமான McDonald'sஇன் கண்களை உறுத்தியது. 2001இல் McCurryக்கு எதிராக வழக்குத் தாக்கலானது.

Mc என்ற இந்த துண்டுக்காக பல்வேறு நாடுகளிலும் நீதிமன்றம் ஏறி இறங்கி பல வழக்குகளில் வென்று, சில வழக்குகளில் தோற்ற பெருமை McDonald'sக்கு உண்டு.

பிலிப்பைன்ஸ் இல் Cebu City என்ற நகரில் 1987ஆம் ஆண்டில் MacJoy என்ற துரித உணவகம் தொடங்கப்பட்டது. 5 ஆண்டுகளின் பின்பு, அந்நகருக்கு McDonald's தனது ஆதிக்கத்தையும் கூடவே MacJoyக்கு எதிரான வழக்கையும் கொண்டுவந்தது. பெப்ரவரி 2007இல் அந்நாட்டு உச்ச நீதிமன்றம் McDonald'sக்குச் சாதகமாக வழங்கிய தீர்ப்பு MacJoy, MyJoy ஆக மாறவேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது.

1994இல் அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ பகுதியில் 17 ஆண்டுகளாக இயங்கிவந்த Elizabeth McCaughey என்ற அம்மையாரின் சிறு வணிக நிறுவனம் McCoffeeயின் பெயர் மாற்றப்பட வேண்டிய நிலையை McDonald's தொடுத்த வழக்கு உருவாக்கியது. தனது பெயரின் ஒரு பகுதியைத் தனது வணிக நிறுவனத்தின் பெயரில் வைத்திருக்க முடியாத கையறுநிலை. “எனது பெயரின் சிறிய c எழுத்தை வணிகமயமான அமெரிக்காவுக்குத் தாரைவார்க்கும் கணம் இது” என்று நொந்து போய்ச் சொன்னார் அந்த அம்மையார்.

1996இல் ஸ்கொட்லாந்தில் McMunchies என்ற சிறிய சான்ட்விச் கடையொன்றின் பெயரும் McDonald'sஇன் கண்களிலிருந்து தப்பவில்லை. “தெரிந்தோ தெரியாமலோ Mc என்ற பதத்தைப் பயன்படுத்துவோர் தங்களுக்கு உரிமையில்லாத ஒன்றைப் பயன்படுத்துகின்றனர்” என்று திமிராகப் பதில்சொன்னது McDonald's.

இப்படியாக Mc அல்லது Mac என்ற பதங்கள் எங்கு காணப்பட்டாலும் அடாவடித்தனமாக அவற்றுக்கு உரிமை கொண்டாடியது McDonald's.

எல்லா வழக்குகளிலும் வென்றதா?

இல்லை. மூக்குடைபட்ட சம்பவங்களும் உள்ளன.

டென்மார்க்கில் Allan Pederson என்பவர் ஸ்கொட்லாந்திற்குச் சுற்றுலாச் சென்றிருந்த வேளையில் புகழ்பெற்ற ஸ்கொட்ச் விஸ்கி MacAllan'sஇன் வடிசாலைக்கும் சென்று பார்த்திருந்தார். பின்பு தனது ஊரில் ஒரு சான்ட்விச் கடையைத் தொடங்கும் எண்ணம் கொண்டார். Allan என்ற தனது பெயரையும் தனது அபிமான MacAllan's விஸ்கியில் Mac என்ற சொல்லையும் கலந்துகட்டி, Mc Allan என்ற பெயரை முடிவுசெய்தார். வணிகத்தைப் பதிவுசெய்வதற்கு முன் MacAllan's விஸ்கி உற்பத்தியாளர்களைத் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு இந்தப் பெயரைத் தனது சான்ட்விச் கடைக்குச் சூட்டுவதில் ஏதாவது பிரச்சினை இருக்கிறதா என்று விசாரித்தார். தங்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லையென்றனர் அந்நிறுவனத்தினர். சான்ட்விச் கடை தொடங்கப்பட்ட பின் McDonald's திடுதிப்பெனக் களத்தில் குதித்தது.

வெறுங்கையோடல்ல – வழக்கொன்றோடு.

“தனி மனிதரொருவரால் நடத்தப்படும் சிறு வணிகத்திற்கும் உலகளாவிய வகையில் பரந்து விரிந்திருக்கும் பல்தேசிய வணிக சாம்ராச்சியத்திற்கும் உள்ள வேறுபாட்டை நுகர்வோர் நன்கறிவர். McAllan என்ற சான்ட்விச் கடையில் பெயர் McDonald'sக்குப் பாதிப்பை உருவாக்கப்போவதில்லை. McAllanக்கு McDonald's வழக்குச் செலவுகளைக் கொடுக்கவேண்டும். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யமுடியாது” என்று சம்மட்டி அடியாகத் தீர்ப்பு வழங்கியது டென்மார்க்கின் உச்ச நீதிமன்றம்(1996).

இங்கிலாந்தில், இலண்டன் மாநகரில் Mc-China Wok Away எனும் சிறிய சீன உணவு வணிகமொன்றின்மீதும் McDonald's கைவைத்து நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டது. Mc என்ற முன்னிணைப்பு தனக்கேயுரியது என்றது McDonald's. 9 ஆண்டுகாலம் இழுபட்ட வழக்கில் McChina என்ற பெயரை McDonald's என்ற பெயரோடு நுகர்வோர் குழம்பிக்கொள்வார்கள் என்ற வாதத்தை ஏற்க முடியாது” என்று தீர்ப்பளித்தது நீதிமன்றம். அதிரடி என்னவென்றால் “Mc என்ற முன்னிணைப்புக்கு McDonald's எந்தவிதத்திலும் உரிமை கோரமுடியாது” என்ற இலவச இணைப்புத்தான்!

இப்படியாக பல வழக்குகளில் வென்றும் சில வழக்குகளில் அடிவாங்கியும் McDonald's திருந்தியதா?
அறுதியும் உறுதியுமாக - இல்லை!

> “ஸ்கொட்டிஷ் மொழியில் *Mac* என்பதும் ஐரிஷ் மொழியில் *Mc* என்பதும் ஒரேபொருள் தருவன. பெயருக்கு முனனால் *Mc* அல்லது *Mac* சேர்ந்து வரும்போது இன்னாரின் மகன் என்பது பொருள்.”




மலேசிய McCurry நிறுவனத்திற்கெதிரான McDonald's நிறுவனத்தின் சட்டநடவடிக்கையும் எட்டாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்தது. அதிலும் மண்கௌவியிருக்கின்றது வணிக ஏகாதிபத்திய மனப்பான்மை.

Malaysian Chicken Curry என்பதன் சுருக்கம் தான் McCurry என வாதிட்டது சுப்பையா தரப்பு. 2006இல் மலேசிய நீதிமன்றமொன்று, “McCurry இயிலுள்ள Mc என்ற முன்னிணைப்பு McCurry வணிக அடையாளத்திலுள்ள McDonald's நிறுவனத்திற்கேயுரித்தான(?) வண்ணங்களும் நுகர்வோரைக் குழப்பும், ஏமாற்றும்” என்று தீர்ப்பளித்தது. McCurry, M Curry என்றானது. ஒரு ‘c’யை அகற்றுவதற்காக ‘ச்சீ’ எனுமளவிற்கு McDonald's தாழ்ந்து போனது. McCurry தரப்பு… அல்ல M Curry தரப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குப் போனது. ஏப்ரல் 2009இல் மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பை மேல்முறையீட்டு நீதிமன்றம் புரட்டிப்போட்டது. M Curry உரிமையாளர் சுப்பையா கடையின் வாசலில் ஏணிவைத்து ஏறி பெயர்ப்பலகையில் ‘c’ எழுத்தை மீள ஒட்டும் படங்கள் ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றன. M Curry பழையபடி McCurry ஆனது. McDonald's ஓயவில்லை. மலேசிய உச்சநீதிமன்றத்திற்குப் போனது.

போனமாதத் தொடக்கத்தில் ஒருநாள், “McCurry நிறுவனம் Mc என்ற பதத்தைப் பயன்படுத்தலாமென மலேசியாவின் வேறொரு நீதிமன்றம் சொன்ன தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யமுடியாது. McCurry நிறுவனத்திற்கு McDonald's நிறுவனம் 10,000 மலேசிய ரிங்கிட்களை ($3,145) வழக்குச் செலவுகளுக்காக கொடுக்க வேண்டும்” என்று தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்போடு சட்டத்தின் நெடுஞ்சாலைகள், பெருவீதிகள், குச்சொழுங்கைகள்,

70ம் பக்கம் பார்க்க...

# சேமமான சாரதி

### கவனமான சாரதி:

சென்ற மாத தாய்வீடு பத்திரிகையில் ஆசனப்பட்டியை அணிவதன் முக்கியத்துவத்தைப்பற்றி கவனித்தோம். இம்முறை வேறுசில சாதனங்களின் பயன்பற்றிக் கவனிப்போம்.

### கட்டளை 7
### பயனுள்ள சாதனங்கள்:

பயனுள்ள சாதனங்கள் என்றவுடன் முதலில் நினைவுக்கு வருவது குழந்தை ஆசனங்கள். வாகனங்கள் தயாரிக்கும் வேளை அவற்றை வளர்ந்தவர்களுக்காகவே தயாரிப்பார்கள். ஆகவே குழந்தைகள் வளர்ந்தவர்களுக்கான வாகனத்தை பாவிக்கும்வேளை முதலாவதாக கவனிக்கவேண்டியது ஆசனங்களே. இங்கு நான் முக்கியமாக குறிப்பிட விரும்புவது மாகாணத்திற்கு மாகாணம் சட்ட நிபந்தனைகள் மாறினாலும் நீங்கள் உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பை கவனிக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். அவர்கள் எடை, உயரம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு குழந்தை ஆசனங்களை பெற வேண்டும். இரண்டு வயதில் பாவித்த ஆசனத்தை ஐந்து வயதிலும் பாவித்து பணத்தை மீதம் செய்வதாக முட்டாள்தனமான செயலில் ஈடுபடவேண்டாம்.

அடுத்து முக்கிய பயனுள்ள சாதனம் ABS Drake. இவை வாகனம் சறுக்குவதை தவிர்க்கும் சாதனமாகும். முக்கியமாக பனிபெய்யும் வேளையிலும், மழைபெய்யும் வேளையிலும் வாகனம் இழுத்துக்கொண்டு சென்று விபத்துக்குள்ளாகியது என்று குறைபடுவர். ஆனால் உண்மையில் பாதையில் உள்ள காலநிலை காரணமாக உங்கள் வேகம் அதிகம் என்பதே. ABS Brakeகள் விட்டு விட்டு பிரேக்கை பிடிப்பதால் சறுக்குவதை தவிர்க்கும். ஒரு நல்ல ஓட்டுனர் விட்டுவிட்டு அழுத்துவதால் இதே விளைவை ஏற்படுத்தலாமானாலும், வாகனம் செலுத்தவதை கவனித்துக் கொண்டு இப்படி விட்டுவிட்டு பிரேக்கை அழுத்துவதற்கு விசேட பயிற்சிவேண்டும். உதாரணத்திற்கு கோயில்களில் தீபம்சுற்றிக் காட்டும் வேளையில் மற்றக் கை மணி அடிப்பதற்கு விசேட பயிற்சி வேண்டும். கோவில் பூசகரல்லாதவர் இப்படிச் செய்ய முயன்றால் பார்க்கச் சகிக்காது. எல்லாம் ஒரு பயிற்சியே. அப்படி பயிற்சியில் நேரம் செலவிட முடியாதவர்கள் இப்படியான ABS brake உள்ள ஒரு வாகனம் பெற்றுக்கொள்வது உசிதம். இன்னுமொரு விடயத்தை மறக்கவேண்டாம். ABS brake உள்ள வாகனம் விட்டுவிட்டு அழுத்துவதால், நாமாக நிற்பாட்டுவதைவிட விரைவாக நிற்பாட்டலாம் என்று நினைக்க வேண்டாம். ABS brake உள்ள வாகனத்தை செலுத்துபவர் தனது முழுக் கவனத்தையும் வாகனம் செல்லும் திசையை கவனிப்பதில் செலுத்தலாம். ABS Park உள்ள வாகனத்தை பெற்றவர்கள் அதுபற்றிய விடயங்களை தெளிவாக படித்துக் கொள்வதவசியம். அதிகமானவர்கள் Owners Manuelஇல் என்ன இருக்கிறது என்று படிப்பதேயில்லை. அறியாமைக்கு ஒருவிதமான தீர்வுமில்லை.

### Air bags (காற்றுப்பை)

வாகனங்களில் உள்ள காற்றுப்பை பற்றி பல விடயங்களை அறிந்திருப்பது மிக மிக அவசியம். முதல் முக்கிய விடயம் காற்றுப்பை விரிவது நீங்கள் பலூன் ஊதும் வேளையில் போல் மெதுவாக விரிவடையாது, திடீர் என்று பயங்கரமாக விரிவடையும். வாகனம் அடிபட்டவுடன் உங்கள் முகம் Steering அல்லது Widescreenஇல் அடிபட்டு ஏற்படும் காயத்திலும் பார்க்க இது எவ்வளவோ குறைவாயிருக்கும். இதனால் தான் ஆசனத்தை இயன்றளவு பின்னால் நகர்த்தி அமருமாறு அறிவுறுத்துவார்கள். இதுபற்றிய விளக்கம் உங்கள் Owners Manualல் தெளிவாக கூறப்பட்டிருக்கும். முக்கியமாக கட்டையானவர்கள் இதுபற்றித் தெளிவாக வாசித்தறிவது அவசியம்.

இன்று பலர் உயிருடன் வீதியில் நடக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் Air bag

## தொடர் - 5



செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

எனப்படும் காற்றுப்பை என்றால் மிகையாகாது. ஆனால், அதற்காக ஆசனப்பட்டியை மறந்துவிட வேண்டாம்.

### கட்டளை 8

சிவப்பு விளக்கிற்கூடாக செலுத்த வேண்டாம். சிவப்பு விளக்கூடாக வாகனம் செலுத்துபவர்களை இரு குழுக்களாக பிரிக்கலாம்.

- முதலாவது பகல் கனவு கண்டுகொண்டு கவனயீனமாக வாகனம் செலுத்துபவர்கள்.
- இரண்டாவது குழுவில் பொறுமையில்லாமல் வேகமாக வாகனம் செலுத்துபவர்கள்.

எம்மில் சிலர் இந்த இரு குழு சாரதிகளின் தவறையும் செய்பவர்கள். ஆனால் இப்படி சிவப்பு விளக்கிற்கூடாக செலுத்துபவர்கள் பல 100 பேர் மரணத்திற்கு காரணமாயுள்ளார்கள் என்றால் வியப்பில்லை.

### சிவப்பு விளக்கிற்கூடாக வாகனம் செலுத்துவது என்றால் என்ன?

ஒரு சந்தி விளக்கு சிவப்பாய் இருக்கும் வேளையில் அந்த சந்திக்குள் வாகனத்தில் பிரவேசித்தார் என பொருள்படும். ஆனால் சந்தி என எது குறிப்பிடப்படுகின்றது என்பது பற்றிய தெளிவின்மை ஒரு முக்கிய காரணமாகும். ஆனால் சந்தேகம் இருப்பின் சந்திக்குள் வாகனத்தை செலுத்தாதிருப்பதே சிறந்த கொள்கையாகும்.

அநேகமான வாகனங்களில் நீங்கள் பச்சை விளக்கில் அல்லது மஞ்சள் விளக்கெரியும் வேளையில் சந்தியில் பிரவேசித்துவிட்டால் நீங்கள் பயணத்தை தொடரவேண்டும் என சட்டம் கூறும். அதாவது, நிறம் சிவப்பாக சந்திக்குள் இருக்கும் வேளை மாறினால் நிற்பாட்டவோ அல்லது பின்நோக்கி நகர்த்தவோ கூடாது. இங்கு சட்டம் என்பதிலும் விபத்தை தவிர்ப்பதே முக்கிய விடயம் என்பதை மறக்க வேண்டாம்.

கவனமான சாரதிகள் மத்தியில் ஒரு வாசகம் உண்டு. பச்சை விளக்கை எதிர்பார்த்தவர் சிவப்பு விளக்கை முந்த முற்பட்டவரை சந்தித்தார் என்று. இவர்கள் விபத்து பெரும் பாலும் ‘T’ போல் விபத்துக்குள்ளானவர்கள். அதாவது வாகனங்கள் 90 பாகையில் மோதும். பொதுவாக இவர்கள் வேகமாக சந்தியைக் கடக்க முற்பட்டு வேகமாக சந்தியில் மோது வார்கள். இத்தகைய விபத்துக்கள் பெருமளவு மரணத்தில் முடியும். வேகமாக ஓடி Ogdon இற்கும் High Landஇற்கும் வேகமாகச் செல்வதில் என்ன தேவையோ!

சந்திக்கு வரும் வேளை மிக அவதானமாக இருங்கள். மஞ்சள் விளக்கு எரிந்தால் நிற்பாட்டுங்கள். விளக்கு மாறும் என்று எதிர்பார்த்து வாகனத்தைச் செலுத்தினால் நிறுத்துவதில் ஏதும் சிரமம் இருக்க முடியாது. பச்சை விளக்காய் உங்களுக்கு இருந்தால் சிவப்பு விளக்கை முந்துவர் யாரும் உள்ளனரா என்று பாருங்கள். பின் இடதுபார்த்து வலதுபார்த்து மீண்டும் இடதுபார்த்து சந்திக்குள் பிரவேசியுங்கள். இந்த சிவப்பு விளக்கை முந்த முயல்பவர்கள் பொதுவாக வேகமாக வாகனத்தைச் செலுத்துவார்கள்.

நாளைக்கும் நீங்கள் வாகனம் செலுத்த வேண்டும் அல்லவா? எனவே அவதானமாக சந்தியில் வாகனத்தை செலுத்தி அடுத்த கட்டுரையை ஆரோக்கியமாய் வாசியுங்கள்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

KathirHomes
Design group
DIV. OF 1780681 ONTARIO LTD.
Build Your Dream Home
கனவு மனை ஒன்றை
புதிதாய் கட்டி வாழ்ந்திட



Design & Construction
416 856 6900
Custom home Design
Building permit
Committee of adjustment
Kathir
S Kathirgamanathan P.Eng.



## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

### ஒக்ரோபர் மாதக் குறிப்புகள்

- நன்றி செலுத்தும் நாள் (Thanks Giving Day) ஐப்பசி 12ம் திகதி விடுமுறையை கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- ஹலோவீன் (Halloween) ஐப்பசி 31ம் திகதி உடைகள் மற்றும் முகமூடிகளை முன் கூட்டியே வாங்குவதனால் நல்லவற்றை வாங்க முடியும்.
- ஹலோவீனுக்காக உங்கள் யன்னல்களை அலங்காரப்படுத்துங்கள்
- வீட்டின் புகைபோக்கிகள், காற்று மற்றும் வெளிச்சம் வரும் துவாரங்களை சரிபாருங்கள்.
- விடுமுறை நாட்களுக்கான பிரயாண திட்டங்களை உருவாக்குங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி குளிரூட்டியையும் கனலடுப்பையும் சுத்திகரியுங்கள்.
- இருட்டுத் திரைச்சேலைகளை (Blinds) கழுவி சுத்திகரியுங்கள்.
- இம் மாத கடைசி வாரத்தில் நேர மாற்றம் இடம்பெறவிருக்கிறது. மணிக்கூடுகளை அதற்கேற்ப சரிசெய்யுங்கள்.
- வீட்டிலுள்ள வெள்ளி, செம்பு, பித்தளை, கிறிஸ்டல் அலங்காரப் பொருட்களை சுத்திகரியுங்கள்.
- வாயு வெப்பமேற்றியை பரிசோதியுங்கள். இது நீல நிற சுவாலையாக இருக்க வேண்டும். மஞ்சள் சுவாலை சிறிதளவில் அல்லது ஓரளவேனும் காணப்படாதிருத்தல் நல்லது.
- கராஜ் கதவுகளின் பிணைச்சல்களை சரிபார்த்து எண்ணெயிடவும்.
- புகைபோக்கிகளின் சிம்னிகளில் பறவைக் கூடுகள் மற்றும் ஏனைய தடைகள் காணப்படுகின்றதா என பரிசோதிக்கவும்.
- மென்மையான வருடாந்த பயிரை வீட்டினுள் அல்லது பச்சை வீட்டினுள் இடமாற்றவும்.
- தீந்தையிடப்பட்ட (Painted) சுவர் மற்றும் மேற்பரப்புகளில் ஈரலிப்பு பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறதா என பரிசோதிக்கவும்.
- குளிராக்கும் வெப்பமாக்கும் உபகரணத்தின் வெளிப்பகுதியில் இலைகள் மற்றும் ஏனைய கழிவுகள் சேர்ந்திருக்கின்றதா என சரிபாருங்கள்.
- வீட்டிற்கு வெளியே அலங்காரப்படுத்தும் அலங்கார விளக்குகளை குளிர் மற்றும் snow கொட்டுவதற்கு முன்பே இப்பொழுதே தயார்படுத்தினால், குளிருக்குள் நின்று அலங்காரப்படுத்துவதை தவிர்க்கலாம்.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல் போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள்அந்த மனக்கவலையை விடுங்கள். வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.



**Life**
Universal Life
Whole Life
Term Life

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**Critical Illness**
Upto 25
Illness

digi Media



Insurance Broker

# Guna Selliah

## 416.371.7776

Assumption Life

IA

RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

**Renewable Energy - Ecoaction**

# Eco Energyக்கு அரசிடம் பெறும் மானியம்

### சுற்றுப்புறச் சூழல் மேம்பாடும் பணஉதவிகளும்

வீடுகள், வர்த்தக மற்றும் வணிக நிறுவன கட்டிடங்கள், தொழிற்சாலை அமைப்புகள் ஆகியன பணஉதவி பெறுவதற்கு மாறுபட்ட விண்ணப்ப படிவங்கள் உள்ளன. கனடாவில் மாசு இல்லாத ஒரு தூய்மையான சுற்றுப்புறக் காற்றுச் சூழலை உருவாக்குவதே கனடியஅரசின் உண்மையான நோக்கமாகும்.

### வீடுகளுக்கான செயற்திட்டம்.

200,000க்கும் மேற்பட்ட வீட்டு உடமைக்காரர்கள் தங்கள் வீடுகளில் மரபுசாரா சக்தியை உற்பத்தி செய்வதற்கு, ஒரு குறிப்பிட்ட கால நேர விரிவாக்க செயற்திட்டத்தின் மூலம் இரண்டு வருடங்களில் 300 மில்லியன் டாலர் செலவிடப்படவிருக்கின்றது. தற்போதைய பணஉதவி 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் வீட்டு உடமைக்காரர்கள் ஒருவீட்டிற்கு 10,000 டாலர் பண உதவி பெறமுடியும். பலதரப்பட்ட நபர்கள் பயன்படுத்தும் சிறிய கட்டிடங்கள் திட்ட அளவுபடியும், 50 சதவீதம் அல்லது அதற்கும் மேலான தரையில் நிரந்தரமாக குடியிருந்தாலும் பணஉதவி பெறமுடியும். Natural Resources Canadaவால் அங்கீகாரம் வழங்கப்பட்ட சக்தி ஆலோசனையாளரிடமிருந்து இதற்காக வீட்டு சொந்தக்காரர்கள் மதிப்பீட்டு சான்றிதழ் பெற வேண்டும். தனியாக பிரிக்கப்பட்ட வீடுகள், வரிசையிலுள்ள வீடுகள், இரட்டைவீடுகள், மூன்று பிரிவுகளுள்ள வீடுகள் (triplexes) நகரும் வீடுகள், மற்றும் சிறிய குடியிருப்பு கட்டிடங்கள் ஆகியன சுற்றுப்புறச் சூழல் சக்தி செயற்திட்டம் சார்பாக பணஉதவிகள் பெறமுடியும். இந்த வீடுகளின் விலை மதிப்பீட்டில் அல்லாமல் சக்தியை மிச்சப்படுத்தும் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் தான் பண உதவி அளிக்கப்படும்.

### சுற்றுப்புறச் சூழல் சக்தி தொழில் நுட்ப செயல்துவக்கத் திறன்

### தூய்மையான எதிர்கால சக்திச் சூழலை உருவாக்குதல்

புத்தம் புதிய சக்தி தொழில் நுட்பங்களை உருவாக்கும் முயற்சிகள் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. அடுத்த தலை முறையினருக்கு தூய்மையான சக்தியை உருவாக்கும் தொழில் நுட்பங்களை உண்டு பண்ணுவதற்கு நிதிஉதவி மற்றும் தொடர்ச்சியான ஆராய்ச்சி செய்வது கனடியஅரசின் கடமையாகும் Hydrogen எரிபொருளை பயன் படுத்துவது எண்ணெய் எரிபொருளினால் மாசு அடைவதை தடுப்பது, சுத்தமான நிலக்கரியை பயன்படுத்துவது, Carbonஐ தனியாக பிரித்தெடுத்தல் போன்றவைகளுக்கான தொழில் நுட்பங்கள் இன்னமும் ஆரம்ப ஆய்வு நிலையிலேயே உள்ளன. காற்று சூரிய வெப்பம், கடல் அலைகள் மற்றும் biomass போன்ற ஆதார வளங்களிலிருந்து மரபுசாரா சக்தியை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பங்கள் சிறந்த செயல் துவக்கத்திறனால் அபிவிருத்தி அடையும்.

### பசுமையான எதிர்காலத்திற்கு மரபுசாரா எரிபொருள்கள்

மரபுசாரா எரிபொருள்கள் சம்பந்தமான கனடிய அரசின் சிறப்புதிட்டம் நான்கு முக்கியமான அம்சங்களை கொண்டுள்ளது.

- ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மரபுசாரா எரிபொருள்களை சில்லறை விற்பனையில் கிடைக்கச் செய்வது.
- கனடாவின் மரபுசாரா எரிபொருள்களின் உற்பத்தி அளவை அதிகரித்தல்.
- இந்த உற்பத்தி பிரிவில் புதிய வாய்ப்புகளை விவசாயிகள் பெறுவதற்கு உதவி செய்தல்.
- புதிய தொழில் நுட்பங்களை வியாபாரமயமாக ஆக்குதலை வேகப்படுத்துதல்.

### அமைச்சும் நிதி ஒதுக்கீடும்

உயிரியல் எரிபொருள்களின் உற்பத்தி அளவுகளை அதிகரிப்பதற்க செயல் துவக்கத்தில் புதிதாக 200 மில்லியன் டாலர் முதலீடு செய்யப்பட்டு அதில் 25 மில்லியன் டாலர் விவசாயிகளின் திட்டப்பணிகளுக்கு, உதவி தொகையாக வழங்கப்படவுள்ளது. அதை அவர்கள் சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்

உயிரியல் எரிபொருள்கள் உற்பத்தியை பெருக்குவதற்கு வேளாண் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக 10 மில்லியன் டாலர் நிதி உதவி திட்டமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுற்றுப்புறச்சூழல் உயிரின ரீதியான போக்குவரத்து (ECO Transport)

Canadaவின் சுற்றுச்சூழலையும் மற்றும் கனடிய மக்களின் ஆரோக்கியத்தையும் பேணிப்பாது காப்பதற்கும், மற்றும் நம் பொருளாதார வளத்தை மேம்படுத்தவும் eco transport செயற்திட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. அதன் சிறப்பான செயல்பாடுகள் எவையெனில்:

- நகரத்தின் பயணிகள் போக்குவரத்தை குறைப்பதற்கும் மற்றும் வேறுவகை போக்கு வரத்து வசதிகளை அதிகரிப்பதற்கும் eco MOBILITY செயற்திட்டம் நகராட்சிகளுக்கு உதவும்.
- நவீன தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ளவும் மற்றும் பரிசோதனை செய்யவும் eco Techonology என்ற வாகன செயற்திட்டம் உதவும். மேலும் Canada முழுவதும் பொதுமக்கள் கூடும் இடங்களில் இது சம்பந்தமான கண்காட்சிகள் நடத்தப்படும்.
- போக்குவரத்தினால் சுற்றுச்சூழல் மாசடைவதை குறைப்பதற்கு நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி ஆரோக்கியமான போக்குவரத்து வசதியை உருவாக்குவதே eco Freight செயற்திட்டத்தின் நோக்கமாகும்.
- Canada அரசின் ஒரு அங்கமாகிய சுற்றுச்சூழலை பாதுகாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மரபுசாரா எரிபொருள்களை பயன்படுத்தும் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு, கனடிய மக்களுக்கு உதவும் நோக்கத்தில் eco Auto விலை தள்ளுபடி செயற்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- தீங்கிழைக்கும் அசுத்தமான gas வெளியேறுவதையும் மற்றும் எரிபொருள் செலவை குறைப்பதற்கும், அரச மற்றும் தனியார் வர்த்தக போக்குவரத்து நிறுவனங்களுக்கும் உதவும் நோக்கத்தில் eco Energy for Fleets செயற்திட்டம் தொடங்கப்பட்டது. தகவல் பரிமானம், பட்டறைகள் மற்றும் பயிற்சி மூலம் எரிபொருள் செலவை மிச்சப்படுத்துவது பற்றிய உதவிகள் வழங்கப்படும்.
- சுற்றுச்சூழலை மாசுபட வைத்து தட்பவெப்ப நிலையை மாறுதலடையச் செய்யும் Green house gasகள் அதிக அளவில் வெளியேறுவதை குறைக்க கனடிய மோட்டார் வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களை வாங்குவதற்கும், ஓட்டுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் தேவையான அறிவுரைகளை வழங்குதல், அதன் மூலம் எரிபொருள் செலவை மிச்சப்படுத்துதல் ஆகியன eco Energy for personal Vehiclesன் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

### சுலபமாக சென்றடையும் eco Mobility செயற்திட்டம்

நகராட்சிகளுக்கு உதவி செய்வதின் மூலம் நகரத்தில் உள்ள பயணிகள் போக்குவரத்து வாகனங்களிலிருந்து வெளியேறும் gasகளை குறைக்கும் நோக்கத்தில் இந்த செயற்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. வாகனங்களில் செல்வதற்கு பதில், நடந்து செல்வது, சைக்கிலில் செல்வது, பொதுத்துறை பேருந்துகளில் செல்வது, பலபேர் சேர்ந்து காரில் செல்வது போன்ற செய்கைகளின் மூலம் தீங்கிழைக்கும் அசுத்தமான gasகள் வெளியேறுவதை வெகுவாக குறைக்கமுடியும். மேலும் போக்கு வரத்து நெரிசலை தவிர்க்க முடியும் மற்றும் தனிப்பட்ட ஆரோக்கியத்தை பேணிகாப்பற்ற முடியும்.

### eco Mobility செயற்திட்டம் இரண்டு முக்கியமான அம்சங்களை கொண்டது.

போக்குவரத்து மேலாண்மை திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பண உதவி செய்தல்.

தனிப்பட்ட வாகனத்தில் பயணம் செய்து, போக்குவரத்து நெரிசலையும் மற்றும் அதிக எண்ணிக்கையில் நீண்ட வரிசையில் செல்லும் கார்களின் நீளத்தையும் குறைத்து நேர மற்றும் பாதை நெருக்கடிகளையும் சமாளித்து, அசுத்தமான gasகள் அதிக அளவில் வெளியேறுவதை தடுப்பதற்கு, நகராட்சிகளுக்கும் மற்றும் மாநில போக்குவரத்து நிறுவனங்களுக்கும் இந்த செயற்திட்டம் நிதி உதவி அளிக்கும்.

### செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய திறமையை வளர்ப்பதற்கு தேவையான ஆராய்ச்சி மற்றும் தகவல் (TDM)



K. கண்ணன்
- Marketing Director -

ஆராய்ச்சி, பயிற்சி, மற்றும் ஆதாரவளங்கள் ஆகியன மூலம் TDM நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, தேவையான தேசிய அளவிலான திறமையை அடைவதற்கு இந்த செயற்திட்டம் உதவும். இந்த செயற்திட்டத்தைப் பற்றிய மேலும் கூடுதல் விபரங்களுக்கு கீழ்வரும் இணைய தளத்தில் தேடுங்கள். http;//www.tc.gc.ca/programs/environment/ecomobility/menu-eng.htm

### வாகனங்களுக்கான eco தொழில்நுட்பம்

Canada அரசு வாகனங்களுக்கான eco தொழில் நுட்பத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இலகுரக வாகனங்களில் (light duty vehicles) பயன்படுத்துவதற்கு புத்தம் புதிய செயல் நுட்பங்களையும் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயல்முறைகளையும் ஆழ்ந்த பரிசோதனைக்குப்பிறகு கனடிய அரசு உருவாக்கியுள்ளது.

Canada முழுவதிலும் உள்ள இடங்களில் சுற்றுச்சூழலுக்கு சாதகமாக இந்த புதிய தொழில் நுட்பங்களை பலரும் பார்க்கும்படி கண்காட்சியில் வைப்பதற்கு கனடிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கனடியர்கள் தங்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். மேலும் இந்த செயற்திட்டத்தின் இன்னொரு முக்கியமான நம்மை எதுவெனில், canadaவின் சுற்றுச்சூழல் ரீதியான தொழில் நுட்பங்களை தடைகளையும் வரம்புகளையும் கடந்து அறிமுகப்படுத்துவதற்கும் canada முழுவதிலும் நவீன தொழில் நுட்பங்களை automobile industryல் புகுத்துவதற்கும், புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கும் இது வழிவகை செய்யும்.

### சுற்றுப்புறச்சூழலில் சமநிலை சமுதாயங்களை உருவாக்கும் செயல் துவக்கத்திறன்

அண்மையில் கனடிய அரசால் ஆரம்பிக்கப்பட்ட சமநிலை சமுதாய செயற்திட்டம் 4.2 மில்லியன் முதலீட்டை கொண்டது. சமுதாய நலத்திட்டங்களையும் மற்றும் ஆரோக்கியமான சமுதாயங்களையும் உருவாக்கும் நோக்கத்தில் சிறந்த செயல் துவக்கத்திறனுடன் கனடிய அரசு இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதற்காக தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு சமுதாய திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படும். Canadaவின் குடியிருப்பு கட்டிடங்களை திட்டமிடுபவர்கள், வளர்ச்சி அடையச்செய்பவர்கள், வடிவமைப்பவர்கள், மற்றும் நகராட்சிகள் ஆகியோரின் திறமைகள் மற்றும் புதுமை செயல்கள் கண்காட்சியில் தெரிவிக்கப்படும்.

kannan.k@thaiveedu.com

...

www.inayam.net


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSi
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S 0C2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி


மூலிகைத் தயாரிப்புக்கள்
புதிய டிசைன்களில்
சபோனா காப்புகள்
Ervamatin
POWER
SHAMPOO
OPIBRA
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Tel: 416•264•8787
SABONA
& Gift
க்லூட்டியலா பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும் வழிவகுக்கிறது.
Gluteala
டயபீனா இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியது. கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.
Diabina
கொன்சிடாப் மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது.
Consitap
இயற்கை மூலிகையிலான
தலை முடி மை
HENNA
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
LongLife
லோங்லைஃப் இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம்.
www.dreamron.ca
www.mediherbs.ca
இங்கேயும் விற்பனையாகின்றன!
மிக விரைவில் ஐரோப்பா எங்கும் விற்பனையாகவிருக்கின்றன
New Spicy Land
416 292 9769
Daily Needs
416 490 7703
Jaffna Super Store
416 289 8812
M&S Convenience
416 444 8202
Eera Super Market
416 269 2622
Durcaa Supermarket.
905 796 6762
Amazon
Health Care
www.amazonhealthcare.com 2602, Eglinton Ave East (Midland/ Eglinton)
JayaCS•416•275•0070

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# கடந்த மாதத்தில்...




கனடியத் தமிழர் பேரவையினரால் நேயுற்ற சிறார் அமைப்புக்கான 'கனடியத் தமிழர் நிதி சேர் நடை' (செப்ரெம்பர் 20, 2009)



அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி, லலிதாஞ்சனா கதிர்காமனின் மாணவிகளான ஆர்த்தி ஜெயசிங்கம், அனந்தி ஜெயசிங்கம் ஆகியோரின் அரங்கப்பிரவேச நிகழ்ச்சியில்





அமெரிக்க துணைத்தூதுவராலயம் முன்பாக, தொடர் கவனயீர்ப்பின் 150வது நாள் மக்கள் போராட்ட நிகழ்வில் "விழி தூங்கோம்". (செப்ரெம்பர் 19, 2009)



தமிழர் செந்தாமரை ஆதரவில், முனைவர் இ. பாலசுந்தரம் அவர்களின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா செப்ரெம்பர் 19





705 புரோகிரஸ் சாலையில் அமைந்துள்ள போரால் பாதிக்கப்பட்டோருக்கும், மனித உரிமைகளுக்குமான நடுவத்தின் அலுவலக திறப்பு விழாவில். (செப்ரெம்பர் 12, 2009)



தமிழர் மக்களாட்சி உரிமைக்கான கனடியர் (C.D.R.T) அமைப்பின் சிறுவர் கலை பட்டறையும் விழிப்புணர்வும் நிகழ்வும்



கனடியத் தமிழர் சமூகமும் கனடிய மாணவர் சமூகமும் முன்னெடுத்த "உன்மையைப் பேசவிடு" ஆர்ப்பாட்ட ஒன்றுகூடலில். (செப்ரெம்பர் - 04 - 09)




மீன் பாடும் தேனாட்டாரின் ஒன்றுகூடலில் செப்ரெம்பர் 05, 2009

இப் பகுதியில் உங்கள் விழாக்களின் படங்களும் இடம்பெறவேண்டுமாயின் விழா யாரால், எங்கு, எப்போது நடைபெற்றது என்னும் விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்கள் நிகழ்வுகளை பார்ப்பதற்கும் பதிவதற்கும் www.inayam.net**

# பொருளாதாரமும் பொருளாதார நெருக்கடியும்


அலன் சிவசம்பு

- வீடு விற்பனைப் பிரதிநிதி -




பொருளாதார நெருக்கம் உருவாகிவிட்டதை எங்களால் உணரக்கூடியதாக இருந்தாலும், பொருளாதார நெருக்கம் உருவாகிவிட்டது என்பதை Statistics Canada சில ஆதாரங்களைக் குறிக்கோள் காட்டி பொருளாதார நெருக்கம் வந்துவிட்டது என நிர்ணயிப்பார்கள்.

வேலை அற்றோரின் எண்ணிக்கையின் வீதம், பொருட்கள் வாங்குவோரின் (நுகர்வோர்) வீதம் குறைவது கனடாவின் ஏற்றுமதி குறைந்துள்ள வீதம் போன்றவற்றைக் கண்ககிட்டு, கனடாவில் recession வந்துள்ளது என அறிவிப்பார்கள். ஆனால், எமது பொருளாதார நெருக்கடியை, அமெரிக்காவோடு ஒப்பிடும் போது கனடா நல்ல நிலையில் உள்ளதெனக் கூறலாம். இருந்தாலும் எமது ஏற்றுமதியின் முக்கிய பங்காளர்கள் அமெரிக்காவாக இருப்பதினால் எம்மால் பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்ப முடியாது உள்ளது.

ஆகவே பொருளாதார நெருக்கடி என்றால்...

## பொருளாதார நெருக்கடி என்றால் என்ன?

கைத்தொழில் உற்பத்தியின் நிலைப்பாடு Gross Domestic Product (GDP, அதாவது நாட்டின் பொருளாதாரத்தின் நிலைமை). செய்து முடிக்கப்பட்ட பொருட்களினதும், Service Industryகளின் தற்போதைய Market Valueவையும் வைத்துக் கணிக்கப்படும். அத்துடன்

- வேலை செய்பவர்களின் எண்ணிக்கை,
- பணவீக்கம் (எமது வருமானத்துடன் ஒப்பிடுதல்),
- வியாபாரத்தின் நிலை.

இவை தவிர வேறு கணிப்பீடுகளும் இருந்தாலும் மேலே குறிக்கப்பட்ட பிரச்சினைகள் பொதுவாக பொருளாதார நெருக்கடி உருவாகியதையோ அல்லது பொருளாதார நெருக்கம் தனிவதையே அறிய முடியும்.

இதனைத் தொடர்ந்து, இந்த நிலையுடன் இரண்டு காலாண்டோ (ஆறுமாத காலப்பகுதி), அல்லது கூடிய காலாண்டு காலத்திற்கோ GDPல் வீழ்ச்சி ஏற்பட்டால் பொருளாதார நெருக்கடி (Recession) உருவாகிவிட்டதாகக் கணிக்கப்படும். இந்த Recession நிலை கட்டுப்படுத்த முடியாத நிலையாக உருவாகினால் அதை depression என அழைப்பார்கள். அத்துடன்

- Home Sales,
- Temporary Jobs,
- Retail Sales,
- Interest rate spreads,
- Equity Market,

போன்ற தகவல்களைப் பாவித்து பொருளாதார நெருக்கடியைக் கணக்கிடுவார்கள். 1945ஆம் ஆண்டில் இருந்து சராசரியாக பொருளாதார நெருக்கடி பத்து மாதங்களுக்கு மட்டுமே தொடர்ந்து இருந்தது. ஆனால், இம்முறை அமெரிக்காவின் நிலை விதிவிலக்காக உள்ளது.

ஆகவே நாம், பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க முடியாததாக இருப்பதால், அந்நேரத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதை அறிந்திருப்பது நல்லது. சில வர்த்தக நிபுணர்களின் கூற்றுப்படி பொருளாதார நெருக் கடிக் காலத்தில்

- அவசரப்பட்டு எந்த பொருளாதார முடிவையும் எடுக்கக் கூடாது.
- உங்களது Financial Advisor உடன் கதைத்தல்.
- உங்களது Portfolioஐ பலவகைப்படுத்தல்,
- முடிந்தால் உங்களது Mortgageஐக் குறைந்த வட்டி வீதத்திற்கு மாற்றுதல்,
- உங்களது Resum ஐப் புதுப்பித்தல்,
- இந்தக் காலகட்டத்திற்கு, குறைந்தது மூன்று மாதத்திற்கு தேவையான பணத்தை என்றாலும் ஒதுக்கிவைத்திருத்தல்.

இப்படியான காலகட்டத்தில் நாம் எவ்வாறு பொருளாதார நெருக்கடியை சமாளிப்பது என இருக்கும் நேரத்தில் பிழையான வழிளில் பணம் தேடுவதற்குச் சிலர் எத்தனிக்கலாம். இதனால் எமது Car Insurance, Home Insurance போன்ற பல அத்தியாவசியமான சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கும். காரணம் இப்பிழையான வழிகளில் பணம் எடுத்தாலும், நுகர்வோர் ஆகிய நாமே இவற்றையும் பங்கு போடும் நிலை ஏற்படும். இதில் முக்கியமாக நாம் கவலைப்படுவது Identity theft.

## Identity theft என்றால் என்ன

Identity theft என்றால் உங்களுக்குத் தெரியாமல், உங்களுக்குச் சொந்தமான பெயர், விலாசம், பிறந்த திகதி, Credit Cardன் இலக்கம் போன்றவற்றைச் சேகரித்து உங்களது பெயரில் சாமான்கள், வியாபார பொருட்கள், வீடு வாடகைக்கு எடுத்தல் போன்ற பல நடவடிக்கைகளுக்குப் பாவிக்கப்படலாம். இதனால் சில Finance நிறுவனங்கள் இதற்குரிய காப்புறுதியை வழங்குகின்றார்கள். இந்தக் காப்புறுதிகள் உங்களது பெயரில் ஏற்பட்ட பிரச்சினையை சட்ட நிபுணர்களை அணுகித் தீர்த்து வைப்பதற்குத் தேவையான செலவையோ அல்லது அவற்றினால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவிபுரியும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை, கனடாவில் பார்க்கும் போது வேலைவாய்ப்பு இல்லாமல் போவது வீட்டின் விலை அதிகரித்துக் கொண்டு இருப்பதும் மேலே பொருளாதார நிபுணர்களினால் குறிப்பிட்ட காரணங்களுக்கு ஒத்ததாக இல்லை. ஆகவே கனடாவில் தற்போது வேலைவாய்ப்பு இல்லாவிடினும் வீடுகளின் தேவை அதிகரித்துள்ளது ஒரு காரணமாக இருக்கலாம்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■





INPROBUS REALTY CORPORATION

Specialty Investment, Property and Business Brokers

**Convenience store in Mississauga for sale-**
8 years in business. $140,000 plus inventory. Sales on lottery plus ATM-$10-11k/month.

**Carole's Café Kitchen. Franchises now available for sale in Toronto, North York and Oakville.**
Offering the famous Carole's cheesecake and unique fresh and healthy homemade foods in an urban

**Art & framing business for sale in Oakville-**
Net Operating Income over $80,000/yr. 20 yrs. in business. Sale price $180,000 (includes inventory of Approx. $50,000).

**Pharmacy, Variety store and Doctor's office space with Property for sale in London, ON.**
Both Buisnesses, vacant furnished Doctor's office and property. Price $800,000 plus inventory. café atmosphere.

**Please call**
**Alan Sivasambu**
**647-504- 2536**

# சந்தோஷத்தை எப்படி பெறுவது?



ஜீவா திசைராஜா

சந்தோஷமாக வாழ்வதே இவ்வுலகில் பிறந்த எம் அனைவரது இலக்காக உள்ளது. ஆனால் சந்தோஷமான வாழ்க்கை என்பது எதனைக் கருதுகின்றது? சந்தோஷமாக வாழ்தல் எனும் எண்ணக்கரு மனிதனுக்கு மனிதன் வேறுபடு கின்றது. ஆடம்பர வாழ்க்கை வாழ்தலே 'சந்தோஷம்' என சிலர் கருதுகின்றனர். எனவே அவர்கள் சந்தோஷத்தை அடைவ தற்காக அதிக பணத்தைச் செலவிடுகின்றனர். 'சந்தோஷம்' என்பது பணத்தைச் சேர்த்து வைப்பதில் தான் இருக்கின்றது என சிலர் கருதுகின்றனர். எனவே இவர்கள் பணத்தை அதிகளவில் வங்கியில் சேர்த்து வைத்து, தமது அத்தியாவசிய தேவைகளுக்குக் கூட அதில் ஒரு சதம் தானும் செலவிடத் தயங்குவர். சிலர், அதிக தங்க நகைகள் வைத்திருந்தால் தான் சந்தோஷமாக இருப்பார்கள். சிலர் உலக வாழ்வில் அதிகமாக ஈடுபடுவதன் மூலம் சந்தோஷத்தை அடையலாம் என கருதுவர். இவ்வாறு சந்தோஷத்தை அடைதல் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் வெவ்வேறு வழிகளாக இருக்கின்றது.

எனினும் நாமெல்லோரும் 'விரலுக்குத் தகுந்த வீக்கம்' எனும் முதுமொழியைக் கேட்டிருப்போம். விரலுக்கு மேற்பட்ட வீக்கம் வேதனையைத் தான் கொடுக்கும். அதாவது எமது வரவுக்குத் தகுந்த செலவுடன் திருப்தியாக வாழ்தலே சந்தோஷத்தைக் கொடுக்கும் என்பதுவே இதன் பொருள் என்பது நாமெல்லோரும் அறிந்ததே. ஆங்கிலத்தில் 'Cut your coat according to your cloth' என கூறுவார்கள். 'ஆசையே துன்பத்திற்கு காரணம்' இது புத்த பெருமான் கூறியது.

கடன் எடுத்து ஆடம்பர வாழ்வு வாழ்தல் சந்தோஷமானதாக இருக்க முடியாது. கடன் எடுத்து வீடு, வாகனம் வாங்கும் போது ஓடி ஓடி உழைக்க வேண்டியிருப்பதால் தகைப்பு நிலை (Stress) அதிகரித்து சந்தோஷத்தை தொலைத்து விடுகிறோம். கடனுக்கு வாங்கிய வீட்டிற்காக ஈட்டுக் கடனை (Mortgage) செலுத்த வேண்டியிருப்பதால் அதனைப் பற்றியே சிந்தித்து இரண்டு, மூன்று வேலை செய்ய வேண்டியிருப்பதால், ஆசையாய் வாங்கிய வீட்டில் நிம்மதியாக இருக்கவோ நித்திரை செய்யவோ, வீட்டைச் சரியான முறையில் சுத்தம் செய்யவோ கூட முடியாமல் போய் விடுகின்றது. வீட்டில் எதற்கெடுத்தாலும் எரிந்து விழும் நிலை. பிள்ளைகளுடன், மனைவியுடன், கணவருடன், உறவினருடன் ஆறுதலாக அன்பாக கதைக்க முடியாத நிலை. சிறு விஷயங்களுக்குக் கூட ஆத்திரப்பட்டு பிள்ளைகளில் கை வைக்கும் போது Children's Aid Society (சிறுவருக்கு உதவும் சங்கம்) தலையிட்டு பிள்ளையை எடுத்துச் செல்லும் நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. பிள்ளைக்கென்று ஆசையாக ஒதுக்கிய ஆடம்பர அறை பிள்ளை இன்றி வெறிச்சோடிக் காணப்படும் நிலைக்கு எமது ஆடம்பர வாழ்க்கை இட்டுச் செல்கின்றது. எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாத 'வெறுமை' (Void) எம்மை ஆட்கொள்கின்றது.

ஒருவர் கார் வாங்கினால் அதை விட அதிக பெறுமதியான கார் வாங்க வேண்டும் என எண்ணுகிறோம். இரண்டு பிள்ளைகள் கொண்ட குடும்பம் இருக்கும் போது ஏழுபேர் போகக் கூடிய 'Van', 'Jeep' வைத்திருக்க வேண்டும் என எண்ணுகிறோம். ஏன்? தேவை இல்லா விட்டால் கூட, அடுத்தவர் வைத்திருப்பதால் நாமும் வைத்திருக்க விரும்புகிறோம். அதற்கான காப்புறுதி, கட்டுப்பணம் எனும் சுமைகளைக் கூட சிந்தித்துப் பார்க்க தவறுகிறோம். தேவை ஏற்படும்போது வாடகை வாகனத்தை ஒழுங்குபடுத்தலாம் என்றும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஒருவரது வீட்டில் சுவர் அகல T.V இருந்தால் நாமும் அப்படி வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். தொலைக்காட்சி பார்க்க நேரம் இருக்கிறதா என்பது வேறு விடயம். 'வேலியில் போகும் ஓணானை எடுத்து மடியில் கட்டிக் கொண்ட' கதையாக கடன் சுமைகளையும் நாமே வலிந்து சுமந்து கொண்டு சந்தோஷத்தைத் தொலைத்து விடுகிறோம். நாம் இன்னொருவரைப் போல் வாழ முடியாது. மற்றவர்களுடன் எம்மை நாம் ஒப்பிடாது நாம் 'நாமாக' வாழுதல் மகிழ்சியான வாழ்விற்கு வழிவகுக்கும்.

> “அன்பு, பாசம், இரக்கம்,
> அயலாரைப் பற்றிய உணர்வுகள் என்பன எல்லாம்
> 'உங்கள் வாழ்க்கையை' சந்தோஷமாக்குவதற்கு
> அவசியமானவையாகும்.”

பணத்தைப் பெறுவதற்காக கணவனும் மனைவியும் கூட 'பிரிந்து வாழ்வதாக' அரசாங்கத்தை ஏமாற்றும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம். எமது தாய்நாட்டில் எப்படி வாழ்ந்தோம்? வேப்பமர நிழலில் பாய்போட்டு இளைப்பாறுவதை விரும்பிய நாம் எப்படி மாறிப் போனோம்? அடுத்தவரைப் பார்த்து வாழ விரும்பியதன் விளைவா இது? அடுத்தவர் ஆடம்பர வாழ்க்கை வாழுவதாக தென்பட்டாலும் அவரது கஷ்டங்களை அறியாததன் விளைவா இது? மற்றவர் 'சிரித்துக் கொண்டே அழுவதை' அறியாததால் நாமும் 'சிரித்துக் கொண்டே அழும் நிலைக்கு' நாமறியாமலே தள்ளப்பட்டு விடுகிறோம்! உயிர் தப்பி வாழ்வதற்காக தூர தேசத்திற்கு வந்து வாழ்க்கையைத் தொலைத்து விட்டவர்களாகிப் போனோம். நாம்!

கோடை விடுமுறை வந்து விட்டால் போட்டி போட்டுக் கொண்டு எங்கெங்கு பணம் செல வழித்துச் செல்ல முடியுமோ அங்கெல்லாம் கிரெடிட் காட்டில் (Credit Card – கடன் அட்டை) கடன் எடுத்துக் கொண்டு உலக வலம் வருகின்றோம். விடுமுறை என்பது ஓய்வுக்காகவே விடப்படுகின்றது. எம்மால் கட்டுப் படியாகக் கூடிய இடங்களுக்கு செல்வதில் தவறில்லை. முன்பே திட்டமிட்டு எமது சேமிப்பின் மூலம் போய்வருவோமேயானால் விடுமுறை முடிந்தபின் நிம்மதி இருக்கும். ஆனால் அடுத்தவர் போனால் நாம் அதனையும் கடந்து கடல் தாண்டிப் போக வேண்டு மென்ற எண்ணம் வந்து விடுகின்றது! இறுதியில் கடன் என்னும் கடல் எம்மைச் சூழ்ந்து விடும்போது மீண்டும் ஓடி ஓடி உழைக்கிறோம்.

சந்தோஷம் என்பது எளிமையான வாழ்வில் மட்டுமல்ல 'உயர்வான' சிந்தனைகளிலும் தங்கியிருக்கின்றது. எமது நாட்டில் இருந்த வரை ஏழை எளியவருக்கு தான தருமம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பலரிடமும் இருந்தது.

இங்கு நாம் அடிக்கடி 'பார்ட்டி' (Party) வைத்து, எம் பெருமையை எடுத்துக்காட்டி; பணக்காரர்களையும், நாம் கொடுக்கும் பரிசுகளையும் பணத்தையும் திருப்பிக் கொடுப்பவர்களையும் தான் விருந்தோம்பல் செய்யும் நிலையைக் கொண்டிருக்கிறோம். இந்த 'Party'களிலும் எப்படி மற்றவர்கள் வீடு வாங்கியிருக்கிறார், இன்னும் அதிக பணம் உழைக்க என்ன வழி என்பது தான் பேச்சாக இருக்கிறதே தவிர, அடுத்தவரின் தேவை என்ன? அவர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம்.? எமது சமூகத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி பேசவே மாட்டார்கள். தேவைகள் இருப்பவருக்கு உதவி செய்வதில் தான் சந்தோஷம் இருக்கிறதே தவிர தேவைகள் எதுவும் இல்லாதவருக்கு விருந்தோம்பல் செய்வதில் என்ன சந்தோஷம் இருக்க முடியும்? கைமாறு கருதாத உதவி இறைவனுக்கு செய்வதற்கு சமானமானதாகும்.

எமது தாய் நாட்டில் எமது உறவுகள் படும் துன்பத்தைக் கண்டு கலங்கும் நாம், அதே உறவுகள் அரும்பாடுபட்டு எப்படியோ உயிர் தப்பிப் பிழைத்து இங்கு வரும்போது நாம் அவர்களை வரவேற்று அவர்கள் வாழ வேண்டும் என உதவிகளைச் செய்ய எண்ணுகிறோமா? நாட்டிற்குப் புதியவர்களுக்கு செய்ய வேண்டிய உதவிகளைச் செய்கின்றோமா? உதவி கேட்டு விடுவாரோ என்ற பயத்தில் கண்டும் காணாதவர்களாகச் செல்கின்றோம்! அல்லது எம்மை விட அவர் மேலாக வந்து விடுவாரோ என்ற அச்சத்தில் உதவி செய்ய தயங்குகிறோம்!

எனவே அன்பு, பாசம், இரக்கம், அயலாரைப் பற்றிய உணர்வுகள் என்பன எல்லாம் 'உங்கள் வாழ்க்கையை' சந்தோஷமாக்கு வதற்கு அவசியமானவை ஆகும். மற்றவரது துக்கத்தில் தான் உங்கள் சந்தோஷம் தங்கியிருக்கிறது என நீங்கள் சிலவேளைகளில் எண்ணினாலும், உங்கள் அயலவர் துக்கமாக இருக்கும் போது நீங்கள் சந்தோஷமாக வாழ முடியாது என்பது தான் உண்மை. உங்கள் அயலவர் சந்தோஷமாக இருக்கிறார் என அறியும்போது அந்த சந்தோஷம் உங்களையும் தொற்றிக் கொள்ளும். சந்தோஷம் என்பதும் ஒரு 'தொற்று வியாதி' தான். இதனை பரீட்சித்துப் பாருங்கள். எனவே உங்கள் வார்த்தைகளாலோ, செயல்களாலோ மற்றவரின் மனதையோ, அவரது உடலையோ, உடமைகளையோ காயப்படுத்தாது வாழ்தல் உங்களது சந்தோஷத்திற்கே வழிவகுக்கும். அத்துடன் அவர்களது துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள் உங்கள் சந்தோஷம் பல மடங்கு பெருகும்.

எளிய வாழ்க்கை வாழ்வதுடன் உயர்வான சிந்தனைகளையும் (Plain living and high thinking) கொண்டிருப்பதன் மூலமே நாம் சந்தோஷத்தை அடைய முடியும். உயர்வான சிந்தனைகளுடன் நாம் வாழும் போது உலக ரீதியான ஆசைகள் எம்மை குழப்பமடையச் செய்யாது. உயர்வான சிந்தனைகள், திறந்த மனது என்பன இருக்கும் போது உங்கள் வாழ்வில் ஏற்படும் சிறு சிறு பிரச்சனைகளை எல்லாம் நீங்கள் பெரிதுபடுத்த மாட்டீர்கள்.

அடுத்தபடியாக உடல் நலமும் மன சமாதானமும் சந்தோஷமான வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவையாகும். சுகாதார பழக்க வழக்கங்களும் ஒழுக்க நெறியும் உடலாரோக்கியத்துடன் இருப்பதற்கு அவசியமாகும். ஆலயத்திற்குச் செல்வது இறைவனைத் தொழுது மனசமாதானத்தைப் பெறுவதற்காக என்று தான் பொதுவாக எண்ணுகிறோம். ஆனால் கடவுளையே ஆடம்பரக் கடவுளாக மாற்றி விட்டார்கள் மனிதர்கள். ஆலயத்தின் ஆடம்பரங்கள் மனிதனுக்கு மனசமாதானத்தைக் கொடுக்குமா?

சோம்பேறித்தனம், சந்தோஷமான வாழ்க்கைக்கு எதிரி! An idle mind is a devil's workshop (சும்மா இருக்கும் மனது சாத்தானின்


76ம் பக்கம் பார்க்க...

வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்



Prudential Properties Plus Brokerage
Bus: 416.962.8113
Fax: 416.962.4615, Res: 416 964 5955
552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



Alfred Soosaipillai
Broker



# மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி

ஒரு கண்ணோட்டம்!

**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதியின் உத்தரவாதமான சலுகை**

1. உன்னதமான சேமிப்புடன் கூடிய காப்புறுதி
2. உங்கள் பாதுகாப்பு உடனடியாக உறுதிப்படுத்தப்படும்
3. ஒவ்வொரு வருடமும் காப்புறுதித் தொகை 3%ல் அதிகரிக்கும். ஆனால் மாதாந்தக் கட்டுப்பணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.
4. விபத்தினால் இழப்பு ஏற்படின் காப்புறுதித் தொகை இரண்டு அல்லது மூன்று மடங்காக அதிகரிக்கும் வாய்ப்பு.
5. கொடிய நோய் *(Terminal Illness)* ஏற்படின் 50% மான காப்புறுதித் தொகை வாழும் போதே பெற்றுக் கொள்ள முடியும்.

**இக் காப்புறுதியை** வயது 40 முதல் 85 வரை **பெற்றுக் கொள்ளலாம்.**

**பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள அழையுங்கள்**



• Life, Critical, Disability, Mortgage Insurance

**Tel: 416•315•8100**

ROYAL BROKERS
Corporation

**Siva Kandiah**
*Managing General Agent, RBC, IA, DFS, Assumption Life*

RBC Insurance · Canada Life

80 Nashdene Ave., Unit B26 Toronto ON. M1V 5E4 Tel: 416•298•4722 Fax: 416•298•4664

**New Agents Welcome. Join hands with Canada's #1 RBC Life Broker (2006-2007)**

# மலேசியக் 'கறி'...

59ம் பக்கத் தொடர்ச்சி...

சந்துபொந்துகள் எல்லாம் அடைபட்டுப்போயின. McDonald'sக்கு "நாட்டாமை, தீர்ப்பை மாத்திச்சொல்லு" என்றும் கேட்கமுடியாது. உச்ச நீதிமன்றமல்லவா தீர்ப்புச் சொன்னது!

McCurry உரிமையாளர்கள் திரு.P.சுப்பையாவும் திருமதி கனகேஸ்வரி சுப்பையாவும் வெற்றிக்களிப்பும் ஏறத்தாழ ஒன்பதாண்டுகள் போராடியதற்குப் பலன்கண்ட பெருமிதமும் முகத்தில் மின்ன, உலகெங்கும் ஊடகங்கள் வழியாகக் கொண்டுசெல்லப்பட்டனர்.

பெரும்பாலான ஊடகங்கள் தாவீது-கோலியாத்தோடு McCurry – McDonald's வழக்கினை ஒப்பிட்டன.

இந்த வழக்கின் தீர்ப்பு மட்டுமல்ல, முழு வழக்குமே கவனிக்கத்தக்கது.

ஒரு பல்தேசிய நிறுவனத்தின் அசுர பலம், செல்வாக்குக்கு முன்னால் McCurry எம்மாத்திரம். மேல்நீதிமன்றத் தீர்ப்போடே பலர் ஓய்ந்திருப்பார்கள். எதிர்த் தரப்பினது பலமறிந்தும் தைரியத்தோடு மேன்முறையீடு செய்தனர் McCurry உரிமையாளர்கள் - வென்றனர். உச்ச நீதிமன்றம் வெற்றியை உறுதிப்படுத்தியது.

சிற்பி மைக்கல் ஏஞ்சலோ மூன்றாண்டுகளுக்கு மேலாக உழைத்து உருவாக்கினார் தாவீதின் சிலையொன்றை. இன்றளவிலும் இத்தாலியின் ஃபுளோரன்ஸ் (Firenze) நகரில் வைத்துக் கொண்டாடப்படுகிறது அந்தச் சிற்பம். கோலியாத்தோடு மோதி வென்றபின் வெற்றிக்களிப் போடு நிற்கும் கோலத்திற்றான் பொதுவாக அந்தச் சிற்பம் செதுக்கப்பட்டிருக்கும். ஆனால், கோலியாத்தை எதிர்கொண்டு அவன்மீது கவண் மூலம் வீசுவதற்கான கல்லைக் கையில் வைத்திருக்கும் கோலம்தான் மைக்கேல் ஏஞ்சலோ தேர்ந்தெடுத்தது.

தாவீது, உரிமைகளை விட்டுக்கொடுத்து அல்லது பறிகொடுத்து அடங்க மறுத்தலின் சின்னமாகவும் பார்க்கப்படுகின்றான். சுதந்திர வேட்கைக்கும் தைரியத்துக்கும் எடுத்துக்காட்டு தாவீது. கோலியாத்தோடு மோதிய தாவீதிடம் இருந்த தைரியமும் ஓர்மமும் McCurry உரிமையாளர்களிடம் இருந்திருக்கின்றது.

| McDonald's | McCurry |
|---|---|
| 119 நாடுகளில் வணிகம்<br>31,000க்கு மேற்பட்ட கிளைகள்<br>1.5 மில்லியனுக்கு மேற்பட்ட பணியாளர்கள்<br>கனடாவில் 1400 கிளைகள்<br>77,000க்கு மேற்பட்ட பணியாளர்கள்<br>மலேசியாவில் 185 கிளைகள்<br>8,000க்கு மேற்பட்ட பணியாளர்கள் | மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இயங்கும் சிறிய, 24 மணிநேர, மலேசிய, இந்தியத் துரித உணவகம்<br>துணையாக அருகிலேயே 2006இல் தொடங்கிய 1st Mile Bistro என்ற ஒரு Pub |




அதனாற்றான் முகங்குப்புற, பல்தேசிய வணிகத்தின் கோலியாத் வீழ்த்தப்பட்டுள்ளான். இப்படியான கோலியாத்துகள் வீழ்த்தப்படாவிடின்....

ஒரு வேடிக்கையான கற்பனை.

McMaster; McGill பல்கலைக் கழகங்கள், Master; Gill ஆகியிருக்கும். Major McEnzie Drive ஐ Major Mc என்று சொல்லமுடியாமற் போயிருக்கும்.

9 வயது ஆப்கானியச் சிறுமியின் ஏக்கம் நிறைந்த விழிகளை அகதிமுகாமொன்றிற் பதிவுசெய்து National Geographic சஞ்சிகை மூலம் உலகெங்கும் கொண்டுசென்ற நிழற்பட விற்பன்னர் Steve McCurry உலகெலாம் அலைந்து படமெடுப்பதை விடுத்து வழக்குகளுக்காக அலைந்துகொண்டிருந்திருப்பார்.

"என்னினிய தமிழ் மக்களே..." என்று விளிக்கும் இயக்குநர் பாரதிராஜாவும், 'பசும்பொன்' படத்தில் "நான் பெத்த மக்கா..." என்ற எடுத்ததற்கெல்லாம் ஒப்பாரி வைத்த ராதிகாவும் வழக்குகளால் நொந்து நூலாகியிருப்பார்கள்.

'மக்' என்ற ஒலி எங்கு கேட்டாலும் வழக்குப் பாய்ந்திருக்கும். 'மக்கள் சக்தியே மகேசன் சக்தி' என்பதில் 'மக்' இல்லாவிடின்...?

"சிவப்புக் கலரு சிங்குச்சா... மஞ்சள் கலரு சிங்குச்சா..." என்று உற்சாகமாக ஆடிய மீனா "நீதிமன்றம் சிங்குச்சா.. சட்டத்தரணி சிங்குச்சா..." என்று சோகப் பாடலுக்கு நடனமாடியிருப்பார்.

யார் கண்டது...? கற்பனைகளும் சிலவேளைகளில் பலித்துவிடுவதுண்டு.

இப்படியான கற்பனைகள் பலித்துவிடாமலிருக்க...

தேவை தாவீதுகள்!

உசாத்துணை:
http://en.wikipedia.org/wiki/McDonald's
http://www.mccurryrecipe.com
http://www.mcdonalds.ca
http://www.mcdonalds.com

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■


## CTR தகவல் பலகை

**ROOMS / BASEMENT RENT**

**BRIMLEY & HUNTINGWOOD**
2 Bed Room Basement
Priya: 416-335-3460 647-408-1501

**ELLESMERE & BRIMOTAN**
2 Bed Room Basement
Suyam sothy: 416-438-1249

**NEILSON & FINCH**
1 B/R Basement
Veny: 416-294-9851

**KEELE & FINCH**
2 bed room for only women for rent
Kumar: 416-546-1475 416-627-1956

**NEILSON & SHEPPARD**
3 bed room basement
Bala: 416-281-5298 416-809-5298

**MARKHAM**
3 bed room upstairs
Suresh: 416-804-3220

**DONMILLS & EGLINTON**
2 bedroom condo apart
Thamilkumar: 416-731-2829

**MARKHAM & ELLES**
2B/R Basement
Separate Entrance
416-438-1249

**DONMILLS & EGLINTON**
Senthamilan: 416-731-2829

**NELSON & FINCH**
one basement rent
Shan:416-294-9851

**BIRCHMOUNT & STEELS**
one b/r for rent on oct
Antony: 905-946-1744

**BIRCHMOND & ST.CLAIR**
1B/R basement $400
Ram: 416-818-8004

**MIDLAND & LAWERENCE**
flea market
Theepan: 647-219-6841

**LAWRENCE & MARKHAM**
2b/r Basement
Kirupakaran: 416-430-0422

**BRAMPTON**
2B/r Basment
Mrs.Thabas: 416-721-8495 905-915-0698

**WARDEN & STEELE**
2B/R Basement
Buses and Schools close
Raj: 905-944-9982, 416-887-5315

**HOUSE FOR SALE**

**JAFFNA**
sale for house
Raji: 416-909-9160

**YARL SUNDUKULIYIL**
2house to sell
Mrs. Bala: 416-283-1786

**AUTO FOR SALE**

**7 PASS VAN**
Small Washing Machine Wanted
Kumar: 647-287-0731

**ACURA INTEGRA 1990**
For sale passed Emmons Test
Kanthan: 416-514-1661

**96 TOYOTA CAMERY**
Thiru: 416-320 5048

**OTHERS**

**FRIDGE**
Yogaraja: 416 -451-6895

**MUSIC CLASSES**
Santhiran: 905-501-8198 416-659-8198

**TWIN STOOLLER**
Suresh:416-294-9764

**NEED JOB**
hair cutting
Joha: 647-241-3289

**MOVING SALE**
Anathan: 905-239-5201

**MUSIC AND YOGA CLASSES**
Pushpa: 647-278-8445

**PAINTING**
Varan: 416-994-9612

**PAINTING**
house / store
Sabesh: 647 887 8349

**TUTION**
gr 8 – gr 12
Yohankumar: 416 779 9460, 416 291 9460

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**DUCT CLEANING**
electronic product for sale
siva: 416-897-8844

**TRANSLATOR & TUITION**
Sabarimuthu: 416-520-6920
416-282-0951

**Morningside & Finch**
2 B/R basement for rent
Living Room & Sep.
Laundry With an Eat-In Kitchen,
Close To TTC & Schools. Mins.
To Hwy.401, Mall, Hospital & Rec.
Centre
5 appliances. One parking space.
647.504.5474
416.893.2683

பிரம்ரன் நகரில்
நல்ல நிலையில்
இயங்கிக்கொன்டிருக்கும்
புடவை நிலையம்
விற்பனைக்கு உண்டு
416 871 8218

# நான் நேரில் காணாத ஏ.ஜே. கனகரட்ணா!

நடராஜா முரளிதரன்




இந்த வாரம் ஏ.ஜே.கனகரட்ணா எழுதிய AJ: THE ROOTED COSMOPOLITAN என்ற நூல் இலக்கியத் தோட்டத்தினால் வெளியீடு செய்யப்படுகின்றது. அவரது கட்டுரைகளும், அவரைப் பற்றிய மற்றவர்களது கட்டுரைகள் அடங்கியதுமான இத் தொகுப்பினை பேராசிரியர் செல்வா கனகநாயகம் சீர்செய்துள்ளார். எனவே அவர் தொடர்பாக என்னால் அவர் மறைந்தபோது எழுதப்பட்ட பத்தியொன்றினை "தாய் வீடு" இதழில் மீண்டும் மீட்பது பொருத்தமென எண்ணுகின்றேன்.

சென்னையிலிருந்து இணைய மடல் மூலம் வ.கீதா "ஏ.ஜே.கனகரட்ணா கொழும்பு வைத்தியசாலையில் காலமானார்" என்ற சேதியை அறிவித்தபோதுதான் அந்தத் துயரச் செய்தி எனது காதைக் கவ்விக் கொண்டது. இது வரைக்கும் நான் அந்த "ஆபூர்வ மனிதரை" நேரில் சந்திக்கக் கொடுத்து வைக்கவில்லை. ஆனாலும் என் கண் காணாத அந்த மனிதரின் இழப்பு ஏன் என்னுள் இவ்வளவு துடிப்பை, சலனத்தை நிகழ்த்தி நிற்கிறது என்பதற்கான விடையை நான் எழுதும் இந்த வரிகளுக்கூடாகப் பெற்றுவிட முடியுமா? என்பதையும் என்னால் கூற முடியாதுள்ளது. ஏனெனில் அந்த எல்லைகளையும் தாண்டி அவர் மீதான எனது நேசிப்பு விரவிக் கிடக்கிறது என்பதே உண்மையாக அமையும்.

எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது 1972இல் முதல் தடவையாக அவரது மொழிபெயர்ப்புக் கட்டுரையொன்றினை "மல்லிகை" சிற்றிதழில் வாசித்த ஞாபகம். 1987களில் நான் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்த வேளைகளில் அவர் குறித்து தமிழ் நாட்டின் மிகப்பெரும் இடதுசாரி எழுத்தாளர்களில் ஒருவரான எஸ்.வி.ராஜதுரை அவர்களும், பத்திரிகையாளரான ஏ.எஸ்.பன்னீர் செல்வமும் நிறையவே என்னிடம் பேசியிருந்தார்கள். அப்படியொரு சமயத்தில்தான் பன்னீர்செல்வம் அவரது "மார்க்சீயமும் இலக்கியமும் - சில நோக்குகள்" (அலை வெளியீடு) என்ற தொகுப்பு நூலை எனக்கு வாசிக்கத் தந்திருந்தார்.

அந்த நூல் என்னுள் ஏற்படுத்திய தாக்கம் இன்று வரை தொடர்வதாகவே நான் எண்ணுகின்றேன். இந்தக் குறிப்புக்களை எழுதுவதற்கு முன் அப் புத்தகத்தையும், "காலம்" சஞ்சிகை வெளியிட்ட ஏ.ஜே.கனகரட்ணா சிறப்பிதழையும் செல்வத்திடம் இருந்து பெற்றுக் கொண்டு மேலோட்டமாக நுனிப்புல் மேய்ந்திருந்தேன். "காலம்" சஞ்சிகை வெளியிட்ட ஏ.ஜே.கனகரட்ணா சிறப்பிதழில் எஸ்.வி.ராஜதுரை அவர்கள் "கலாச்சாரக் கமிசார்களின் ரசனைகளுக்கும் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டிருக்கும் அவர்களது கறாரான அரசியல் தேவைகளுக்கும் வளைந்து கொடுக்காமல், அதே வேளை, மார்க்சிய தரிசனத்திலிருந்து சிறிதும் வழுவாமல் தமிழ் மொழிக்களத்தில் பண்பாட்டுச் செயற்பாடுகளை ஏறத்தாள நான்கு தசாப்தங்களாக நிகழ்த்திக் கொண்டிருக்கும் மனிதர்" என ஏ.ஜேயை விதந்துரைத்துள்ளார்.

அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயலும் சக்திகள், அதிகாரத்தை ஏற்கனவே கைப்பற்றியவர்கள் என எல்லோருமே கலை, இலக்கிய வடிவங்களைத் தாங்கள் வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் கோட்பாடுகளுக்கு அமைய உற்பத்தி செய்யுமாறு உத்தரவுகளைப் பிறப்பித்தோ, கோசங்களை எழுப்பியோ



வரும் வேளைகளில் அது குறித்த விசாரணைகளைத் விரிந்த தேடற் பரப்பில் ஆழ்ந்து நோக்கிய புலமை கொண்ட மனிதராகவே நான் ஏ.ஜே அவர்களைக் காணவிழைகின்றேன்.

ஏ.ஜே அவர்கள் தனது "மார்க்சீயமும் இலக்கியமும்" என்ற கட்டுரையொன்றிலே பின்வருமாறு கூறுகின்றார். "ஏனைய கலைஞர்களைப் போன்று, எழுத்தாளர்களும் தமது கற்பனையென்னும் ஆழியில் முத்துக் குளித்து வெளிக் கொணர்பவைதான் உன்னத படைப்புக்கள் என ஒரு சாரார் கருதி வருகின்றனர். இவர்களுடைய கொள்கைப்படி கலைஞர் புற உலகத்தை மறந்து அக உலகத்தில் இரண்டறக் கலந்து நிற்பவர்கள். இன்னொரு விதமாகச் சொல்வதென்றால் கலைஞர்கள் சூனியத்தில் வாழ்பவர்கள். இவ் வாதத்தினை மார்க்சீயம் ஏற்றுக் கொள்ளாது. சமுதாய ஒழுங்கு முறைகளுக்கிடையே ஏற்படும் தொடர்புகளின் விளைவாகவே அரசியல், சட்டம், சமயம், தத்துவம், கலை, இலக்கியம் போன்றவை தோன்றுகின்றன. உற்பத்தி முறைகள் அடித்தளம் என்றால் மேலே குறிப்பிட்ட கலை, இலக்கியம் போன்றவை மேற் கட்டுமானம். அடித்தளத்திற்கும், மேற் கட்டுமானத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகளை வரையறுப்பது அவ்வளவு எளிதன்று. அடித் தளம் எவ்வாறு மேற்கட்டுமானத்தைப் பாதிக்கின்றதோ அதே போன்று மேற்கட்டுமானமும் அடித்தளத்தைப் பாதிக்கின்றது. ஆதலால் பொருளாதார அடிப்படைகளும், கலை - இலக்கியம் போன்றவற்றிற்கும் இடையில் உள்ள தொடர்புகள் மிகச் சிக்கலானவை."

இவற்றின் வழியே நெடுங்காலமாக அரசியல், இலக்கியத் துறைகளுள் இடது சாரிச் சித்தாந்தங்கள் கொச்சைப்படுத்தப்பட்டும், வழிபாடுகளுக்கு உட்படுத்தப்பட்டதுமான அவலங்களைத் தமிழ்ச் சூழலுக்குப் புரிய வைப்பதில் ஏ.ஜே.கனகரட்ணா 1966களிலிருந்தே பெரிதும் முயன்று வந்துள்ளார். உலகின் உன்னதங்கள் என்று கருதப்பட்ட பல்வேறு சிந்தனைப் போக்குகளை ஏ.ஜே தமிழுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

ஒரு நூலினை, இலக்கியம் என்று ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்று தீர்மானிப்பதற்கு, முதலில் அந்நூல் இலக்கியமா இல்லையா என்பதனை நிர்ணயித்த பின்புதான் மார்க்சீயக் கோட்பாட்டினைக் கொண்டு அதனை மதிப்பிடுதல் வேண்டுமென ரொட்ஸ்கி "இலக்கியமும் புரட்சியும்" என்ற நூலில் குறிப்பிட்டதையும் ஏ.ஜே.கனகரட்ணா தனது கட்டுரையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலக்கியத்தினை உரிய முறையில் புரியாத எவரும் கோட்பாட்டு அளவுகோல்களை ஏந்துவது விபரீதத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடும். கட்சி, கலை, இலக்கியம் என எந்த வட்டங்களுக்குள்ளும் அகப்படாதவர். அவருள் அடங்க மறுத்த அறிவுப் பசியை மற்றவர்கள் ஒப்புதல் பெறாமலே அவரிடமிருந்து அள்ளிச் செல்ல அனுமதி அளித்தவர். கற்றுத் தெளிதலும், கற்றுக் கொடுத்தலும், உரையாடல்களுக்கூடாக ஊட்டம் அளித்தலும் அதற்கும் அப்பால் எண்ணிறைந்த இலக்கிய முயற்சிகளுக்கெல்லாம் பின்னணி முன்னாணாகத் திகழ்ந்தவர் ஏ.ஜே அவர்கள்.

ஏ.ஜே அவர்களை பிரபலமான சிங்களப் புத்திஜீவியும், எழுத்தாளருமான ரெஜி சிறிவர்த்தனா முற்றுகையிடப்பட்ட யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிக் கொழும்புக்கு குடி பெயர்ந்து வருமாறு அழைப்பு விடுத்தபோது தான் "சேற்றில் அழுந்திய தடி" மாதிரி இருப்பதாகவும், தன்னைக் கொழும்பில் "மறுநடவு" செய்யத் தனக்கு விருப்பம் இல்லையெனவும் பதிலளித்திருந்தார். மேலும் ரெஜி கூறுகிறார். "உலகக் குடிமகனுக்குரிய கலாச்சாரமும், சர்வதேசப் பிரக்ஞையும் உடைய புத்திஜீவியான ஏ.ஜே யாழ்ப்பாண மண்ணிலும், அதன் வாழ்விலும் அனுபவத்திலும், மொழியிலும் வேரூன்றி உள்ளார் என்பதை அதிலிருந்து நான் உணர்ந்து கொண்டேன். யாழ்ப்பாணத்தை அதன் சோதனைக் காலத்தில் விட்டு வருவதை ஒரு துரோகச் செயல் என்று அவர் கருதி இருக்கலாம்."

இலக்கியத்தைக் காதலித்தவர் என்று கருதப்படும் ஏ.ஜே தனி மனித வாழ்வில் கட்டைப் பிரமச்சாரி. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தைக் கற்ற அவரின் தனிப் பெருந்துறையாக ஆங்கில இலக்கியம் விளங்கியது. "டெய்லி நியுஸ்", "கோப்பிறேற்றர்", "சற்றடே றிவ்வியு", "திசை" போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர், துணை ஆசிரியர் பொறுப்புக்களில் பணியாற்றிய சிறந்த பத்திரிகையாளரும் கூட.

பத்திரிகையாளர் ஏ.எஸ்.பன்னீர்செல்வத்தின் பார்வையில் "ஏ.ஜேதான் யாழ்ப்பாண வாழ்வின் சிக்கல்களை எனக்குப் புரிய உதவியவர். யாழ்ப்பாணத்தை ஆண்ட துப்பாக்கி ஏந்திய பலர் வைத்த அடிப்படைச் சட்டங்களை, முடிச்சவிழ்த்தற்குரிய இன்றியமையாத தடயங்களைத் தந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களின் துயரங்கள் கூட மற்றவர்கள் தொலைவிலிருந்து காட்டிய மாதிரியிலிருந்து ஏ.ஜேயின் மாதிரி மிக வித்தியாசமானது."

மண்ணை விட்டுப் பிரிய மறுத்த அந்த மகத்தான 'மண்ணின் மைந்தன்' தான் துறை போகக் கற்றறிந்த உலக இலக்கியங்களுக்கூடாகவும், தனது வாழ்வின் ஊடாகவும் எமக்கு விட்டுச் சென்ற சேதிகளை எப்போது நாம் மறு வாசிப்புக்கு உள்ளாக்குவோம்.

muralitharan.n@thaiveedu.com

> **"மண்ணை விட்டுப் பிரிய மறுத்த மகத்தான 'மண்ணின் மைந்தன்'. தான் துறை போகக் கற்றறிந்த உலக இலக்கியங்களுக் கூடாகவும், தனது வாழ்வின் ஊடாகவும் எமக்கு விட்டுச் சென்ற சேதிகளை எப்போது நாம் மறு வாசிப்புக்கு உள்ளாக்குவோம்."**

TRAFFIC TICKETS!
• SPEEDING
• RED LIGHT
• CARELESS
• STOP SIGN
• ACCIDENT
• TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே

CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# வதந்தி

- பொன் குலேந்திரன் -

வதந்தி ஒரு பயங்கர ஆயுதம். முக்கியமாக தேர்தலில் வெற்றிபெற வாக்காளர்களிடையே அதை பாவிப்பார்கள் அரசியல்வாதிகள். வாக்காளர்களும் வதந்தியை உண்மையென நம்பி விடுவார்கள். எல்லா இன சமுதாயங்களிலும் இது ஊடுருவி தனது கைவரிசையை காட்டும். 1983இல் சிறிலங்காவில் நடந்த இனக்கலவரம் தீவு முழுவதும் பரவ வதந்தியே காரணம். சிலருக்கு சமூகத்தில் வதந்தியைப் பரப்பி, அதனால் ஏற்படும் தாக்கத்தினைக் கண்டு இரசிப்பது ஒரு பொழுது போக்கு. தாம் சீர்திருத்தவாதிகள் என்ற எண்ணம் அவர்களுக்கு. சமூகத்தில் நடக்கும் சீர்கேடுகளை வெளிக்கு கொண்டுவர வேண்டும் என்பது அவர்கள் நோககம் என பலர் நினைத்தாலும் உள்நோக்கம் சுயநலம் கலந்தது. உதாரணத்துக்கு தொலைபேசியில் இருவர் பேசுவது கீழே தரப்பட்டுள்ளது.

"என்ன தம்பர் விழுந்தடித்துக் கொண்டு விடிய காலத்திலை டெலிபோன் செய்கிறீர் என்ன விஷயம்?"

"ஒரு சுவையான நியூஸ் கேள்விப்பட்டனான். அது உமக்கு சொல்லாமல் எனக்கு இருக்க முடியாமல் இருக்கு"

"என்ன விஷயம் சொல்லுமன்?"

"உமக்கு தெரியும் தானே என்னோடை கிராம சபை தேர்தலிலை போட்டிபோட்டு ஐம்பது வோட்டாலை என்னை தோற்கச் செய்தவரை"

"ஓ, அப்புக்காத்து அய்யாத்துரையைச் சொல்லுறீரே?"

"ஓம் அவரைத்தான். அவருடைய மகளுடைய கலியாணம் தடைப்பட்டுப் போச்சாம்."

"ஏன் என்ன விஷயம்"

"ஆரோ மாப்பிள்ளை வீட்டுக்கு மொட்டைக் கடிதம் போட்டிருக்கினமாம்."

"என்னவாம் பெட்டிசனிலை எழுதியிருக்கினம்,"

"அய்யாத்துரையர் ....சாதியாம், அதோடை அவருடைய மகளுக்கு கர்ப்பப் பையிலை ஏதோ வியாதியாம்... அதாலை கருத்தரிக்க முடியாதாம்"

"அட பாவிகள்! ஏன் இந்தக் கட்டுக் கதையை கட்டி விட்டிருக்குதுகள். நீர் உதை சொல்லித் திரிந்தால் உம்மிலை சந்தேகப்படப்போகினம். அது சரி, உதை யார் சொன்னது உமக்கு?"

"வேறு ஆர்? நமது வரதலிங்கம் தான். அவருக்கு சொக்கலிங்க வாத்தியார் சொன்னவராம்."

"சொக்கலிங்கத்தாருக்கு யாராம் சொன்னது?.

"வேறு யார் மாப்பிள்ளை பகுதியிலை தூரத்து சொந்தக்காரார் ஒருவர்தான். அவர் பேர் தெரியாதாம்"

"அப்ப எங்கை உந்த கதை உருவாகினது என்று உமக்கு அடிமட்டம் தெரியாதே?"

"அதை ஏன் நான் கேட்கிறன். எனக்கு காதிலை எட்டியதை தான் உமக்கு சொன்னனான்"

இந்த உரையாடலில் முக்கிய விடயங்கள் மொட்டைக் கடிதமும் அதில் உள்ள விடயங்களும்தான். அதை வாசிக்காது யாரோ சொன்னதை அப்படியே தன் நண்பருக்கு எடுத்துச் சொல்கிறார் தம்பர். முதலாவது காரணம், அய்யாத்துரையுடன் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பொறாமையும் கோபமும். இரண்டாவது அய்யாத்துரையர் தன் மகனுக்கு மகளை திருமணம் செய்து வைக்க மறுத்ததும் ஒரு காரணம். அதனால் பொய் வதந்தி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. எங்கே அந்த வதந்தி உதயமாயிற்று என்பது புரியாத புதிர். ஒருவரை இழிவுப்படுத்த அல்லது ஒருவரின் குடும்பப் பெயரை மாசுபடுத்த வதந்தியும் மொட்டைக்கடிதமும் பெட்டிசன்களும் ஆயுதங்களாக பாவிக்கப்படுகின்றன. இது ஒரு கீழ்த்தரமான தாழ்வு மனப்பான்மையுள்ளவர்களால் உருவாக்கப்படும் ஆயுதம். சில சமயம் அவுஸ்திரேலிய பூமராங் என்ற ஆயுதத்தைப் போல் திரும்பி வந்து தோற்று வித்தவரையே தாக்கவல்லது. கிராமப் புறங்களில் திருமணங்களைத் தடுக்க பெண்வீட்டுக்கு பெண்பார்க்க வரும் மணமகன் கூட்டத்தினரை வழிமறித்து, பெண்ணைப் பற்றியோ அல்லது அவளது பெற்றோரைப் பற்றியோ வதந்தியை பற்றவைப்பதை பல சினமாப்படங்களில் நாம் கண்டுள்ளோம்.

வதந்திகள் சூனியம் செய்வதைப் போன்றது. எதிரிகளுக்கு எதிராக சூனியம் செய்வது மரபு வழி வந்த கலை. யார் அதைச் செய்தது என்பது தெரியவருவது குறைவு. எதிரிகள் பலர் இருப்பின் ஊகிப்பது கடினம். அதேபோல வதந்தியைப் பரப்புபவர் யார் என்று கண்டு பிடிப்பது பல எதிரிகள் உள்ள ஒருவருக்கு மிகவும் கடினம். வதந்தியின் நோக்கத்தைக் கொண்டு ஓரளவுக்கு அதை உருவாக்கியவரைக் கண்டுபிடிக்கலாம். மொட்டைக் கடிதம் எழுதுபவர் தம்மை முற்றாக அடையாளம் கண்டு கொள்ள முடியாதவாறு பாதுகாத்து கொள்வார். அதற்காக தாம் வாழும் ஊரைத் தவிர்த்து வேறு ஊருக்குப் போய்க் கடிதத் தைப் போடுவார். கடிதத்தை சொந்தக் கையெழுத்தில் எழுதாமல் தட்டெழுத்தில் அச்சடித்து அனுப்புவார்கள். ஆனால் அப்படி இருந்தும் கடிதத்தில் உள்ள எழுத்து நடை, வார்த்தைகள் காட்டிக்கொடுத்துவிடும்.

வதந்தி பரப்புவர்கள் ஆதாரமில்லாத அரை குறை விஷயங்களை உள்ளடக்குவர். பெரும்பாலும் சமூகம் எதை குறையாக அல்லது இழிவாக கருதுகிறதோ அதையே கருவாகக் கொண்டு வதந்தி இருக்கும். இதில் கள்ளக் காதல், சமூகத்தால் தாழ்வாகப் பேசப்படும் வியாதி, சாதி, குற்றம் புரிந்து சிறைக்குப் போய்வந்தது போன்ற விடயங்களை மையமாக கொண்டிருக்கும். இது போன்று வதந்திக் கடிதம் எழுதுபவர்கள் அது போன்ற கடிதங்களை தமது மனச்சாட்சிக்கு எதிராக எழுதிப் பழக்கப்பட்டவர்கள். அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பாத்தால், ஒன்று அவர்கள் குடும்பத்தில் ஏதாவது ஒரு பிரச்சனையிருக்கும். மற்றவர்கள் துன்பத்தில் இன்பம் காண்பவர்களாக இருப்பார்கள். தமக்கு ஒரு பெரும் ஆபத்தோ அல்லது கஷ்டமோ வந்தாலும் அவர்கள் திருந்துவது கடினம்.

அரசியலில் வதந்திகளுக்கு குறைவில்லை. இது அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முக்கிய இடம் வகிக்கிறது. போட்டியிடுபவரின் பரம்பரை, குடும்ப வாழ்வு, பிள்ளைகளின் நடத்தை, போட்டியிடுபவரின் நடத்தை, என்ன குற்றங்கள் புரிந்தவர், தொழில் அதிபராக இருந்து செய்த தில்லு முல்லுகள் என்ன என்பவற்றை ஊடுருவி விசாரித்து துப்பு துலக்க மில்லியன் கணக்கில் அரசியல் எதிரிகள் செலவு செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. இதில் இருந்து முன்னைய ஜனாதிபதி கிளின்டனுக்கு எதிராக பல சுவையான, கீழ்த்தரமான வதந்திகள் பரப்பப்பட்டு, அவர் பதவி இழக்கும் நிலைக் குக்கூட தள்ளப்பட்டார். அதே போன்று, இங்கிலாந்தில் லேபர் கட்சியின் பல அமைச்சர்களுக்கு எதிராக பல வதந்திகள் உலாவின. கெனடியும், ஜோர்ஜ் புஷ்சும், டிக் சேனியும் கூட வதந்திகளிடமிருந்து தப்பவில்லை. நிக்ஷன் பதவி இழப்பதற்கு வதந்தியும் மூலக் காரணமாகும். அத்தகைய வதந்திகள் முற்றாக உண்மையை உள்ளடக்காவிடிலும் சிறிதளவாவது உண்மையிருக்கத்தான் செய்கிறது. வதந்தியின் முக்கிய நோக்கம் ஒருவரின் பிரசித்தியை அழிப்பதேயாம். இதனை ஆங்கிலத்தில் Character assasination என்பர். சமூகத்தில் உள்ள பல சங்கங்களில் அங்கத்தினரிடேயே நிலவும் ஒரு வகை தொற்று வியாதி வதந்தி. அதுவும் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பதவிகளுக்கு போட்டி என்று வரும் போது, சங்க பணத்தை சுருட்டிப் போட்டான், சர்வாதிகாரியாக நடந்தான், சொந்தக்காரருக்கு உதவி செய்தான் என்று பல விதமான குற்றச்சாட்டுக்களை கட்டவிழ்த்து விடுவது ஒரு வித வதந்தி முறையாகும். இதனை பலர் தீர விசாரிக்காமல் ஏற்றுக்கொள்வதும் உண்டு. அவ்வளவுக்கு நம்பக் கூடிய வகையில் வதந்திகளைப் பரப்புவர். அதோடு மட்டுமல்ல கடிதங்களை அனுப்பிவிட்டு தொடர்ந்து தொலைபேசியில் பேசி மனதை மாற்றியும் விடுவார்கள். இது ஒரு வகை கீழ்த்தரமான தேர்தல் முறை. "பொய் ஒரு நாள் வெளிப்படும்" என்பது போல் வதந்தியில் எதுவித உண்மையில்லை என்று பலர் அறிந்தவுடன் வதந்தி பரப்பியவர் தலைமறைவாகிவிடுவார். அவ்வளவுக்கு கோழைத் தனம் அவரை சவால்களை எதிர்நோக்க முடியாது செய்து விடுகிறது. வதந்தியால் சரிந்த அரசுகள் பலவுண்டு.

சினிமா கிசு கிசு என்ற பெயரில் வியாபாரம் செய்யும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் உண்டு. சினிமா நடிகைகளின் அந்தரங்க விடயங்களுக்கு சுவாரஸ்யமான கதைகளை உருவாக்கி எழுதுவதில் சில பத்திரிகைகள் கைதேர்ந்தவை. இங்கிலாந்தில் News of the World, அமெரிக்காவில் Inquirer போன்ற ஊடகங்கள் பெயர் பெற்றவை. இரசிகர்களுக்கு நடிகர், நடிகைகளின் அந்தரங்க விஷயம் பற்றி அறிவதென்றால் ஒரு தனி ஆர்வம். பல தமிழ்நாட்டு சஞ்சிகைகள் ஒரு காலத்தில் நல்ல இலக்கியத் தரமுள்ள சஞ்சிகைகளாக இருந்தன. காலப்போக்கில் வாசகர்களின் சினிமா மோகம் அவர்களின் தேவைகளை மாற்றி அமைத்துவிட்டது. சந்தை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட சஞ்சிகைகள் தமது வருமானத்தை அதிகரிக்க ஊர்க் குருவி, கழுகு, கிசு கிசு என்ற தலைப்பில் கற்பனை கலந்த வதந்திகளை எழுதத் தொடங்கினர். பல தசாப்தங்களுக்கு முன் இந்து நேசன் என்ற மஞ்சள் பத்திரிகை வதந்தி பரப்புவதற்காகவே வெளிவந்த பத்திரிகை. அதானல் அதன் ஆசிரியர் கொலை செய்யப் பட்டது யாவரும் அறிந்ததே. கிசு கிசுவினால் தற்கொலை புரிந்த நடிகைகள் பலர். கலியாணம் ஆக முன்னரே கர்ப்பிணி, பிரபல்ய அரசியல்வாதியின் சின்ன வீடாகிவிட்டாள் இந்த நடிகை, விபசாரத்தில் கைது, போதை மருந்து அருந்தி அபாய நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார், எயிட்ஸ் வியாதியால் நடிகர் பாதிப்பு - இப்படி கிளு கிளுப்பைத் தரும் செய்திகளுக்கு தலையும் வாலும் வைத்து சுவையாக எழுதி பணம் சேர்க்கும் பத்திரிகைகள் உண்டு.

வதந்தியால் பல நாடுகளில் இனக்கலவரங்கள் தோன்றியதுமுண்டு. இலங்கையில் நடந்த பல இனக் கலவரங்களுக்கு முக்கிய காரணம் வதந்தியே. அதை தூண்டிவிட பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும், இனத்துவேசிகளும் முக்கிய காரணமாகும். 1958ல் ஏறாவூர் பதுளை பாதையில் ஒரு சிங்கள வியாபாரி கொலை செய்யப்பட்டார். சிங்களப் பத்திரிகைகள் அவர் தமிழர்களால் படுகொலை செய்யப்பட்டார் என இனத்துவேசம் கலந்த செய்தியை வெளியிட்டு இனக்கலவரத்தை தூண்டிவிட்டது. இவ்வாறே யாழ்பாணத்தில் ஒரு சிங்கள ஆசிரியை தமிழரால் கொலை செய்யப்பட்டு துண்டு துண்டாக மார்பகம் வெட்டிய நிலையில் பிரேதமாக தென்பகுதிக்கு அனுப்பப்பட்டதாக வதந்தி தீ போல் பரவியதால் சிங்கள மக்கள் கொதித்தெழுந்து பல தமிழர்களை வெட்டிக் கொன்றனர். பின்னர் விசாரணையின் போது அது முழுப் பொய் எனவும் அப்படி ஒரு சிங்கள ஆசிரியை யாழ்பாணத்தில் படிப்பிக்கவில்லை எனக் கல்வி அமைச்சு ஊர்ஜிதம் செய்தது. வதந்தியால் ஏற்பட்ட அழிவை திரும்பவும் திருத்த முடியாது. சாதிக் கலவரங்கள் கிராமப்புறங்களில் உருவாவதற்கும் வதந்தியே முக்கிய காரணம்.

வதந்தியால் பல குடும்பங்கள் பிரிந்ததுண்டு. சந்தேகக் குணம் உள்ள மனைவியோ அல்லது கணவனோ வெகு இலகுவில் வதந்தியால் பாதிக்கப்படுகிறார்கள். கண்ணால் பார்ப்பதும் பொய், பிறர் வாயால் கேட்டு அறிவதும் பொய், வாசித்தறிவதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811    Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# நாம் அழகாய் இருக்க

**தொடர் 2**



சசி நரேன்
Cosmetologist & Aestheticia

சென்ற மாத ஆக்கத்திலிருந்து சருமத்தைப் பற்றிய சில விடயங்களை அறிந்திருப்பீர்கள் இம்மாதம் கூந்தல் பாதுகாப்பையும் நிவர்த்தியையும் பற்றிப் பார்ப்போம்.

கூந்தலைப் பாதுகாக்கக் சத்துணவு மிகவும் முக்கியம். கூந்தலுக்குப் தேவையானது இரும்புச் சத்து. இந்தச் சத்து கீரைகள், முட்டை, மாமிசம், மோர், தேன், பருப்பு வகைகள், பழங்கள், பாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு, இவைகளிலிருந்து கிடைக்கிறது.

## கூந்தலைப் பாதுகாக்கச் சில குறிப்புகள்

- முடியை அழுக்கு, பொடுகு, வேர்வை இல்லாமல் பாதுகாப்பது அவசியம்.
- வாரம் மூன்று முறையாவது தலையை சுத்தம் செய்ய வேண்டும்.
- காலை, மாலை இருவேளைகளிலும் தலை வாரிக்கொள்ள வேண்டும். பின்னலை எப்போதும் தளர்த்தியாகவே பின்னிக் கொள்ள வேண்டும்.
- கூந்தலின் நுனியில் வெடிப்புகள் இருந்தால் நுனியை வெட்ட வேண்டும், ஒரு மாதம் அல்லது 6 வாரத்திற்கு ஒருமுறை வெட்ட வேண்டும்.
- அடிக்கடி back comb செய்வதைத் தவிர்க்க வேண்டும்.
- கூந்தல் பறக்காமல் இருக்கவும், வடிவம் கொடுப்பதற்கும் Hair Sprayஐ அடிக்கடி உபயோகப்படுத்தக் கூடாது.
- தலைமுடியை வாரும் சீப்பைச் சத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.
- நாம் உபயோகிக்கும் ஷாம்போவை அடிக்கடி மாற்றக் கூடாது.
- தலையில் பொடுகு இருந்தால் முகத்தில் பருக்கள் வரலாம். பொடுகு உள்ளவர்கள் தலைகுளிக்கும் போது தலையில் ஊற்றும் நீர் முகத்திற்கு வராமல் தலையைப் பின் புறமாகச் சாய்த்துக் கொண்டே தலையை அலச வேண்டும்.
- ஒருவர் உபயோகித்த சிப்பை மற்றொருவர் உபயோகிக்கக் கூடாது.



- தலையணைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.
- தலை குளிக்கும் முன் தலையை வாரிக் கொள்ளவேண்டும்.
- உலர்ந்த முடி உள்ளவர்கள் மிருதுவான ஷாம்போவை உபயோகிக்க வேண்டும்.
- கூந்தல் வளருவது அவரவர் பரம்பரையைப் பொறுத்து. இருந்தாலும் கூந்தலுக்குத் தேவையான கவனிப்பு இருந்தால் நிச்சயமாக நன்றாகவே வளரும்.
- நரை முடிக்கு உபயோகிக்கும் இரசாயக் கூந்தல் சாயம் அலர்ஜியாக இருந்தால் கூந்தல் உதிரக்கூடும். ஆகையால் உபயோகிக்கும் முன் அலர்ஜி test செய்து பார்த்து அதன் பின்பே உபயோகிக்க வேண்டும்.
- தலைக்கு உபயோகிக்கும் டவலை உடம்பிற்கு ஒரு போதும் உபயோகிக்கக் கூடாது.
- சருமத்திற்கு எவ்வளவு பராமரிப்புக் கொடுக்கிறோமோ அந்த அளவு கூந்தலுக்கும் கொடுக்கவேண்டும்.
- சிகரெட், மதுபானம் இவற்றாலும் கூந்தல் பாதிக்கப்படலாம்.
- நம்முடைய உணவில் மாற்றமிருந்தாலும், நடைமுறையில் மாற்றமிகுந்தாலும் கூந்தல் பாதிக்கப்படலாம்.
- சர்க்கரை, காபி, டீ, ஐஸ்கிரிம் குளிர்பானங்கள் அதிகமாக உட்கொண்டாலும் கூந்தல் பாதிக்கப்படலாம்.
- எண்ணெய் கசிவான கூந்தலுடையவர்கள், மாமிசம், வெண்ணெய், தயிர் போன்ற கொழுப்புச் சத்து உள்ள பொருள்களைக் குறைப்பது நல்லது.
- உலர்ந்த முடி உள்ளவர்கள் வெண்ணெய், நெய் அதிகம் உட்கொள்ள வேண்டும்.
- முட்டையின் மஞ்சள் கருவை நன்றாக அடித்து சிறிதளவு வெந்நீர் கலந்து கூந்தலில் தடவி குளித்தால் கூந்தல் பளபளப்பாக இருக்கும்.
- வினிகர், சிறிதளவு நீர் எழமிச்சப்பழச்சாறு இவைகளை கலந்து கூந்தலில் தடவிக் குளித்தால் கூந்தலுக்குத் தேவையான சத்து கிடைக்கும்.
- மருதாணி இலையை அரைத்துக் தேங்காய் எண்ணெய் அல்லது Olive oil உடன் சேர்த்து காயிச்சி வடிகட்டித் தினமும் தடவவேண்டும். முடி நன்றாக கருமையாக வளரும்.
- கறிவேப்பிலை, துளசி இதனை நன்றாக அரைத்து இதனுடன் எமுமிச்சம் பழச்சாறு நீர் கலந்து இதனைத் தேயித்துக் குளித்தால் பித்ததிதிற்கு நல்லது பொடுகும் வராது.
- பூண்டு, கொத்தமல்லி, புதினா, கறிவேப்பிலை முதலியவற்றை ஆகாரத்தில் சேர்த்துக் கொண்டால் கூந்தலுக்கு மிகவும் நல்லது.
- கூடுதலாக கவலைப்படுதல், நித்திரையின்னைமை, கொம்பியுட்டரின் முன்னரே இருத்தல், கூடுதலான வெப்பம் தரும் சுடு நீரில் குளித்தல். இவை எலிணம் கூந்தல் பாதிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் Oil massage, Mask treatment செய்தால் முடி உதிரிதல், பொடுகு, முடி வெடிப்பு, இவை எலிணம் குறைந்து கொண்டு செல்லும்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■



# படுவான்கரைப் பயணம்

## தொடர் 03

- குமார் புனிதவேல் -

வாழ்க்கையை ஒரு பயணமாக உருவகிப்பவர் பலர். ஆனால் அந்த வாழ்க்கைப் பயணத்தில் பல உப பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளமைபற்றி நீங்கள் அறிவீர்கள். அத்தகைய பயணங்கள் பல புதுமுகங்களை



சந்திக்க உதவும். ஆனால் நாங்கள் மேற்கொண்ட பயணத்தில் பழைய நண்பர்கள் எமது உள்ளங்களில் அழியாத கோலங்களாக இருந்த நினைவுகளை இரைமீட்க சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தந்தது இங்கு குறிப்பிடவேண்டிய ஒரு விடயம்.

எமது பயணத்தில் அடுத்துத் தரித்த முக்கிய நகரம் தண்டர்பே என்பதாகும். இந்த நகரம் தோன்றி இன்னுமும் அரை நூற்றாண்டு கூட ஆகவில்லை என்ற தகவல் எமக்கு பெரும் ஆச்சரியத்தை தந்தது. இதற்கு முன் இந் நகரத்திற்கு அண்மையில் இரு நகரங்கள் இருந்தன. கி.பி.1600இல் பிரஞ்சு கம்பனி வியாபாரிகள் இங்கு குடியேறினாலும் 1803ம் ஆண்டில் ஒரு காவலரண் அமைத்து Fort William எனும் நகரம் உருவாக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் சுப்பீரியர் வாவிக்கரை யோரத்தில் Port Arthur எனும் நகரம் தோன்றி வளர்ந்தது. வாவிக்கரையோர நகரமான Port Arthur மத்திய நாட்டு கோதுமை பண்டத்தை ஏரிகளினூடாக கடலுக்கு எடுத்து சென்று ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உதவியது. இரு நகரங்களுமே 1914ம் ஆண்டளவில் சிறப்புடைய நகரங்களாக நல்ல குடிநீர், நகர கழிவு வெளியேற்ற வசதி அமைக்கப்பட்டிருந்ததுடன் Port Arthur கனடாவின் நகரசபையால் நடத்தப்படும் மின் போக்குவரத்து வாகன வசதியை முதலில் அமைத்த பெருமையையும் பெற்றது.

காலப் போக்கில் இரு நகரங்களையும் இணைக்க முயற்சி எடுக்கப்பட்டு கனடாவின் மிகப் புதிய பட்டணத்துக்கான பெயரை 1969ம் ஆண்டில் பொதுசன வாக்கெடுப்புக்கு விடப் பட்டது. ஐம்பெரும் வாவிகளின் வடக்கு முனையில் உள்ள வளைகுடாவில் அமைந்துள்ள இந்த நகரத்துக்கு மூன்று பெயர்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டன. அவை Lake Head, The lake head, Thunder bay என்பனவாகும். இவற்றில் Lake head எனும் பெயர் வரக் காரணம் வளைகுடா வாவிகளின் தலைபோல் காட்சி தந்தமையே. நீர்வீழ்ச்சி Kaka beka எனும் பெயராகும். இதுபற்றிய தகவலை பின் பார்ப்போம். Lakehead 15,302 வாக்குகளும், The label எனும் பெயருக்கு 8377 வாக்குகளும், இறுதியாக முதலிடத்தில் Thunder bay எனும் பெயருக்கு 15,870 வாக்குகளும் தரப்பட்டு வெற்றி பெற்றது. எனவே நாங்கள் அன்றைய இரவு கனடாவின் மிகப்புதிய நகரமான Thunder bayஇல் தங்கினோம்.

Thunder bay எனும் பெயருக்கு ஒரு நீர் வீழ்ச்சிதான் காரணம் என்று முன்பு குறிப்பிட்டோம். அது பற்றிய தகவலை இனிக் கவனிப்




போம். இந்த பிரதேசத்தின் பூர்வீக குடிகள் ஒஜிப்வா (Ojibwa) என அழைக்கப்பட்டனர். இங்கு உள்ள ஒரு பெரும் ஆறு Kaministiquia River என அழைக்கப்படும். இந்த ஆறு மிகப்பழமை வாய்ந்த (1.6 Billion years) கற்பாறைகளுக்கூடாக செல்கிறது. இப் பாறையில் 130 அடி உயரமுள்ள ஒரு பெரும் நீர்வீழ்ச்சியுண்டு. இவை பாறைகளுக்கூடாக பெரும் இரைச்சலுக்கூடாக விழுவதால் இதனை Kakabeka (காக்காபீக்கா) என்று ஒஜிப்வா குடிகள் அழைத்தனர். Kakabeka எனும் சொல்லின் அர்த்தம் இடிவிழும் நீரோடை என்பதாகும். இந்த நீர்வீச்சியின் இரைச்சல் நெடும் தூரத்திற்கு கேட்கின்றது. இந்த நீர் வீழ்ச்சி பற்றிய ஒரு சுவையான கர்ண பரம்பரைக்கதை ஒன்று உண்டு.

இப்பிரதேசத்தின் பூர்வீக குடிகள் ஒஜிப்வா எனப்படுவர் என்று முன்பே குறிப்பிட்டேன். இக்குடிகளின் தலைவன் White bear மிக முதியவராயிருந்தார். இவர்களை பூண்டோடு அழிக்கும் கொடிய நோக்குடன் சியோக்ஸ் (Sioux) எனும் குடிகள் பெரும் படையுடன் வருவதை அறிந்து பெரும் கவலையுடன் செய்வதறியாது Whit bear திகைத்தார். தந்தையின் பெரும் துயர்கண்ட இளவரசி Green Mantle என்பவள் யாரும் அறியாது ஒரு ஓடத்தினை எடுத்துக்கொண்டு நீர் வீழ்ச்சி அடிவாரத்துக்கு சென்று ஓடத்தை அங்கு கட்டிவிட்டு பாறையில் ஏறி ஆற்று வழியாக விரைந்து நடந்தாள். அவர்களை தாக்குவதற்கு வந்துள்ள Sioux குலத்தவர்கள் தங்கி இருக்கும் பாசறையை அடைந்து அஞ்சி நடுங்குவதாக நடித்தாள்.

கைபற்றிய Green Mantlesஐ தமது தலைவர் முன் கொண்டு நிறுத்தினர் படைவீரர். தான் மிக்க அச்சமுற்றிருப்பதாக நடித்த Green Mantle தன்னை கொல்லாவிட்டால் தன் இனத்தவர் ஒழிந்திருக்கும் இடத்தை காட்டுவதாக உறுதிமொழி கூறினாள். எளிதாக எதிரியை மடக்கிவிடலாம் என்ற எண்ணம் கொண்ட Sioux குடிமக்கள் தலைவன் அவள் வேண்டுகோளுக்கு இணைந்தான். அடுத்த நாள் காலை இளவரசியை முன்னால் செல்லுமாறு கூறி, வீரர்கள் தமது ஓடத்தை பின்னால் செலுத்தினார்கள். வழிதவறக்கூடாது என்று Green Mantle சொன்னபடி ஓடங்களை ஒன்றுடன் ஒன்றாக இணைத்துக் கட்டினார்கள்.

ஓரிடத்தில் ஆறு திடீரென திரும்பி நீர்வீழ்ச்சியாக விழும் வேளை அந்த நீர்வீழ்ச்சியில் Green Mantle வீழ்ந்து இறந்தாள். அவளுக்கு பின்னால் வந்த எல்லா வீரர்களும் விழுந்து இறந்தார்கள். ஓடங்கள் கட்டி இருந்ததால் ஒருவரும் தப்பவில்லை. தன் இனத்தை காப்பாற்ற தன் உயிரைத் தியாகம் செய்த Green Mantleஇனை அன்பொழுக Marito



ILLUSTRATION' DIGI MEDIA CREATIONS

எனும் தேவதை பார்த்து வாழ்த்தினாள். இன்றும் அந்த நீர்வீழ்ச்சியில் வெளிப்படும் துளிகளை கவனித்துப் பார்த்தால் அங்கு green Mantle நிற்பதை பார்க்கலாம் என்பர்.

தியாகத்தின் சுடரான Green Mantleஇனை மனதில் நிறுத்தி இந்த நீர்வீழ்ச்சியை நோக்குகையில் எம்மை அறியாமலே ஒரு பக்தி மனதில் தோன்றும். இந்த நீர்வீழ்ச்சிதான் வட கனடாவின் மிக உயரமான நீர்வீழ்ச்சி என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

Kaministiquia River சங்கமிக்கும் சுப்பீரியர் வாவியைப் பற்றி சில குறிப்புகளை இங்கு தரலாம் என்று நினைக்கின்றேன். ஐம்பெரும் வாவிகளில் இதுவே மிகப்பெரியது. இது 31,820 சதுர மைல் பரப்பளவு உடையது. இலங்கையின் பரப்பளவு 25,000 சதுர மைல் பரப்புடையது எனும் வேளை இதன் அளவை நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம். 1332 அடி ஆழத்தினை உடைய இந்த வாவியின் அடித்தளம் கடல் மட்டத்திலும் 733 அடி கீழே உள்ளது. மிக முக்கியமான விடயம் என்னவெனில் இவ்வாவியின் பூர்வீக பெயர் கிட்சி கூமி (Gitche Gumee) ஆகும். ஆனால், அவர்களை ஆண்ட ஐரோப்பியர்கள் ஆரம்பத்தில் கொடுத்த பெயர் Higher Lake. Hown வாவிக்கு மேலே (வடக்கில்) அமைந்துள்ளமையால் இப்பெயரைக் கொடுத்தார்கள்.

Thunder bayயிற்கு அண்மையில் 30 நிமிட பயணத்தில் அடையக்கூடிய இன்னுமொரு இடம் கனடாவின் மிக நீளமான தொங்கு பாலமாகும். தொங்கு பாலம் என்றவுடன் ஐம்பது வருடங்களுக்கு முன் கதிர்காமத்தில் மாணிக்க கங்கையை கடப்பதற்கு ஒரு தொங்குபாலம் மட்டுமே இருந்தது ஞாபகம் வருகிறது. அல்லாவிடில் ஆற்றை கடப்பதற்கு கட்டுமரமும் படகுமே பாவிக்கப்பட்டது. அக் காலகட்டத்தில் பேராதனைப் பூங்காவில் மகாவலிகங்கையை கடப்பதற்கு ஒரு தொங்கு பாலம் இருந்தது ஞாபகம். ஆனால், இவை அனைத்தையும் விட தண்டபேயிற்கு அண்மையில் உள்ள தொங்குபாலம் 600 அடி நீளமும் நிலத்திலிருந்து 152 அடி உயரத்திலும் அமைந்துள்ளது. இதுவே கனடாவின் மிக நீண்ட தொங்குபாலமாகும். இப்பாலத்தில் நடப்பது ஒரு மறக்கமுடியாத அனுபவமாகும். ஒரு தரத்தில் ஆகக்கூடியது 25 பேர்கள் மட்டுமே கடக்கலாம். மேலும் பெரும் காற்று வீசும் வேளைகளில் நடப்பது மிக மிக ஆபத்தான விடயமாகும்.

அடுத்த இதழில் வின்னிபெக் நகரம் அதன் அண்மையில் உள்ள வின்னிபெக் வாவி, Canadian Mint எனப்படும் நாணயம் தயாரிக்கும் நிலையம் பற்றிய பல சுவையான தகவல்களை பார்ப்போம்.

kumarpunithavel@thaiveedu.com

•••


# www.inayam.net

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன. நாடக. இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்.

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம். காலம். நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam

416•400•6406

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t





d i g i m e d i a c r e a t i o n s

**k a r u n a p h o t o g r a p h y**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

## வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 03

K.S. பாலச்சந்திரன்

# பின் கதாநாயகன்



வவுனியாவில் ஒரு நாடகம் போடுவதாக ஏற்பாடு. கொழும்பிலிருந்து முழு நாடகக்குழு புறப்பட்டவேளையில் நான் மாத்திரம் நான்கு நாட்கள் முந்தியே புறப்பட்டு என் சொந்த ஊருக்குப் போய், அங்கிருந்து வவுனியா வருவதாக ஒப்புக் கொண்டிருந்தேன்.

எனக்கு திருமணம் நடந்த புதிது. அன்பு மனையாளை விட்டுப் புறப்படுவது என்பது மிகுந்த கஷ்டமாகவிருந்தது. புறப்படுவதை கடைசிநேரம் வரை ஒத்திப் போட்டு, இறுதியில் வவனியாவுக்கு செல்லும் கடைசி பஸ்ஸும் சென்று விட்டது. மிகுந்த கலக்கத்துடன் கொடிகாமம் பஸ் ஸ்ராண்டில் நின்று, இறுதி முயற்சியாக அவ்வழியால் சென்ற லொறிகளை மறித்து 'லிப்ட்' கேட்டேன். பலபேர் நிற்காமலே சென்று விட, ஒரு புண்ணியவானான லொறிச்சாரதி மறித்து வவனியாவிற்கு போவதாகச் சொல்லி ஏற்றிக் கொண்டார்.

ஆசனம் என்ற கதை கிடையாது. லொறியின் உள்ளே நின்ற நிலையில் பயணம் ஆரம்பமாகியது. ஒரு மைல் அப்படி பயணம் செய்வதே பெரிய காரியம். இது ஏறக்குறைய 90 மைல். இலங்கையின் நீளத்தில் அரைப்பங்கு தூரம். பாதை கரடு முரடானது என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒவ்வொரு பள்ளத்திலும் விழுந்து எழும்ப என்னோடு இப்படி பயணம் செய்ய துணிந்தவர்களும் நானும் மேல் நோக்கி வீசப்படுவதும் மீண்டும் லொறியின் உள் தளத்தில் குதிப்பதுமாக, சுளகில் அகப்பட்ட அரிசிகளைப் போல இருந்தோம். இல்லை.. இல்லை - நின்றோம்.

எங்கெங்கெல்லாமோ லொறி நிறுத்தப்பட்டது. டிரைவரும் முன் ஆசனத்தில் இருந்தவர்களும் இறங்கி இறங்கிப் போனார்கள். திரும்ப வந்து ஏறிய பின்னர் அவர்களது குரல்கள் சற்று பிசகடைந்தன. பின்னால் சில உயிரினங்கள் நிற்பதையே மறந்தவர்களாக, அவர்கள் உரத்தகுரலில் யார் யாரை எல்லாமோ பேசிக் கொண்டார்கள். மனைவி, மைத்துனன், அடுத்த வீட்டுக்காரர், கோயில் முதலாளி, சங்கக்கடை மனேஜர், தங்கள் தொகுதி எம்.பி என்று இவ்வாறாக அவர்களது இலக்கு விரிவடைந்து கொண்டே போனது. இப்படியே போய் இலங்கைப்பிரதம மந்திரி, ஐ.நா செயலாளர் நாயகம், அமெரிக்க ஜனாதிபதி என்று போகப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டேன்.

யாரோ கதையை திசை திருப்பி விட, குடிப்பது எவ்வளவு தீங்கானது - அதை விட்டு விடப் போவதாக மனைவியின் தலையில் அடித்து சத்தியம் பண்ணிவிட்டு வந்ததாக டிரைவர் மூக்குமுட்ட குடித்ததினால் தடுமாறும் குரலில் சொன்னார். ஆனால் சத்தியம் எல்லாம் ஆனையிறவுக்குள்தான் என்றும் அவவுக்கு சொல்லியிருப்பதாகச் சொன்னார். அவர்கள் எல்லோருமாக ஏகோபித்த குரலில் 'மது ஒழிக' என்று சொல்லாத குறை.

எவரது முகத்தையும் நாங்கள் பார்க்க முடியாததினால், லொறிக்குள் தொங்கிக் குதிக்காத இடைவெளியில் வானொலி நாடகம் கேட்பது போல கேட்டுச் சிரித்துக் கொண்டோம். குதிரைகளுக்கு கண்களை கட்டி விட்டதைப்போல நாங்கள் கடந்து போகும் பாதை மாத்திரம் எங்களுக்குத் தெரிந்ததினால் எங்கே நிற்கிறோம் என்றுகூட தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய நாடகத்தை கைவிட்ட நிலை. இனி என்ன செய்வது. போய்ச் சேருகிற நேரம் பார்த்துக் கொள்ளுவோம் என்றாகி விட்டது. நாடகத்தின் இயக்குனர் கண்டிப்புக்கு பேர் போனவர். அவருக்கு என்ன சொல்லித் தப்பலாம் என்று நினைத்து கொண்டு நின்றேன்.

பயணம் நீண்டு கொண்டே போனது. எங்கள் சகஜமான பேச்சுக்களும் நின்று போய் அவரவர் தங்கள் தங்கள் சிந்தனையில் ஆழ்ந்து போனார்கள். நின்ற நிலையில் தூங்கலாம் என்று அன்றைக்கு முதன்முதலாக தெரிந்து கொண்டேன். இடை இடையே சிறிய ஊர்கள் பெட்றோமாக்ஸ் ஒளி பரவும் கடைகளுடன் கடந்து போயின.

மோனத்தில் ஆழ்ந்து போன நான் ஏதோ ஒரு சந்தோசக் குரலினால் தூக்கம் கலைந்து போய் கடந்து போகும் பாதையைப் பார்த்தேன். வீதி விளக்குகள் ஒவ்வொன்றாக தெரிந்து மறைந்தன. ஏதோ ஒரு நகரம். அடையாளம் கண்டு கொண்டு வவுனியா என்று யாரோ சொல்லவும். குதூகலக் குரல்கள் ஒலித்தன.

முற்றவெளிக்கு முன்னால், பரிச்சியமான நாடகவசனங்கள் கேட்டதினால், எங்கள் நாடகம் நடக்கும் இடத்தில் நிற்பது உறுதியாகிவிட்டது. லொறியின் தட்டியில் படபடவென்று தட்டி, ''அண்ணை நான் இதிலை இறங்கப் போகிறேன்'' என்றேன். சாரதி நிறுத்தவும், நன்றி சொல்லிக் குதித்தேன்.

நாடகம் நடந்து கொண்டிருந்தது. என்னுடைய வசனங்களை யாரோ பேசிக் கொண்டிருந்தார்கள். இயக்குனர் எஸ்.எஸ். கணேசபிள்ளைதான் தான் அது. பொறுத்து பொறுத்துப் பார்த்த விட்டு தானே மேடையில் ஏறி விட்டார் போலிருக்கிறது. மேடையின் பின் பக்கமாக ஓடினேன்.

அந்தப்பகுதி கும்மிருட்டாக மரங்கள் அடர்த்தியாக உள்ள ஒரு பகுதி. மேடையின் பின் பக்கமாக ஒரு ஜன்னல் தெரிந்தது. அந்த ஜன்னல் அருகே நாடகத்தில் ஆபிரகாம் கோவூர் என்ற பகுத்தறிவாளர் (அவரும் நேரடியாக மேடையில் தோன்றியதுண்டு) வேடத்தில் நடிக்கும் வானொலி அறிவிப்பாளர் ஜோர்ஜ் சந்திரசேகரன் ஒப்பனை செய்து கொண்டிருந்தார். அருகில் சென்று 'ஸ்' என்ற குரல் எழுப்பவும், அவர் பயந்து திடுக்கிட்டுப் போய், பிறகு இருட்டுக்குள்ளும் என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

'என்ன செய்யலாம்' என்று நான் கேட்கவும், இயக்குனர் என்னை கொலை செய்யும் மனோபாவத்துடன் நிற்பதாகச் சொன்னார். இருட்டுக்குள் நின்றபடியே நான் மன்றாடவும், அவர் எழுந்து சென்று இயக்குனரை எப்படியோ சமாளித்தது தனிக்கதை.

''அவன் என்னுடைய கண்ணிலையும் முழிக்கக்கூடாது'' என்று இயக்குனர் ஒதுங்கிக் கொள்ள, நான் பழைய கால நாடகங்களில் வருவது போல 'பின் கதாநாயகனாக' நடித்தேன். ஆரம்பத்தில் பார்வையாளர்களுக்கு சற்றுக் குழப்பமாக இருந்தாலும், கொஞ்ச நேரத்தில் அவர்களுக்கு புதிய கதாநாயகனை பிடித்துப்போனது. கைதட்டல்கள் எழுந்தன.

நாடகம் முடிந்தபின்னர் வெகு நேரமாக பிகு பண்ணிக் கொண்டு இருந்து விட்டு, பிறகு இயக்குனர் என்னோடு சமாதானமாகி விட்டார். திரும்பவும் நான் ஊருக்குப் போய் விட்டு வருகிறேன் என்றபோதுதான் சற்று கோபப்பட்டாலும், புது மாப்பிள்ளையான என் நிலையை உணர்ந்து சிரித்துக் கொண்டார்.

நாடகத்தின் பெயர் 'நம்பிக்கை'.

ksbala@thaiveedu.com

■ ■ ■

# சந்தோஷத்தை...

68ம் பக்கத் தொடர்ச்சி...

பட்டறை) என்பது ஆங்கில பழமொழி. ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறித்தனமாக சும்மா இருக்கும் போது தேவையற்ற சிந்தனைகளும் கவலைகளும் நம்மை ஆட்கொண்டு விடுகின்றது.

எல்லாம் அளவோடு இருத்தல் சந்தோஷத்திற்கு வழிவகுக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்.

அளவுக்கதிகமாக சும்மா இருத்தலும் அளவுக்கதிகமான வேலையும் உங்களை சந்தோஷமாக்காது. ஒரு நாளில் சில மணி நேரம் தனித்துத் தியானம் செய்தலும் உங்களை மன அமைதிப்படுத்தும். தனித்திரு, பசித்திரு என்று கூறுவார்கள். தனித்திருந்து மனதை ஒருமுகப்படுத்துதல் உங்களுக்கு கவலைகளையும் போராட்டங்களையும் தாங்கக் கூடிய மனவலிமையைக் கொடுக்கும். புதிதாக எதையாவது கற்றுக் கொண்டேயிருங்கள். மனதிற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் புத்தகங்களை வாசியுங்கள். உங்கள் மூளைக்கு அது புத்துணர்வூட்டுவதுடன் உங்கள் மனதையும் சந்தோஷமாக வைத்திருக்க உதவும். வாகனத்தில் செலவதைவிட தனிமையாக நடந்து செல்லுங்கள். அது உங்கள் வாழ்க்கையை அலசி ஆராயும் சந்தர்ப்பத்தை உங்களுக்கு கொடுக்கும். நேரத்துடன் நித்திரைக்குச் சென்று காலையில் நேரத்துடன் எழுந்திருங்கள்.

இவ்வாறு சந்தோஷமாக வாழ்வதற்கு இளைய தலைமுறையினரையும் வழிநடத்துங்கள். அதிகமான வீடுகளில் பிள்ளைகள் 'face book' என்றும் 'chatting' என்றும் கணனியின் முன்னால் மணிக்கணக்காக அமர்ந்திருப்பார்கள் 'face book' மூலம் மற்ற பிள்ளைகள் உலகம் சுற்றுவதையும் அவர்களது ஆடம்பர நடை, உடை, பாவனைகளையும் பார்த்து அது போல் தாமும் நடக்க வேண்டும் என எண்ணி மனப்பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். எனவே அத்தகைய பாதிப்புகள் ஏற்படாமல் பிள்ளைகள் சந்தோஷமாக வாழ்வதற்கான வழிமுறைகளை அவர்களுக்கும் கற்றுக் கொடுங்கள். பிள்ளைகள் வெளியே போய் குழப்பங்களில் ஈடுபடாமல் வீட்டினுள் இருந்தால் நிம்மதி என எண்ணும் பெற்றோர், இவ்வாறு கணனியே கதி என பிள்ளைகள் இருந்தாலும் பரவாயில்லை என கண்டும் காணாது இருந்து விடுகிறார்கள். அல்லது பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசும்போது தாம் வாயடைத்துப் போவதால் அல்லது அதனை நினைத்து பெருமைப்படுவதால் இவ்வாறான ஆரோக்கியமற்ற செயல்களைக் கண்டிக்கத் தவறும் பெற்றோர் முடிவில் தமது மகிழ்ச்சியையும் தொலைத்து விடுகிறார்கள்.

குடும்பத்துடன் ஒன்றாக இருக்க நேரம் கிடைத்து ஒன்றாக உணவருந்தி, இளைப்பாறி, மற்றவர்களுடன் உங்களையோ, உங்கள் குடும்ப அங்கத்தவர்களையோ ஒப்பிடாது, மனைவி மக்களுடன் முறுமுறுக்காது அன்பாக கதைத்து அயலவருக்கு உதவும்போது அது சந்தோஷத்தைத் தருமே ஒழிய பணமும் பொருளும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தராது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எந்நிலையிலும் மனநிறைவுடன் வாழுங்கள் - மற்றவரையும் வாழ விடுங்கள். சந்தோஷம் உங்களைத் தேடிவரும்!

இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு. அது எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு...

உசாத்துணை:

http://www.myfavoriteezines.com/articles/simple-living-life.html

http://www.essortment.com/all/livingsimple_rdps.htm

http://www.ivaluenews.com/personal-finance/frugal-livingsimple-lifesaving-money-tips/

http://www.ehow.com/how_2180359_start-living-simple-life.html

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

# போரால் பாதிக்கப்பட்டோருக்கும், மனித உரிமைகளுக்குமான நடுவகம்

## யார் இவர்கள்

போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம் ஒரு சுதந்திர, இலாப நோக்கமற்ற, பக்க சார்பற்ற, மனித உரிமைகள் அமைப்பாகும். போ.பா.ம.உ.ந போரால் பாதிக்கப்பட்டோரைப் பற்றிய தகவல்களையும் மனித உரிமை மீறல்களையும் ஆவணப்படுத்துவதில் முதன்மையாக ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பு உள்ளூரிலும், அனைத்துலக அளவிலும் மனித உரிமை விழுமியங்களையும், கல்வியையும் மேம்படுத்தவும் பாடுபடுகிறது.

## எப்படி மனித உரிமைகள் நடுவம் தனது பணிகளை மேற்கொள்கின்றது?

ஆவணப்படுத்தல், ஆய்வு, கல்வி, பேணுதல் ஆகியவை முதன்மைப் பணிகளாக இருக்கின்றன. பாதிக்கப்பட்டோர் தொடர்பாக தகவல்களை துல்லியமாக, ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்துகின்றது. இந்த தகவல்களை தமது ஆய்வுக் குழுவால் ஊடக, சாசன, இதர உசாத்துணைகள் கொண்டு மெய்தறிதல் செய்யப்படுகின்றது.

மனித உரிமைகள் தொடர்பான நூல்களையும் ஆவணங்களையும் கொண்ட ஒரு நூலகத்தையும் அமைத்து வருகின்றனர். இதழ், அறிக்கைகள் ஆகியவற்றையும் வெளியிட உள்ளனர். இச்செயற்பாடுகள் ஊடாக மனித உரிமைகள் தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த விளைகின்றனர்.

## இதுவரை இந்த நடுவம் செய்துள்ள பணிகள் என்ன?

இலங்கையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து, காயப்பட்டு, பசிகிடந்து இறக்கின்றார்கள். ரொறன்ரோவில் இருந்த பலரின் உறவுகள் இவ்வாறு பாதிக்கப்பட்டார்கள். இவர்களின் துயரத்தைப் பகிர ஒரு நினைவாலயத்தை ஒரு தொண்டர் குழு அமைத்தது. இந்த செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த பலர் இவ்வாறு பாதிக்கப்பட்டோர் பற்றிய தகவல்களை முறைப்படி, பன்னாட்டு நியமங்களின் படி ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்று உணர்ந்தனர். பல உலக மனித உரிமை அமைப்புகளின் நெறிகளுக்கு ஏற்பவும், ஐக்கிய நாடுகள் அமைப்பின் வரைவிலக்கணத்துக்கு அமையவும், பன்னாட்டு நியமனங்களுக்கு ஏற்ற முறையிலும் குறிடோக்சு (Human Rights Documentation Information System) என்று அறியப்படும் மனித உரிமைகள் தகவல் ஆவணப்படுத்தல் முறைமைக்கு ஏற்ற வகையிலும் இத் தரவுகள் பதிவு செய்யப்படுகின்றன. தற்போது 10 நாடுகளில் ஆவணப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ரொறன்ரோவிலும் நடுவ அலுவலகத்தை நிறுவி உள்ளனர்.

## போ.பா.ம.உ.ந. வேறு அமைப்புகளுடன் சேர்ந்தியங்குகின்றதா

கொள்கைகளையும் நோக்கங்களையும் பகிரும் அமைப்புகளுடன் சேர்ந்தியங்கத் தயாராக இருப்பதோடு தற்போது மதிப்புப் பெற்ற சில பன்னாட்டு மனித உரிமை அமைப்புகளுடன் சேர்ந்தியங்கி வருகின்றனர்.

## பெறப்படும் தரவுகள் எந்தளவு பாதுகாப்பாக உள்ளன, அவற்றுக்கு யார் பொறுப்பு?

உயர்ந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கணினிச் செயலி மிகப் பாதுகாப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. செயலி பல கட்ட அனுமதிகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளது. நடுவ உறுப்பினர்கள் கனடிய தகவல் பாதுகாப்பு சட்டத்துக்கு ஏற்ப செயற்படு பயிற்சி பெற்றவர்கள். இந்த தரவுகளுக்கான முழுப் பொறுப்பையும் நடுவர் ஏற்றுக் கொள்கிறது.

## அமைப்பு எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது. முடிவுகள் எப்படி எடுக்கப்படுகின்றன?

போ.பா.ம.உ.ந ஒரு வேரடி மனித உரிமைகள் அமைப்பு. அனேக முக்கிய முடிவுகள் இணக்க முடிவாக எடுக்கப்படுகின்றன. நடுவம் ஆவணப்படுத்தல், ஆய்வு, பரப்புரை, நுட்பம், நிர்வாக ஆகிய அணிகளைக் கொண்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களால் தலைமைத்துவம் வழங்கப்படுகிறது.

## நிதியுதவி செய்கிறார்கள் யார்

பெரும்பகுதி நிதி உறுப்பினர்களின் கட்டணங்களும், தனிநபர் நன்கொடைகளும் ஆகும். நடுவ வேலைகள் அனைத்தும் தன்னார்வத் தொண்டர்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

## எப்படி உதவலாம்?

முதலாவதாக பாதிக்கப்பட்ட உங்கள் உறவினர்கள் பற்றிய தகவல்களை பதியுங்கள்.

ஆவணப்படுத்தல் மற்றும் மனித உரிமைகள் பேணல் செயல்பாடுகளுக்கு நிறைய மனித, நிதி வளங்கள் தேவை. நீங்கள் அமைப்புடன் சேர்ந்து பணியாற்றலாம். அல்லது நன்கொடை தந்து உதவலாம். அமைப்பிடம் வரையறை செய்யப்பட்ட பணித்திட்டங்கள் பல உண்டு. கல்லூரி, பல்கலைக்கழக மாணவர் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் ஆய்வு, நுட்பம், சமூக ஒழுங்கமைப்பு போன்ற பல துறைகளின் அனுபவம் பெறலாம்.

## பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி பதிவது எப்படி?

அலுவலகம் Progress & Bellamy சந்திப்பிற்கு அருகாமையில் 106 - 705 Progress Ave என்னும் முகவரியில் அமைந்துள்ளது. நீங்கள் 416-628-1408 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து சென்றால் நன்று. மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு www.cwvhr.org என்னும் வலைத்தளத்தை பார்க்கவும்.

## பாதிக்கப்பட்டோருக்கு நேரடி உதவிகளை நடுவம் வழங்குமா

பாதிக்கப்பட்டோருக்கு நேரடி உதவிகளை வழங்கும் அமைப்புகள். தனிநபர்கள் பற்றிய தகவல்களை நாம் பகிர்வோம். தற்சமயம் எம்மிடம் நேரடி உதவிகள் வழங்கக்கூடிய வளங்கள் இல்லை.

■ ■ ■


ஆயுட்காப்புறுதி

For all your Insurance needs...
Call: 416•522•3314
Sockalingam Prabaharan
Life Insurance Broker

- வயோதிபர்களுக்கான காப்புறுதி
- ஆயுட் காப்புறுதி *(Life Insurance)*
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- குழந்தைகளுக்கான

உயர் கல்வி சேமிப்புத் திட்டம் RESP
*20% - 40%* அரச மானியத்துடன்
*15%* அதிக போனஸ்

- Disability Insurance
- Non Medical Insurance
- RRSP & Investments



$100,000. காப்புறுதிக்கு
$11.97
மாதாந்தக் கட்டணம்

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

LILAND INSURANCE INC.
759 Warden Ave. Toronto, ON M1L 4B5



KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

# இந்தியாவே கடலால் விழுங்கப்பட்டதுபோல்..

## கலாபன் கதை 04



தேவகாந்தன்
devakanthan@thaiveedu.com

கஸ்ரங்களின் ஒவ்வொரு முடுக்கிலும் அவள் புன்னகையுடன் நின்று அவனை பித்தேற்றிக் கொண்டிருந்தாள். அந்த அழகும், அளவுகளும், குறுஞ்சிரிப்பும் அவனடைந்த உடல் மன வாதைகளையெல்லாம் ஆவியாய்க் கரைய வைத்தன. அவளையே உரித்துக் கொண்டு பிறந்திருந்த குழந்தைவேறு அவனது தொடரும் வாழ்வுக்கான புதிய அர்த்தம் சொல்லி குமிழ்ந்தெழும் சிரிப்புகளுக்குள் அவனை கிறங்கி நடக்கவைத்துக் கொண்டிருந்தது.

கஸ்ரமென்பது உறுதலில் அடையப்படுவதில்லை. அதற்கொரு உளவியல் இருக்கிறது. கஸ்ரத்தை கஸ்ரமாக நினைக்காவிட்டால், கஸ்ரமென்பது கஸ்ரமாகத் தெரியாது என்று சீனப் பெரு ஞானியான தாவோ சொல்வான். தாவோ கடவுளில்லை, மனிதனில்லை, ஒரு கருத்துருவம் என்கிறது நவீன சிந்தனை. ஓடுகிற ஓட்டத்தோடு எல்லாம் அறிந்துகொண்டு கலாபன் தாவோ ஞானத்தில் ஒரு வழிக்குட் பட்டதாய் தன் வாழ்க்கையை வகுத்துக்கொண்டிருந்தான். கஸ்ரங்கள் அவனுக்குச் சுவைத்த விதம் இவ்வாறுதான் நிகழ்ந்தது.

கலாபன் இரண்டாவது கப்பல் ஏறி ஓராண்டு ஆகிக்கொண்டிருந்தது. அந்த ஓராண்டில் நான்கு தடவைகள் நாற்பதாயிரம், அறுபதாயிரம், ஒரு முறை எண்பதாயிரமென்று ஏறக்குறைய இரண்டு லட்சம் ரூபாவுக்குமேல் மனோவுக்கு அனுப்பிவிட்டிருந்தான். அந்த முறை விடுப்பிலே ஊர் செல்லும்போது வீட்டுக் கட்டுமானப் பணியைத் தொடக்கிவிட்டு வருவது என்று அவளோடு கடிதத்தில் கலந்து பேசி முடிவாகியும் விட்டது.

ஊரிலே நல்ல ஒரு காணி விலைக்கு வந்திருக்கிறது, மலிவாக வாங்கிக்கொள்ளலாம் என தாயார் எழுதியதற்கும், தனக்கு அப்போதைக்கு இருக்கிற காணி போதுமென்றும், வீடு கட்டுவதே முக்கியமானதென்றும் அவள் மனம் நோகாதவாறு கடிதமெழுதிவிட்டான். அவனது ஒவ்வொரு மூச்சும் வீடுகட்டும் தீர்மானத்தின் நிறைவேற்றத்துக்காகவே விடப்பட்டுக்கொண்டிருந்தது என்றுகூடச் சொல்லி விடலாம்.

அதற்காக அவன் வெல்லவேண்டியிருந்தவை தன்னையும், தனது ஆசைகளையும் மட்டுமாயிருக்கவில்லை, தனது பயத்தையும்கூடவாகவே இருந்தது. பூனையை மடியில் கட்டிக்கொண்டு பயணம் தொடங்குவதுபோல, மரணத்தை அருகிலே வைத்துக்கொண்டுதான் வாழ்க்கைக்கான ஆதாரங்களைத் தேடவேண்டியிருந்த தொழிலாக இருந்தது அது.

அது ஒரு தொழில்தானா என்று அவனுக்குள்ளேயே கேள்வி உண்டு. அது ஒரு பொருள் தேடலின் யாத்திரை என்றுதான் அவனது நண்பன் சாந்தன் ஒருமுறை சொன்னான். ஓப்புக்கொண்டு இருக்கிற போதில், B.O.T லண்டன் பரீட்சை எடுத்து அங்கு வேலை பார்க்கும் தனது பிரதம கப்பல் என்ஜினியருக்கும் அது யாத்திரைதானா என்ற வினாவெழுந்தது. கப்பலின் கப்ரின் தனது நாடாகிய கிரேக்கத்தில் M.O.T பட்டம் பெற்றவன். ரேடியோ ஒ.ஃபீசர் ரொலாண்டோ, சர்வதேச அங்கீகாரமுள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் ரேடியோ ஒ.ஃபீசர் தகுதி பெற்றிருந்தவன். ஒரு நாட்டின் துறைமுகத்துக்குள் ஒரு கப்பல் நுழையவேண்டுமெனின், கப்பல் ஏதாவது ஒரு நாட்டில் அதன் பயணத் தகுதிகுறித்த சான்றிதழ் பெற்றிருக்கவேண்டியது மட்டுமல்ல, கப்பல் அதிகாரிகள் தமது தகுதியை நிரூபிக்கும் சான்றிதழ்கள் பெற்றவராய் இருப்பதும் அவசியமாகும். இத்தகு எண்ணங்கள் சாந்தனின் கருத்தைத் தகர்த்து விட்டுவிடும். பின்னர் தன் போன்ற உடலுழைப்பை மட்டும் மூலதனமாகக் கொண்டோருக்கு அது யாத்திரையாக இருந்தாலும், அதைக் கல்வி வழியில் பட்டங்கள் பெற்று அடைந்தவர்களுக்கு தொழில்தான் என்று அவன் தீர்மானம் எடுத்திருந்தான். அதன் மேல் தன்போன்றவர்களது உழைப்புச் செலுத்துதலையும் அவன் யாத்திரையென்ற ஒற்றைப் பரிணாமத்தில் பார்ப்பதைத் தவிர்த்தான்.

அவனுக்கு அப்போது அதிகாலை நான்கிலிருந்து எட்டு மணிவரையான வேலையாகியிருந்தது. இரண்டாவது என்ஜினியரோடு வேலைசெய்தான். எட்டு மணிக்கு என்ஜின் கண்காணிப்பு வேலை முடிய எட்டு மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரை மேலதிகமாக நான்கு மணிநேர பகல் வேலையும் செய்தான். கை நிறையத்தான் உழைத்தான். மனம் வைத்து உழைத்தான். உழைத்ததை ஊதாரித்தனமாக வேசைகளிடத்திலும், குடியிலும், டிஸ்கோகளிலும் என்று செலவழிக்காமல் ஒறுப்பாய்ச் செலவழித்து காசை மிச்சம் பிடித்தான். மிச்சம் பிடித்ததை மனைவியை வங்கிக் கணக்கு எடுக்கவைத்து வங்கிக்கே நேரடியாக அனுப்பினான். வீட்டுக்குச் செலவுக்குத் தேவையான பணத்தைமட்டும் எடு, மீதியை வங்கிக் கணக்கிலேயே வைத்திரு என்று எப்போதும்போல் ஒவ்வொரு தடவை பணம் அனுப்புகிறபோதும் அவன் தவறாது கடிதத்தில் எழுதிக்கொண்டேயிருந்தான்.

இரண்டாவது என்ஜினியரோடு பழக்கம் அதிகமாகியிருந்ததில் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் ஒரு மாத விடுப்பில் வீடு போய் விட்டு அதே கப்பலுக்குத் திரும்பிவருகிற வாய்ப்பும் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அதனால் தன் ஆசைகளை அடக்கிக்கொண்டு ஒரு துறவிபோல் அவன் நாட்களைக் கடத்திக்கொண்டிருந்தான்.

சமுத்திரங்கள் தம்முள்ளே தமக்குள் எது பெரியது, எது பயங்கரமானது என்பதை அறிய தமக்குள்ளேயே முட்டிமோதிக்கொள்ளும் என்று எப்போதாவது அவன் கற்பனையில்கூட யோசித்துப் பார்த்ததில்லை. ஆனால் அந்தமுறை தூரகிழக்கிலிருந்து கப்பலின் தென்னாபிரிக்காவைநோக்கிய பயணத்தில் இந்துசமுத்திரமும் அத்திலாந்திக் சமுத்திரமும் சேரும் தென்னாபிரிக்காவின் கீழ் முனையில் வானை முட்டுமளவுக்கு அலைகள் எழுந்து விழுந்துகொண்டிருந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் ஆபிரிக்க முனையைச் சுற்றி இந்தியாவை, பொதுவாக ஆசியாவை, அடைய எடுத்த அத்தனை கடற் பயண முயற்சிகளும் இடைமுறிந்து போக, 1492இல் வாஸ்கோ டி காமா என்றவனின் முயற்சிதான் வெற்றி பெறுகிறது. கடந்து செல்ல முடியாது என்றிருந்த பயங்கரத் தென்னாபிரிக்க முனையைக் கடந்து அவன்தான் நன்னம்பிக்கை முனையென அம்முனைக்குப் பெயரிட்டான். ஆயினும் நன்னம்பிக்கை முனை நம்பிக்கைகளைச் சிதறவைக்கும் முனையாகவே அன்றுவரை இருந்துகொண்டிருந்தது.

அவை எச் சமுத்திரத்தின் அலைகள்? நிலக்கூறுகள்போல சமுத்திரத்தைக் கூறுபோட்டு விட முடியுமா? பூகோளம் சொல்லிற்று அது இந்துசமுத்திரத்தின் ஆகக்கூடிய தென்பிராந்தியமென்று. ஆனால் அத்திலாந்திக் சமுத்திரம் அதனை ஓடஓட விரட்டிவிட்டு அந்த இடத்தில் தான் அமர்ந்துவிடுவதற்குப்போன்ற அத்தனை மூர்க்கத்தில் இரைந்து பாய்ந்து கொண்டிருந்தது. விலகியோடிய இந்து சமுத்திரமும் சளைத்திருக்கவில்லை. ஒடி ஒதுங்குவதாய்ப் போக்குக் காட்டிவிட்டுப்போல் விலகி, மறுபடி பத்து மடங்கு மூர்க்கத்தோடு திரும்பப் பாய்ந்துகொண்டிருந்தது. நேர்நேர் மின்காந்த அணுக்களின் மோதுகையில் மின்னல் பிறப்பதுபோல், இரு சமுத்திரங்களின் நேர்நேர் மோதுகையில் பிரளயம் பிறந்தது. அந்தப் பிரளயத்தில் கப்பலும் கப்பலும் மோதும் கடல் விபத்துக்கள் நடந்தன. கப்பல்கள் சில நொருங்கி மூழ்கின. கடற் பயணத்தில் சாத்தியமாகக்கூடிய அத்தனை அழிவுகளும் அந்தத் தென்னாபிரிக்க முனையில் நிகழ்ந்தன.

> “இரு சமுத்திரங்களின் நேர்நேர் மோதுகையில் பிரளயம் பிறந்தது.
> அந்தப் பிரளயத்தில் கப்பலும் கப்பலும் மோதும் கடல் விபத்துக்கள் நடந்தன.
> கப்பல்கள் சில நொருங்கி மூழ்கின.”

டர்பன் துறைமுகத்தில் வைத்துத்தான் அந்தக் கடற் சூறாவளியின் அச்ச வாடை மறைவதின் முன்னர் அடுத்தமுறை கப்பல் திரும்ப ஆசிய வருகிறபோதில் தான் வீடு வரவிருப்பதாக மனோவுக்கு கடிதம் எழுதினான் கலாபன்.

அங்கேதான் தமிழ் கொஞ்சம் பேசத் தெரிந்த, தமிழ்ச் சினிமாப் பாட்டுக்களையே வானொலியிலும், ரேப் ரிக்கோடரிலும் எந்நேரமும் கேட்கிற ஒரு தமிழ் ராக்சி ட்ரைவரை அவன் சந்தித்தது. அந்நாளில்தான் காந்தி நடந்த தெருக்கள் என்றும், காந்தி வசித்த வீடென்றும் சில இடங்களையேனும் அந்த டாக்சி ட்ரைவர் அவனுக்குக் காட்டினான்.

சில தினங்கள் டர்பனில் தங்கிய பின் கப்பல் மறுபடி அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கிழித்துச் செல்லும் தென்னமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டது. அம்முறை அவர்களின் பயண இடம் கொலம்பியாவாக இருந்தது.

மழையையும் வாழைத் தோட்டங்களையும் தவிர கொலம்பியாவில் பார்த்ததாய் எதுவுமே கலாபனின் ஞாபகத்தில் இல்லை.

அங்கிருந்து ஏறக்குறைய ஒரு கிழமையில் கப்பல் பயணம் தொடங்கியது. முதலில் வடஅமெரிக்காவென்றும், பிறகு அங்கிருந்து ஜப்பானென்றும் அறியவந்தது.

கப்பலில் ஒ.ஃபீசர் மெஸ், குறூ மெஸ் என்று இரண்டு சாப்பாட்டு இடங்கள் உண்டு. கலாபன், சாந்தன், லால் பெரேரா போன்றோர் குறூ மெஸ்ஸில் சாப்பிடுவார்கள். ரேடியோ ஒ.ஃபீசர், இரண்டாம் மூன்றாம் நிலை என்ஜினியர்கள், சீ.ஃப் ஒ.ஃபீசர் மற்றும் இரண்டாம் மூன்றாம் நிலை mateகள் ஒ.ஃபீசர் மெஸ்ஸில் சாப்பிடுவார்கள். ஆயினும், மார்க்கோனி சாப்பாடு முடிய குறூ மெஸ்ஸுக்கு வந்துவிடுவான். கலாபன் ஆதியோருடன் நல்ல ஒட்டுதல் இருந்தது அவனுக்கு. கப்பல் பயண புதினங்கள் பரிமாறப்படுகிற இடமும் வேளையும் அதுதான். அவன்மூலமாகவே பயண விபரங்கள் கலாபன் ஆதியோருக்குத் தெரியவந்து கொண்டிருந்தன.

பெரும்பாலும் அதிவிசேஷங்களின்றியே அமெரிக்கத் துறைமுகமான சியாட்டிலின் கடற்பயணம் இருந்தது. சியாட்டில் பசுபிக் சமுத்திரத்தின் வாடைகூட எட்டாத இடத்தில் இருந்தது. ஆனாலும் ஜுவான் டி புகா என்ற தொடுவாயின் ஊடான தொடுப்பினால் பயங்கரத்தின் தாக்கம் சிறிதாகவேனும் இருக்கவே செய்தது. கடலற்ற சியாட்டில் துறைமுகத்தின் கடற்பாதை ஜுவான் டி புவாதான்.

துறைமுகத்துள் புகுந்த எம்.வி. எலியாஸ் அன்ஜிலாகோஸ் என்ற கப்பல் அதேயளவு பிரமாண்டம்கொண்ட எம்.வி.சந்திரகுப்த என்ற இந்தியக் கப்பலின் பின்னால் கட்டப்பட்டது. இரண்டொரு நாட்களுக்குள்ளேயே அங்கு வேலைசெய்த ஒரு தமிழ் கப்பலோட்டியோடு பழக்கமேற்பட்டு, கலாபனும் மற்றுமிரு இலங்கையரும் அந்தக் கப்பலுக்கு ஒருமுறை சென்று வந்தனர்.

கலாபன் வேலைசெய்த எம்.வி.எலியாஸ் அன்ஜிலாகோஸின் வசதிகள் எம்.வி.சந்திரகுப்தவில் இல்லாவிட்டாலும், அது கலாபனுக்கு மிகவும் பிடித்துப்போயிருந்தது. இந்தியாவே அந்தக் கப்பலுக்குள் வாழ்வது போன்ற பிரமையிலிருந்தான் அவன். பல்வேறு தேசிய இனங்கள் வேலைசெய்த ஒரு நாட்டின் கப்பலாக அது இருந்தது. பஞ்சாபிகள், மலையாளிகள், தமிழர், வங்காளி, குஜராத்திகள் என அத் தேசிய இனக் கலப்பு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. மேல்நாட்டு நங்கையரையே பார்த்தலுத்த கண்களுக்கு சேலையுடன் நடமாடிய இந்திய கப்பல் ஊழியரின் மனைவியர் விரகமற்ற குளிர்ச்சியை மனத்துக்கு அளித்தனர். அவர்களது குழந்தைகள்வேறு காண்போரின் குடும்ப தவனங்களை அடக்குவனவாய். அங்கே ஒரு திரைப் படக் கூடமொன்றும் இருந்தது. கலாபனாதியோர் சென்ற பொழுதில், மிதுன் சக்ரவர்த்தி நடித்த ஒரு இந்தித் திரைப்படம் காண்பிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. தமிழ்ப் படமும் சிலவேளை காண்பிப்பார்கள் என்று சொன்னான் தமிழ்க் கடலோடி. கலாபனின் கப்பலில் உள்ள மொத்தத் தொகையே இருபதுக்குள்தான். ஆனால் இந்தியக் கப்பலில் எழுபத்தாறு பேர்கள் இருந்தார்களாம்.

79ம் பக்கம் பார்க்க...

www.inayam.net

போதையாயிருந்த ஒரு பொழுதில் லால் சொன்னான், எம்.வி.சந்திரகுப்தவுள் ஒரு ‘சிமோல் இந்தியா’வே இருப்பதாக.

மனம் கழித்துக்கொண்டிருந்தபோதில் கால நிலை சீர்கேடடைந்துகொண்டிருந்தது. ஜுவான் டி புவாவை ஊடறுத்து கடலின் கொந்தளிப்பு சியாட்டில் துறைமுகத்தை அடைந்துகொண்டிருந்தது. அந்தமுறை கடற்பயணம் மீண்டும் ஓர் உயிரச்சத்தை ஏற்படுத்தும் பயணமாக இருக்கப்போவதாக எதுவுமேயில்லை, அவர்களது மனங்களே சூசகம் சொல்லிக்கொண்டிருந்தன.

ஆனாலும் திட்டமிட்டபடி குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் கப்பல் புறப்பட்டது. கலாபனாதியோருக்கு ஏனோ மனத்தில் ஒரு தெம்பு. இந்தியக் கப்பல் அவர்களது கண்களுக்கு எட்டும் தூரத்திலேயே பயணத்தைத் தொடங்கிச் சென்றுகொண்டிருந்தது.

ஏறக்குறைய பசுபிக்கை இரண்டாக வெட்டியோடும் பயணம் அது. இந்தியக் கப்பலின் பயணமும் ஜப்பான்தான் என்றறிந்ததால், முன்னே கடல்வெளியில் பார்வை படும்படியாக அது சென்றுகொண்டிருந்தமை ஒரு மனத்தைரியத்தை எலியாஸ் அன்ஜிலாகோஸ் பயணிகளுக்கு அளித்திருந்ததில் ஆச்சரியப்பட எதுவுமிருக்கவில்லை.

இரண்டு நாட்களாயின, மூன்று நாட்களாயின… கடல் தன் போக்கு மாறவேயில்லை. கூடிய இராப்பொழுதுப் பருவமான அது, மேலும் திணிந்து திணிந்து பகலையும் கவிய ஆரம்பித்துவிட்டது. பகல் பதினொன்றுக்கும் மதியத்தின்மேல் இரண்டு மணிக்குமிடையில் சிறிது சூரியக் கதிர் தெரிந்தது. பின்னால் இருட்டும், குளிரும், காற்றும்தான். இந்த நிலையில் தூரத்தே சென்றுகொண்டிருந்த எம்.வி.சந்திரகுப்தவின் மங்கிய தோற்றமும் காணப்பட முடியாததாயிற்று.

கப்பல் ஊழியர்கள் கலகப்பட ஆரம்பித்தார்கள். அதே பாகையில் தொடர்ந்தும் பயணம் செய்வதால் ஏற்படக்கூடிய பாதகங்களையும் வசதியீனங்களையும் எண்ணாமல், எண்ணெய்ச் செலவை மீதமாக்கவும் குறிப்பிட்ட தேதியில் ஜப்பான் துறைமுகமான ஒசாகாவை அடையவும் கப்பரின் கொண்டிருந்த தீர்மானம்பற்றி எல்லார் வாயிலும் புகார். அதிகாரிகள் நிலையிலுள்ளோர் அவ்வாறு வெளிப்படையாகச் சொல்லவில்லையே தவிர எண்ணாமலும் இருந்திருப்பார்களா என்பதை அறுதியிட முடியாது. கப்பல் சென்றுகொண்டிருந்த திசைப்பாகை மாறாமலேதான் இன்னும் பயணித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்த சாதாரண கப்பல் ஊழியர்கள் வெளிப்படப் பேசினார்கள். தங்கள் கோபத்தை வெளிப்படக் காட்டினார்கள். கப்ரினுக்கு ஏவல்வேலை செய்ய இருந்த கப்ரின் போய் (Captain boy) கப்ரினுக்குப் பணிவிடை செய்யாமல் கபினுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தான். காலநிலையை,



இன்னும் எத்தனை நாள் பயணம் தொடரவேண்டியிருக்கிறது என்பதைச் சொல்லக்கூடிய மார்க்கோனியும் கீழே வருவதை நிறுத்திவிட்டதில், கலாபன் போன்றோரால் சேதி எதையும் அறியமுடியாது போய்விட்டது. தகவலெதுவும் அறிய முடியாத நிலையில் பயம் மேலும் பயமாக, அது இன்னுமின்னுமான உயிரச்சமாக வளர ஆரம்பித்துவிட்டது. மேலும் ஒரு கிழமை ஆகியது. கப்பல் பயணத்தின் திசைப் பாகை மாறவில்லை. கடலோ தன் கடூரம் கொஞ்சமும் குறையாமலே இருந்துகொண்டிருந்தது.

ஒரு மதியத்தில் குறூ மெஸ் பக்கமாக கப்ரின் வந்தபோது, வழக்கம்போல் யாரும் வந்தனம் சொல்லவில்லை. நிமிர்ந்து பார்கவுமில்லை. அவன் வந்ததான பாவனையே காட்டவில்லை.

சிறிதுநேரம் நிலைகுத்தி நின்றிருந்த கப்ரின் எதிரே அமர்ந்திருந்த கலாபனைநோக்கி வந்தான். ‘ஏன் எவரும் என்னோடு பேசுகிறீர்கள் இல்லை. என்ன நடந்தது உங்களுக்கு’ என்று அழாக்குறையாகக் கேட்டான்.

பேச மனதில்லாதிருந்தது யாருக்கும். ஆனாலும் கலாபன் மனத்தைத் திடமாக்கிக்கொண்டு, ‘நீ கம்பெனி நன்மைக்காக போக்குத் திசையை மாற்றாமலே கப்பலைச் செலுத்திக் கொண்டிருக்கிறாய். ஏங்களுடைய கப்ரின் என்றுதான் இவ்வளவு காலமும் எண்ணி உனக்கு வந்தனம் செய்துகொண்டிருந்தோம். ஆனால் நீ கம்பெனியின் கப்ரின். அப்படியான ஒரு கப்ரினுக்கு எங்களிடத்தில் மரியாதை இல்லை’ என்றான் கலாபன்.

‘முட்டாள்ப் பயல்களே, இன்றைக்கு இவ்வளவு கஸ்ரத்தோடாயினும் நாம் பயணம் செய்துகொண்டிருக்கிறோமே, ஏன் தெரியுமா? பயணத் திசைப் பாகையை மாற்றாதபடியால்தான். அவ்வாறு பயணத் திசைப் பாகையை மாற்றிய வேறுவேறு கப்பல்களுக்கு என்ன நடந்தது தெரியுமா? உங்களுக்கு என்ன தெரியப் போகிறது? வேண்டுமானால் மார்க்கோனி வரும்போது கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். நாங்கள் இப்போது பயணிப்பதே ஆகக் கூடுதலான ஆபத்தற்ற வழி..’

கப்ரின் மேலே அவ்விடத்தில் தங்கவில்லை.

மறுநாள் அவர்கள் மெஸ்ஸுக்கு சாப்பிட வந்தபோது சிறிது கடலோய்ந்திருந்தது கண்டார்கள்.

மதியவேளையில் அதுவரை தென்படாதிருந்த மார்க்கோனி வந்தான். தன்னை கப்ரின்தான் கீழே செல்லவேண்டாமெனத் தடுத்ததாகச் சொன்னான். தொடர்ந்த அவனது பேச்சிலே தான் தெரிந்தது, கப்ரின் சொன்னதிலுள்ள உண்மை. இரண்டு கப்பல்கள் கடலுள் மூழ்கியிருக்கின்றன. அதிலொன்று எழுபத்தாறு பேர்களுடன் பயணித்துக்கொண்டிருந்த எம்.வி. சந்திரகுப்த என்ற இந்தியக் கப்பல். யாருக்கும் மேலே பேசவே வரவில்லை.

கண்கலங்கி அழுகிற நிலையில் நின்றுகொண்டிருந்தான் கலாபன்.

அந்தமுறை அவனெழுதிய கடிதத்தை நான் இரண்டு தடவைகள் வாசித்தேன்.

மரணத்தை, அதன் உக்கிரத்தை ஒரு நெருக்கத்திலிருந்து விளக்கியிருந்தது கடிதம். அதை இவ்வாறு முடித்திருந்தான் கலாபன்: ‘எம்.வி.சந்திரகுப்த கடலிலே தாண்டுவிட்டது என்ற செய்தி இந்தியப் பெருநாடே கடலுக்குள் மூழ்கிவிட்டதுபோன்ற அதிர்வைத் தந்தது. அத்தனைக்கு அது பல்லினத் தன்மையோடும், அவற்றின் கலாச்சாரத் தொனிப்போடும் என் பார்வைக்குப் பட்டிருந்தது. எழுபத்தாறு உயிர்கள், எழுபத்தாறு கோடி மக்களின் நாட்டில் பெரிய இழப்பில்லைத்தான். ஆனால் அந்த எழுபத்தாறு உயிர்கள் அமைத்திருந்த சூழலின் அழிவு எனக்கு ஒரு நாட்டையே இழந்திருப்பதான துக்கத்தையே செய்கிறது.’

devakanthan@thaiveedu.com

■ ■ ■


ஆயுட் காப்புறுதி

Universal Life • Whole Life • Term Life • Non Medical

RESP
+
20% Government Grant
15% Company Bonus

RRSP
Loan Aproved
Even SIN Number 9


CRITICAL ILLNESS
Upto 25 Illness

digi




VASANTH VINAYAGAMOORTHY
Insurance Broker
647-885-3012
www.vvinsurance.ca

759 Warden Ave., Toronto, ON M1l 4B5
Office: 416-759-5453, Fax: 416-759-6220


2009 FINAL DRIVE • SALES EVENT •
Why buy a Honda?
• HIGH RESALE VALUE • LOW COST OF OWNERSHIP
• AFFORDABLE • RELIABLE • FUEL EFFICIENT • ADVANCED SAFETY
• FUN TO DRIVE!
Why buy a Honda right now?
UNTIL SEPTEMBER 30th TAKE ADVANTAGE OF ONE-TIME-ONLY HONDA GREAT NEW DEAL SAVINGS!
Civic EX-L Coupe model FG1109JN
Accord EX Sedan model CP2579J
Civic EX-L Sedan model FA1509JNX
FINAL DRIVE SAVINGS
'09 Civic Coupe
MSRP for Civic DX Coupe $17,190
SAVE $3,000
$14,190
'09 Civic Sedan
MSRP for Civic DX Sedan $16,990
SAVE $2,500
$14,490
'09 Accord Sedan
MSRP for Accord LX Sedan $25,290
SAVE $3,000
$22,290
HONDA
www.HondaOntario.com
Ontario Honda Dealers
THE SMARTER WAY TO BUY.
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465
HONDA

# *Canada Sri Ayyapan Hindu Temple*



2009

*To Honour the Faithful*

**Consult Ranjan**

Project Management & Construction Services

**At Consult Ranjan,**
**IMPOSSIBLE is just a word,**
**with a welcome challenge!**

Tel.: 416.627.5664 E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

**KNOWLEDGE THAT GETS RESULTS**

# FANTASTIC FALL SEAT SALES

## FANTASTIC FALL SEAT SALES TO INDIAN DESTINATIONS

**JET AIRWAYS** — $1160.00 taxes INCL *
Toronto - Brussels - **Chennai**
Travel From: Sept 4th - Oct 12th

**AIR INDIA** — $1135.00 taxes INCL *
Travel up to Dec 11th
Toronto - London - **Indian Destinations**
• Amristar • Cochin • Kolkata

**QATAR AIRWAYS** — Toronto - Washington DC - Doha - **Indian Destinations:**
$1225.00 taxes INCL *
Travel up to Nov 20th
• Mumbai • Delhi • Chennai
• Cochin • Hyderabad • Kozhikode

**Emirates** — $1387.00 taxes INCL *
Travel up to Nov 30th
Toronto - Dubai: - **Chennai / Delhi / Mumbai / Bangalore / Hyderabad**

ALL INDIA FARE
starting from $1198.00 taxes INCL *
Toronto - Brussels - **Indian Destinations**
• Cochin • Goa • Trivandrum • Bangalore
• Mumbai • Delhi • Hyderabad

* Above fares are Seat Sale Fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.

## SUPER SEAT SALES TO SOUTH EAST ASIAN DESTINATIONS

**AIR CANADA** — $1613.00 +taxes*
Toronto - Vancouver - **Sydney**
Travel From: Sept 10th - Oct 31st

**AIR CANADA** — $1513.00 +taxes*
Toronto - Vancouver - Sydney - **Melbourne**
Travel From: Sept 10th - Oct 31st

**JAL** — $1039.00 +taxes*
Toronto - Tokyo - **Kuala Lumpur**
Travel From: Sept 10th - Oct 31st


**JAL** — $941.00 +taxes*
Toronto - Tokyo - **Bangkok**
Travel From: Sept 10th - Oct 31st

**JAL** — $960.00 +taxes*
Toronto - Vancouver - Tokyo - **Singapore**
Travel From: Sept 10th - Oct 31st

**JAL** — $892.00 +taxes*
Toronto - Tokyo - **Manila**
Travel From: Sept 10th - Oct 31st


* Above fares are Seat Sale Fares. **Taxes range from $200-$370.** Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.

## Tour Of The Month: Palace On Wheels



Palace on Wheels at the platform


Dinning Area


Tigers in Ranthabhor National PK


Lounge Area


Nature Safari


Bedroom


The Lake Palace in Udaipur


Bar on oboard the train

Go on a splendid and enchanting royal journey through the bygone era of the erstwhile Maharajas, aboard the magnificent; The Palace On Wheels. Travel and enjoy the tour across North India, aboard the train as the Royal families of India would have hundreds of years ago. The exquisite and exclusive Palace On Wheels has luxurious cabins, wall to wall carpeting, a well stocked bar, two dining cars and a very personalized service... in fact, almost everything that could compromise of heaven on earth for seven days!

* Duration: 7 Nights / 8 Days
* Places To Visit: New Delhi – Jaipur – Jaisalmer - Jodhpur - Sawai - Madhopur - Chittaurgarh - Udaipur - Bharatpur - Agra

### Accommodations

* 14 fully air-conditioned deluxe saloons.
* Each with 4 twin bedded chambers with:
  - channel music, intercom
  - attached toilets, running hot & cold water, shower
  - wall to wall carpeting and other amenities
* An exotic array of dishes to choose from the Continental, Chinese, Indian and Rajasthani cuisines is available on the Palace on Wheels. Mineral water is made available to you all through the journey.
* An attendant is always at your service, to take care of all your travel needs.
* All luggage is picked up and taken to their owner's respective saloons without any hassle.
* All essentials like soaps, shampoos, moisturizers etc. are provided in the train.

This tour will be handled by Serandib Travel India (Private) Limited

*Your Satisfaction is Our Success.*

**Serandib travel.com**
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564 Montreal: 514.448.1389
Calgary: 403.770.9647 Vancouver: 604.625.0495
PATA ACTA IATA

# ஆனந்தம்

## - சற்குரு வாசுதேவ் -

எந்த ஒரு மனிதனும் எந்த செயலில் இறங்கியிருந்தாலும் அடிப்படையாக அவனுடைய நோக்கம் என்ன?

நாம் சிறிது ஆழமாக பார்த்தால் தொழிலில் இருந்தாலும், ஏதோ ஒரு பணியில் இருந்தாலும், இல்லை அறிவினை சேகரிக்க வேண்டும் என்று கல்வியில் இருந்தாலும், ஆன்மீகத்தில் இருந்தாலும், சொர்க்கத்திற்குப் போகவேண்டும் என்று ஆசை இருந்தாலும், அடிப்படையாக மனிதன் எதற்காக இவை அனைத்தையும் செய்கிறான். நாம் சிறிது கவனித்துப் பார்த்தால் தெரியும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் நினைத்தது கிடைத்தால், மகிழ்ச்சியாக இருக்க முடியும், ஆனந்தமாக இருக்க முடியும் என்ற ஒரே ஒரு நோக்கத்தில் தான் இது நடக்கிறது. ஒரு மனிதன் மனதில், எனக்கு இந்த அளவிற்கு பணம் கிடைத்துவிட்டால் நான் சந்தோஷமாக இருக்கமுடியும் என்று அவனுக்கு ஒரு நம்பிக்கை. இன்னொருவருக்கு எனக்கு இந்த அளவிற்கு அறிவு சம்பாதித்து விட்டால் நான் சந்தோஷமாக இருக்கமுடியும் என்று அவருக்கு நம்பிக்கை. இன்னொருவருக்கு நான் தியானம் செய்தால் எனக்கு சந்தோஷம் கிடைக்கும் என்று நம்பிக்கை. ஒருவருக்கு நான் கடவுளை பார்த்துவிட்டால் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்று அவருக்கு நம்பிக்கை. மற்றொருவருக்கு இந்த உலகத்தில் ஆனந்தமாக இருக்க முடியாது. சொர்க்கத்திற்குப் போனால்தான் ஆனந்தமாக இருக்க முடியும் என்று நம்பிக்கை. ஆனால் மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் கவனித்துப் பார்த்தால் ஆனந்தத்தைத் தேடும் நோக்கத்தில் தான் இந்த செயல் நடந்திருக்கிறது. நீங்கள் இன்பங்களைத் தேடியிருந்தாலும், கடவுளைத் தேடியிருந்தாலும், அடிப்படையாக ஆனந்தத்தைத் தேடுவதில் தான் இருக்கிறீர்கள். ஏதோ ஒரு குறிப்பிட்ட செயல் செய்தால், அந்த செயலினால் நிச்சயமாக துன்பம் தான் வரப்போகிறது என்று உங்களுக்குத் தெரிந்திருந்தால் நீங்கள் அந்த செயலை செய்யப் போகிறீர்களா? யாரோ ஒருவர் கோவிலுக்குப் போகிறார். இன்னொருவர் பூங்காவிற்குச் செல்கிறார். இரண்டு பேருமே ஆனந்தத்தைத் தேடுவதில்தான் இருக்கிறார்கள். துன்பம் தான் வரப்போகிறது என்று அவர்கள் உணர்ந்திருந்தால் நிச்சயமாக அவர்கள் கோவிலுக்குச் செல்ல மாட்டார்கள். பூங்காவிற்கும் செல்ல மாட்டார்கள். அடிப்படையாக ஒவ்வொரு மனிதனும் ஆனந்தத் தேடுதலில் தான் இருக்கிறான். இந்த அளவிற்கு உலகில் நடக்கின்ற செயல்கள் அனைத்துமே, மனிதனுடைய செயல்கள் அனைத்துமே ஆனந்தத் தேடுதலில் நடந்திருந்தாலும், எவ்வளவு பேர் இங்கே ஆனந்தமாக இருக்கிறார்கள் என்று பார்த்தால், அந்த அளவிற்கு அதிகமாக தெரியவில்லை. நீங்கள் உங்களது நகரில் மிக முக்கியமான தெருவில் நின்று கவனித்துப் பார்த்தீர்கள் என்றால், ஒரு நிமிடத்திற்கு ஆயிரக் கணக்கான மக்கள் அங்கே சென்று கொண்டிருக்கிறார்கள். இதில் எவ்வளவு பேர் ஆனந்தமான முகத்துடன் செல்கிறார்கள் என்று நீங்கள் கவனித்துப் பார்த்தால் மிகவும் குறைந்த அளவில் தான் இருக்கிறார்கள். ஏதோ சில முகங்கள் மட்டுமே ஆனந்தமாக இருக்கின்றது. மற்றவர்கள் அனைவருமே ஆனந்தமாக இருப்பது போல் தெரியவில்லை. இவர்களுக்கு வாழ்க்கையில் தவறாக ஏதேனும் நிகழ்ந்துவிட்டதா? அப்படி ஏதும் இல்லை. அவர்களது வாழ்க்கையை சிறிது கவனித்துப் பார்த்தீர்கள் என்றால் அவர்களில் பெரும்பாலோருக்கு அவர்கள் கற்பனை செய்ததை விடவும் சௌகரியமான வாழ்க்கை அமைந்திருக்கிறது. உங்களது தந்தையாருக்கோ, உங்கள் பாட்டனாருக்கோ ஒப்பிட்டுப் பார்த்தால் நிச்சயமாக அவர்களுக்கு மேல் நீங்கள் வசதியாக இருக்கிறீர்களா இல்லையா? பொருள் நிலையில். நிச்சயமாக வசதியாகத்தான் இருக்கிறீர்கள். அப்படி இருந்தாலும் ஆனந்தம் வரவேயில்லை. அப்படியென்றால் இப்பொழுது நாம் போய் கொண்டிருக்கிற வழி, நோக்கம் நன்றாகவே இருக்கிறது. ஆனந்தம் தேடுதலில் நாம் இருக்கிறோம். ஆனால் நோக்கம் பூர்த்தியாகததால் தான் நாம் வெறுமனே பயணத்தில் இருக்கிறோம். நம் நோக்கம் பூர்த்தியாகமலேயே நம் வாழ்க்கை முற்றுப்பெற்றுவிட்டால், நாம் உபயோகப்படுத்தி இருக்கிற கருவி சரியில்லை என்றுதானே பொருள். அதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் தற்பொழுது கோயமுத்தூர் போக வேண்டும் என்று ஒரு பேருந்தில் ஏறினோம். 10 நாட்கள் பயணம் செய்தாலும் கோயமுத்தூர் வரவில்லை என்றால் நாம் சரியான பேருந்தில் ஏறவில்லை என்றுதானே பொருள். தற்பொழுது நாம் இதனை இந்த அடிப்படையில் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனந்தத் தேடுதலில் இருக்கிறீர்கள் என்பது மிகவும் மகிழச்சியான விஷயம். ஆனால் அது பூர்த்தியாகவில்லை என்றால், அதன் அடிப்படையை ஆராயத் தேவையிருக்கிறது. நீங்கள் சின்ன குழந்தையாயிருந்த போது, 5 வயதாக இருந்தபோது, எவ்வளவு ஆனந்தமாக இருந்தீர்கள். இப்பொழுது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறீர்கள். இதனை ஒப்பிட்டுப் பார்த்து, ஒரு வரைகோட்டினை வரைவீர்களேயானால், இந்த வரை கோடு மேல் நோக்கிச் செல்லவில்லை.


> “ சந்தோஷம், ஆனந்தம் எதுவாக இருந்தாலும் எப்பொழுதுமே அது உங்கள் உள்ளிருந்துதான் வெளிப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இந்த ஆனந்தத்திற்கு மூலம் உங்களுக்குள்தான் இருக்கின்றது. ஆனால் உங்களுக்குள் இருப்பதை நீங்கள் வெளியே தேடிக்கொண்டிருக்கிறீர்கள் ”

கீழ்நோக்கித் தானே போய் இருக்கிறது. 5 வயதில் இவ்வளவு ஆனந்தமாக நீங்கள் இருந்திருந்தால், தற்பொழுது வளர்ந்திருக்கிறீர்கள். இப்பொழுது 5 வயதில் இருந்த உங்களுக்கு ஆனந்தம் பேரானந்தமாக வளர்ந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை. அப்படியென்றால் ஆனந்தத்தின் அடிப்படை புரிந்துகொள்ளாமலேயே நாம் ஆனந்தத் தேடுதலில் இருக்கிறோம். எனவே அந்த நோக்கம் முழுமையாகாமலேயே வாழ்க்கை நடந்து போயிருக்கிறது.

உலகில் ஆனந்தத் தேடுதல் மிகவும் தீவிரமாக நடந்திருக்கிறது. மனிதன் செய்கிற ஒவ்வொரு செயலும் அந்த நோக்கத்தில்தான் நடந்திருக்கிறது. நம்முடைய ஆனந்தத் தேடுதல் எந்த அளவிற்கு நடந்திருக்கிறது என்றால், இந்த பூமிக்கே பாதுகாப்பில்லாமல் போகின்ற அளவிற்கு நமது ஆனந்தத் தேடுதல் நடந்திருக்கிறது. மனிதனுடைய செயலினால் இந்த பூமிக்கே பாதுகாப்பில்லாத ஒரு சூழ் நிலையினை நாம் உருவாக்கியிருக்கிறோம். அப்படியிருப்பினும் ஆனந்தம் மட்டும் வரவில்லை. மகிழ்ச்சியின் தேடுதலில் நாம் எதைச் செய்திருந்தாலும், அது, இந்த கிரகத்தின் உயிரினங்களை வெகுவாக பாதித்திருக்கிறது. நமக்கு இந்த அனைத்து வகையான சுகத்தையும், வசதியையும் தருவதற்கு ஒவ்வொரு புழு, பூச்சி, பறவை, விலங்கு மற்றும் மரம் யாவும் மிகப் பெருமளவில் அழிவுகளைச் சந்தித்திருக்கின்றன. இந்தக் கிரகமே கூட பேரழிவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இவையனைத்தும் நடந்திருந்தும், நாம் மகிழ்ச்சியாகக் கூட இல்லை. உண்மையில், நாம் இந்த கிரகத்தை எரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், நாம் மகிழ்ச்சியாய் இல்லை.

நீங்கள் பரவசநிலையில் இருக்கிறீர்களெனில், இந்த கிரகத்தை எரித்துக்கொள்ளுங்கள், பரவாயில்லை. நீங்கள் மகிழ்ச்சியாகக் கூட இல்லை. இதுபோன்று கிரகத்தை அழிக்கும் செயல் தேவையற்றது. இல்லையா? தற்போது இத்தகைய செயல்கள் மனித இயல்பாகிவிட்டது. இதுவரை அத்தகைய செயல்கள் மற்ற உயிரினங்களின் இயல்பாக மட்டுமே இருந்தது. நீங்கள் உள்நிலையில் எதையும் செய்யாமல், வெளிநிலையில் மேலும் மேலும் சீர்படுத்திக் கொண்டிருந்தால், காலம் செல்லச் செல்ல அதுவே மனிதத்தன்மை என்று ஆகிவிடும்.

கடந்த 100 முதல் 200 ஆண்டுகளில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் துணைகொண்டு, இப்பூமியில் நாம் ஏராளமான செயல்களைச் செய்துள்ளோம். 100 வருடங்களுக்கு முன்னர் மக்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தார்கள், தற்போது நாம் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? இதனை பொருளாதார நிலையில், சௌகரியங்களின் நிலையில் பார்த்தால், இதற்கு முன்னர் எந்த வொரு தலைமுறையும் உணராத, கற்பனையும் செய்திருக்கமுடியாத அளவிற்கு இப்பொழுது நமக்கு சௌகரியங்கள் வந்திருக்கிறது. ஒரு அரசனுக்குக் கூட இருந்திராத சௌகரியங்கள், தற்பொழுது ஒரு சாதாரண மனிதனுக்கும் அவனது வாழ்க்கையில் கிடைக்கிறது. இருப்பினும் ஆனந்தம் வரவில்லையே, ஏன்? இந்த உலகில் இந்த தலைமுறைதான்; நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற இந்த தலைமுறைதான், மிகவும் சௌகரியமாக வாழ்ந்துகொண்டிருக்கிற தலைமுறை. அப்படியிருந்தாலும், மற்ற எல்லா தலைமுறையினரையும் விட மேலான ஆனந்தத்தில் நீங்கள் இருக்கிறீர்களா? அப்படி இல்லையல்லவா. நிச்சயமாக நாம்தான் இந்த கிரகத்தில் அதிக வசதியிலிருக்கும் தலைமுறை, ஆனால் நீங்கள்தான் இந்த கிரகத்தின் மிக ஆனந்தமான தலைமுறை என்று சொல்லமுடியுமா? இல்லை, உண்மையில் அப்படியில்லை. இந்தத் தலைமுறைதான் பலவழிகளில், இக்கிரகத்தின் கவலை மற்றும் நரம்புக் கோளாறுடைய தலைமுறையாக மாறிவருகிறது. எனவே ஏதோவொரு நிலையில் அதிக அளவு சௌகரியங்களை நமது செயல்கள் உருவாக்கித் தந்திருந்தாலும், அனுபவநிலையில் மனிதனின் அனுபவம் பெரிதாக மாறவில்லை. உண்மையில், அவர்கள் முன்னெப்போதையும் விட, அதிக கவலையோடும் அதிக அளவில் பாதுகாப்பற்ற உணர்விலும் உள்ளார்கள்.



எனவே மேன்மேலும் பலவற்றைப் படிப்படியாக உருவாக்குவதிலும், மேன்மேலும் பல வற்றைச் செய்வதினாலும், ஒவ்வொரு மனிதனும் ஏங்கிக்கொண்டிருக்கும் ஆனந்தமான உலகை உருவாக்கும் வாய்ப்பு மற்றும் சாத்தியம் நிகழப்போவதில்லை. ஏனெனில், நாம் வெளிநிலையில் சாத்தியங்களை கணிசமான அளவில் ஒழுங்குபடுத்திவிட்டோம். ஆனால் வாழ்வின் அடிப்படை அனுபவம் இன்னும் மாறவில்லை. இந்தியாவில் வேண்டுமானால், இன்னும் ஏராளமானவை செய்யப்பட வேண்டியிருக்கலாம், ஆனால் மேற்கத்திய நாடுகளில் வெளியுலகத் தேவைகள் போதுமான அளவு ஒழுங்குப்படுத்தப் பட்டுவிட்டன. அப்படியிருந்தும் மக்கள் எவ்விதத்திலும் மகிழ்ச்சியாய் இல்லை. எதனால் இப்படி?

பொதுவாக, நமக்குத் தேவையானதெல்லாம் கிடைத்துவிட்டால் நாம் சந்தோஷமாக, ஆனந்தமாக இருக்கப் போகிறோம் என்ற நம்பிக்கை எப்பொழுதுமே மனிதன் மனதில் இருக்கிறது. ஆனந்தம் என்பதை உங்களுக்குள் உணர்கிறீர்களா? அல்லது அது ஆகாயத்திலிருந்து உங்கள் மேல் விழுந்ததா? இதனை நீங்கள் கவனித்துப்பார்த்தால், சந்தோஷம், ஆனந்தம் எதுவாக இருந்தாலும் எப்பொழுதுமே அது உங்கள் உள்ளிருந்துதான் வெளிப்பட்டிருக்கிறது. அப்படியென்றால், இந்த ஆனந்தத்திற்கு மூலம் நமக்குள்தான் இருக்கின்றது. ஆனால் உங்களுக்குள் இருப்பதை நீங்கள் வெளியே தேடிக்கொண்டிருக்கிறீர்கள். வெளியில் நாம் ஆனந்தத்தைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ என்றால் இல்லை. நமக்குள் இருக்கிற ஆனந்தத்தை உணரவைக்கக்கூடிய தூண்டுதலையே நாம் வெளியே தேடிக் கொண்டிருக்கிறோம்.

இது எவ்வாறெனில், நீங்கள் 50 வருடத்திற்கு முன்பு ஒரு கார் வாங்க வேண்டுமென்றால், அதனோடு இரண்டு வேலைக்காரர்களையும் நியமித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், காரினைத் தள்ளிவிட்டால் தான் அது ஓடத் துவங்கும். 30 வருடங்களுக்கு முன்பு ஒரு கார் வாங்கியிருந்தால், உங்களுக்கு 2 வேலைக்காரர்கள் தேவையில்லை, ஒருவர் இருந்தால் போதும். ஏனென்றால், அதனைத் தள்ளாமல், எஞ்சினை இயங்கச் செய்ய ஒரு சுழற்றியைப் போட்டு சுற்றினால் அது ஓடத் துவங்கும். ஆனால் தற்போது, உங்கள் வாகனங்கள் எல்லாமே தானியங்கி ஆகி விட்டது. வெறுமனே ஒரு சாவியினைப் பயன்படுத்தினாலே உங்கள் வாகனம் ஓடத்துவங்குகிறது. அதேபோல, உங்கள் ஆனந்தத்தினை தள்ளிவிட்டு இயங்கச் செய்கிற நிலையில் வைத்துக்கொள்ளலாமா, அல்லது தானாக இயங்குகிற நிலையில் வைத்துக்கொள்ளலாமா? இதனை ஒவ்வொரு மனிதருமே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■

# சூரன் போர்



அ.முத்துலிங்கம்

ஐந்தாம் வகுப்பு சரித்திரப் பாடப் புத்தகத்தில் அமெரிக்காவைக் கண்டுபிடித்தது கொலம்பஸ், இந்தியாவுக்கு கடல்மூலம் பயணம் செய்தது வாஸ்கொடகாமா, உலகத்தை முதன்முதல் சுற்றியது மகெல்லன் என்றெல்லாம் படித்திருக்கிறோம். மகெல்லனுடைய நீண்ட பயணத்தைப் பற்றிய புத்தகம் இப்போது வெளியாகியிருக்கிறது. அதன் பெயர் Over The Edge of the World. அதை எழுதியவர் பெயர் Lawrence Bergreen. மகெல்லனைப் பற்றி பல புத்தகங்கள் ஏற்கனவே வந்திருந்தாலும் இந்தப் புத்தகம் வித்தியாசமானது. இதை எழுதிய ஆசிரியர் பல வருடங்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். ஸ்பெயினுக்கும், போர்சுக்கல்லுக்கும் இன்னும் பல முக்கியமான இடங்களுக்கும் சென்று அந்த நாட்டு நூலகங்களில் மகெல்லனுடைய மூல ஆவணங்களை நேரடியாக ஆராய்ந்தவர். மகெல்லனுடைய கப்பலில் பயணம் செய்த பிகவெட்டா என்பரின் நாட்குறிப்பையும், கப்பல்களில் பாதுகாக்கப்பட்ட தினக்குறிப்புகளையும் ஆராய்ந்து அதன் முடிவில் எழுதியதுதான் இந்தப் புத்தகம்.

ஸ்பெயினிலிருந்து ஐந்து கப்பல்களில் 260 பேர்களுடன் மகெல்லன் 1519ம் ஆண்டு புறப்பட்டான். ஒரேயொரு கப்பல் மூன்று வருடம், ஒரு மாதம் கழித்து ஸ்பெயின் துறைமுகத்தை திரும்பி வந்தடைந்தது. அதில் 18 பேர் எஞ்சியிருந்தனர். அந்தக் கப்பல்தான் முதன்முதலில் உலகத்தைச் சுற்றிய கப்பல். அதன் பெயர் விக்டோரியா. அதில் மகெல்லன் இல்லை, பாதி வழியிலேயே அவன் கொலை செய்யப்பட்டுவிட்டான்.

இன்றைக்குச் சரியாக 500 ஆண்டுகளுக்கு முன்னர், 1506ம் ஆண்டு, அலெக்சாந்தர் என்ற போப்பாண்டவர் உலகத்தை வடக்கு தெற்காக கோடு கிழித்து இரண்டு கூறாகப் பிரித்தார். உலகத்தின் கிழக்குப் பக்கம் போர்ச்சுக்கல்லுக்கு சொந்தம் மேற்குப் பக்கம் ஸ்பெயினுக்கு சொந்தம். காரணம் இரண்டு நாடுகளுமே முதல்தரமான கடற்படைகளை தம்மிடம் வைத்திருந்தன. இரண்டுமே புதுப்புது நாடுகளை பிடிப்பதில் தீவிரம் காட்டின. ஆகவே போப்பாண்டவர் கிழக்கே பிடிக்கும் நாடுகளை போர்ச்சுக்கல்லும், மேற்கே பிடிக்கும் நாடுகளை ஸ்பெயினும் வைத்துக்கொள்ளலாம் என்று தீர்ப்பளித்தார். இந்தப் போட்டி எல்லாம் லவங்கம், கறுவா, சாதிக்காய் போன்ற நறுமணச் சரக்குகளைக் கைப்பற்றுவதற்குத்தான். அந்தக் காலத்தில் தரை மார்க்கமாக இவற்றைக் கொண்டுவருவதில் பாதுகாப்பில்லை. வழிப்பறிக் கொள்ளையர் பயம். ஒரு றாத்தல் தங்கத்திலும் பார்க்க ஒரு றாத்தல் நறுமணச்சரக்கின் மதிப்பு அதிகம். கிழக்கே இருந்த நறுமணச்சரக்கு தீவுகளுக்கு கடல் பாதையை யார் முதலில் கண்டுபிடிப்பது என்பதில்தான் போட்டி.

மகெல்லன் போர்ச்சுக்கல் அரசன் மானுவெலின் சேவகத்தில் இருந்தான். சிறுவயதிலிருந்து அவனுக்குள் ஒரு தணியாத ஆசை. மேற்குப்பக்கமாகப் பயணம் செய்து கிழக்கே சென்று நறுமணச்சரக்குகளை அள்ளிவர வேண்டும். கொலம்பஸ் தோற்ற முயற்சியில் எப்படியும் வெற்றிபெற்று தான் பிறந்த நாட்டுக்கு பெருமை சேர்க்கவேண்டும். போர்ச்சுக்கல் அரசனிடம் நாலு தடவை தன் பயணத்துக்கு அனுமதி கேட்டும் அவன் மறுத்துவிட்டான். இறுதியில் மகெல்லன் வெறுத்துப்போய் ஸ்பெயின் தேசத்து அரசனிடம் விண்ணப்பித்துக்கொள்வதற்கு சம்மதம் கேட்டான். போர்ச்சுக்கல் அரசனுக்கு தன் எதிரி நாட்டானிடம் மகெல்லன் போவது பிடிக்கவில்லை, எனினும் அவனுக்கு தன் பின்பக்கத்தை காட்டியபடி சரி என்று ஒத்துக்கொண்டான்.
ஸ்பெயின் தேசத்து அரசன் இளைஞன், பெயர் சார்ல்ஸ். அவன் பல மாத ஆலோசனைகளுக்கு பின்னர் மகெல்லனுக்கு அனுமதி வழங்கினான். ஐந்து கப்பல்கள், அதற்கு வேண்டிய சாமான்கள், இரண்டு வருட உணவுப் பொதிகள், மாலுமிகள், வேலைக்காரர்கள் என்று ஏற்பாடு செய்தான். ஆனால் இந்த ஏற்பாடுகளில் ஒரு பிரச்சினை இருந்தது. மகெல்லன் ஒரு போர்ச்சுகீசியன். மாலுமிகள், கப்பல் ஓட்டிகள், வேலைக்காரர்கள் என்று கப்பலைச் சேர்ந்த அனைவரும் ஸ்பெயின் தேசத்தவர்கள். இரண்டும் பகை நாடுகள். ஆகவே மகெல்லன் தான் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதை ஆரம்பத்திலிருந்தே தீர்மானித்திருந்தான். 1519ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10ம் தேதி மகெல்லன் தலைமையில் ஐந்து கப்பல்கள் புறப்பட்டன.

மகெல்லன் எதிர்பார்க்காமல் ஒன்று நடந்தது. போர்சுக்கல் அரசன் மகெல்லனைத் தடுப்பதற்கு ஒரு கப்பல் படையை ஏவியிருந்தான். அதிலிருந்து தப்புவதற்காக மகெல்லன் புதிய கடல் பாதைகளை உண்டாக்கி அவர்களை ஏமாற்றவேண்டும். அது தவிர, போர்சுக்கல்காரனான மகெல்லனை ஸ்பானியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எப்பொழுதும் ஏதாவது பிரச்சினைகளை கிளப்பியபடியே இருந்தனர். மகெல்லன் அஞ்சாநெஞ்சன், திறமையான போர்வீரன். பயணத்தின் வெற்றிக்கு ஒழுக்கமும், கீழ்ப்படிதலும் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தவன். டிசெம்பர் மாத நடுவில் வட அமெரிக்கக் கரையை அடைந்ததும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்ட அவன் தீர்மானித்தான்.



மகெல்லனுடன் பிரயாணம் செய்தவர்களில் முக்கியமானவன் பிகவெற்றா. இவனுடைய வேலை நாள் குறிப்பு எழுதுவது. அத்துடன் எதிர்ப்படும் தீவுகளில் வசிக்கும் ஆதிவாசிகளுடன் பழகி அவர்கள் பேசும் மொழியை பதிவுசெய்வது. ஆதிவாசிகளுடன் மகெல்லன் பழக்கம் பிடித்து கப்பலுக்கு தேவையான பொருட்களை பண்டமாற்று செய்கிறான். ஆதிவாசிப் பெண்களுடன் மாலுமிகள் சல்லாபமாக இருக்கிறார்கள். சிலர் எல்லைமீறி பெண்களை கடத்திவந்து கப்பலில் ஒளித்து வைக்கிறார்கள். மகெல்லனுக்கு தன்னுடைய பலத்தைக் காட்டவேண்டிய தருணம் நெருங்கி விட்டது. ஸ்பானியர்கள் ஒன்று சேர்ந்து தனக்கு எதிராக சதி செய்வதை அவன் உணர்கிறான். ஐந்து கப்பல்களில் மூன்று கப்பல்கள் அவனுக்கு எதிராக போர்செய்ய முடிவெடுக்கின்றன. மகெல்லன் தன்னுடைய தந்திரத்தாலும், அதிபுத்திக்கூர்மையாலும், தீரத்தாலும் ஸ்பானியர்களுடைய சதியை முறியடித்து சதிகாரர்களுக்கு குரூரமான தண்டனைகள் வழங்குகிறான். ஒருவனை நாலு துண்டுகளாக வெட்டி கடலில் வீசுகிறான். சிலரைக் கொலை செய்கிறான். இருவரை ஆளில்லாத் தீவுக்கு கடத்துகிறான். மீதி முப்பது பேருக்கு கடும் ஊழியச் சிறைவாசம். முதன்முறையாக ஐந்து கப்பல்களும் மகெல்லனுடைய முழு அதிகாரத்தின் கீழ் வருகின்றன.

மகெல்லனுடைய முக்கியமான பணி அட்லாண்டிக் சமுத்திரத்தையும் பசிபிக் சமுத்திரத்தையும் இணைக்கும் தண்ணீர் வழிப் பாதையை கண்டுபிடிப்பது. இதில் மும்முரமாக எல்லாக் கப்பல்களும் ஈடுபடுகின்றன. திரும்பத் திரும்ப அவர்கள் முயற்சி தோல்வியில் முடிகிறது. ஒரு கப்பல் பாறைகளில் மோதி சுக்குநூறாக உடைந்துவிடுகிறது. இந்தப் பயணம் தோல்வியில் முடியும் என்று தீர்மானித்த சில மாலுமிகள் மறுபடியும் சதித்திட்டம் தீட்டுகின்றனர். பத்து மாதங்கள் அலைந்து தேடிய பிறகு மகெல்லன் கடல் பாதையை கண்டுபிடித்து கப்பல்களை சாமர்த்தியமாகச் செலுத்தி பசிபிக் சமுத்திரத்துக்குள் நுழைகிறான். ஆனால் அவனுக்கு தெரியாமல் சதிகாரர்கள் சானன்ரோனியோ கப்பலை திரும்ப ஸ்பெயினுக்கு ஓட்டிப்போகிறார்கள். பசிபிக் மகாசமுத்திரம் மகெல்லனுக்கு முன்னே விரிந்து கிடக்கிறது. அவன் அந்த சமுத்திரத்தை அதற்குமுன் பார்த்ததில்லை. மூன்று கப்பல் தலைவர்களையும் கூட்டிவைத்து அடுத்து என்ன செய்யலாம் என ஆலோசிக்கிறான். எல்லோரும் ஏகமனதாக பயணத்தை தொடருவது என்று முடிவெடுக்கிறார்கள். மேலும் சில நாட்கள் தொடர்ந்து கப்பலை செலுத்தினால் அவர்கள் தேடும் வாசனைச் சரக்கு தீவுகள் வந்துவிடுமென்று நினைக்கிறார்கள். அவர்கள் நினைப்பு எவ்வளவு தவறு என்பது அவர்களுக்கு தெரியாது.

மகெல்லனிடம் 200 ஆட்களும் மூன்று கப்பல்களும் எஞ்சியிருந்தன. வெகுசீக்கிரத்திலேயே கிழக்கு தீவுகள் வந்துவிடும் என்று அவனுடைய கப்பல் ஓட்டிகள் நினைத்தார்கள். ஆனால் பயணம் இழுத்துக்கொண்டே போனது. கப்பலில் உணவு முடியும் தறுவாயில் இருந்தது. பட்டினியிலும், நோயிலும் பலர் மடிந்தார்கள். “இன்றைக்கு தரை தென்படும், நாளைக்கு தரை தென்படும்” என்று நாட்கள் கடந்தன. 98 நாட்கள், 7,000 மைல்கள். நம்பிக்கை எல்லாம் இழந்துவிட்ட நிலையில் ஒரு தீவுக்கூட்டத்தை அடைந்தார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. மாலுமிகள் துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்தார்கள். ஸ்பானிய அரசன் பிலிப் சார்பில் அந்த தீவுகளுக்கு பிலிப்பைன் என்று மகெல்லன் பெயர்சூட்டினான். உணவுப் பொருட்கள் ஏற்றவும், தண்ணீர் பிடிக்கவும், பண்டமாற்று செய்யவும் பல மாதங்கள் இந்தத் தீவுகளில் தங்கினார்கள். லிமசாமா என்ற தீவின் அரசன் பெயர் கொளும்பு ராசா. இந்த ராசாவுடன் மகெல்லன் சகோதர உறவு வைத்தான். அதாவது இரண்டு பேரும் தங்கள் உடம்பிலிருந்து சொட்டு ரத்தத்தை எடுத்து அதைக் கலந்து குடித்தார்கள். இந்த தீவுப் பெண்களுடன் காமக் களியாட்டங்களுக்கும் குறைவில்லை. தீவு மக்கள் எல்லோரையும் மகெல்லன் கிறிஸ்தவர்களாக மாற்றினான்.

அடுத்தது சேபுத் தீவு. இந்த மக்கள் மகெல்லனை கடவுளாகக் கொண்டாடினார்கள். சேபு அரசனுக்கு இருநூறு மனைவிகளும், ஆசைநாயகிகளும். மதுபான விருந்துகளும், காம விளையாட்டுகளும் தொடர்கின்றன. இந்த தீவு ஆண்கள் தங்கள் குறிகளில் சலங்கை மணிகளைச் சுற்றித் தைத்திருப்பார்கள். அவர்கள் நடக்கும்போது மணிகள் ஒலிக்கும், பெண்கள் நடக்கும்போது மெட்டி ஒலிப்பதுபோல. அந்தச் சத்ததைக்கேட்டு பெண்கள் கிளர்ச்சி அடைவார்களாம். இது பெண்களுக்கும் ஆண்களுக்கும் பிடித்த வழக்கம் என்று பியவெட்டா தன் டையரிக் குறிப்புகளில் எழுதிவைக்கிறார். சேபுத் தீவிலே மட்டும் 2,200 பேரை கிறிஸ்துவர்களாக மகெல்லன் மாற்றினான்.

கொஞ்சம் கொஞ்சமாக மகெல்லன் தன் பயணத்தின் முக்கியத்துவத்தை மறந்து தீவு வாசிகளை கிறிஸ்துவர்களாக மாற்றுவதில் தீவிரம் காட்டினான். கிட்டத்தட்ட மதபோதகராகவே மாறிவிடுகிறான். அடுத்து வந்த சின்னத்தீவு அவனுக்கு முழுச் சவாலாக அமைகிறது. அதன் ராசா “லப்புலப்பு” மகெல்லன்னை கடவுள் என்று மதித்து வணங்க மறுக்கிறான். மகெல்லனுக்கு ஆத்திரம். லப்புலப்புவை தாக்கி அடிபணிய வைக்க மகெல்லன் முப்பது ஆட்களுடன் தீவுக்குள் பிரவேசிக்கிறான். லப்புலப்பு 1,500 ஆட்களுடன் மறைந்திருந்து எதிர்பாராதவிதமாக மகெல்லனைத் தாக்குகிறான். தப்பும் வழியெல்லாம் மூடிவிட்டதால் மகெல்லன் வெட்டுப்பட்டு சாகிறான். அவனுடைய உடம்பு துண்டு துண்டாக கடலில் மிதக்கிறது. அவனுடன் வந்த மீதிப்பேர்

85ம் பக்கம் பார்க்க...

84ம் பக்கத் தொடர்ச்சி...

ஓட்டம் எடுக்கிறார்கள். உலகத்தை வெல்லப் புறப்பட்ட மகெல்லன் ஒரு சின்னஞ்சிறு தீவைக் கைப்பற்றமுடியாமல் அனாதரவாக மடிந்து போகிறான்.

பழுதாகிவிட்ட ஒரு கப்பலை அந்த தீவிலேயே எரித்துவிட்டு எஞ்சியுள்ள மாலுமிகள் இரண்டு கப்பல்களில் புறப்பட்டு வாசனைச் சரக்கு தீவுகளை ஏழு மாதங்களாகத் தேடி கண்டுபிடிக்கிறார்கள். தீவு வாசிகளை கிறிஸ்தவர்களாக மாற்றும் முயற்சியை இப்பொழுது கைவிட்டாகிவிட்டது. இரண்டு கப்பல்கள் நிறையவும் சரக்குகளை ஏற்றுகிறார்கள். அந்தச் சமயம் பார்த்து ஒரு கப்பல் உடைந்து போக அதைப் பழுதுபார்ப்பதில் தாமதம் ஏற்படுகிறது. விக்டோரியா என்ற கப்பலை மட்டும் எல்கனோ என்பவன் செலுத்திக்கொண்டு புறப்படுகிறான். வந்த பாதை வழியாக திரும்பிப் போகாமல் ஆப்பிரிக்காவை ஒட்டி கரையோரமாக கப்பலை ஓட்டுகிறான். இதுவும் நீண்ட பயணம். உணவும் பற்றாக் குறையினாலும், நோயினாலும் பலர் செத்து விழுகிறார்கள். எல்கானோ விடாப்பிடியாக கப்பலை செலுத்துகிறான். அவன் திறமையான தலைவன். அவர்கள் பழுதுபார்க்க விட்டு வந்த கப்பலை போர்ச்சுக்கல் படை கைப்பற்றிவிட்டது. இப்போது எஞ்சியது விக்டோரியா மட்டுமே.

எல்லோரும் நம்பிக்கை இழந்த நிலையில் விக்டோரியா ஸ்பெயின் துறைமுகத்தை வந்தடைகிறது. ஆவிகள் போல 18 பேர் மட்டுமே எஞ்சி இருக்கின்றனர். கப்பல் திரும்பிய நாள் 1522ம் ஆண்டு செப்டம்பர் 10ம் தேதி. பயணத்திற்கு எடுத்த காலம் மூன்று வருடம், ஒரு மாதம். அவர்கள் கொண்டுவந்து சேர்த்த வாசனைச் சரக்குகளின் மதிப்பு முழுச்செலவுகளை கொடுத்த பின்பும் லாபம் ஈட்டியது. உலகம் சுற்றிய முதல் கப்பல், பணத்தில் மாத்திரம் லாபம் ஈட்டவில்லை ஒரு நாளும் அவர்களுக்கு லாபம். அவர்கள் மேற்கு நோக்கிப் பயணம் செய்தபடியால் ஒரு நாள் அதிகமாகியிருந்தது. எப்படி ஒரு நாள் கூடியது என்ற புதிரை விடுவிக்க அவர்களுக்கு மேலும் பல மாதங்கள் எடுக்கும்.

மகெல்லன் கண்மூடித்தனமாக பிரயாண ஏற்பாடுகளைச் செய்யவில்லை. அவனுடைய பயணம் அன்றைய வானவியல் ஆராய்ச்சி-



மகெல்லனைக் கொன்ற 'லப்புலப்பு'வின் நினைவுச் சிலை

களின் அடிப்படையில், விஞ்ஞான முறையில் திட்டமிடப்பட்டது. போர்ச்சுக்கல்லில் அப்பொழுது கிடைத்த அத்தனை முதல் தரமான உலக வரைபடங்களையும், ஸ்பெயினில் பாதுகாக்கப்பட்ட ரகஸ்ய வரைபடங்களையும், உன்னதமான கடல் கருவிகளையும் மகெல்லன் பயன்படுத்தினான். அவன் காலத்தில் தீர்க்க ரேகை கண்டுபிடிக்கப்படவில்லை. மணிக்கூடு இல்லை மணல் கடிகாரம்தான். மிகக்கடின மான இந்தப் பயணத்தைதொடங்க மகெல்லன் வாழ்நாள் முழுக்க தன்னை தயார் செய்திருந்தான். அட்லாண்டிக் - பசிபிக் கடல் பாதையை பத்து மாத காலமாகத்தேடி கண்டுபிடித்தான். அமெரிக்க கண்டத்தை தாண்டியவுடன் இந்தியா வந்துவிடும் என்று அந்தக் காலத்தில் பலரும் நினைத்திருந்தார்கள். ஏழாயிரம் மைல்கள், 98 நாட்கள் பசிபிக் சமுத்திரத்தில் அலைந்தான். அவனுடைய பயணம், முதல் சந்திர மண்டலப் பயணத்துக்கு சமமானது. முதன்முறை உலகம் உருண்டை என்பதை அந்தப் பயணம் சந்தேகமற நிரூபித்தது. மகெல்லனுக்கு பின்னர் உலகம் முன்புபோல இருக்கமுடியாது மாறி விட்டது.

போர்ச்சுக்கல்லில் மகெல்லன் துரோகியாகக் கருதப்பட்டான். ஸ்பெயினிலோ அவன் வெறுக்கப்பட்டான். ஸ்பெயின் அரசன், அவனை நம்பிக் கொடுத்த பொறுப்புக்கு தகுதியுடையவனாக அவன் நடந்துகொள்ளவில்லை என்று கருதினான். அவன் கொடூரக்காரனாகவும், சித்திரவதைக்காரனாகவும், அரச அவிசுவாசியாகவும் கருதப்பட்டான். பயணத்தின்போது பல ஸ்பானியர்களை சிறைவைத்தான், சிலரை கொலை செய்தான். வேறு சிலரை ஆளில்லா தீவுகளுக்கு நாடு கடத்தினான். உலகில் ஒரு நாடும் அவன் வெற்றியை போற்றவில்லை. உலகத்தில் எங்கேயும் அவனுக்கு கௌரவம் கிட்டவில்லை. ஒருவர் கூட நினைவில் வைக்கவும் இல்லை.

பிலிப்பைனில் உள்ள மக்ரன் தீவில், ஏப்ரல் 27ம் தேதி வருடாவருடம் சூரன் போர் போன்ற ஒரு விழா கொண்டாடப்படுகிறது. ஒரு சின்னஞ்சிறு தீவு அரசன் மகெல்லனை எதிர்த்து நின்றதை அது நினைவுகூருகிறது. மகெல்லன் கொல்லப்பட்ட அதே கடற்கரையில் இந்த நாடகம் நடக்கிறது. ஒருவன் ராசா வேடம் போடுவான், மற்றவன் மகெல்லன் வேடம் தரிப்பான். இந்த நாடகப் போரில் மகெல்லன் மடிகிறான் தீவு அரசன் வெல்கிறான். மகெல்லனுடைய உடல் கடல் அலைகளில் விழுந்து கிடக்கிறது. பார்வையாளர்கள் ஓவென்று ஆர்ப்பரித்து வெற்றியைக் கொண்டாடுகிறார்கள்.

உலகம் முழுக்க மகெல்லனை மறந்தாலும் இன்றும் வருடா வருடம் நடக்கும் அவனுடைய வதம் மூலம் மனித ஞாபகத்தில் அவன் வாழ்கிறான்.

muththulingam.a@thaiveedu.com

■ ■ ■


# சகல சட்டத் தேவைகளுக்கும்

**Real Estate Law**

Purchase, Sale & Mortgage

**Immigration Law**

Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit

**Business Law & Commercial Law**

**Accident Benefit Claims**

**Translation Services**

Tamil, English & Sinhala languages



தமிழ் வழக்கறிஞர்

## Raphael Maharaja

Barrister, Solicitor & Notary Public

Tel: 416-847-7077
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave. East, Unit 219
Scarborough, ON
M1S 0C2

# ஒருவரைப் ‘பொறுப்பேற்றல்’ என்றால் என்ன?



குரு அரவிந்தன்

ஏதாவது தவிர்க்கமுடியாத சில காரணங்களால் இதுவரை பிரிந்திருந்த நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களை மனிதாபிமானத்தோடு, மீண்டும் ஒன்று சேர்ப்பதில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் கனடாவும் ஒன்றாகும்.

கனடிய குடியுரிமை உள்ளவர்களும், நிரந்தர வதிவிட உரிமை உள்ளவர்களும் தங்கள் குடும்ப அங்கத்தவர்களை இந்த நாட்டிற்கு வரவழைப்பதற்கு வசதிகள் நிறையவே உண்டு.

நீங்கள் உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவரை இந்த நாட்டிற்கு வரவழைப்பதற்குப் பொறுப்பெடுத்தால், அப்படிப் பொறுப்பு எடுக்கும்போது, இந்த நாட்டிற்கு வரவழைக்கப்பட இருப்பவருக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் தேவையான அடிப்படைப் பொருளாதார உதவிகளையும் செய்வீர்கள் என்ற உறுதி மொழியை முதலில் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல அவருடன் வரும் ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கும் சேர்த்து நீங்கள் பொறுப்பு எடுக்க வேண்டும். முக்கியமான அடிப்படை உதவிகள் என்று சொல்லும்போது குறிப்பாக உணவு, உடை, தங்குமிட வசதியோடு தினமும் சாதாரண வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளும் இதில் அடங்கும். பல் வைத்தியம், கண் வைத்தியம், ஏனைய இலவசமாகக் கிடைக்காத மருத்துவம் எல்லாம் இதற்குள் அடங்கும். இத்தகைய பொறுப்புகளோடு நடக்கவேண்டிய காலம், பொறுப்பு எடுக்கப் பட்டவர்களின் வயதையும் உங்களுடனான அவர்களின் உறவு முறையையும் கவனத்தில் கொண்டு மாறுபடும்.

## குடும்ப அங்கத்தவர் என்று சொல்பவர்கள் யார்?

- உங்களடைய துணையாகவோ, உங்களுடைய பொதுவழமைச் சட்டப்படியோ, அல்லது கணவன் மனைவி உறவு உடையவர்களாகவோ இருந்தால் நிரந்தர வதிவுடமை பெற்ற பின் மூன்று வருடங்களுக்கும்.
- உங்களுடைய பொறுப்பில் இருக்கும் குழந்தையாகவோ, அல்லது உங்கள் துணையின் பொறுப்பில் இருக்கும் குழந்தையாகவோ இருந்தால் நிரந்தர வதிவுடமை பெற்றபின் பத்து வருடங்களுக்கும், அல்லது 25 வயதை அடையும் வரையும்,

> “ எந்தக் காரணம் கொண்டும் பொறுப்பேற்கப்பட்டவர்கள் அரசாங்க நிதி உதவிகளை எதிர்பார்க்கக்கூடாது. அப்படி உதவி ஏதாவது பெறும் பட்சத்தில் அது பொறுப்பேற்றவரையே பாதிக்கும். ”

- வேறு யாராவது, உதாரணமாக உங்கள் தந்தை, தாய், தாத்தா, பாட்டி போன்றவர்களாக இருந்தால் நிரந்தர வதிவுடமை பெற்றபின் பத்து வருடங்களுக்கும்,

பொறுப்பேற்க வேண்டும்.

எந்தக் காரணம் கொண்டும் பொறுப்பேற்கப்பட்டவர்கள் அரசாங்க நிதி உதவிகளை எதிர்பார்க்கக்கூடாது. அப்படி உதவி ஏதாவது பெறும் பட்சத்தில் அது பொறுப்பேற்றவரையே பாதிக்கும்.

## நீங்கள் ஒருவரைப் பொறுப் பேற்பவராக இருந்தால்...

- பொறுப்பேற்கப்படுபவர் உங்கள் குடும்ப உறுப்பினராக இருக்க வேண்டும்.
- உங்கள் வயது பதினெட்டுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.
- கனடிய குடியுரிமை அல்லது வதிவிட உரிமை பெற்றவராக இருக்க வேண்டும்.
- நீங்கள் ஏதாவது காரணத்தால் கனடாவில் தங்கியிருக்காவிட்டால் அதற்குரிய காரணத்தை நிரூபிக்க வேண்டும்.
- தேவையான பொருளாதார வசதி உள்ளவராக இருக்க வேண்டும்.
- குற்றச் செயல்களில் ஈடுபட்டு கடுமையான தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.

இது போன்ற சில தேவையான அடிப்படைத் தகுதிகள் பொறுப்பேற்கும் உங்களுக்கு இருக்கும் பட்சத்தில் நீங்கள் ஒருவரை பொறுப்பேற்க முன்வரலாம்.

## ஒருவரை உங்களால் பொறுப் பேற்க முடியாமல் போவதற்கான காரணங்களிற் சில

- குறிப்பாக முன்பு நீங்கள் யாரையாவது பொறுப்பேற்று, உங்கள் உறுதி மொழியைக் காப்பாற்ற முடியாமல் அரச நிதி உதவியை அவர்கள் பெற்றிருந்தால்.
- அல்லது கனடிய அரசிடம் பெற்ற கடனுதவியைத் திருப்பிச் செலுத்த முடியாமற் போயிருந்தால்.
- நீதிமன்ற உத்தரவின்படி நீங்கள் உங்கள் துணைக்கோ அல்லது பொதுவழமைச் சட்டப்படி உள்ள துணைக்கோ, அல்லது குழந்தைகளுக்கோ உரிய கொடுப்பனவுகளைக் கொடுக்காமல் விடும் பட்சத்தில்.

புதிதாக ஒரு குடும்ப அங்கத்தவரைப் பொறுப்பேற்கும் தகுதியை இழந்தவராகக் கருதப் படுவீர்கள்.

## உங்கள் விண்ணப்பங்கள் தாமதப்படுத்தப் படுவதற்கான காரணங்கனிற் சில

- முழுமையாக விண்ணப்பப் படிவம் நிரப்பப்படாவிட்டால், அல்லது அதில் கையெழுத்து போடாமல் விடுபட்டிருந்தால்.
- தவறான அல்லது முழுமைபெறாத முகவரியாக இருந்தால், அல்லது உரியவர்களுக்கு உங்கள் முகவரி மாற்றம் பற்றி அறிவிக்கத் தவறியிருந்தால்.
- இணைக்கப்படவேண்டிய முக்கியமான ஆவணம் இணைக்கப்படாமல் விடுபட்டிருந்தால்.
- வாசிப்பதற்குத் தெளிவில்லாத பிரதிகள் இணைக்கப்பட்டிருந்தால்.
- வேற்று மொழியில் உள்ள முக்கியமான தேவையான பிரதிகள் ஆங்கிலத்திலோ அல்லது பிரெஞ்சு மொழியிலோ மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்காவிட்டால்.
- பொறுப்பேற்கப்பட்டவர் சம்பந்தமான விபரங்களை அறிவதில் தாமதம் ஏற்பட்டால்.
- அவர்கள் கொடுத்த விபரங்கள் பற்றியும் ஆவணங்கள் பற்றியும் அறிவதில் உள்ள விசாரனைகளில் ஏதாவது காலதாமதம் ஏற்பட்டால்.
- பொறுப்பேற்கப்பட்வரின் உடல் ஆரோக்கிய நிலை சம்பந்தமாக, அதை உறுதி செய்வதற்கு மேலதிக மருத்துவ விபரங்கள் தேவைப்பட்டால்.
- குற்றம் சம்பந்தமான, அல்லது நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சனைகள் ஏதாவது தடையாக இருக்குமானால்.
- குடும்ப சூழ்நிலை காரணமாக ஏதாவது தடைகள் இருந்தால், உதாரணமாக விவாகரத்து சம்பந்தமாகவோ அல்லது ஒருவரின் பொறுப்பில் இருப்பவராகவோ இருந்தால்.
- விண்ணப்பப் பத்திரத்தை ஏற்றுக் கொள்வதற்குரிய குறிப்பிட்ட காலம் ஏதாவது காரணங்களால் தாமதப்படுத்தப் பட்டிருந்தால்.
- விண்ணப்பதாரரை அந்த நாட்டில் தொடர்பு கொள்வதில் ஏதாவது காரணங்களால் காலதாமதமானால்.
- விண்ணப்பத்தோடு இணைக்கப்பட்ட புகைப் படங்கள் தகுந்த முறையில் அத்தாட்சிப் படுத்தப்படாவிட்டால்.

இது போன்ற பல காரணங்களால் உங்கள் விண்ணப்பங்கள் காலதாமதப் படுத்தப் படலாம்.

மேலதிக விபரங்கள் அறிந்துகொள்வகற்கு 1 888 346 5184 என்னும் இலக்கத்திற்கு அழையுங்கள்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■

**N.K.S**

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

ROSEHAVEN™
HOMES • EST. 1992

## Final Sale

# Phase I $50,000 Cash Back

Limited time offer




McVean & HWY 7



**Sathy Sivasubramaniam**
Sales Representative
Dir: **416-624-5044**
sathy_s@yahoo.com
www.homelifesathy.com

HomeLife Higher Standards

**Ruby Thambiah**
Sales Representative
Dir: **416-999-5337**
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com



**HomeLife**/Future Realty Inc. Brokerage | Independently Owned and Operated | 205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8 | Tel: 905-201-9977 Fax: 905-201-9229



ONE STOP SOLUTION FOR ALL YOUR **MORTGAGE** NEEDS

**Nithy Sathyakumar**, AMP
Mortgage consultant, Lic #M08008999
**BonaFide Mortgage Solutions**
Direct: **416 728 2454**
E-mail: nithy.s@bmsic.com
Fax: 416 548 7496

BonaFide
Mortgage Solutions Inc.

## காதல் வாழ்க்கை - 9

# கற்பு வாழ்க்கை



வி. கந்தவனம்

இளங்கோவடிகள் கோவலன் கண்ணகி திரு மணத்தால் கற்பு வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். அவர் காலத்திலும் அவருக்கு முன்னரும் பலவகையான மணமுறைகள் தமிழர் மத்தியில் நிலவின. காதல் வாழ்வைத் தமிழர் பெரிதும் போற்றினர். தலைவனும் தலைவியும் சந்தித்து, பேசி, பழகிக் காதல் கொண்ட கதைகள் சங்க இலக்கியங்களில் ஏராளம். ஓர் இளைஞன் (தலைவன்) கன்னி ஒருத்தியை (தலைவியை) காணவோ பேசவோ அக்காலத்தில் தடைகள் ஏதும் இருக்கவில்லை. தடைகள் இல்லாத போதும் சந்திப்புகள் பெரிதும் பெற்றோருக்குத் தெரியாமலேயே நடைபெறும். இது களவு எனப்பட்டது. இவ்வித சந்திப்புகள் பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி என மூவகைப்படும்.

தலைவி மலர் கொய்யச் செல்கையில் தலைவனைக் கண்டு காதல் கொள்ளின் அது பூத்தரு புணர்ச்சி எனப்பட்டது. குளத்தில் நீர் எடுக்கையில் அல்லது அருவியில் நீராடுகையில் ஏற்படும் சந்திப்புக் காதலாக வளரின் அது புனல்தரு புணர்ச்சியாகக் கருதப்பட்டது. காட்டில் விறகு பொறுக்கச் செல்கையில் அல்லது தினைப்புனத்தைக் காத்து நிற்கையில் யானையைக் கண்டு அலறும் பெண்ணைக் காளையர் காப்பாற்றுவதுண்டு. களிறு காரணமாகக் காதல் வளரின் அது களிறுதரு புணர்ச்சியாகக் கொள்ளப்பட்டது. முருகன் வள்ளி காதல் இத்தகைய புணர்ச்சியாகும்.

புணர்ச்சி என்பது உள்ளப் புணர்ச்சி. உள்ளப் புணர்ச்சியின்றிக் காதல் உணர்ச்சி இல்லை. உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னரே உடற் புணர்ச்சி இடம்பெறும்.

தான் விரும்பும் பெண்ணை மணம் முடிப்பதற்கு ஆடவனுக்கு உரிமை இருந்தது. அதுபோலவே மகள் விரும்பும் ஆடவனைப் பெற்றோர் அவளுக்கு முடித்து வைத்தனர். சடங்கோடு பொருந்திப் பெற்றோர் தலைவியைக் கொடுப்பத் தலைவன் மணஞ்செய்தல் கற்பு மணம் எனப்பட்டது.

பெற்றோர் திருமணத்துக்குச் சம்மதியாதவிடத்து, தலைவி பெற்றோரைத் துறந்து தலைவனுடன் செல்வதும் உண்டு. அது ‘உடன்போக்கு’ எனப்பட்டது. தலைவன் தனது ஊரில் தலைவியைத் திருமணம் செய்து தனிக்குடித்தனம் நடத்துவான். இது “கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே” (பொருள் 143) என்னும் தொல்காப்பியர் கூற்றால் தெரியவருகின்றது.

பெற்றோரும் உற்றாரும் அறியாது நடக்கும் களவு வாழ்வு, நெடுங்காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்ததாயினும் காலப்போக்கில் அது மதிப்பு இழக்கத் தொடங்கியது. இந்த வாழ்க்கைமுறையில் தலைவன் வாக்குத்



தவறுதல், உடற் புணர்ச்சியின்பின் தலைவன் தலைவியைக் கைவிடுதல் போன்ற நேர்மையீனங்கள் மலிந்து சமூக உறவைப் பாதித்ததால் கற்பு மணம் தோன்றலாயிற்று.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப
(பொருள். கற்பு 4)

என்னும் தொல்காப்பிய அடிகள் கற்பு மணம் பிரபலியமானதற்கான காரணத்தை விளக்குகின்றன. கரணம் என்பது சடங்கு. சடங்கில் பெரியோர் தம்பதிகளுக்கு வாழும் வகைபற்றி அறிவுறுத்துவர். தலைவன் தலைவியைப் பிரியாது இருக்க வேண்டும். தலைவி தலைவனைப் பேணவேண்டும் என்றெல்லாம் கற்பிப்பர். அதனாலேயே இது கற்பு மணம் எனப்பட்டது. பெரியோர் திருமணத்தின்போது சொன்ன சொல்லைக் கடைப்பிடித்து வாழ்தலே கற்பு. இதனாலேயே ‘கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை’ என்றார் அவ்வைப் பிராட்டியார்.

சொல் திறம்பாமை ஆண் பெண் இருபாலார்க்கும் பொது. ஆயினும் திறம்பாமைக்கு மிகுந்த மனத்திடம் வேண்டும். ‘கற்பெனும் திண்மை’ என்றிகார் வள்ளுவர். திண்மை - மனத்திடம். இந்த மனத்திடம் பெண்களுக்கே அதிகம் என்பதனைச் சிலப்பதிகாரம் காட்டுகின்றது. கோவலன் திறம்பினான். கண்ணகி திறம்பவில்லை.

கற்புக்கு ஒரு சக்தி உண்டு. அந்தச் சக்தியால் மதுரையை எரித்தாள் கண்ணகி.

பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே
ஆமாகில்
ஒட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையும்

என்பது அவளின் வஞ்சினம்.

தெய்வம் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்று வள்ளுவரும் கற்புக்கு இருக்கக்கூடிய சக்தியை வலியுறுத்துகின்றார்.

கண்ணகிக்கு முன்னரும் அருந்ததி, ஆதிமந்தியார் முதலாய கற்பரசிகளின் கதைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரிதும் வழங்கப்பட்டு வந்ததெனினும், கண்ணகி கதையே கற்பு வாழ்க்கையின் மேன்மையை ஊன்றி வலியுறுத்தியது எனலாம். கண்ணகி கற்பு தமிழர் பண்பாட்டின் உயிர்நாடியாகிவிட்டது.

ஒருவனோடு மட்டும் உறவு வைத்துக் கொள்ளும் உறுதிப்பாடு அல்லது பிறர் மனம் புகாத பெற்றி மங்கையரின் தலையாய ஒழுக்க நெறியாயிற்று. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கட்டுப்பாட்டுக் கொள்கை இல்லறத்தை இணையற்ற முறையில் வளர்த்தெடுத்தது.

இளங்கோ அடிகளும் பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவியை கற்பவதியாகப் படைத்திருப்பதைப் பார்க்கின்றோம். ஆண் பெண் உறவில் ஒரு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து. பாலியல் உறவில் விலங்குகள் காட்டும் கட்டுப்பாடு அதிகம். மனிதர் பலர் விலங்குகளிலும் கேவலமாக நடக்கின்றனர். கட்டுப்பாடு இல்லாத உறவினால் பாலியல் நோய்கள் பல பரவி இன்ப வாழ்வுக்குச் சாவு மணி அடித்துக் கொண்டிருக்கின்றன இக்காலத்தில்.

எமது முன்னோர் வெள்ளம் வருமுன்னே அணையைக் கட்டிவிட்டார்கள். கற்புநெறி தமிழ் மக்களின் இல்லற வாழ்வைக் காப்பாற்றி வருகின்றது.

kandavanam.v@thaiveedu.com

■ ■ ■

VIN
KITCHEN & BATH
Design & Install



Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops

15 years experience
100% satisfaction guaranteed

For
free estimates and design

Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com

இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை

# BUY,..SELL HOMES , BUSINESS,LANDS..

## PAT Pushpakanthan 416.490 7653 (SOLD

Real Estate BROKER

#1 Agent for 7 Years

EXPERIENCE! COMMITMENT! RESULTS!



அனுபவம்! திறமை! நேர்மை!

### MARKHAM /Denison



227 900

**New Retail & Professional Location In Markham**
•Strategic Location For Businesses In High Traffic Location * Centre Of Markham's Retail Shopping & Dining * Ideal For Users & Investors * Next To Costco With Markham Road Exposure
**•3 units to choose**



### Markham/steels

$251000

New Plaza At A Busy Intersection (Markham & Steeles). Own Your Own Retail And Office Space At An Affordable Price. Corner Unit Exposure To Markham Road. Fast Developing Area, Close To Walmart And Other Retail Stores. Suitable For Office, Retail, Showroom, Etc. Plenty Of Parking. Close To Ttc And Markham Transit.

CENTURION AWARDS '03 -'08
Top producer 7 years
**Masters Hall of Fame Award**



**Business**
Supermarket south asian ,video rental ete..... more $59 000/- busy location


Warden/hwy 7



nielson/finch
**வியாபாரம்**
Convinience64 9... more
$59 000/-
scarborough

**Business**
Excellent Bar fr sale

Brimley/ steeles



Kennedy/ 16 th ave



Dream House In Famous School Area, 3200 Sq.Ft. Overlooking Community Park & Pond, 9Ft. G/F Ceiling, Main Floor Library

Markham



373 900

Scarborough/kennedy



169 900

Just Move In! Clean, Bright And Very Private End Unit. 3 Big Bedrooms Plus 2 Full Baths

MARKHAM/DENISON
**வியாபாரம்**
Pizza & takeout
busy locn
Start your bus. today

Century 21
Affiliate Realty Inc.
BROKERAGE
80 Corporate Dr. Suite 208, Toronto
Off 416-290 1200
visit...WWW.PATPUSH.COM
email: rpushpakanthan@trebnet.com

**Scarborough**
3 bdrm condo apt. fr Sale Price :$159 800

**Mccowan Ellesmere**
2/3 bdrm condo apt. frSale Price :frm $179000

Richmond hill



4 Bedroom Home With 9' Ceilings On Main Floor, Walk Out Balcony From 2nd Floor, Potlights

## MORTGAGE ! ! MORTGAGE ! !

PURCHASE YOUR HOME WITH

0% & 5% DOWN PAYMENT ALSO

- 1 ST & 2ND RESIDENTIAL & COMMERCIAL MORTGAGE
- NEW IMMIGRANT PROGRAM
- RENEWALS & REFINANCE UPTO 90%
- CREDIT CARDS & CREDIT CONSOLIDATION
- SECURED LINE OF CREDIT MORTGAGE
- BAD CREDIT, BANKRUPTCY & NO CREDIT NO PROBLEM
- PERSONAL LOANS & VISA/ MASTER CARD

FROM 2.39%

CENTUM
ABSOLUTE MORTGAGE INC.
GUARANTEED lowest rate!!
80 Corporate Dr. Suite 208 TORONTO, ONT. M1H 3G5 416- 894-1187

**Excellent Family Business brigton ontario**

COTTAGE / CAMPGROUND
**BUSINESS**
With APPX 6 acres with 10 cottages,and 20 trailor homes

1-2-3 Bedroom fully equipped Comfortable Housekeeping Cottages, Cable TV , 3 & 4 Pce. Bathrooms, Decks & Lawn chairs, Propane B.B.Q ... Bedding Provided and fully supplied kitchens, Elect heat, Municipal Water Boating,exclusive water front, Large storag D.grages

119 houses available
**Power of sale**

### இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர் - 4


# ஆழத்து முத்துக்கள்

நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக்காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S.* பாலச்சந்திரன்

## நாட்டுக்கூத்து கலாநிதி பூந்தான் யோசேப்பு



'சோக்கல்லோ' சண்முகநாதன்

நம்முன்னோர்களின் பாரம்பரிய கலைச்செல்வங்களில் முக்கியமான நாட்டுக்கூத்துக்கலையை ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்கு முன்னதாக, யாழ்ப்பாணப்பிரதேசத்திலிருந்து மன்னார், திரிகோணமலை போன்ற மாவட்டங்களுக்கு எடுத்துச்சென்று, அங்குள்ள கிராமங்களில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து மேடையேற்றி வெற்றிகண்டவர் அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு அவர்கள்.

இளமைக்காலத்தில் "சஞ்சுவாம்" என்ற நாடகத்தில் ஏரோதுமன்னனாக நடித்து, தனது நடிப்பினாலும், கணீர்க்குரலினாலும் தனது முதல் மேடையேற்றத்தின்போதே ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றவர். இந்த நாடகம் முடிந்தபின்னர் ஒரு புலவர் மேடையேறி, மலர்மாலை சூட்டி, "பூந்தாரன் யோசெப்பு வாழ்க" என்று உரக்கச் சொன்னாராம். பூந்தாரன் என்றால் பூமாலை அணிந்த மன்னன் என்று பொருள்படும். இதுவே காலகதியில் "பூந்தான்" என்று சிதைந்தது என்பார்கள்.

இவர், யாழ் நவரச நாட்டுக்கூத்து கலாமன்றக் கலைஞர்களுடன் இணைந்து பல கூத்துக்களை வழங்கினார். யாழ் கஸ்தூரியார் வீதி மூலையில் இவருக்கு தொழில் செய்வதற்கு ஒரு நகைக்கடை இருந்தது. இவரது கவனம் முழுக்க கூத்தில் இருந்ததால் தொழில் நிலையம் தூங்கி வழிந்தது. ஆஜானுபாகுவான தோற்றம், தேசிய உடை, எடுத்த எடுப்பில் நாடகக்காரன் என்று யாரும் சொல்லுவார்கள்.

இவரது பேச்சு, மூச்சு எல்லாம் கூத்துதான். கிறிஸ்தவக் கூத்துகள் மூலம் தான் சார்ந்த சமயத்திற்குத் தொண்டாற்றியவர். "சங்கிலியன்", "மனம்போல மாங்கல்யம்", "கருங்குயில் குன்றத்துகொலை." "மரியதாசன்", "தேவசகாயம்பிள்ளை", "எஸ்தாக்கியார்", "சஞ்சுவான் கூத்து", "விஜயமனோகரன்" ஆகியவை இவரது கூத்துக்களில் சில.

இவரது "சங்கிலியன்" நாட்டுக்கூத்தையும், வேறுபல நாட்டுக்கூத்துக்களையும் அக்காலத்தில் இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பியிருக்கிறார்கள். இலங்கை வானொலி தனது பவளவிழாவிற்கென வெளியிட்ட இறுவட்டுக்களில் இவரது "சங்கிலியன்" நாடகமும் இடம்பெற்றது.

1942ம் ஆண்டளவில், யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலை ஆதாரமாகக்கொண்டு, மாதகல் மதுரகவிப்புலவர் சூசைப்பிள்ளை என்பவரைக்கொண்டு பூந்தான் யோசேப்பு "சங்கிலியன் கதையை" நாட்டுக் கூத்தாகப் பாடுவித்து, அதில் தானே பின்சங்கிலி மன்னனாக நடித்து மேடையேற்றினார்.

கர்நாடகசங்கீதத்தை முறையாக பயிலவேண்டுமென்ற ஆவலினால், அளவெட்டி கர்நாடக இசைவித்வான் முத்துக்குமாரசாமி என்பவரிடம் வாய்ப்பாட்டும், ஆர்மோனியமும் பயின்ற பூந்தான் யோசேப்பு அவர்கள், இத் திறமையினால் நாட்டுக்கூத்துக்களை மேலும் மெருகுபடுத்தி மேடையேற்றினார்.

நடிகனாக புகழ்பெற்று விளங்கிய பூந்தான் யோசேப்பு அவர்கள் தென்னிந்தியா சென்று சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசையில், தனது கலையுலக நண்பர்களான இணுவில் வேல்நாயர், பபூன் செல்லையா என்பவர்களுடன் இந்தியாவுக்கு சென்றது ஒரு சுவையான கதை.

எம்.கே. தியாகராஜபாகவதர் நடிப்பதாக இருந்த "துரோபதை வஸ்திராபரணம்" என்ற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்பு இவர்கள் மூவருக்கும் கிடைத்தது. ஆனால் இறுதியில் அத்திரைப்படம் தயாரிப்பு நிறுத்தப்பட்டுவிட, மூவரும் கைப்பணத்தையும் இழந்து நாடு திரும்பினார்களாம்.

நாடுதிரும்பியபின் முழு உற்சாகத்துடன் நாட்டுக்கூத்துக்கலையில் ஈடுபட்டு, சுமார் அறுபது ஆண்டுக்காலம் கூத்துக்கலையை தொடர்ந்து வளர்த்தவர். முற்குறித்தவைகளைத்தவிர, தென்னிந்திய எழுத்தாளர் பி.எஸ்.ராமையா எழுதிய "தேரோட்டி மகன்" நாடகத்தில் துரியோதனனாகவும், புலவர் தட்சணாமூர்த்தியின் "இராவணேஸ்வரன்" நாடகத்தில் இராவணனாகவும் நடித்திருக்கிறார். இந்த நாடக மேடையேற்றத்தின்போது தான், இவருக்கு "நாட்டுக்கூத்துக் கலாநிதி" என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

கொச்சகம், கலிப்பா, ஆசிரியம், விருத்தம், கலி, இன்னிசை, சந்தவிருத்தம், தாழிசை,



அகவல், உலா போன்ற பாவினங்கள் நாட்டுக்கூத்துகளில் அழகையும், வனப்பையும், இனிமையையும் தருவன. மேற்குறிப்பிட்ட சந்தவகைகள் அத்தனையிலும் வல்லவர் பூந்தான் யோசேப்பு அவர்கள்.

ஒருமுறை "ஊரணி" கிராமத்தில் பாசையூர் வளர்பிறை நாடகமன்றத்தினரின் "கண்டியரசன்" நாடகமும், நடிகமணி வி.வி.வைரமுத்துவின் "மயானகாண்டமும்" பூந்தான் யோசேப்புவின் "சங்கிலியன்" நாட்டுக்கூத்தும் ஒரேமேடையில் நிகழ்த்தப்பட்டன. மூன்று அற்புதமான படைப்புக்கள். சிறந்த கலைஞர்கள். ஜன வெள்ளம் திரண்டிருந்ததாம்.

முதல் இரண்டுநாடகங்களும் மேடையேறிய பின் "சங்கிலியன்" மேடையேறியபொழுது, உடல்நலமற்று நடிக்கமுடியாதநிலையிலும், கலைஞனுக்கேயுரித்தான உற்சாகத்துடன் யோசேப்பு அவர்கள் மன்னனாக நடித்ததைப் பார்த்து மகிழ்ந்த, நடிகமணி வைரமுத்து, தான் அவர்களுக்கு ஒருமணித்தியாலமாவது ஆர்மோனியம் வாசிக்கவேண்டும் என்று விரும்பி வாசித்து, நாடகமுடிவில் பூந்தான் யோசேப்புவை ஆரத்தழுவிப் பாராட்டினாராம். அந்தச்சிறந்த கலைஞனின் செயலினால் பூந்தான் ஸ்தம்பித்துப்போய் நின்றிருக்கிறார்.

இவரோடு இவரது கூத்துக்களில் பங்குபற்றிய பலரில் பேக்மன் ஜெயராஜா, ஊர்காவற்றுறை வைத்தியாம்பிள்ளை சின்னம்மான், பாசையூர் குணசிங்கம், அருளானந்தம் ஜேசுதாசன், சவரிமுத்து ஏபிரகாம், கே.ஏ.செல்லத்துரை, பிரான்சிஸ் ஜெனம், எஸ்.என்.சி. நாதன், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

"தன் நடிப்பால், பாட்டுத்திறத்தால், தாழ்ந்து நடக்கும் தன்மையால், தண்மையான பண்பினால் அரசுசெய்த தங்கத்தமிழன்" என்று நாடகக்கலாநிதியைப்பற்றிக்கூறி, மறைந்த எழுத்தாளர் அகஸ்தியர் "பூந்தான் யோசேப்பு – கலையுலக வாழ்கை வரலாறு" என்ற தனது நூலை நிறைவு செய்கிறார்.

நீண்டகாலமாக நாட்டுக்கூத்தை தன்மூச்சாகக் கொண்டு வாழ்ந்து மறைந்த இந்தக் கலைஞனை நினைவில் பதித்துக்கொள்வோம்.

sanmuganathan@thaiveedu.com

■ ■ ■

## தவில் மேதை அளவையூர் வி. தட்சணா மூர்த்தி



எஸ். கந்தசாமி

லயஞான குபேர பூபதி தவில் மேதை அளவையூர் வி. தட்சணா மூர்த்தி

நாதஸ்வரத்துக்கு துணைவாத்தியம் தவில் என்ற நிலையை மாற்றி, தவிலுக்கு துணை வாத்தியமாக நாதஸ்வரம் என்ற ரீதியில் நாதப்பரட்சி செய்தவர் எங்கள் மண்ணின் கலைஞர் தட்சணாமூர்த்தி.

தவில் இசை உலகில் அவருக்கு நிகர் அவரே எனப் புகழ்ந்து பேசப்படும் தவில் மேதை தட்சணாமூர்த்தி இணுவிலில் வாழ்ந்த விஸ்வலிங்கம் இரத்தினம்மாளுக்கும் புதல்வராக 26.08.33ம் வருடம் பிறந்தார்.

மிக இளவயதில் தவில் இசையை அக்காலத்தில் வாழ்ந்த பிரபல தவில் மேதைகளாகிய காமாட்சி சுந்தரம் பிள்ளை, சின்னத்தம்பிப் பிள்ளை, ராஜகோபால் பிள்ளை ஆகியோரிடம் பயின்றார். இத்துறையில் மேலும் மெருகு பெற எண்ணி இந்தியாவுக்கு சென்று, அக் காலத்தில் மிகப்பிரபலம் பெற்ற தவில் கலைஞரான நாச்சியார் கோயில் இராகவப் பிள்ளையிடம் குருகுல முறையில் தவில் பயின்று வந்தார். இயல்பாகவே இவரிடம் செறிந்து நிறைந்திருந்த லயஞானத்தையும்,



கற்பனா சக்தியையும், கர வேகத்தையும் கண்டு கொண்ட இராகவப்பிள்ளை அவர்கள் தட்சணாமூர்த்தியிடம் 'ஒரு அபிப்பிராயம் காதில் விழுமுன்னரே உனது கைகளில் அது ஒலித்துவிடும். எதிர்காலம் உண்டு என வாழ்த்தி ஊருக்கு அனுப்பி வைத்தார். இவ்வாறு ஊருக்கு திரும்பிய தட்சணாமூர்த்தி தனது தந்தையின் எதிர்பாராத மறைவினால் தனது குடும்பத்துடன் அளவெட்டிக்கு குடி பெயர்ந்து வாழ வேண்டியதாயிற்று. அக்காலத்தில் பல திறமை படைத்த நாதஸ்வர தவில் கலைஞர்கள், இந்தியாவில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் வசித்து இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதுண்டு. அவர்களுடன் இணைந்து கச்சேரி செய்யும் பாக்கியம் தட்சணாமூர்த்திக்கு கிடைத்தமை இவரது இசைப் பாதையில் பெறுமதியான அனுபவத்தையும், ஞான முதிர்ச்சியையும் கொடுத்து தவில் இசை உலகில் உன்னத ஸ்தானத்தைப் பெற்றுக்கொடுத்ததெனலாம்.

இக்காலத்தில் இவர் அளவெட்டியில் வாழ்ந்த தவில்வித்துவான் செல்லத்துரைத் மகளாகிய மனோரஞ்சிதத்தை காதலித்து, திருமணம் செய்து, கலாபவனம் எனும் வீடு அமைத்து வாழ்ந்து அளவையூர் தட்சணாமூர்த்தியாகிவிட்டார். 1959ம் வருடம் மார்கழித் திங்களில் இந்தியாவுக்கு சென்றிருந்த இவரை தமிழிசைச் சங்கத்தின் ஆதரவுடன் அண்ணாமலை மன்றத்தில் நாதஸ்வரமேதை காரைக்குறிச்சி அருணாச்சலம் பிள்ளை நிகழ்த்த இருக்கும் இசை நிகழ்ச்சியில் தன்னுடன் இணைந்து தவில் வாசிக்கும் படி தவில் மேதை நீடாமங்கலம் சண்முக வடிவேல் அழைப்பு விடுத்தார். கச்சேரியில் பங்கு கொண்ட தட்சணாமூர்த்தியை கச்சேரியை ஆரம்பித்து வைக்கும்படி சண்முகவடிவேல் சைகை மூலம் பணித்தார். தட்சணாமூர்த்தியின் தவில் ஒலிக்கத் தொடங்கியது. பல தரப்பட்ட இசை வல்லுனர்களாலும் இசைப் பிரியர்களாலும் நிறைந்திருந்த மண்டபம் நிசப்தமாகியதுமல்லாமல் கரகோசம்

93ம் பக்கம் பார்க்க...

# Recession is over,sell your house for Top $$$$$ Sellers Market is back, Call today.....

**It's is the great time to Sell a Home with seller's benefit**

*Complimentary Evaluation of Your Home *Written cancellation guarantee *Guarantee advertising







IS THIS WHAT YOU'RE LOOKING FOR

FOR SALE


Selling Commission Starting as low as 0.5 - 2.75% Some condition may apply

SOLD

IT'S WHAT I DO!


'Let me show you how my strategic marketing plan gets results'




Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers















**Also contact in regards to investing in Newly Built**



HOMES
CONDOS
COMMERCIAL



**Negotiating the Right Price for your home can be tricky Call Raja for professional advice**



**MANY MORE HOUSES FORE SALE**

HomeLife / Future Ralty Inc., Brokerage*
205-7 Eastvala Drive ,Markham Road, Ontario L3S 4N8
Bus: 905-201- 9977 Fax: 905-201-9229
* Independently Owned and Operated, REALTOR

Raja V. S. Rajagopal
Sales Rrpresentative
Dir: 416-727-8647
Email: sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

**Vasanthy Niranjan**

*Real Estate Broker*

**416-845-8272**

McCowan & Finch



**$398,000**
4+2 Bedroom, 3 Washroom

Meadowvale & Sheppard



**$399,900**
4 Bedroom 3 Washroom

Markham & Elson



**$389,000**
3 Bedroom, 2 Washroom

Markham & Sheppard



**$275,000**
4+1 Bedroom, 2 Washroom

Mavis & Derry



**$366,500**
3+1 Bedroom, 4 Washroom

Bur Oak & Hwy 48



**$398,000**
3 Bedroom, 3 Washroom

McCowan & Steeles



**$439,000**
4+2 Bedroom, 4 Washroom

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
Brokerage*
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6

# INSURANCE SERVICE

## Life Insurance



உங்களுக்கு உகந்த காப்புறுதி
சகல காப்புறுதி நிறுவனங்களுடனும்
ஒப்பீடு செய்து தரப்படும்

**Thana Manickavasagar**
*Broker*
**Cell: 416-728-5772**



**மருத்துவப் பரிசோதனையற்ற காப்புறுதி**

**New Low Rates**
**Approved within 48 Hours**

**85 வயத்துக்கு உட்பட்ட யாரும் நிராகரிக்கப்பட மாட்டார்கள்**

Business: 416-290-1200
thana7@gmail.com
www.thana.ca

# ஆழத்து முத்துக்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

செய்து ஆரவாரித்தது. இரவு 11 மணிக்கு தனது சேவையை நிறுத்தும் அகில இந்திய வானொலி இவர்களுடைய விறுவிறுப்பான வாசிப்பினால் கவரப்பட்டு கச்சேரி முடியும் வரை தனது சேவையை தொடர்ந்தது. கச்சேரி நிறைவானதும் மண்டபத்தின் முன் வரிசையில் அமர்ந்து கச்சேரியை இரசித்துக் கொண்டிருந்த சங்கீத வித்துவாட்டி கே.பி. சுந்தராம்பாள் அம்மையார் மேடைக்கு சென்று, விபூதியால் திலகமிட்டு வாழ்த்தியமையும் தட்சணாமூர்த்திக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவமெனலாம். அன்று ஆரம்பித்த அவரது இந்தியப் பயணம் அவரை பின்னர் இந்தியாவில் வாழ்ந்து இசை பரப்பி புகழ் தேட உதவியது. இந்தியாவில் வாழ்ந்து தவில் வாசித்த காலமே தனது வாழ்வின் பொற்காலம் எனக் கூறி மகிழ்வார். தட்சணாமூர்த்தி இசை துறைசார் சகல தர்மங்களையும் அனுசரித்து இசை வளர்த்த ஒரு பெருமகன் என இசை ஞானிகள் போற்றுவர். இந்தியாவில் புகழ் கொடிநாட்டி தாயகம் திரும்பிய தவில் மேதை தட்சணாமூர்த்திக்கு யாழ் இசையாளர் சங்கத்தினர் விழா எடுத்து, "லயஞானகுபேர பூபதி" என்ற பட்டமளித்து பாராட்டினார்கள்.

இவர் சென்னை கிருஷ்ணகானசபா, பம்பாய் சண்முகானந்தசபா போன்ற பிரபல சங்கீத சபாக்களிலும், திருச்செந்தூர், திருவானைக்கா, சிதம்பரம், திருப்பதி, சமயபுரம் போன்ற ஆலயங்களிலும், இலங்கை மலேசியா போன்ற நாடுகளிலும் எண்ணற்ற கச்சேரிகளை செய்திருக்கிறார். இவரிடத்தில் நிறைந்திருந்த லயஞானத்தை, கற்பனாசக்தியை, புத்தி கூர்மையை புகழ்ந்து இசை மேதாவிகள் பலர் கூறியிருக்கிறார்கள்.

லயவாத்தியமான மிருதங்கத்தின் அதிபதிகளான பாலக்காடு மணி ஐயர்: "இவர் ஒரு எட்டாவது உலக அதிசயம். அவருக்கு நிகர் அவரே." என்றும்; மதுரை சுப்பிரமணியம் பிள்ளை: "ஒரு முறை நினைத்தாலே வியப்பில் ஆழ்த்தும் மேதை" என்றும் பாராட்டியிருக்கிறார்கள்.



பல்லவி வாசிப்பதில் மேதைகளாக கருதப்பட்ட நடராச சுந்தரம்பிள்ளை, கோவிந்தராஜபிள்ளை, தட்சணாமூர்த்தியின் புத்தி கூர்மையை சோதிக்க எண்ணி பல நாதஸ்வர வித்துவான்கள் இணைந்து அமைத்த சங்கதிகளை எல்லாம் அவர்கள் வாசிக்கத் தொடங்கியவுடனேயே புரிந்து கொண்டு வாசித்து அவர்களை அதிசயிக்க வைக்கும் கற்பூர மூளை படைத்தவர் எனக்கூறி பெருமைப்படுவார்.

சென்னை கிருஷ்ணகான சபாவில் இடம்பெற்ற டாக்டர் சேக் சின்ன மௌலானா சாகிப்பின் நாதஸ்வரக் கச்சேரியில் தட்சணாமூர்த்தியின் வாசிப்பை கேட்ட பின் கர்நாடக இசை விமர்சகர் சுப்பிடு அவர்கள் 31.12.69 வெளிவந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியது. "தவில், நாதஸ்வரத்துக்கு ஒரு பக்க வாத்தியம் என்ற மரபை தனது அபூர்வ வாசிப்பினால் நாதஸ்வரம், தவிலுக்கு பக்க வாத்தியமென நாதப் புரட்சி செய்த பெருமை யாழ்பபாணம் தட்சணாமூர்த்திக்கே உரியது. தட்சணாமூர்த்தியின் கரங்களில் அகப்பட்ட தவிலில் பல வித வர்ணஜாலங்கள் தோன்றிச் சிதறின. தவிலில் இருந்து வரும் ஓசை செவியை செவிடு படுத்துமென எண்ணி இருந்த எனக்கு தவிலில் இவ்வளவு இனிமையான மென்மையான சங்கதிகளையும் தட்சணாமூர்த்தியால் செய்ய முடியுமென உணர்த்தியது அவரது கரங்களில் காணப்பட்ட அசுர வேகம். என்னை பிரமிக்கச் செய்தது. நிச்சயமாக தோல் வாத்தியத்தின் அதிபதியான நந்தி தேவர் இவ்விசை கேட்டு விண்உலகில் ஆனந்த நடனம் ஆடி இருப்பார்." என்று எழுதியிருந்தார்.

நாதஸ்வர மேதை அளவையூர் கலாசூரி என்.கே. பத்மனாதன் வீரகேசரிக்கு கொடுத்த பேட்டியில் "நான் எனது இசை வாழ்க்கையில் பல தரப்பட்ட சிறந்த தவில் காரர்களுடன் நாதஸ்வரம் வாசித்துள்ளேன். ஆனால், தட்சணாமூர்த்தியைப் போல் ஒரு தவில்காரரை சந்தித்ததில்லை. கணக்கு சம்பந்தமான கணிப்பீட்டில் இன்றுள்ள கணனிகள் கூட அவரிடம் தோற்றுவிடும்" என்று கூறினார்.

அக்காலத்தில் தென்னிந்தியாவிலே "யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தியின் தனித்தவில் கச்சேரி" என்று சுவரொட்டிகள் ஒட்டியிருப்பார்களாம். இவ்வாறு அவர் அங்கு பிரசித்தி பெற்று விளங்கியது, நமது மண்ணின் கலைஞனின் திறமைக்கு கிடைத்த பெரிய அங்கீகாரமாகும்

இவ்வளவு பெருமைகளுக்கும் உரித்தான தவில் மேதை தட்சணாமூர்த்தி அவர்கள் சில காலம் நோய்வாய்ப்பட்டு இருந்து 13.05.75 அன்று தனது 42வது வயதில் இறை பதம் அடைந்தமை இசை உலகுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

kandasamy.s@thaiveedu.com

■ ■ ■

ஒவ்வொரு கிராமத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அந்தந்தக் கிராமத்தின் வளற்சிப் பணிகளிலும் முன்னேற்றத்திலும் இவர்களின் பங்கு அழப்பரியது. ஆனால் சந்தர்ப்பம் சூழ்நிலை அவர்களை உலகறியத் தவறிவிட்டது. கலைஞர்கள் நாட்டின் விடியலுக்காய் உழைப்பவர்கள். எங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் வாழ்ந்தவர்கள். எம் ஈழத்துக் கலைஞர்களை நாம் கௌரவிப்போம், நினைவுகூர்வோம், உலகறியச் செய்வோம்.

உங்கள் கிராமத்தின் ஒவ்வொரு கலைஞர் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■



# 'As Soon as possible and As Much as you can'



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

## ஆயுட் காப்புறுதி ஏன், எதற்காக, எவ்வளவு தொகை, எப்போது பெற்றுக்கொள்வது?

ஆயுட் காப்புறுதி எந்த வயதில் பெற்றுக் கொள்வது அல்லது எவ்வளவு தொகைக்கு பெற்றுக் கொள்ள வேண்டும்; இப்படி பலர் கேள்வி எழுப்புவதை காணக்கூடியதாக இருக்கும். ஒருவர் எப்போது காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு தகுந்த பதில், ஒருவருக்கு நோய்கள் வருவதற்கு முன்பு அல்லது வயது கூடுவதற்கு முன்பு என்று கூறலாம். ஆனால், ஒருவருக்கு எந்த வயதில் நோய்கள் வரும் அல்லது அவரது ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தால் அந்த நாளுக்கு முன்பு ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியும்.

ஆனால், எங்களில் ஒருவருக்கும் நோய்கள் வருவதற்கான அல்லது மரணம் ஏற்படுவதற்கான தகவல்கள் அல்லது திகதிகள் தெரியாது இருப்பதால், ஆயுட் காப்புறுதியை எவ்வளவு விரைவாக அல்லது உடனடியாகப் பெற்றுக் கொள்வதே சிறந்தது.

எவ்வளவு தொகைக்கு காப்புறுதி தேவை என்பது ஒவ்வொருவரின் வசதிக்கேற்ப மாறு படும்.

உதாரணமாக நாங்கள் எவ்வளவு காலம் வாழப்போகின்றோம் என்ற கணக்கு சரியாகத் தெரிந்தால், அதற்கு முன்பு எவ்வளவு தொகை காப்புறுதி உங்களுக்கு தேவை என்று கேட்டால், அதற்கு என்ன பதில் கூறுவார்கள்? எவ்வளவுக்கு எவ்வளவு பெற முடியுமோ அவ்வளவுக்கும் அதிகமாக பெற்றுக்கொள்ள விரும்புவார்கள்.

எனவே நோய் அல்லது மரணம் எப்போது வரும் என்பது தெரியாதிருப்பதால் இயலுமானளவு அதிகமான தொகையை உடனடியாகக் காப்புறுதி செய்ய வேண்டும்.

'As Soon as possible and as Much as you can'

(காப்புறுதி சம்பந்தமான உண்மைச் சம்பவம் ஒரு காப்புறுதி பத்திரிகையில் இருந்து) எழுபதுகளில் இந்தியாவில் இருந்து கனடாவுக்கு குடியேறிய ஒரு வர்த்தகர் ஆரம்பகாலத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை புரிந்து கொண்டிருந்து விட்டு ஆறு மாதங்களின் பின்பு விடுமுறை எடுத்து இந்தியாவுக்கு திரும்பிச் சென்றார். அங்குள்ள அவரது குடும்பத்தினரின் உதவியுடன் இந்தியாவில் இருந்து சில லெதர் பொருட்களை (Leather Wares) இறக்குமதி செய்து அவற்றை கனடாவில் விற்பனை செய்ய ஆரம்பித்தார். அவர் வார இறுதி விடுமுறை நாட்களில் (Flea Markets) மற்றும் சிறு கடைகளில் இப்பொருட்களை விற்பனை செய்து வந்தார்.

மிகக் குறுகிய காலத்தில் அவரின் வியாபாரம் Wal-Mart, Winners போன்ற பெரிய நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யும் அளவிற்கு வளர்ந்து ஒரு பெரிய நிறுவனமாகிவிட்டது. அத்துடன் அவர் Chinaவில் உள்ள ஒரு தொழிற்சாலையிலும் பங்குதாரர் ஆகினார். 1980ம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியில் அவருடைய வியாபாரமும் வீழ்ச்சி யடைந்தது.

1985ம் ஆண்டளவில் இந்த வர்த்தகர் தன்னிடம் இருந்த பணம் வியாபாரம் செத்துக்கள் எல்லாவற்றையும் இழந்தார்.

ஆனால், அவர் வசதியாக இருந்த காலத்தில் அவர் ஆரம்பகாலத்தில் வசதியாக இருக்கும் போது அவரின் நண்பர் ஒருவர் ஆயுட் காப் புறுதி முகவராக இருந்தமையால் அவரின் வற்புறுத்தலால் அவர் ஒரு மில்லியன் டொலர் தொகைக்கு ஒரு ஆயுட்காலம் முழுவது நீடிக்கும் காப்புறுதியை பெற்றுக்கொண்டிருந்ததால் தற்போது அந்த ஆயுட்காப்புறுதித் திட்டம் அவருக்கு மிகவும் உதவியாக இருந்தது. எனவே ஒவ்வொருவரும் வசதிக்கேற்ப கூடிய தொகைக்கு ஆயுட் காலம் வரை நீடிக்கும் ஆயுட் காப்புறுதித் திட்டங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் பயனடைய முடியும்.

மரணத்தின்போது நிதி ரீதியாகப் பார்த்தால் ஒரு மனிதனின் பெறுமதி மிகவும் குறைந்த நீலைக்கு வருகின்றது. வரும்போது அந்த மனிதனின் பெறுமதியை ஆயுட் காப்புறுதியின் தொகை நிர்ணயிக்கின்றது.

> "ஆயுட்காப்புறுதி செயும்போது
> உங்கள் சாரதி அனுமதிப்பத்திரம் *(Driving Records)*
> பரிசோதனை செய்யப்படுகின்றது,
> காரணம்
> சாரதி அனுமதிப்பத்திரத்தில்
> குற்றச்சாட்டு உள்ளவர்களின் ஆயுட்காலம்
> ஆபத்தானது என்பதால்."

ஒரு மில்லியன் டொலர்களுக்கு ஆயுட் காப் புறுதி பெற்றிருந்தார். தற்போது அதற்கான மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்குக்கூட அவரிடம் பணம் இல்லை. அவருடைய சகோதரர் ஒருவர் அதற்கான மாதாந்தக் கட்டணத்தை செலுத்தி காப்புறுதியை தொடர்ந்து கொண்டிருந்தார். இந்தக் காப்புறுதி யைத் தவிர வேறு எதுவும் இவரிடம் இருக்க வில்லை.

இந்தக் காப்புறுதித் திட்டம் ஒரு நிரந்தரமான ஆயுட்காலம் வரை நீடிக்கும் திட்டமாக இருந்ததால் அதில் உள்ள ஒரு தொகைப் பணத்தை (Cash Surrender Funds) மீளப் பெற்று அவர் தொடர்ந்தும் தனது வியாபாரத்தை ஆரம்பித்தார். ஆறு வருடங்களில் அவர் மீண்டும் பழைய நிலையில் வியாபாரத்தை வளர்ச்சியடையச் செய்தார்.

அண்மைகாலங்களில் பலரும் கூடிய தொகைக்கு ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆனால், அவர்களின் ஆரோக்கியமின்மையால் கூடிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

### ஆயுட் காப்புறுதி பெறுவதற்கு தடையாக இருக்கும் சில பிரதானமான காரணிகள்.

- அதிகளவு மதுபானம் அருந்துவது.
- போதைப் பொருட்களை உபயோகிப்பது.
- (Driving Record) வாகனம் ஓட்டுவதற்கான சாரதிப் பத்திரம் தடைசெய்யப்பட்டிருந்தால்.
- இருதயம், சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டிருந்தால் Heart Decease or Kidney Decease.
- புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் (Cancer).

நோய்கள் வருவத்கு முன்பு சிறிய வயதில் கூடிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக் கொள்வது சிறந்தது. எல்லாத் திட்டங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஆயுட் காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதியே எந்தக் காலகட்டத்திலும் சிறந்த திட்டமாக இருக்கின்றது. இப்படியான திட்டங்களால் ஒரு போதும் நாங்கள் மாதாந்தம் செலுத்தும் பணம் விரயமாகாது.

மிகவும் இலகுவான முறையில் செல்வந்தராக வருவதற்கான வழிகளில் ஒன்று மிகவும் சிறிய வயதில் ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வது. ஆனால் நாங்கள் இப்போது அதைத் தவறவிட்டிருந்தால் எங்கள் பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் அதைத் தவறவிடாமல் பெற்றுக்கொள்வதற்கு நாங்கள் உதவி செய்ய முடியும்.

ஆயுட் காப்புறுதி அவசியம் தேவைதானா என்பதை அறிவதற்கு நாங்கள் எங்களிடம் சில கேள்விகளை கேட்டுப்பார்த்து அறிந்து கொள்ளலாம்.

- எதிர்பாராத விதமாக நான் நேற்று இறந்திருந்தால் இன்று எனது குடும்பத்தின் நிலைப்பாடு எப்படி இருக்கும்.
- நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்கான வாடகைப்பணம் அல்லது வீட்டுக்கடனுக்கான பணத்தை இன்று முதல் யார் எப்படி செலுத்துவது?
- எங்கள் குழந்தைகளின் கல்விக்கான செலவுகளை யார் கொடுப்பது?
- நாங்கள் உழைக்கும் பணம் முழுவதும் எங்கள் குடும்பத்திற்காகவே செலவு செய்யப்பட்டிருந்தால் நாங்கள் இல்லாத கட்டத்தில் எங்கள் குடும்பத்தின் தேவைக்கான பணத்தை எப்படி பெற்றுக்கொள்வது.

இப்படியான கேள்விகளை நாங்கள் ஒவ்வொருவரும் எங்களிடம் நாங்கள் கேட்டால் ஆயுட் காப்புறுதியின் அவசியத்தை அறிய முடியும்.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறதி
• RRSP • RESP

RBC Insurance | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada | Canada Life™

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



# 85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் ஆயுட்காப்புறுதி

- 50,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்துகொள்ளலாம்

| | Age 30 Male | Age 30 Female | Age 40 Male | Age 40 Female | Age 50 Male | Age 50 Female |
|---|---|---|---|---|---|---|
| Term 10 (R & C) $100,000 | $11.25 | $9.00 | $13.77 | $12.33 | $24.48 | $19.77 |
| Whole Life $100,000 | $38.17 | $33.63 | $57.16 | $47.36 | $106.64 | $81.75 |

## Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால்
2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம்

•

## Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

•

## Term Insurance

குறைந்த கட்டணத்தில் அதிகூடிய தவணைக் காப்புறுதி

•

## RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்

- digi Media -

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LILAND INSURANCE INC.

**இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு**



















இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**சத்தி மருதப்பா**

கனடாவில் வீடு விற்பனைப் பிரதிநிதியாகக் கடமையாற்றும் இவர் தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

